THE KUPPUSWAMI SASTRI
RESEARCH INSTITUTE,
MADRAS.

உ

ஸ்ரீ:

ஸ்ரீராமஜெயம்

விசுவாமித்திரமஹரிஷி

அருளிச்செய்த

அத்தியாத்மராமாயணம்.

தமிழ்வசனம்.

இஃது

திருவிந்தளூர்
பிரம்மஸ்ரீ பிச்சுசாஸ்திரியாரவர்கள் சிஷ்யரான
ஆர். வைத்தியநாதய்யர்.
அவர்களால்

ஸம்ஸ்கிருதத்திலிருந்து
மொழிபெயர்க்கப்பட்டு,
தக்க பண்டிதர்களால்
பரிசோதிக்கப்பட்டு,

தமது
சென்னை
திருவல்லிக்கேணி
ஸ்ரீ வாணீபூஷணம் அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1914

காபிரைட் செய்தது.] [விலை ரூபாய். 1 – 12 – 0.

உ

ஸ்ரீ ராமஜயம்.

அத்யாத்ம ராமாயணம்.

பாலகாண்டம்.

1-வது சருக்கம்

இராமர் வணக்கம்.

அச்சுதரும் சின்மயரூபருமாகிய எந்த பகவான் தேவர்களுடைய பிரார்த்தனைக்கிணங்கிப் பூபாரத்தைப் போக்கத திருவுளங்கொண்டு புவியில் இரகுவம்சத்தில் மாயாமானிடனாக வவதரித்து இராக்கதர்களை வர்க்கத்தோடு சங்கரித்து, உலகங்களின் பாபத்தைப் போக்கும் தன் புகழை நிலைநிறுத்திப் பின் ஆதியாயுள்ள தன் சொரூபத்தை யடைந்தாரோ அந்த சீதாகாந்தனை வணங்குவாம்.

இதுவுமது.

உலக சிருஷ்டி ஸ்திதி சங்காரங்களுக்குக் காரணபூதனும் ஏகனும் மாயைக்கிருப்பிடமானவனும் மாயாரகிதனும் சிந்தனைக்கெட்டாத திருவுருவமுடையவனும் ஆனந்தகனனும் அமலனும் ஞானவடிவமானவனும் உண்மையுணர்ந்தவனுமாகிய சீதாபதியை வணங்குவாம்.

ஸர்வ புராணசம்மதமுடையதும் ஆத்யாத்மிகம் என்னும் பெயரையுடையதுமாகிய இந்த இராமாயணத்தைக் கேட்பவர்கள் பாபங்களிலிருந்து விடுபட்டு விஷ்ணுவையே யடைகின்றனர்.

ஸம்ஸாரபந்தத்தினின்றும் விலக விரும்பிய மானிடன் எப்போதும் இந்த ஆத்யாத்மிக ராமாயணத்தைப் பாராயணம் செய்ய வேண்டும். அன்றியும் இந்த அத்யாத்மராமாயணத்தை சிரவணஞ் செய்பவன் ஆயிரம் பதினாயிரம் கோடிக்கணக்காகப் பசுக்களைத் தானங்கொடுத்த பலனை யடைவான்.

திரிபுராந்தகனுடைய பருவதத்தில் உற்பத்தியாகி ஸ்ரீராமசந்திர பிரபுவாகிய சாகரத்தில் சங்கமமாகிற அத்யாத்மராமாயணமென்னும் இந்த கங்கை பூவுலகத்தையும் பரிசுத்தம் செய்கிறது.

* கல்விமான்களே! உங்களைப் பீடிக்கும் ஆத்தியாத்மிகம் ஆதிதைவிகம், ஆதிபௌதிகம என்ற மூன்று தாபங்களும் ஒழிய வேண்டுமாயின, நீங்கள் பரமசிவனுடைய பாற்கடலில் உற்பத்தியான பதங்களையுடையதும் வைராக்கியமாகிய வேரினால் விளங்குவதும் பக்தியாகிய மலரையுடையதும் ஒப்பற்ற ஞானமாகிய கனியை யுடையதும் தேவர்களுக்கும் வித்வான்களுக்கும் மிகுந்த மகிழ்ச்சியை யளிப்பதுமாகிய அத்யாத்மராமாயணமென்னும கற்பகத் தருவை யடையுங்கள்.

கைலைபங்கிரியின் சிகரத்தில் அருணனைப் போல பிரகாசிக்கும் நிர்மலமான கிருகத்தில் திவ்யாசனத்தின் மீது வீற்றிருக்கும் முக்கண்ணுடையவரும் சம்ஸாரபந்தமில்லாதவரும் சித்தர்கள் சூழ்ந்து நின்று சேவிக்க விளங்குபவரும் யாவருக்கும் இதத்தையே செய்பவரும் ஈசுவரருமாகிய சிவபெருமானை அவரது இடது தொடையில் அமர்ந்திருக்கும் பர்வதராஜனுடைய புத்திரியாகிய பார்வதிதேவி ஒருசமயம் பயபக்தியுடன் வணங்கி, நன்மையை யளிக்கக்கூடியனவும் ஆனந்தத்திற்கு ஆதாரமானவைகளுமாகிய சில மொழிகளைக் கூறலானாள்.

பார்வதிதேவி கூறுகிறாள்.

உலகங்களுக் கிருப்பிடமாகிய தேவனே! தங்களுக்கு நமஸ்காரம். தாங்களே சொரூபங்களனைத்தையும் பார்க்கவல்ல பரமேசுவரர். தாங்களே சநாதனர். நித்தியமாகிய புருஷோத்தமனது ஸநாதன உண்மையை எனக்குக் கூறவேண்டும் என்று கேட்டாள்.

* பாடபேதம்.

அதிரகசியமும் மற்றவர்களுக்குச் சொல்லக்கூடாததுமாகிய விஷயமிருப்பினும் அதைப் பெரியோர்கள் பக்தர்களுக்குக் கூறாதொழியார்கள். நான் தங்களுக்கு உண்மையான பக்தி செலுத்துபவளாதலால் தேவ! எனக்குத் தாங்கள் அன்பராகிறீர்; ஆகையால் நான் கேட்டதை எனக்குக் கூறத் திருவுளமிரங்க வேண்டும்.

வைராக்கியம், விஞ்ஞானம் இவைகளோடு கூட பக்தியைச் சார்ந்து நிற்கும் ஞானத்தை நான் தெரிந்து கொள்ளும் விதமாகச் சொல்லவேண்டும். நான் ஸ்திரீஜாதியாயினும் எந்த உபதேசத்தால் எல்லாருக்கும் பாபவிமோசன மேற்படுமோ அதை உபதேசியுங்கள் நான் தெரிந்துகொள்கிறேன்.

பிரபுவே! இன்னுமோர் இரகசியமிருக்கிறது. அதனை முதலில் தெரிவிக்கவேண்டும். இராமசந்திரபிரபுவே தத்துவங்களின் ஸாரமென்பதும் அவரிடம் சிறந்த பக்தியுண்டாவதும் பிரசித்தம். பக்தியே ஸம்ஸாரபந்தத்தினின்று விடுவிப்பதாகிறது. இதைத் தவிர வேறு ஸாதனம் கிடையாது. ஆகையால் என் மனதிலுள்ள சந்தேகங்களைத் தங்களுடைய நிர்மலமான வாக்கியங்களால் நீக்க வேண்டும். இராமனையே பரன், ஏகன், மாயாகுணாதீதன் என்று யோகிகள் கூறுகிறார்கள். அன்றி அவனையே அல்லும் பகலும் தொழுது வணங்குகிறார்கள் அதனால் சித்திபெற்று பரமபதமுமடைகிறார்கள். இது இப்படியிருக்க, இன்னும் சிலர், "இராமன் மேலானவனெனினும் தன் மாயையால் மனமயங்கித் தன்னையே தெரிந்துகொள்வதில்லை. வேறு யாரேனும் நன்றாய்ப் போதனை செய்யின் அப்பொழுது பரமான ஆத்தும தத்துவத்தை யறிந்து கொள்ளுகிறான்" என்று கூறுகிறார்கள். அந்தப் பரமபுருஷன் தன்னைத் தெரிந்துகொண்டிருந்தானாயின் ஏன் சீதையின் நிமித்தம் புலம்பவேண்டும்? தன்னைத் தானறியாத ஒருவன் எல்லா ஜீவன்களுக்கும் சமமானவனே யாவானல்லவா? ஆகையால் அவனை ஏன் நாம் வணங்க வேண்டும்? இவைகளுக்குத் தாங்கள் என் சந்தேகங்களை நிவர்த்திக்கக்கூடிய பதிலைக் கூறவேண்டும்.

பரமசிவன் கூறுகிறார்.

உமாதேவி இப்படிப்பட்ட கேள்விகள் கேட்டதும் சிவபெருமான் மகிழ்வுற்று "ஏ பார்வதி! நீ தன்யை! பரமபக்தியுடையவள். ஏனெனில் உன் விருப்பம் பரமாத்மாவாகிய இராமசந்திர மூர்த்தியின் தத்துவத்தை யறிந்துகொள்வதிலல்லவா சென்றிருக்கிறது. இதற்குமுன் எவரும் அதிரகசியமும் பிரதானமுமான இந்தத் தத்துவத்தைக் கேட்டதில்லை. நீ யென்னை யாதரவுடன் கேட்டமையால் ரகுபுங்கவனை வணங்கி உனக்குக் கூறுகிறேன்.

இராமன் பிரகிருதிக்குப் பரமான சொரூபமுடையவன். அநாதியான ஆனந்த சொரூபன். ஏகன். புருஷோத்தமன். பிறப்பில்லாதவன். தன் மாயையால் இந்த உலகமுழுதும் படைத்து அதற்கு உள்ளும் புறம்பும் ஆகாயம்போல் வியாபித்திருப்பவன்.

பரமாத்மா எல்லாப் பொருள்களினுள்ளும் இருப்பதாயினும் தன் மாயையால் படைக்கப்பட்ட உலகமுழுதும் வியாபித்துக்கொண்டிருக்கிறது. அந்தப் பரமாத்மாவின் அருகேயிருக்கும் உலகங்கள் யாவும் காந்தத்தினருகே வைக்கப்பட்ட இரும்பு போல் எப்போதும் சுற்றிக்கொண்டிருக்கின்றன. அறிவில்லாத மூடர்கள் மாயாவசத்தர்களாகித் தங்களுடைய அக்ஞானத்தை மாயையற்றதும் சுத்த ஞானசொரூபமுடையதுமாகிய ஆத்மாவிடம் ஆரோபணம் செய்கின்றார்கள். மக்கள் முதலியவர்களிடம் பற்றுதலுடையவர்களும் மிகுந்த கருமத்துடன் கூடியவர்களும் சம்ஸார துக்கத்தை யனுசரிப்பவர்களுமாகிய அறிவிலிகள், தங்கள் இருதயத்திலுள்ள பரமாத்மாவை, கழுத்தில் பூண்டிருக்கும் சொர்ணாபரணத்தை மறந்த மூடர்கள் போல, தெரிந்துகொள்வதில்லை. ஜோதிமயனாகிய சூரியனிடம் எங்ஙனம் இருளிருப்பதில்லையோ, அங்ஙனமே விசுத்த விஞ்ஞானகனனாகிய பரமேசுவரனிடம் அவித்தை இருப்பதில்லை. இங்ஙனமிருக்க, பரத்திற்கும் பரமான ஆத்மாவுமாகிய இரகுபுங்கவனிடம் அவித்தையென்பது எவ்விதம் ஏற்படும்? பார்வைகுறைந்த ஒருவனுக்கு அவனுடைய கண்கள் சுழலும்போது வீடுமுதலியவைகள் சுற்றுவதுபோலவே காணப்படுமல்லவா? அதுபோல் தேகேந்திரியங்களோடு கூடிய கர்த்தாவாகிய மனதினது செயலைப்பரமேசுவர

னிடம் ஆரோபித்துக்கொண்டு ஜனங்கள் மோஹிக்கிறார்கள். சூரியனுக்கேற்பட்ட ஒளி வேறுபடாதிருப்பதால் அவனுக்கு இரவு பகலில்லையென்று கூறுகிறோம். ஆகையால் சுத்தனும் சித்தனும் பரனுமாகிய இராமனிடம் ஞானமும் அக்ஞானமும் எவ்விதம் இருக்கும்? ஆகவே அறிவானந்த சொரூபனும் அக்ஞானத்திற்குச் சாக்ஷியானவனும் அரவிந்த லோசனனுமாகிய இரகுபுங்கவனிடம் மாயை ஆச்ரயித்திருப்பதால் மோகத்திற்குக் காரணமாகிய தமோகுணம் நிச்சயமாய்க் கிடையாது.

ஏ பார்வதி! நல்லது. கிடைத்தற்கரியதும் இரகசியமானதும் முக்திக்குச் சாதனமானதுமாகிய ஸ்ரீ இராமாயணத்திற் சொல்லப்பட்ட ஸீதை, இராமர், அநுமான் இவர்களுடைய சம்வாதத்தை இப்போதுனக்குக் கூறுகின்றேன். கேள்.

எல்லாருடைய மனதிற்கும் இன்பமளிக்கும் திவ்யகுணமுடையவனும் போர்புரிவதில் வல்லவனென்று எல்லாராலுங் கொண்டாடத்தக்கவனுமாகிய இராமன் தேவர்களுக்குக் கண்டகனாகிய இராவணனை அவன் மக்கள்கள், சேனைகள், வாகனங்கள் இவைகளோடு யுத்தத்தில் சங்கரித்து ஸீதை, சுக்ரீவன், இலக்ஷ்மணன் அநுமான் முதலிய வானரவீரர்கள் சூழ அயோத்தி நகரத்தை யடைந்தார். பிறகு அநந்தக் கோடி சூரியனுக்குச் சமமான தேஜஸுடைய தசரதநந்தனன் அங்கு பட்டாபிஷேகம் செய்துகொண்டு வசிஷ்டர் முதலிய மகாத்மாக்கள் சூழ சிங்காதனத்தமர்ந்தார். அச்சமயம் சுவாமி காரியங்களை முடித்துத் தான் எதையும்விரும்பாது மேலான ஞானத்தை மட்டும் பெறக் கருதி காகுஸ்தன் முன்பு அஞ்சலி செய்துகொண்டு நின்ற அநுமானை மகா புத்திசாலியாகிய இரகுசிரேஷ்டன் நோக்கி, உடனே அருகேயிருந்த ஸீதையைப் பார்த்து "ஏ ஸீதே! இந்தமாருதி களங்கமற்றவன்; நம்மிருவரிடமும் பரம பக்தியுடையவன்; ஞானத்திற்குப் பாத்திரமானவன் ஆகையால் இந்த அநுமானுக்குத் தத்துவத்தை உபதேசம் செய்யென்றார்.

உலகங்களை மோகிக்கும்படி செய்ய வல்ல ஸீதை இராமசந்திர பிரபுவை உடனே வணங்கி அப்படியே செய்கிறேனென,

தெரிவித்து, தன்னைச் சரணம் புகுந்த அனுமந்தனுக்கு இராம தத்துவத்தைப் பின் வருமாறு உபதேசம் செய்தாள்.

அனுமானே! இராமன் பரபிர்மம், சச்சிதாநந்த சொரூபன், தன்னையன்றி வேறில்லாதவன், எவ்வுபாதிகளுமில்லாதவன், சத்தாமாத்திரன், அநேகாசரன், நித்தியானந்தன், நிர்மலன, சாந்தன், நிர்விகாரன், நிரஞ்சனன், எங்கும் விளங்குபவன், ஆத்மா, சுயஞ்சோதி, களங்கமற்றவன் என்றறிந்துகொள். என்னைச் சிருஷ்டி, ஸ்திதி, சங்காரமாகிய முத்தொழிலுக்கும் மூலப்பிரகிருதி யென்று தெரிந்துகொள். பரபிர்மமாகிய இராமபிரானது ஸந்நிதானமகிமையால் இந்தப்பிரபஞ்சத்தை சாவதானமாக சிருஷ்டிக்கிறேன். அப்படி இவரது ஸந்நிதான மகிமையால் நான் சிருஷ்டி செய்திருந்த போதிலும் அறியாதவர்கள் இவரிடமே ஆரோபணம் செய்கிறார்கள். அன்றியும், இவர் அயோத்தியில் மிகவும நிர்மலமான இரகுவம்சத்தில் அவதரித்தது, கௌசிக முனிவருக்கு உதவி புரிந்து யாகத்தைக் காத்தது, அகல்லியையின் சாப விமோசனம் செய்தது, மகேசுவரன் வில்லை முறித்தது, என்னை மணந்துகொண்டது, பின் பரசுராமனுடைய கருவபங்கம் செய்தது, என்னோடு அயோத்தியில் பனிரண்டு வருடகாலம வாசஞ் செய்தது, தண்டகாரண்யம் சென்றது, விராதனைவதைத்தது, மாயா மாரீசனை மரணமடையும்படி செய்தது, மாயா ஸீதை அபகரிக்கப்பட்டது, ஜடாயுவுக்கு முத்தியளித்தது, கபந்தனுக்கு நற்கதி தந்தது, சபரியினால் பூஜை பெற்றது, சுக்ரீவனோடு சிநேகம் செய்தது, வாலியை வதஞ் செய்தது, ஸீதையைத் தேடியது, கடலில் அணைகோலியது, இலங்கையை முற்றுகைபோட்டது, துராத்மாவாகிய இராவணனை அவன புத்திரர்களுடன் வதஞ் செய்தது, இலங்கையை விபீஷணனுக்கு அளித்தது, பிறகு என்னோடு புஷ்பக விமானமேறி அயோத்தி வந்து முடிசூட்டிக் கொண்டது இவைகளனைத்தும் என்னால் தான் நடந்தன. ஆனால் இவைகளனைத்தும் விகாரமற்றவரும் ஏகத சொரூபியுமாகிய இந்த இராமனிடம் ஆரோபணஞ் செய்யப்படுகின்றன. இராமர் நடப்பதுமில்லை இருப்பதுமில்லை, துக்கிப்பதுமில்லை, விருப்பும் வெறுப்புமில்லாதவர். இவர் ஒன்றும் செய்வதில்லை, இவர் ஆனந்த சொரூபர், சலனமற்றவர், பரிணாமமில்லாதவர், அப்படியிருந்தும் மாயா குணங்க ச சார்ந்தவர் போல் தோன்றுகிறார்—என்றுபதேசித்தாள்.

பரமசிவன் கூறுகிறார்.

பிறகு இராமசந்திரர் அருகே கைகூப்பி நின்று கொண்டிருந்த அநுமந்தனை நோக்கி "ஆஞ்சநேய! ஜீவன், ஜடம், பரமாத்மா இவர்களின் தத்துவத்தைக் கூறுகிறேன். கேள்" என்று கூறு

ஆகாயத்தில் மூன்று விதமான பேதங்காணப் படுகின்றன. அதாவது தடாகத்தில் மகாகாசம், அந்தத்தடாகத்தில் உள்ளடங்கியிருக்கும் (அவிச்சின்ன) ஆகாயம், அதில் தோன்றும் பிரதிபிம்ப ஆகாயம் என மூன்று விதமாம். இது போலவே புத்தியால் சூழ்ந்த சைதன்யம், பூர்ணம், ஆபாஸம், மேகம் என மூன்று வித பேதங்களை யடைகிறது. ஆபாஸத்துடன் கூடிய புத்தியின் கர்த்தா என்ற தன்மையையும், ஜீவன் என்ற தன்மையையும் விசேஷமில்லாததும், விகாரமில்லாததும் சாக்ஷியுமாகிய பிர்மத்திடம் அக்ஞானிகள் பிரமத்தால் ஆரோபணம் செய்கின்றார்கள். ஆபாஸமானது பொய்யான புத்தி. இது அவித்தையின் காரியமென்று சொல்லப்படுகிறது அந்த பிர்மம விச்சேதமில்லாதது. அஞ்ஞானத்தால் விச்சேத மேற்படுகிறது. "தத்துவமஸி" பரபிர்மமாக நீ ஆகிறாய் என்னும் இவ்வாக்கியத்தால் புத்தியால் சூழ்ந்த பிர்மம் பூர்ணம் என்ற பிர்மம் இவ்விரண்டும் ஒன்றெனப் பிரதிபாதிக்கப் படுகிறது. தமோகுண சம்பந்தமுள்ள ஆபாஸம் என்பது ஒன்றுபடாது. ஆகவே, அவிச்சின்ன சைதன்யம் பூர்ணசைதன்யம் இவ்விரண்டும் ஒன்றென்கிற ஞானம் மகாவாக்கியத்தால் ஏற்பட்டது. அதனால் அவித்தை தன்னுடைய செய்கைகளோடு நசிக்கின்றது. இதிற் சந்தேகமில்லை. என்னுடைய அன்பர்களில் யார் இதை யறிந்து கொள்ளுகிறார்களோ அவர்கள் நானாக ஆவதற் குரியவராவார்கள். என்னிடம் பக்தியில்லாமல் சாஸ்திரக்குழிகளில் விழுந்து மயங்கிக் கிடப்பவர்களுக்கு நூறு ஜன்மமெடுத்தாலும் ஞானமுண்டாகாது. முத்தியுங் கிட்டாது.

ஏ குற்றமற்றவனே! மகாத்மாக்களாகிய எங்களுடைய இருதயமாகிய இவ்விரகசியத்தை நானுனக்குப் பிரத்தியட்சமாகச் சொன்னேன். என்னிடம் பக்தியில்லாதவனுக்கும் இரகசியமாகத் தீங்கு

செய்பவனுக்கும் நீ உபதேசிக்கக்கூடாது. இது சொர்க்கலோக வாழ்விற்கும் மேலானது என்று கூறினார்.

பரமசிவன் கூறுகிறார்.

ஏதேவி! ஸ்ரீராமருக்கு இருதயமாகிய இந்தவிஷயத்தை நான் உனக்குக் கூறினேன். அதிரகசியமாகையால் இவ்விஷயம் மனுஷருக்கு இன்பந்தரக்கூடியது. பரிசுத்தமானது. பாபங்களைப் போக்கக்கூடியது. பிரத்தியட்சமாக ஸ்ரீராமர் கூறியது. எல்லா வேதாந்தத்தின் சுருக்கம், இதையன்போடு எப்போதும் பாராயணம் செய்பவன் முக்தனாவான், இதில் கொஞ்சங்கூட ஸந்தேகமே கிடையாது. இராகவன் சொன்ன இந்த இரகசியத்தைப் படிப்பவர்கள் அநேக ஜன்மங்களிற் செய்த பிர்ம்மஹத்தி முதலிய பாபங்களிலிருந்தும் விடுபடுவார்கள். ஐயமில்லை. ஜாதி பிரஷ்டன், மிகுந்த பாபம் செய்தவன், அன்னியனுடைய பொருள், மனைவி இவைகளிடம் எப்பொழுதும் ஆசைகொள்ளும் சோரன், பிராமணர்களைக் கொன்றவன், பெற்றோர்களை வதைத்தவன் யோகிக்கூட்டங்களுக்கு அபகாரம் செய்தவன் இவர்கள் எவர்களாயினும் ஸ்ரீராமசந்திரனைத் தியானித்து இதைப்பாராயணம் செய்வார்களாயின், சிறந்தயோகிகளுக்குங் கிட்டாத பரம பதத்தை அடைவார்கள். அவர்கள் தேவர்களெல்லாராலும் பூஜிக்கப்படுவார்கள்.

ஸ்ரீராமஹ்ருதயமென்னும் பெயருடைய

முதற்சருக்கம்

முற்றிற்று.

2-வது சருக்கம்.

பார்வதிதேவி கூறுகிறாள்.

ஸ்ரீகாந்த பிரபுவே! நான் தன்யை. தங்களால் அனுக்கிரஹிக்கப்பட்டேன். கிருதார்த்தையானேன். தங்களுடைய அனுக்ரகத்தால் என்னுடைய ஸந்தேகங்களிற் பல நீங்கின. தங்களுடைய முகத்தினின்று நழுவினதும் ஸ்ரீராம தத்துவமாகிற அமிருத ரஸத்திற்கு இருப்பிடமும் பாபத்தைப் போக்கக்கூடியதுமான இராமனுடைய சரித்திரத்தைச் சுருக்கமாகக் கேட்டு என்னுடைய மனமானது திருப்தியடையவில்லை. ஆகையால் ஏ தேவ! இப்போது வியக்தமாகவும் விஸ்தாரமாகவும் கேட்க விரும்புகிறேன்; கூற வேண்டும் என்று கேட்டாள்.

பரமசிவன் கூறுகிறார்.

தேவி நல்லது; சிறந்ததும் இரகசியத்திற்கும் இரகசியமானதும் முன் இராமரால் எனக்குச் சொல்லப்பட்டதுமாகிய அத்தியாத்ம ராமசரித்திரத்தைக் கூறுகின்றேன் கேள். மூன்று தாபங்களையும் போக்கத்தக்கதும எந்த சரித்திரத்தைக் கேட்டவுடன் அக்ஞானத்தாலேற்படும மகாபயம நீங்கி மிகுந்த ஐசுவரியமும் நீண்ட ஆயுளும் மக்கட்பேறுமுண்டாகுமோ அப்பேர்ப்பட்ட இச்சரித்திரத்தை இப்போதுனக்குக் கூறுகிறேன்.

ஸ்ரீராமர் கூறுகிறார்.

பூதேவி, பத்து முகமுடைய இராவணன் முதலிய இராக்கதக் கூட்டங்களின் பாரம் பொறுக்க மாட்டாது மிக்க வருத்தமுற்றுக் காமதேனுவின் உருவங்கொண்டு தேவர்களுடனும் முனிவர்கூட்டங்களுடனும் முதன் முதலில் பிர்மலோகஞ் சென்று தன் துக்கத்தை பிரமனிடம் கூறினாள். பிரமன் சற்றுநேரம் ஆலோசித்து எல்லாவற்றையும் அறிந்து கொண்டான்.

பிறகு பிரமன் சத்திய லோகத்திலிருந்து தேவர்கள் சூழப் புறப்பட்டு பாற்கடற் கரைக்குச் சென்றான். அங்கு எல்லாருடைய இருதயத்தில் வசிப்பவரும் சர்வக்ஞரும் இலக்ஷ்மிதேவியுடன் கூடியவருமாகிய நாராயணமூர்த்தியைக் கண்டு பணிந்து பக்தியால் மெய்மறந்து கண்களினின்று மிகவும் பரிசுத்தமான ஆநந்தபாஷ்பம் சொரிய நின்று வேத புராணங்களால் தோத்தரிக்கப்பட்ட தோத்திரங்களைத் தழதழத்த வார்த்தையால் கூறித் துதித்தான். ஒளி வீசாநின்ற ஆயிரம் ஆதித்தனுக்கு நேரான தேஜஸுடைய விஷ்ணு பகவான் திக்குகளிலுள்ள இருளை நீக்கிக்கொண்டு கீழ்த் திசையில் ஆவிர்ப்பவித்தார்.

பரிபாகமில்லாத மனமுடையவர்களுக்குக் காணமுடியாதவரும் இந்திரநீல ரத்தினத்தை யொத்து விளங்குபவரும் புன்முறுவல் பூத்த முக கமலமுடையவரும் அம்புஜம் போன்ற நேத்திரமுடையவரும் கிரீடஹார கேயூர குண்டல முதலிய ஆபரணங்கள் பூண்டவரும் ஸ்ரீவத்ஸம் கௌஸ்துபம் இவைகளின் காந்தி வீசிய திருமேனியுடையவரும், ஸ்தோத்திரஞ் செய்கிற ஸனகர் முதலியவர்கள் நாற்புறமும் சூழ விளங்குபவரும், சங்கு, சக்ர, கதை பத்மம், வனமாலை இவைகள் பூண்டவரும், சொர்ணமயமான யக்ஞோபவீதம் சொர்ணவர்ணமான வஸ்திரம் இவைகளைத் தரித்தவரும், ஸ்ரீ பூமி இவைகளுடன் கூடியவரும், கருடன் மீதிருப்பவருமாகிய வாசுதேவனை பிரமதேவர் மிக்க பிரயத்தினத்துடன் பார்த்து அவரைத் தரிசித்த மகிழ்ச்சியில் மூழ்கி தழதழத்த வார்த்தையை யுடையவராகிப் பின் வருமாறு தோத்தரிக்கலானார்.

பிரமதேவர் ஸ்தோத்திரம் செய்கிறார்.

ஓ பிரபுவே! கருமபாசத்தினின்று விடுதலையடைய விரும்பியவர்களால் எப்போதும் தியானஞ் செய்யப்படும் தங்களுடைய பாதபங்கயத்தை எனதுயிர், அறிவு, ஐம்புலன், மனம் இவைகளோடு நான் வணங்குகிறேன்.

சாத்துவிக இராஜஸ தாமஸ குணங்களின் சொரூபமாகிய மாயையால் தாங்கள் உலகத்தைப் படைக்கிறீர்கள். நாசம் செய்கிறீர்கள். ஆனந்தானுபவ சொரூபராகிய தங்களுக்கும் அந்த உலகத்

திற்கும் சம்பந்தமே கிடையாது. தங்களுடைய மகிமையில் மிகுந்த பக்தியுடையவர்களுக்கு மனம் பரிசுத்தமடைவதுபோல், வேதாத்தியயனம் தானதருமம் முதலிய கருமங்களைச் செய்தவர்களுக்கு ஏற்படாது. ஆகையால் என்னுடைய மனக்களங்கமொழிவதற்குத் தங்களுடைய சரணாரவிந்த தரிசனம் செய்தேன். அந்த சரணாரவிந்த மலரை முனிவர்கள் தங்களுடைய இதயத்திற்குள் வைத்துத்தியானம் செய்கிறார்கள். நாங்களும் (பிரமன் முதலிய தேவர்கள்) எங்களுக்குச் சொரூபம் சித்திப்பதன் நோக்கமாகத் திருவடியைச் சேவித்திருக்கிறோம். ஞானிகள் தங்களுக்குப் பிரதியக்ஷானுபவம் சித்திப்பது கருதி மனதில் தியானம் செய்கிறார்கள். பிரபுவே! இலக்ஷ்மிதேவி தங்களுடைய மார்பிலிருந்தும் தங்களுடைய சரணாரவிந்தத்தில் பூஜிக்கப்பட்டு நிர்மால்யமான துளஸியிடம் வெறுப்புக் கொள்கிறாள். தங்களுடைய பாதாரவிந்த பக்தியை வகித்தவர்களிடம் தங்களுக்கு லக்ஷ்மிதேவியிடத்திலுள்ள பக்தியைக் காட்டிலும் மிகுந்த விசுவாசமுண்டாகிறது. இந்த இரகசியமறிந்த தங்களுடைய பக்தர்கள் எப்போதும் தங்களுடைய பக்தியையே விரும்புகிறார்கள். ஆகையால் எனக்கும் உம்முடைய பாதபங்கயங்களில் என்றும் நீங்காத பக்தியுண்டாக வேண்டும். சம்சாரமாகிய வியாதியின் வாய்ப்பட்டு வருந்துவோருக்கு உம்மிடத்தில் பக்தி செய்வதே மருந்தாகிறது.

இங்ஙனம் துதிபுரிந்த பிரமதேவரை நோக்கி நான் செய்ய வேண்டுவதென்ன என்று கேட்டார் மகாவிஷ்ணு. பிரமதேவர் "பகவானே! புலத்தியவம்சத்தில் உதித்தவனும் உலகுக்குக் கெடுதலையே செய்பவனும் விச்ரவசுக்குக் குமாரனுமாகிய இராவணன் என்னும் இராக்கதன் என்னிடம் பெற்ற வரத்தால் அரக்கர்களுக் கரசனாகி அதனால் இறுமாப்படைந்து மூவுலகங்களுக்கும் லோகபாலகர்களாகிய இந்திரன் முதலியவர்களுக்கும் 'பல தௌர்ஜன்யங்கள்' செய்கிறான். மங்கள சொரூபமுடையவரே! நான் வரங்கொடுத்ததில் ஒரு விசேஷம். அதாவது நான் அவனுக்கு மானிடனால் மரணமேற்படுமென்று கூறியிருக்கிறேன். ஆதலால் பிரபுவே! தாங்கள் மானிடனாக அவதரித்துத் தேவர்களுக்குப் பகைவனாகிய அந்தக்கொடிய இராக்கதனை வதஞ் செய்யவேண்டும்" என்றார்.

பகவான் கூறுகிறார்.

இச்செய்திகேட்டதும் பகவான், "குற்றமற்ற பிரமதேவனே! காசியபர் முன்பு தவம்புரிந்தார். அத்தவத்துக்குவந்து என்னவரம் வேண்டுமென்று கேட்டேன், அவர் என்னைத் தமக்குப் புத்திரனாக வேண்டுமென்று பிரார்த்திக்க, நான் அவரது கருத்துக்கிணங்கி அவ்விதமே செய்கிறேனென வரமளித்தேன். அந்தக்காசியபர் இப்போது தசரதமகாராஜனாகப் புவியில் அவதரித்திருக்கிறார். அவ்வரசனுக்கு நான் புத்திரனாக நிச்சயித்திருக்கிறபடியால் என் தேகத்தை நான்கு பிரிவினையாகச் செய்து கௌஸல்லியை, சுமித்திரை, கைகேயி இவர்களிடம் நல்லசுப முகூர்த்தத்தில் நான்கு குழந்தைகளாகப் பிறக்கிறேன். யோகமாயையும் ஸீதை என்ற பெயருடன் ஜனமகாராஜனுக்குப் பெண்ணாகப் பிறக்கப் போகிறாள். அந்த ஸீதையுடன் நானிருந்து எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்தப் போகிறேன்" என்று விஷ்ணுபகவான் தெரிவித்து அந்தர்த்தானமடைந்தார். பிறகு பிரமதேவர் தேவர்களை நோக்கிப் பின் வருமாறு கூறுகிறார்.

பிரம்மதேவர் கூறுகிறார்.

"தேவர்களே! மகாவிஷ்ணுவானவர் மானிட வடிவத்துடன் இரகுவம்சத்திற் பிறக்கப் போகிறார். நீங்கள் யாவரும் உங்களுடைய அம்சங்களோடு கூடிய புத்திரர்களை வானரஸ்திரீகளிடம் உண்டு பண்ணுங்கள். இராமபிரான் புவியிலுள்ளவரையில் அவருக்குச் சகாயமாக இருங்கள் என்று தெரிவித்து, பூதேவிக்குஞ் சமாதானங் கூறி பிரமதேவர் தமதிருப்பிடம்சென்று ஸுகமாய்வசித்து வந்தார். பிறகு தேவர்கள் யாவரும வானர ரூபங்கொண்டு மலைகளாலும் மரங்களாலும் யுத்தஞ்செய்ய வல்லவர்களாயிருந்து ஸ்ரீ மகாவிஷ்ணுவின் வரவை எதிர் பார்த்துக்கொண்டு எங்கும் வசித்து வந்தார்கள்.

இரண்டாவது சருக்கம்

முற்றிற்று.

வது சருக்கம்

அளவற்ற ஐசுவரியமும் நிகரற்ற பராக்ரமமும் வீரமும் பொருந்திய உலகபிரசித்தனாகிய அயோத்தியாதிபதி தசரதன் மக்கட்பேறில்லாக் குறைவால் மிக்க வருத்தங்கொண்டு முனிவர் பிரானாகிய தனது குரு வசிஷ்ட முனிவரை வணங்கி, “ஐயனே! சர்வலக்ஷணங்களும் அமையப்பெற்ற மக்கள்களை யடையும் பாக்கியம் எனக்குண்டோ? அந்தோ மக்கட்பேறில்லாத எனக்கு இந்த ராஜ்யம் துக்கத்திற்கு ஏதுவானதேயாம்?” என்று கூறினான். வசிஷ்டர் “மன்னா! உமக்கு மகாபராக்ரமசாலிகள் என்று உலகம் புகழும்படியான குமாரர்கள் நால்வர் பிறக்கப்போகிறார்கள். அதற்கு நீர் செய்யத்தக்கதொன்று. சாந்தையின் நாயகரும் தவத்தையே தமக்குப் பொருளாகக்கொண்டவருமாகிய ரிசியசிருங்கமுனிவரை வரவழைத்து எங்களோடு கூட புத்திரகாமேஷ்டியாகத்தைச் செய்து முடிக்க வேண்டியதவசியம்” என்று கூற, தசரதசக்ரவர்த்தி அவ்விதமே செய்வோம். தங்கள் சித்தப்படியே நடக்கக்காத்திருக்கிறேன்” என்று சொல்லித் தன் அமைச்சர்களைக்கொண்டு ரிசியசிருங்க முனிவரை வரவழைத்து பரிசுத்தனாக யிருந்து களங்கமற்ற முனிவர்களுடன் அந்த மகாயாகத்தைச் செய்யலாயினர். யாகாக்கினி வளர்த்து அதில் ரித்விக்குகள் சிரத்தையோடு ஹோமம் செய்தார்கள். அதிலிருந்து உருக்கின தங்கத்துக்கு நேரான காந்தியுடன்கூடிய அக்னிபகவான் சொர்ணபாத்திரத்தில் பாயஸம் எடுத்துக்கொண்டு வெளிப்பட்டான். அந்தபகவான் தசரதனை நோக்கி விஷ்ணுவால் உண்டாக்கப்பட்டதும் தேவார்கமானதும் மக்கட்பேறை யளிக்கத்தக்கதுமாகிய இந்தப் பாயசத்தைப் பெற்றுக்கொள். உனக்கு பரமாத்மாவே புத்திரனாய்ப் பிறக்கப்போகிறார். அதிற்சந்தேகமே கிடையாது” என்று கூறிப் பாயசத்தை அவன் கையில் கொடுத்துவிட்டு அந்தர்த்தானமடைந்தார்.

பிறகு அரசன் வசிட்டர் ரிசியசிங்கர் இவர்களுடைய அனுமதி பெற்றுப் பாயஸத்தைச் சரி பாதியாகப் பகிர்ந்து கௌஸல்லியையிடம் பாதியும் கைகேயினிடம் பாதியுமாகக் கொடுத்தான். பிறகு

ஸுமித்திரை தனக்குப் பாயஸம் வேண்டுமென்று வர, கௌஸல்லியை மனமகிழ்ச்சியுடன் தனக்களிக்கப்பட்ட பாயஸத்தில் கொஞ்சம் கொடுத்தாள். பின் அக்ஙனமே கைகேயியும் தன் பாகத்தில் பிரீதியுடன் கொஞ்சம் கொடுத்தாள். பிறகு மூவரும் கர்ப்பந்தரித்து அரண்மனையில் தேவ மாதர்கள் போல் விளங்கினார்கள். கௌஸல்லியா தேவி பத்தாவது மாதத்தில் ஏகவஸ்துவாகிய பரமாத்மாவைப் பிள்ளையாகப் பெற்றாள். லோகநாயகரும் பரமாத்மாவும் ஸநாதனரும் கருநெய்தல் மலரை யொத்த திருமேனியை யுடையவரும் மஞ்சட்பட்டாடை யுடுத்தவரும் சதுர்புஜ முடையவரும் செந்தாமரைமலர் போன்ற கண்களின் கடையில் பிரகாசிக்கும் குண்டலங்களுடையவரும் ஆயிரம் ஆதித்தியனுக்கு நிகரான காந்தியுடையவரும் சங்கு, சக்கரம், கதை, பத்மம், வனமாலை இவைகளை யணிந்திருப்பவரும் அனுக்கிரகம் செய்யக்கருதிய இருதயமுடையவரும், புன்முறுவலாகிய சந்திரிகையை யுடையவரும், கருணை நிறைந்த அகன்ற! கண்களை யுடையவரும், ஸ்ரீவத்ஸம். ஹாரம், கேயூரம், கிண்கிணி முதலிய ஆபரணங்கள் பூண்டவருமாகிய அந்த பகவான் சித்திரை மாதத்தில் வளர்பிறை நாளில் நவமி திதியில் மங்களமான புனர்வசு நக்ஷத்திரம் கடக லக்னம் சூரியன், சனி, அங்காரகன், குரு, சுக்கிரன் இவ்வைந்து கிரகங்களும் உச்சமாயிருக்கும் இந்தச் சுபதினத்தில் சூரியபகவான் மேஷராசியிலிருக்கும் போது அவதாரம் செய்தார். அப்போது ஆகாயத்திலிருந்து தேவர்கள் மலர்மாரி பொழிந்து மகிழ்ந்தார்கள். அந்தப் பரமாத்மாவைக் கண்ட கௌஸல்லியை பரமானந்த மடைந்து கண்களினின்று ஆனந்தபாஷ்பம் பொழியக் கைகுவித்து நின்று பின்வருமாறு துதிக்கலானாள்.

கௌஸல்யாதேவி கூறுகிறாள்.

தேவாதி தேவனும் சங்கு சக்ரம் கதை இவைகளைத் தரித்தவருமாகிய பிரபுவே! தங்களுக்கு வந்தனம் செய்கின்றேன். ஏ புருஷோத்தம! நீர் பரமாத்மா; அச்சுதர் முடிவற்ற பூர்ணம். தங்களை பிரமா முதலியவர்களுடைய வாக்குக்கும் அறிவுக்கும் எட்டாதவனென்றும் ஐம்புலன்களாலும் காணமுடியாத பரம்பொருள் என்றும் வேதமுணர்ந்த பெரியோர்கள் கூறுகிறார்கள்.

அன்றி ஞானசுக சொரூபனென்றுங் கூறுகின்றார்கள். சத்துவம் முதலிய குணங்களுடனிருந்து மாயையால் உலகத்தைப் படைக்கும் பரம்பொருள் தாங்கள்தான் காப்பவரும் முடிவில் சங்கரிப்பவரும் தாங்கள் தான். தாங்கள் செய்பவர் போலிருக்கிறீர்கள். ஆனால் செய்பவர் தாங்களல்ல. நடக்கிறவர் போல் காணப்படினும் நடப்பவர் நீரல்ல; பார்ப்பவர் போலும் கேட்பவர் போலும் நீரிருந்தாலும் பார்ப்பவரும் கேட்பவரும் நீரல்ல. தங்களைப் பிராணன், மனம் இவைகளில்லாதவரென்றும் வெண்மைவர்ணமுடையவரென்றும் வேதங் கூறுகின்றது. பூதங்களெல்லாவற்றிலும் தாங்கள் சரி சமானமாய் இருப்பவராயினும் அஞ்ஞானமாகிய இருளில் மறைந்த மனமுடையவர்கள் கண்களுக்கெட்டாதவர், நல்லறிவுடையவர்களின் கண்களுக்குச் செவ்வனே புலப்படக்கூடியவராகிறீர். தங்களுடைய உதரத்தில் அநேக பிரமாண்டங்கள் பரமாணுக்களாகக் காணப்படுகின்றன. அப்படியிருந்தும் என் வயிற்றிற் பிறந்து உலகத்தில் விளையாடுகிறீர். இரகுபுங்க! நீர் பக்தபாரதீனரென்பதைக் காட்டினீர். அதை நானறிந்தேன். இப்போது நான் உமது மாயையில் சம்ஸாரசாகரத்தில் முழுகி பிள்ளை, புருஷன், பொருள்களில் கட்டுண்டு சுழல்கிறேன். இப்போது உம்மைச் சரணமடைந்து விட்டேன். தேவ! உமது இந்த வடிவம் எப்போதும் என் மனதில் இருக்கட்டும், உலக சொரூபாகிய பகவானே! இந்த ரூபமானது உலகத்துக்கு விரோதமானது. இந்த வடிவத்தை மறைத்துக் கொண்டு பரமானந்தம் தரத்தக்க சிறு குழந்தை வடிவத்தையெடுத்துக் கொள்ள வேண்டும். தங்களை நான் லாலனை செய்தும் ஆலிங்கனம் செய்தும் தங்களோடு சம்பாஷித்தும் அஞ்ஞானம் நீங்கப் பெறுகிறேன்" என்றாள்.

ஸ்ரீ பகவான் கூறுகிறார்.

"அம்மா! தாங்கள் எப்படி விரும்புகிறீர்களோ அவ்விதமே செய்கிறேன். முன்னம் பிரமதேவர் செய்த பிரார்த்தனைக் கிணங்கி, இந்தப் புவியில் இராவணனென்னும் இராக்கதனைச் சங்கரிக்க நானுடைய வடிவத்துடன் அவதரித்திருக்கிறேன். அம்மா! தாங்களும் தசரதரும் என்னைப் புத்திரனாக அடையக் கருதி முன்

தவம் புரிந்தீர்கள். அதற்காக நான் அவதரித்தேன். என் உருவத்தைத் தாங்கள் இப்பொழுது பார்த்தது முன் செய்த தவப்பயனேயாம். என்னுடைய தரிசனம் மற்றவர்களுக்குக் கிடைக்காது. அது முக்தியளிக்கத்தக்கது. நம்மிருவருக்கும் நடந்த சம்வாதத்தைப்படிப்பவர்களும் கேட்பவர்களும் என்னுடைய சாரூப்ய முக்தியைப் பெறுவார்கள். அவர்களுக்கு அவர்கள் மரணமடையுந் தருவாயில் என் நினைவுண்டாகும்" எனத் தன் அன்னை கௌஸல்யாதேவியிடம் தெரிவித்து இராமர் குழந்தை வடிவங் கொண்டு அழுதார்.

குழந்தை வடிவங் கொண்ட இராமபிரான் திருமேனி இந்திர நீலத்தை யொத்து விளங்கிற்று. உருவம் வெகு அழகாக விருந்தது. பரந்த நேத்திரமுடையவராயிருந்தார். சூரியனுக்குச் சமமான தேஜஸுடையவராய் லோக பாலர்கள் யாவரையும லாலனை செய்வதற்குரியவரென்று சொல்லும்படி. விளங்கினார்.

தனக்குக் குழந்தை பிறந்த உத்ஸவத்தை தசரத சக்ரவர்த்தி கேட்டு ஆநந்தசாகரத்தில் மூழ்கியவராய் வசிஷ்டருடன் ஜகத்பிரபு குழந்தை வடிவமாக விளங்கும் இடத்திற்கு வந்து தாமரை இதழையொத்துத் துலங்கும் கண்களுடைய இராமபிரானை நோக்கிப் பரமானந்த மடைந்தார். உடனே அப்பொழுது செய்ய வேண்டிய ஜாதகர்மாதிகளை வசிஷ்டரைக் கொண்டு செய்து முடித்தார்.

பின் தாமரை புஷ்பங்கள் போன்ற கண்களையுடைய கைகேயி பரதனைப் பெற்றாள். ஸுமித்திரை பூர்ணசந்திரனை யொத்த முகங்களையுடைய இரண்டு புத்திரர்களைப் பெற்றாள். அரசன் அச்சமயம் ஆயிரக்கணக்கான கிராமங்களையும் பவுன்களையும் ரத்தினங்களையும் சிறந்த பசுக்களையும் ஸந்தோஷத்துடன் பிராமணர்களுக்குத் தானங் கொடுத்து புத்திரோற்சவங் கொண்டாடினான். எல்லோரையும் சந்தோஷப் படுத்தும் அருமையான குணம் கௌஸல்யையிடம் பிறந்த பிரபுவுக்கு இருக்கக்கண்டு அவருக்கு இராமனெனவும் எல்லோரையும் ஆளும் சக்தி கைகேயியிடம் பிறந்த புத்திரனுக்கு இருக்கக் கண்டு அவனுக்குப் பரதனெனவும், சுமித்திரையிடம் பிறந்தவர்களில் மூத்தவனுக்கு சர்வ இலக்ஷணங்களும் செவ்வையாயமைந்திருக்கக் கண்டு அவனுக்கு இலக்ஷ்மணனெனவும் சத்ருக்

களைச் சங்கரிக்கும் சக்தி இளையவனுக்கு இருக்கக் கண்டு அவனுக்குச் சத்ருக்னனெனவும் திருநாமம் புனைந்தழைத்தார் வசிஷ்டமகாமுனிவர்.

முன்னம் இந்த அவதார புருஷர்களுடைய தாய்மார்கள் பாயஸத்தையுண்ட முறைமையனுசரித்து இலக்ஷ்மணன் இராமபிரானோடும் சத்ருக்னன் பரதனோடும் சேர்ந்து சஞ்சரித்தார்கள். லோகநாயகராகிய இராமபிரானும் தம்மையனுசரித்து விளையாடும் இலக்ஷ்மணனோடு விளையாடி மதலைச் சொற்களால் தாய் தந்தையரை சந்தோஷப்படுத்தினர். நெற்றியில் அரச இலைபோலிலகும் முத்துச் சுட்டியின் சோதி வீசவும் சமுத்திரத்திலுள்ள மணித்தாவடங்களுக்கு நடுவே புலிநகங்களிருந்து பிரகாசிக்கவும் செவிகளில் மருத மரத்தின் முற்றின காய்களைப் போன்ற சொர்ணமும் இரத்தினமுங் கலந்த ஆபரணங்களிலகவும் தண்டை பொலிகவும் அரைஞாண், தோள்வளை இவைகளோடு புன்னகைகொண்டு வீட்டில் அங்கணந்தோறும் சென்று விளையாடும் இராமபிரானைப் பார்த்து தசரதரும் கௌஸல்யையும் பரமானந்தமடைந்தார்கள்.

இப்படியாகத் தினந்தோறும் குழந்தைகள் நால்வரும் விளையாடுவதைப் பார்த்தும் மதலைச் சொல் வழங்குவதைக் கேட்டும் ஆனந்த சாகரத்தில் மூழ்கியவராயிருந்து வரும் நாளில் ஓர் நாள் தசரத சக்ரவர்த்தி போஜனஞ் செய்து கொண்டிருக்கும் தருணம் இராமனைப் பார்த்து இங்கு வாவென்று அழைத்தார். இராமபிரான் வராமல் விளையாடிக் கொண்டிருந்தார். அதுகண்ட சக்ரவர்த்தி கௌஸல்யையைப் பார்த்து "குழந்தையை நீ போய் அழைத்து வா" என்றனுப்பினர். கௌஸல்யை "இராமா வா" வென்றழைத்துக்கொண்டு அவரிடம் சென்றாள். அவள் அருகே வந்ததும் இராமர் ஒரு ஓட்டம் பிடித்தார். கௌஸல்யை யோகிகளுடைய மனத்தில் வசிக்கும் இராமனை இப்போது கண்ணால் பார்க்கவும் சக்தியற்றவளானாள். பிறகு கணநேரத்திற்கெல்லாம் கையெல்லாம் சேற்றைப் பூசிக்கொண்டு தாயாரெதிரில் ஓடிவந்து தமக்குப் படைத்திருக்கும் அன்னத்தில் ஓர் கவளம் எடுத்துக்கொண்டு மீண்டும் ஓடி ஒளிந்துகொண்டு விளையாடினர்.

அன்னை கௌஸல்யை ஸ்ரீராமனுக்கு மாதந்தோறும் அபூபம், மோதகம், முறுக்கு முதலிய பல தின்பண்டங்களைச் செய்து கொடுத்தும் நாள்தோறும் அலங்கரித்தும் வந்து வருடக்கடைசியில் வரும் ஜன்ம நக்ஷத்திரத்தில் காதுகுத்தலென்கிற கருமத்தைச் செய்வித்து மகிழ்ந்திருந்தாள். இராமனிடத்தினால் அன்பினால் சில சமயம் வீட்டுவேலைகளையும் மறந்துவிடுவாள். இந்தக் காலத்திலொரு நாள் தமது அன்னையிடம் சென்று "அம்மா! சாதம்" என்று கேட்டார். கௌஸல்யை வீட்டு வேலைகளைச் செய்து கொண்டிருந்தமையால் தன் குமாரன் பேச்சைக் கவனிக்கவில்லை. அதுகண்ட இராமர் மிகக் கோபங்கொண்டு தமது கையிலிருந்த லகுடம் என்னும் ஆயுதத்தினால் அடித்துச் சட்டி பானைகளை யுடைத்து அவைகளிலிருந்த வெண்ணெய் முதலியவைகளை லக்ஷ்மணன், பரதன், சத்ருக்னன் முதலியவர்களுக்குக் கொடுத்து விளையாடினார். இதைச் சமயற்காரன், கௌஸல்யையிடம் தெரிவித்தான். அதையறிந்த இவர்கள் நகைத்துக்கொண்டு ஓட்டம் பிடித்தார்கள். கௌஸல்யையும் அவர்களைப் பின் தொடர்ந்து தட்டுத் தடுமாற்றத்துடன் ஓடி இராமரைப் பிடித்துக் கொண்டு ஒன்றுஞ் சொல்லாமல் பொறுமையாயிருந்தாள். குழந்தையாகிய இவர்கள் மட்டும் மெதுவாக அழுதார்கள். பிறகு கௌஸல்யை அவர்களை ஆலிங்கனம் செய்து கொண்டு சமாதானப்படுத்தினாள்.

இப்படியாக ஆநந்தமயனும் உலகத்திற்கு ஆநந்தத்தை யளிப்பவனுமாகிய பரமபுருஷன் தன் மாயையால் குழந்தை வடிவெடுத்துக்கொண்டு உத்தம தம்பதியாகிய தசரதர் கௌஸல்யை இவ்விருவருக்கும் நித்தியாநந்தத்தையும் பரமானந்தத்தையும் அளித்து வந்தார்.

பிறகு நால்வரும் கௌமார பருவத்தை அடைந்தார்கள். வசிஷ்ட மகா முனிவர் அவர்களுக்கு உபநயனஞ் செய்வித்தார். காலடைவில் நால்வரும் வித்தைகளில் வல்லவர்களானார்கள் தனுர் வேதத்திலும் இணையற்ற சமர்த்தர்களானார்கள். அஸ்திரங்களெல்லாவற்றையும் அறிந்து மகா பராக்ரமசாலிகளானார்கள். இலக்ஷ்மணர், பரதர், சத்ருக்னர்கள் மூவரும் இராமர் சேவிக்கத் தக்கவர் என்பதை யறிந்து அவரையே யனுசரித்து வந்தார்கள்

ளாகிய ஸ்ரீராமர் விசுவாமித்திரரை நோக்கி, "மகிமை பொருந்திய முனிவரே! இந்த ஆச்சிரமம் யாருடையது? தளிர், இலை, மலர், கனி இவைகளுடன் கூடிய மரங்களடர்ந்து வளர்ந்திருக்கின்றன. ஆனால் ஒரு பிராணியையும் இங்குக் காணோம். இதைக்கண்ணுற்றதும் என் மனதில் ஓர் ஆநந்தமுண்டாகிறது; இதன் உண்மையைக் கூறவேண்டும்" என்றார்.

விசுவாமித்திர முனிவர் கூறுகிறார்.

ஏ இராம! முந்திய சரித்திரத்தைக் கேள். தர்மங்களனைத்தையும் அறிந்தவர்களுள் சிறந்தவரும் உலகப்பிரஸித்தரும் கௌதமர் என்ற திருநாமமுடையவருமாகிய ஒரு முனிபுங்கவர் இங்குத் தவம் புரிந்து விஷ்ணுவைச்சந்தோஷப்படுத்தினார். அந்தக் கௌதமமுனிவர் அனுஷ்டித்து வந்த பிரமசரியவிரதத்தைக் கண்டு மகிழ்வுற்ற பிரமதேவர் அவரிடம் பணிவிடை செய்வதில் ஸமர்த்தையும் அதிரூபவதியுமாகிய அகல்யை என்பவளைக் கொடுத்தார். அந்தத் தவசிரேஷ்டராகிய கௌதமமுனிவர் அகல்யையுடன் இங்கு வாசஞ்செய்தார். தேவேந்திரன் அந்த அகல்யையிடம் மோகங்கொண்டு அவளை அடைவதற்குச் சமயம் பார்த்துக்கொண்டிருந்தான். [illegible]கு ஒரு சமயம் கௌதமர் தமது ஆசிரமத்திலிருந்து வெளியே போயிருக்கக்கண்டு, அப்பொழுது அவரைப்போலவே இந்திரன் ஓர் உருவங்கொண்டு அகல்யையிடம் சென்று அவளைப் புணர்ந்து அந்த ஆசிரமத்திலிருந்து வெளிப்புறப்பட்டான். அச்சமயம் வெளியே போயிருந்த முனிவர்பெருமானும் சீக்கிரமாக வந்துவிட்டாராகையால் தம் முன் தம்மைப்போல் வடிவங்கொண்டு வரும் இந்திரனைப் பார்த்ததும், மிகுந்த சினங்கொண்டு "அடே பாபி! துரோகி! நீ யார்? என்னுருவங்கொண்டதன் காரணமென்ன? உண்மையைச் சொல், இல்லாவிடில் உன்னைச் சாம்பலாகச் செய்துவிடுவேன். இதிற் சிறிதும் சந்தேகமில்லை" என்றார். உடனே இந்திரன் மனதில் அச்சங்கொண்டு "முனிவரே! நான் தேவராஜன். காமனுக்குக் கிங்கரனானேன். கெட்ட மனதுடைய நான் கெட்டகாரியத்தைச் செய்துவிட்டேன். மன்னிக்கவேண்டும்" என்றான். இதைக்கேட்டதும் கௌதமர் மிக்கோப

கொண்டு இந்திரனைப் பார்த்து "பெண்குறியில் ஆசைகொண்ட கெட்டமனமுடையவனே! உன் தேகத்தில் நீ ஆயிரம் பெண் குறிகளை அடையக் கடவாய்" என்று சாபங்கொடுத்து விரைவாகத் தமதாசிரமம் சென்றார். அங்கே நடுங்கக் கொண்டு நடுங்கக் கிலிபிடித்து ஓர் மூலையில் கைகூப்பித்து நிற்கும் அகலிகையைப் பார்த்த அம் முனிவர், "ஏ துஷ்டே! கெட்ட செய்கை யுடையவளே! என்னுடைய ஆசிரமத்தில் நீ கல்லாக இருக்கக்கடவது. அன்றியும் ஆகாரமில்லாமல் அல்லும் பகலும் வெயிலையும் காற்றையும் மழையையும் பொறுத்துக் கொண்டு பரமேசுவரரான இராமனை மனதில் தியானஞ்செய்தவாறே தவம்புரிந்து வா; என்னுடைய இந்த ஆச்சிரமத்தில் பிராணிகளொன்றும் இல்லாதிருக்கட்டும்; இப்படி அநேகாயிரம் வருடங்கள் கழிந்த பின்னர் தசரதகுமாரனாகிய இராமர் தமது சகோதரன் இலக்ஷ்மணனுடன் இங்கு வருவார். அப்போது கல்லாகக் கிடக்கும் உன்னை அவரது பாத பங்கயத்தால் தீண்டுவார். பிறகு உன் பாபங்கள் உன்னைவிட்டு விலகும். அதன்பின் நீ பக்தியுடன் இராமனைப் பூசித்து வலம் வந்து வணங்கித் தோத்திரம் செய்து சாபத்தினின்றும் விடுபடுவாய். பின்னர் எனக்கு முன்போல் சுகமாகப் பணிவிடை செய்து கொண்டிருப்பாய்" என்று கூறி மலைகளுக்குள் சிறந்ததாகிய இமயமலைக்குச் சென்றார்.

அது முதல் சுகமான இந்த ஆசிரமத்தில் அகலிகை எந்தப் பிராணிகளின் கண்ணுக்கும் புலப்படாமல் வசிக்கிறாள். உனது சரணதூளிகளின் ஸ்பரிசத்தை எதிர்ப்பார்த்துக் கொண்டு காற்றை உணவாகக் கொண்டு வேறு எவராலும் செய்யமுடியாத அருமையான தவம் புரிந்து கொண்டிருக்கிறாள். "இரகு சிரேஷ்டனே! பிரமதேவனுக்குக் குமாரியும் கௌதம முனிவரின் மனைவியுமாகிய இந்த அகலிகையைப் பரிசுத்தமாக்க வேண்டும்" என்று கூறி இராகவனை கையைப் பிடித்தழைத்துக் கொண்டு சிலாரூபமாக இருந்து கடுந்தவம் புரியும் அகலிகை யிருக்குமிடம் வந்து காட்டினார். இராமசந்திர பிரபு மகிழ்ச்சியடைந்து அந்தச் சிலையைக் காலால் ஸ்பரிசித்தார். உடனே அதினின்று தவத்தையே பொருளாகவுடைய அகலிகை வெளிப்பட்டாள். அந்த உத்தமியை இராமபிரான் நமஸ்

தரித்து தாம் இராமர் என்பதையும் தெரிவித்துக்கொண்டார். பிறகு அகலிகையை தன் முன் மஞ்சட்பட்டாடையுடுத்து வில்லையும் பாணங்களையும் தரித்துக் கொண்டு தம்பி இலட்சுமணனுடன் நிற்பவரும் புன்முறுவல் கொண்ட முகமுடையவரும் பத்மம் போன்ற நேத்திரமுடையவரும் ஸ்ரீவத்ஸம் என்ற அடையாளமுடையவரும் இந்திர நீல இரத்தினத்திற்கு நேரான காந்தியுடையவரும் பத்துத் திக்குகளிலும் ஒளி பரவிளங்குபவருமாகிய இலக்ஷ்மீ காந்தனைப் பார்த்தவுடனே தன் கணவன் கௌதமமுனிவர் கூறியதை நினைத்துக் கொண்டு இந்த இராமனை பரமபொருளாகிய நாராயணனென வறிந்து சுறுசுறுப்புடன் அர்க்கியம் முதலியன கொடுத்து உபசரித்து விதிப்படி அவரைப் பூசித்து வணங்கிக் கண்களினின்றும் ஆநந்தபாஷ்பம் பெருக நின்று அவரைப் பின் வருமாறு தோத்தரிக்கலானாள்.

அஹல்யை துதிக்கிறாள்.

ஆச்சரியம்! உலகங்களுக்கு வாசஸ்தானமாகிய பிரபுவே! தமது பாதாரவிந்தத்தில் படிந்த தூளியின் லேசத்தால் நான் பரிசுத்தமடைந்தேன். அனுராகமுடைய மனமுடைய பிரமன், சங்கரன் முதலியவர்கள் எப்போதும் தேடிக் கொண்டிருக்கும் பாதபத்மமல்லவா எனக்குக் கிடைத்தது. ஏ இராம! உமது செய்கை விசித்திரமானது. மானிடபாவனையால் உலகமுழுதும் மோகமுற்றது. ஆச்சரியம்! எப்போதும் சலனமற்றவரும் பரிபூர்ணரும் ஆனந்தமயரும் மாயாரகிதருமாகிய நீர் சலனமடைகிறீர். கங்காநதி எவருடைய பாதபங்கயத்தின் தூளியால் பரிசுத்தமான சரீரமுடையவளாகி உருத்திரன் பிரமன் முதலிய தேவர்களைப் பரிசுத்தம் செய்கிறாளோ அந்த ஈசனே என் கண்ணுக்கு முன் பிரத்தியக்ஷமாகவிருக்கிறார். ஆகா முன் நான் செய்த பாக்கியத்தின் பெருமையை என்னென்று கூறுவேன்!

மானிடனாக அவதரித்தபோது மானிடவடிவம் கொண்டவரும் இராமன் என்ற பெயரை யடைந்தவரும் இரமணீயமான தேகம் பெற்றவரும் வில்லைக் கையில் தரித்தவரும் தாமரைமலர் போன்ற கண்களுடையவருமாகிய ஹரியை நான் எப்போ

தும் பஜிக்கிறேன். வேறு எவரையும் தெய்வமாகக் கொள்ளவில்லை.
எந்த பகவானுடைய பாதாரவிந்தத்தின் தூளியானது வேதங்களால்
தேடக்கூடியதோ, எவருடைய நாபிகமலத்தில் பிரமதேவர் உண்
டானரோ, புராரியாகிய பரமசிவமூர்த்தி எவருடைய நாமத்தின்
ஸாரத்தில் ரஸிக்கிறாரோ அந்த பகவானாகிய இராமசந்திரனை நான்
எப்போதும் மனதில் தியானம் செய்கிறேன். பிரமலோகத்தில்
நாரதர் முதலியவர்களும், சிவன் முதலியவர்களும், ஆனந்த பாஷ்
பத்தால் நனைந்த ஸ்தனமுடைய கலைமகளும் எந்த பகவானுடைய
அவதாரசரித்திரங்களைத் துதிக்கிறார்களோ அந்த ஸ்ரீராமனை நான்
சரணமடைகிறேன். பரமாத்மாவும் புராணபுருஷருமாகிய பகவான்
இவர் தான். இவரே சுயஞ்சோதி. முடிவில்லாதவர். ஆதியிலிருப்
பவர். இந்த இராமன் பிறருக்கு அனுக்கிரகம் செய்வதன் பொரு
ட்டு உலகம் மோகிக்கக்கூடிய மாயாவடிவமெடுத்துக் கொண்டி
ருக்கிறார். சுவதந்திரனும பரிபூர்ணனும் ஆத்மாவும் பிறப்பில்
லாதவருமாகிய இந்த பகவான் ஏக புருஷர். இவர் தமது மாயை
யின் குணங்களாகிய சத்வம், இரஜஸ், தமஸ் என்ற மூன்றிலும்
பிரதிபிம்பிக்கும் போது பிரபஞ்சத்தின் உற்பத்திக்கும் பரிபாலன
த்திற்கும் சங்காரத்திற்கும் பிரமன் விஷ்ணு சிவன் என்ற நாம
தேயங்களைப் பெறுகிறார். ஓ ராம! உமது பாதகமலம் முன்
இலக்ஷ்மிதேவியால் அவள் மார்பில் வைத்துக் கொண்டாடப்பட்ட
தன்றோ! அன்றியும் அது மூவுலகமும் ஒரு சமயம் வியாபித்து நின்
றது. பற்றற்ற முனிவர்கள் தியானம் செய்யக் கூடியது அது. அப்
படிப்பட்ட பாதபத்மமுடைய உமக்கு வந்தனம். நீரே உலகத்துக்கு
ஆதி புருஷர். பிரபஞ்சமே நீர் தான். உலகங்களுக்கு ஆசிரயமாக
யிருப்பவரும் நீர்தான். பூதங்களெதிலும் பற்றுதலில்லாமல்
விளங்கும் பரமபுருஷன் நீர்தான். மறைகளுக்கும் எட்டாதபுரு
ஷன் நீர்தான். சொல்லத்தக்கது சொல்வது (வாச்சியம் வாசகம்)
என்ற பேதத்தால் நீர் உலகரூபனாக விளங்குகிறீர். ஓ ராம ஒருவ
ராகிய நீர் பலவிதமான ரூபங்களுடைய மாயையால் காரியம்
காரணம், கர்த்தா, பலன், ஸாதனம் என்பனவாதி பேதங்களு
டன் தோன்றுகிறீர். உமது மாயையால் மோகமடைந்து அறி
வுடையவர்கள் உண்மையிலேயே உம்மைத் தெரிந்து கொள்ள
வில்லை. மாயையை சுவாதீனப் படுத்திக் கொண்ட உம்மை

மானிடனைப்போல் நினைக்கிறார்கள். ஆகாயம் போல் நீர் உள்ளும் புறம்பும வியாபித்திருப்பவர், நிர்மலன், பற்றற்றவன், சலனமில்லாதவன், அநந்தன் (முடிவில்லாதவன்,) சுத்தன், புத்தன், சமமானவன், இரண்டற்றவன், நானேஸ்திரீ, அறிவில்லாதவள். பிரபுவே! உம்மை நான் எவ்விதம் தெரிந்துகொள்வேன். தெரிந்து கொள்ளமுடியாது. ஆகையால் ஏ இராம! மற்றவைகளில் அறிவைச் செலுத்தாமல் உமக்குஅநேக வந்தனம் செய்கிறேன். ஓ தேவ! நான் எந்த விடத்திலிருந்தாலும் எப்போதும் உமது சரணாவிந்த மலரிலேயே அன்பு செலுத்துமாறு அனுக்கிரகிக்க வேண்டும். புருஷோத்தம !உமக்கு நமஸ்காரம். பக்தவத்ஸல உமக்கு நமஸ்காரம். ஹிருஷீகேச உமக்கு நமஸ்காரம். நாராயண உமக்கு நமஸ்காரம். சம்சாரபயத்தைப் போக்குகிறவரும் கோடிசூரியருக்குச் சமமானவரும் கையில் பாணங்களையும் வில்லையும், தரித்தவரும் நீருண்ட மேகம் போல் பிரகாசிப்பவரும் சுவர்ணம் போன்ற வஸ்திரமுடயவரும் இரத்தினங்களிழைத்த குண்டலமுடையவரும் தாமரை மலர் போனற நேத்திரமுடையவரும் தம்பி இலக்ஷுமணருடன் கூடிய வருமாகிய இராமனை நான் ஸ்தோத்திரஞ் செய்கிறேன்—என்று இவ்விதம் அகல்லியை ஸ்தோத்திரம் செய்து பிரத்தியக்ஷமாக வந்து தனக்கு முன் நிற்கும் புருஷோத்தமனை வலம் வந்து நமஸ்கரித்து இராகவனிடம் உததரவு பெற்றுத் தன் கணவனாகிய கௌதம முனிவரை யடைந்தாள்.

அகல்லியை செய்த இந்த ஸ்தோத்திரத்தை அன்போடு படிப்பவன் பாபங்களெல்லாவற்றிலுமிருந்து விடுபடுவான். பப்பிரம்ம சொருபத்தையு மடைவான. மக்கட்பேற்றினை விரும்பியவன இராமனை மனதில் தியானம் செய்து இந்த ஸ்தோத்திரத்தைப் பாராயணம் செய்தால் ஒருவருடத்திற்குள் அவன்மனைவி மலடியாக விருந்தாலும் அவளிடம் புத்திரோற்பத்தி யுண்டாகும். இராமரது கருணையால் மனோபீஷ்டங்களையெல்லாம் அடைவான் பிர்மஹத்தி செய்தவனாயினும் குருவின் மனைவியைப் புணர்ந்த வனாயினும் சுவர்ணத்தைத் திருடினவனாயினும் கட்குடித்தவனாயினும் தாய் தந்தை, பெற்றோர் இவர்களை இம்சிப்பவனாயினும் எப்போதும்

சுமனுபவிப்பதிலேயே கருத்துள்ளவனாயினும் இராமபதியைத் தியானித்து இந்த ஸ்தோத்திரத்தைப் பாராயணம் செய்து வரின் முத்தியடைவான் என்றால் நல்ல ஆசாரமுடையவனிடன் ஒருவன் பாராயணம் செய்யின் கேட்க வேண்டுமா?

அகல்யைக்கு நற்கதியளித்த

ஐந்தாவது சருக்கம்

முற்றிற்று

6-வது சருக்கம்.

ஸூதர் கூறுகிறார்.

விசுவாமித்திரர் இலக்ஷ்மணனுடன் கூடிய இராமபிரானைப் பார்த்து, "குழந்தாய்! ஜனகமகாராஜனிருந்து அரசு புரியும் மிதிலைக்குப் போவோம். அங்கு நடக்கும் சிறந்த யாகத்தைப் பார்த்துப பிறகு அயோத்திக்குச், செல்வோம்" என்று கூறி இராம இலக்ஷ்மணர்களுடன் கங்கா நதியைக் கடந்து செல்லப் புறபபட்டார்—அந்தக்காலத்தில் அக்கிருந்த ஓடக்காரன் ஒருவன் ஓடி வந்து இராமசந்திரப் பிரபுவைத் தடுத்துக் கொண்டு பின் வருமாறு சொல்லுகிறான்.

ஓடக்காரன் கூறுகிறான்.

"ஏ பிரபுவே தங்களுடைய தாமரைப் புஷ்பங்கள் போன்ற பாதங்களில் ஸ்திரீயாகச் செய்யும் பொடிகள் இருக்கின்றன வென்று தோன்றுகிறது. ஆகையால் தங்களுடைய பாதபதுமங் களை நன்றாய்ச் சுத்தம் செய்து பிறகு ஓடத்தில் ஏற்றி அக்கரை

கொண்டு போய்ச் சேர்க்கிறேன். அப்படியில்லாவிட்டால் தங்களுடைய பாததூளிபட்டவுடன் இந்த ஓடமும் ஸ்திரீயாய் விடும். அப்பொழுது என்னுடைய பிழைப்பும் கெட்டு குடும்ப ஹானியும் வந்து விடும்" என்று சொல்லி அவருடைய கால்களை அலம்பிப் பிறகு அக்கரை கொண்டு போய்ச்சேர்த்தான். விசுவாமித்திரர் ராமருடன் கூட விதேக தேசத்தைச் சார்ந்த நகரமாகிய மிதிலைக்கு அருகாமையிலிருந்த முனிவர்கள் பர்ணசாலைகளுக்குள் ப்ரவேசித்தார். விசுவாமித்திரர் இங்கு வந்திருக்கும் செய்தியை அறிந்த ஜனகமகாராஜன் மிகவும் மகிழ்ச்சியை யடைந்து பூஜைக் குரிய வஸ்துக்களை எடுத்துக் கொண்டு தனது குருவுடன் வந்து தண்டம் போல் புவிமீது விழுந்து வணங்கி முனிவரைப் பூஜித்தான் பிறகு முனிவர் அருகே உதயமான சூரிய சந்திரர்களுக்கொப்பாகத் திசைகள் எல்லாவற்றையும் பிரகாசிக்கச் செய்யும் தேஜஸுடன் சகல லக்ஷணங்களோடு கூடிய இராம லக்ஷ்மணர்கள் அருகே இருப்பதைக்கண்டுமுனிவரைநோக்கி, "மானிடர்களுக்குள் சிறந்தவர்களாகிய இவ்விருவரும் யாருடைய குமாரர்கள்? தேவகுமாரர்கள் போன்ற இவர்கள் இப்போது என் மனதுக்கு மிகவும் பிரீதியை யுண்டு பண்ணுகிறார்கள். நரநாராயணர்களைப் போலிருக்கிறார்கள். இவர்கள் யார்?" என்று கேட்டார். கௌசிகன் பரமானந்த மடைந்து ஜனகமகாராஜனை நோக்கி "இவ்விருவரும் தசரத மகாராஜனுடைய குமாரர்கள். இராமன் இலக்ஷ்மணன் என்ற பெயருடையவர்கள் இவர்களை நான் தசரதசக்ரவர்த்தி யிருந்து அரசு புரிந்து வரும் அயோத்தியிலிருந்து என் யாகத்தைக் காக்கும் பொருட்டு அழைத்து வந்தேன். வரும்போது அளவு படுத்திச் சொல்ல முடியாத பராக்கிரமமுடைய இந்த இராமன் உலகமுழுதும் இம்சித்து வந்த தாடகை யென்கிற அரக்கியை என் உத்தரவுப்படி ஒரே பாணத்தால் சங்கரித்தான். பின்னர் எனதாச்சிரமம் வந்து அங்கே என் யாகத்தைக் கெடுத்து வந்த சுபாகு முதலிய இராக்கதர்களைக் கொன்றான். மாரீசனைக் கடலில் தள்ளினான். பிறகு புண்ணிய நதியாகிய கங்கைக்கரைக்கு வந்தான். அங்குள்ள கௌதமரது ஆசிரமம் வந்து அங்கு சிலாரூபமாயிருந்த கௌதமருடைய பத்தினியைத் தம்முடைய பாததூளியால் மானிடரூபமடையும்படி செய்து அந்த

மாதரசிலைபக்கண்டு வணங்கினான். அகலிகையிந்த இராமனுக்குவ க்கத்துடன் பூஜை செய்தாள். இப்பொழுது தங்களிடத்திலி க்கும் பரமசிவனுடைய வில்லைக் காண்பதன் பொருட்டு வந்திரு கிறான். அந்த வில்லானது எல்லா அரசர்களாலும் பார்க்கப் பட் டதென்றும் பூஜிக்கப் பட்டதென்றும் கேள்விப் பட்டிருக்கிறாே ஆகையால் இராஜசிரேஷ்டனே! சிறந்த அந்தச் சிவசாபத்தை இரா னுக்குக் காட்டவேண்டும். வில்லைப் பார்த்துப் பின்பு அயோத் சென்று தந்தை தசரதனைப் பார்க்க விரும்புகிறான்" என்றார்.

இங்ஙனம் விசுவாமித்திரர் கூறியதும் தருமங்களையுணர்ந் ஜனகமகாராஜன் மிகுந்த கௌரவத்துடன் பூஜார்ஹர்களான இ வரையும் பூசித்தார். பிறகு அறிவாளிகளுக்குள் சிறந்த தம மந்திரிகளுள் ஒருவனையழைத்துப் பின்வருமாறு சொல்லுகிறார் "பரமசிவன் சாபத்தைச் சீக்கிரம் இங்கெடுத்துவா; இராமனுக்கு காட்டு" என்று சொல்லியனுப்பினார். அமைச்சன் அவ்விதமே செய்கிறேன் என்று போய் விட்டான். பிறகு ஜனகமக ராஜன், கௌசிகரைப் பார்த்து "முனிவரே இந்த இராமன் அந்த சிவதனுசைப் பிடித்து வளைத்து நாணேற்றுவானாகில் என் கன்னிகை சீதையை மணஞ் செய்து கொடுக்கிறேன்" என்றான் இதைக் கேட்டதும் விசுவாமித்திர முனிவர் மந்தஹாஸத் துடன் இராமனைத் திரும்பிப் பார்த்து அவ்விதமே செய்யலாம் என்று கூறி "அளவற்ற வீரியமுடைய இராமபிரானுக்கு முதலில் வில்லைக் காட்டுங்கள் பார்ப்போம்" என்றார். மௌன விரத முடைய கௌசிகர் இவ்வாறு கூறவே ஏற்கனவே வில்லையெடுக் கவும் வைக்கவும் வேலையில் அமர்ந்திருந்த ஐயாயிரம் பலசாலிகள் வில்லையெடுத்துக் கொண்டு வந்தார்கள். மந்திராலோசனை செய் பவர்களுக்குள் சிறந்தவரான அமைச்சனொருவன் மணிகள் கட்டி யதும் இரத்தினங்களாலும் வஸ்திரங்களாலும் அலங்கரிக்கப் பெற றதுமாகிய வில்லை இராமருக்குக் காட்டினான். இராமபிரான் வில்லைப் பார்த்து மனதில் சந்தோஷமடைந்து வஸ்திரத்தை இறுக்கிக் கட்டிக் கொண்டு இடது கையால் விளையாட்டாகத் தொடுபவர் போல் அதைத்தொட்டு அசைத்தார். பிறகு வானவர்களும் மன்ன வர்களும் பார்த்துக் கொண்டிருக்கும் போதே சாபத்தைக் கையா

லெடுத்து ஆரோபணம் செய்து உலகுகையால் கொஞ்சம் இழுத்தார். உடனே சிவசாபம் படீலென்று முறிந்தது. அந்தச் சத்தம் திக்குகள், சுவர்க்கம், பூமி, பாதாளம எங்கும் கேட்டது. வானத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்த வானவர்கள் இராமபிரான் மீது மலர்மாரி பொழிந்தார்கள. துந்துபி முதலிய வாத்தியங்கள் முழங்கின. அப்ஸரஸ்திரீகள் நர்த்தனம் செய்தார்கள். ஜனகமகாராஜன் உடனே இரகுபுங்கவனை இருகரங்களாலும் தழுவிக் கொண்டு பரமாச் சரியமடைந்தான். சீதாதேவியின் தாய்மார்களும் மாடியிலிருந்து பார்த்தபடியே யிருந்து மிக்கவியப்புமகிழ்ச்சியுமடைந்தார்கள் ஆபரணங்களெல்லாம்பூண்டு அலங்கரித்துக் கொண்டிருக்கும் சீதை, கழுத்தில் முத்தாரம் ஒளி வீசவும் காலில் தண்டை யொலிக்கவும் வெண்பட்டாடை போர்த்துக் கொண்டு முகத்தில் புன்முறுவல் தோன்ற வலது கரத்தில் சொர்ணமாலையுடன இராமர் முன் வந்து அவர் கழுத்தில் சுவர்ணமயமானமாலையைப் போட்டு மெதுவாகச் சென்றாள். அப்பொழுது உலகத்தை மோகிக்கும் படி திவ்ய அலங்காரத்துடனும் திவ்ய தேஜஸுடனும் விளங்கும் இராமனைச் சாளர வழியே பார்த்த ராஜஸ்திரீகள் யாவரும் சந்தோஷமடைந்தார்கள்.

பிறகு ஜனகமகாராஜன் விசுவாமித்திரரைப் பார்த்து, "முனிவரே! விரைவாகப் பத்திரிகை யனுப்ப வேண்டும். தசரத மகாராஜன் அவருடைய மந்திரிகளுடனும் மனைவிமார்களுடனும் மற்றுமுள்ள உறவின்முறையார்களுடனும் இங்கு நடக்கப் போகும் அவருடைய குமாரர்களின் விவாகத்தின் பொருட்டு சீக்கிரம் வர வேண்டுமல்லவா?" என்று சொல்ல, விசுவாமித்திரர் சிறிது நகைத்து "ஆம வர வழைக்க வேண்டியதவசியம்" என்று கூறி உடனே அதிவேகமாகச் செல்லும் தூதர்கள் மூலமாக சமாசாரம் அனுப்பினர்.

தூதர்கள் மிகுவேகமாகச் சென்று அயோத்தியையடைந்து தசரத சக்ரவர்த்தியைப் பணிந்து அவரிடம் சங்கதி தெரிவித்தார்கள். தசரதர் இராமபிரானது செய்கையைக் கேட்டதும் என்றுமடையாத மகிழ்ச்சியடைந்து மிதிலைக்குப் புறப்படக் கருதி மந்திரிகளுக்குக் குதிரைகள், இரதங்கள், யானைகள், பதாதிகள்

இவைகளைத் தயார் செய்யும்படி ஆக்ஞாபித்தார். தனக்குத்தனியே இரதங்கொண்டுவரும்படி துரிதப்படுத்தினர். எல்லாரும் என்னோடு மிதிலைக்கு வரவேண்டும் என்பதை யாவருக்கும் தெரியப் படுத்தினர். மூன்று அக்னியுடனும் புறப்படும்படி தமது குரு வசிஷ்ட முனிவருக்குச் சொன்னர். இராமபிரான தாயாகிய கௌஸல்யை முதலியவர்களையும் அவரையே அழைத்துக் கொண்டு போகும்படி சொன்னர். இப்படியாக எல்லோரும் புறப்பட அரசனும் புறப்பட்டு மிதிலைக்குப் போய்ச் சேர்ந்தான்.

தசரதமகாராஜன் மிதிலைக்குச் சமீபம் சென்றதும் அச்செய்தி கேட்ட ஜனகன் மகிழ்வுற்றுத் தமது குரு சதாநந்தருடன் எதிர்கொண்டு வரவேற்றுபசரித்தான். இராமபிரான் தம்பி லக்ஷ்மணனுடன் தந்தையாகிய தசரத மகாராஜனுடைய பாதங்களில் நமஸ்கரித்தார். அப்பொழுது தசரதன் மிகுந்த சந்தோஷமடைந்து இராமனைப்பார்த்து, "ஏ இராம! மலர்ந்த உனது திருமுகத்தைக் கண்டு மகிழ்வுற்றேன். விசுவாமித்திர முனிவரது அனுக்கிரகத்தால் எனக்கு யாவும் மங்களமாகவே முடிந்தன" என்று கூறி இராமனைக் கட்டித் தழுவி உச்சிமோந்து பரமானந்த மடைந்தான். பிறகு ஜனகன் தசரதன் முதலிய எல்லோரையும் நகரத்துக்குள் அழைத்துவந்து ஓர் திவ்யகிருகத்தில் இருக்கும்படி செய்தான்.

இராமலக்ஷ்மண பரதசத்ருக்னர்களின் திருமண வைபவம்.

தருமங்களனைத்தையுமறிந்த ஜனகமகாராஜன் பிறகு ஓர் நல்ல நாளைப் பார்த்து நல்ல சுபமுகூர்த்தத்தில் இரகு புங்கவனை அவருடைய சகோதரர்களுடன் வரவழைத்து இரத்தினஸ்தம்பங்கள் நாட்டப்பெற்றதும் அழகான மேல் விரிப்புகள், தோரணங்கள், முத்துக்கள், மலர்கள் இவைகளால் அலங்கரிக்கப் பட்டதும், சொர்ணாபரணங்கள் அணிந்தவர்களும் வேதமுணர்ந்த வர்களும் சாஸ்திரவாதம் செய்பவர்களுமாகிய அந்தணர்கள் நிறைந்திருக்கும் மகிமையுடையதும், நாற்புறமும் சுமங்கலிகள் சூழ விளங்குவதும், பேரி, துந்துபி, நிருத்தியம், கீதம் இவைகளால் பிரகாசிப்

பரும்மாகிய திவ்யமண்டபத்தில் தேவார்ஹமான இரத்தின பீடத்தில் ஸ்ரீஇராமனை ஜனகமகாராஜன் வீற்றிருக்கும்படி உபசரித்து அவருக்கு இருமருங்கிலும் வசிஷ்டர், விசுவாமித்திரர், புரோகிதராகிய சதானந்தர் இவர்களை வீற்றிருக்கும்படி செய்தான். அந்த இடத்தில் அக்னியை ஸ்தாபித்து விதிப்படி ஜ்வாலையுண்டாகும்படி செய்தான். பிறகு வித விதமான இரத்தினாபரணை அலங்கார முடையவளும் மிகுந்த காந்தி யுடையவளுமாகிய ஸீதையை யழைத்துக்கொண்டு தன் மனைவியுடன் தாமரை மலர் போன்ற நேத்திரமுடைய இராமரிடம் வந்தான் ஜனகமகாராஜன்.

பிறகு இராமரது பாதமலர்களை அலம்பி விதிப்படி சிரசில் அந்த தீர்த்தத்தைப் புரோக்ஷித்துக் கொண்டான். அந்தப்பாத தீர்த்தத்தைப் பரமசிவன் பிர்மதேவர் மற்றுமுள்ள முனிவர்கள் யாவரும் எப்போதும் சிரசில் தரித்துக் கொள்ளுகிறார்களல்லவா? பிறகு ஜனகமகாராஜன் ஸீதையின் கையைப் பிடித்து இராமர் கைமீது வைத்து "ஏ இராமா! உனக்கு சொர்ணாபரணங்களாலும் இரத்தினாபரணங்களாலும் அலங்கரித்துக் கொண்டிருக்கும் ஸீதையைக்கொடுக்கிறேன். இரகுபுங்கவனே! நீ பிரீதியடையவேண்டும்" என்று கூறி பாற்கடல், லக்ஷ்மியை மகாவிஷ்ணுவிடம் கொடுத்தது போல பாணிக்கிரஹண விதிப்படி இராமரிடம் கொடுத்து ஸந்தோஷமடைந்தான். ஊர்மிளையென்கிற தன் புத்திரியை இலக்ஷ்மணனுக்குக் கொடுத்தான். பிறகு தன் சகோதரனாகிய குசத்துவஜன் கன்னிகைகளிருவரில் மாண்டவி என்பவளைப் பரதனுக்கும் சுருதகீர்த்தியை சத்ருக்னனுக்கும் கொடுத்தான்.

நல்ல இலக்ஷணங்களமைந்த நான்கு சகோதரர்களும் தத்தம் மனைவிகளுடனும் வேறு லோகபாலகர்களோவென்றெண்ணும்படி விளங்கினார்கள். பிறகு ஜனகமகாராஜன் வசிஷ்டரையும் விசுவாமித்திரரையும் பார்த்து, "முனிவர்களே! நான் யாக பூமியைச் சோதிப்பதற்குக் கலப்பைகொண்டு உழுதேன். கலப்பையின் நுனியில் மங்களகரமான இலக்ஷணமுள்ள இந்தக் கன்னிகை உண்டானாள். அக்கன்னிகையையான் கண்டேன். கண்டதும் கரைகடந்த சந்தோஷமடைந்து சரத்கால சந்திரன் போன்ற முகமுடைய இக்கன்

னிகையை என் பெண்ணாகவே பாவித்து என் மனைவியிடம் கொடு
த்து வளர்த்து வந்தேன். அப்பொழுது ஒரு நாள் நான் தனி
மையாயிருக்கும் சமயத்தில் நாரதமுனிவர் மகதி என்ற வீணை
யைக் கையிலெடுத்துக்கொண்டு நாராயணமூர்த்தியைத் துதித்துக்
கொண்டு வந்தார். நான் அவரை மிகுதியும் அன்போடு வரவேற்று
உபசரித்தேன். அவர் என்னைப் பார்த்து “ஜனக! உனக்கு மங்
களமருளக்கூடிய இரகசியமான வார்த்தையைக் கேள். பரமாத்மா
வாகிய ஹ்ரிஷீகேசர் பக்தர்களுக்கனுக்கிரகம் செய்யவும் தேவர்
களின் காரியத்தை நிறைவேற்றவும் இராவணனை வதம் செய்ய
வும் இராமன் என்ற பெயருடன் தசரதமகாராஜனுக்குப் புத்திர
னாகவவதரித்திருக்கிறார். அவர் மாயாமானிட வடிவங்கொண்டவர்;
பரமேசுவரரே நான்குவிதமாக அவதரித்திருக்கிறார். பகவானுடைய
யோகமாயையும் உனது கிருகத்தில் சீதையென்கிற பெயருடன்
அவதரித்திருக்கிறாள். ஆகையால் இந்தச் சீதையை எந்த விதமான
முயற்சி செய்தேனும் இராமருக்கே மணஞ் செய்து கொடு.
மற்றவர்களுக்கு இவளைக் கொடுக்கக் கூடாது. முன்னம் இவள்
பரமாத்மாவாகிய இராமனுக்கு மனைவியாக விருந்தவள்” என்று
நாரதமாமுனிவர் கூறிவிட்டுச் சொர்க்கலோகம் சென்றார்.

நான் அது முதல் இந்தச் சீதாதேவியை மகாவிஷ்ணுவைச்
சார்ந்த இலட்சுமிதேவி யென்றே நினைத்தேன். இந்த மங்களசுவ
பாவமுடைய ஜானகியை இராமனுக்கு எவ்விதம் கொடுப்பதென
யோசித்துப் பின் ஒரு தீர்மானத்திற்கு வந்தேன். முன் பரமசி
வன் திரிபுரத்தை யெரித்த சமயம் தமது வில்லை என் முன்னோர்
களிடம் வைத்திருந்தார். அதை ஆரோபணஞ்செய்யச் சக்தியுடை
யவர்களே சீதையை விவாகம் செய்துகொள்ளத் தக்கவர்களெ
ன்று பிரதிக்ஞை செய்தேன். அந்தப் பிரதிக்ஞையானது அநேகர்
கொண்டிருந்த பெருமையைத் தண்டித்ததாக வாயிற்று. ரிஷி
களுக்குள் சிறந்த விசுவாமித்திர முனிவரே! தமது அனுக்கிரகத்
தால் இராஜீவலோசனனாகிய ஸ்ரீராமபிரான் வில்லைக் காண்பதற்கு
இங்கே வந்தார். என் மனக்கோரிக்கை நிறைவேறிற்று” என்று கூறி
இராமச்சந்திரனைப்பார்த்து, “ஏ இராமா! இப்போது என் ஜன்
மம் சபலமாயிற்று. ஜானகியுடன் ஒரே ஆசனத்திருக்கும், சூரி
யனைப்போன்ற தங்களைத் தரிசித்தேனல்லவா? பிரபுவே! தமது

பாத தீர்த்தத்தைத் தரித்த பிரமதேவர் சிருஷ்டிசக்கரத்தை நடத்துகிறார். உமது பாதாரவிந்த தீர்த்தத்தைச் சிரமேற்கொண்ட மகாபலி இந்திர பதவியை யடைந்தான். கணவனுடைய சாபவசத்தால் சிலையாகக் கிடந்த அகலிகை உமது பாதஸ்பரிச மகிமையால் சாபவிமோசன மடைந்தாள். பிரபுவே! இந்தப்புவியில் தங்களைவிட பெருமைபெற்றவர்கள் யாவருளர்? உமது பாதாரவிந்த தரிசன மகிமையால் அநேகயோகிகள் காலசக்கரத்தை வென்று ஸம்ஸார பயத்தினின்றும் விலகிச்சுக மடைந்திருக்கிறார்கள். உமது நாமகீர்த்தனம் செய்து தேவர்களிற் பலர் தங்களுடைய பலவிதமான துக்கங்களையும் ஒழித்துக்கொண்டிருக்கிறார்கள். இவ்வளவனந்தம் மகிமை வாய்ந்த தங்களையே நான் சரணமடைந் திருக்கிறேன்" என்று தோத்திரஞ் செய்து இராமபிரானது திருவடி மலரைத் தொட்டு வணங்கினான். பிறகு நூறுகோடி சொர்ணங்கள் பதினாயிரம் இரதங்கள் இலட்சம் குதிரைகள், அறுநூறு யானைகள் இலட்சம் பதாதிகள் முன்னூறு தாசிகள் தேவார்கமான வஸ்திரங்கள் முத்துக்கள், இரத்தினாபரணங்கள் இவைகளைத் தனனுடைய அன்பான பெண்ணாகிய சீதைக்கு மனமுவந்தளித்தான்.

பிறகு ஜனகமகாராஜன வசிஷ்டர் முதலிய முனிவர்களை நன்றாய்ப் பூசித்தான். பரத, இலட்சுமணர்களையும் உபசரித்தான். அவ்விதமே நீதிதவறாமல் தசரத மகாராஜனையும் பூசித்து இரகு சிரேஷ்டனாகிய இராமனைப் பிரயாணப்படுத்தி யனுப்பினான். இராமருடன் சீதையும பிரயாணப் படுகையில் நீருடன் கூடிய கண்களையுடைய அவளுடைய தாய்மார்கள் இவர்களை விட்டுப் பிரியும் துக்கத்தால் அழுகிற சீதையைக்கட்டி யணைத்துக் கொண்டு "அம்மா! மாமன் மாமிமார்களுக்குப் பணிவிடை செய்துகொண்டு எப்போதும் இராமச்சந்திரனைச் யனுசரித்துக்கொண்டிரு. கற்பையே கருந்தனமாகக் காப்பாற்று" என்று புத்தி சொன்னார்கள்.

இந்த வைபவத்துடன் இரகு புங்கவன் பிரயாணப்படுகையில் பேரி, மிருதங்கம், ஆனகம், தூரியம், முதலிய வாத்தியங்கள் முழங்கின. மேகம் போன்ற சங்கவாத்தியம் முழங்கிற்று.

ஆறாவது சருக்கம்

முற்றிற்று

7-வது சருக்கம்.

ஸூதர் கூறுகிறார்.

மிதிலையிலிருந்து இராமன் மூன்று யோசனை தூரம் சென்ற பின் மன்னர் மன்னனாகிய தசரதன் மிகவும் பயங்கரமான பல அபசகுனங்களுண்டாகக் கண்டு அருகே இருந்த வசிஷ்ட முனிவரை நமஸ்கரித்து, "முனிவர் பெருமானே! நாலாபக்கங்களிலும் விரோதமான அபசகுனங்கள் நேரிடக் காரணமென்ன?" என்று கேட்டான். முனிவர் "மன்னா! பயமுண்டாகும் என்கிற சூசனைகளல்லவா காணப்படுகின்றன; இன்னும் சற்று நேரத்தில் மனதிற்குப் பயமில்லையென்பதைக் காட்டும் சூசனைகள் காணப்படும் பாருங்கள்" என்று கூறி வாய் மூடு முன் அங்கு சுப சூசனையாக மிருகங்கள் வலம் வரக்கண்டு அதைக் காட்டினார்.

இங்ஙனம் வசிஷ்ட முனிவர் பேசிக் கொண்டிருக்கையில் பயங்கரமான காற்று வீசிற்று. உடனே புழுதியானது மாரியாகக் கிளம்பி எல்லாருடைய கண்களின் ஒளியையும் மங்கும்படி செய்தது. பின் எதிரில் தேஜஸ் கூட்டங்களோடு கூடியதும், அநேக ஸூரியர்களுக்கு ஸமமான வரும், மின்னல் கூட்டங்களுக்கு ஸமமான தேஜஸ் உடையவரும் ஜமதக்கினி முனிவருக்குப் புத்திரரும் பராக்ரமசாலியும, கார்மேகம் போன்றவரும் ஜடை மரவுரி முதலியன அணிந்தவரும் கையில் பரசு என்ற ஆயுதமும் வில்லும் உடையவரும் நேரே வந்த மற்றொரு காலனுக்கொப்பான வரும் கார்த்தவீரியார்ச்சுனனுக்கு யமனாகியவரும் இறுமாப்புற்ற க்ஷத்திரியர்களை சங்கரிப்பவருமாகிய பரசுராமர் வருவதை அரசன் கண்ணுற்றான்.

இவ்விதம் காலமிருத்யு போல் தசரதருடைய முன் தோன்றிய அந்தப் பரசுராமனைக் கண்ணுற்ற தசரதன் மிகவும் பயந்து நடுங்கி அர்க்யம் முதலியன கொடுத்து உபசரிக்க வேண்டிய

முறையையும்மறந்து "காப்பாற்றவேண்டும்! காப்பாற்றவேண்டும்!!" என்றான். உடனே தண்டம் போல் புவி மீது விழுந்து சரணமடைந்து "என் குமாரர்களின் பிராணனைக் கொடுக்கவேண்டும்" என்று கூறினான். இவ்வாறு கூறிய தசரதனைப் பொருட் படுத்தாமல் இராமரைப் பார்த்து இந்திரியங்கள் கலங்கக் கோபங் கொண்டு நிஷ்டூரமான வார்த்தையைச் சொன்னார். "க்ஷத்திரியர்களுக்குள் அதமனே! இராமனென்கிற பெயரை வைத்துக் கொண்டு திரிகிறாயல்லவா நீ?. நீ க்ஷத்திரியனாகில் என்னோடு போர் புரியவில்லை. ஜீர்ணமான பழைய வில்லை முறித்து விட்டுப் பெருமை பேசிக்கொள்கிறாயல்லவா நீ. இரகுவம்சத்தில் பிறந்தவனே! விஷ்ணுவுக்குரித்தான இந்த வில்லை நாணேற்றி ஆரோபணம் செய்; பார்க்கலாம். அப்படிச் செய்யாவிடில் இப்போதே எல்லோரையும் நாசஞ் செய்வேன். நான் யார்? க்ஷத்திரியர்களை நாசஞ் செய்பவனல்லவா?" என்று கூறினார் பரசுராமர்.

இங்ஙனம் பரசுராமர் பேசும் போது பூமி நடுங்கிற்று. எல்லோருடைய கண்களும் இருளடைந்தன. பிறகு வீரரும் தசரத குமாரனாகிய இராமர் பிருகுவம்சத்திற் பிறந்த பரசுராமரைப் பார்த்து, கோபங் கொண்டு அவர் கரத்திலிருந்த வில்லை பலாத்காரமாகப் பிடுங்கி வளைத்து நாணேற்றி அம்புறையிலிருந்து பாணத்தையெடுத்துத் தொடுத்து இழுத்து மீண்டும் பரசுராமரைப்பார்த்து, "ஓ பிராமணா! நான் சொல்வதைக் கேள்; இராம பாணம் வீணாகாது. ஆகையால் இந்த பாணத்திற்கு ஓர் இலக்கைக் காட்டும்; தாமதியாது கூறும்; இதுதான் எனதாக்ஞை" என்றார். "நீர் இந்தலோகம் போனாலும் சரி வேறு லோகம் போனாலும் சரி உம்மை விடாது. ஆகையால் உம்மை என்ன செய்கிறது. தாமதியாது கூறும்; இதுதான் எனது ஆக்ஞை" என்றார்.

இங்ஙனம் இராமபிரான் கூறியதும் பரசுராமர் பூர்வ விருத்தாந்தங்களைத் தமது நினைவிற்குக் கொண்டு வந்து வணக்கத்துடன் துதிக்கலானார்.

பரசுராமர் துதி.

மகா சமர்த்தரான ஏ ராம! தங்களைப் பரமேசுவரரென்றுணர்ந்தேன். புராண புருஷர் நீர். நீரே விஷ்ணு பகவான். சிருஷ்டி,

ஸ்திதி, சம்காரமென்கிற முத்தொழில்கட்கும் நீரே கர்த்தா. மாயா மானிட ரூபி. நீர்யோக மாயையுடன் வசிக்கிறவர். விஷயங்களுக்கு எட்டாதவர். ஆதியந்த மற்றவர். நிர்விகாரர், நிராமயர், நித்தியானந்தர், ஊனமில்லாதவர், கல்மஷமற்றவர், விபுவாய் விளங்குபவர்; நான் சிறியவனா யிருக்குங்கால் தவம் புரிந்து விஷ்ணுவைப் பூசிப்பதற்காகத் தீர்த்தம் சென்றேன். அதில் நீராடியே றெதிலும் சிரத்தை செலுத்தாது அங்கிருந்து தவம் புரிந்து மகாத்மாவாகிய விஷ்ணு பகவானை மகிழ்வித்தேன். இரகு புங்கவனே! பின்னர் தேவதேவனாகிய அந்த ஈசன் சங்கு சக்ரம் கதைகளுடன் பிரத்தியட்சமாகி என்னை நோக்கிப் பின் வருமாறு

பகவான் கூறுகிறார்.

“பிராமணோத்தமா! தவம்புரிவதிலிருந்து எழுந்திரும்! உமது தவம் பலித்தது. நீர் தவம் செய்து சிரமம் அடைந்தபடி உமது தந்தையைக் கொன்ற ஹேஹயர்தேசத்து மன்னர்களுக்குள் சிறந்தவனான கார்த்தவீர்யார்ச்சுனனை நமது அம்சத்தைப் பெற்று வதம் செய்யும். பின் நீர் இருபத்தொரு முறை க்ஷத்திரியர்களைக் கொன்று இந்தப்புவி முழுவதையும் கச்யபருக்குக் கொடுத்து சாந்தி நிலைமையை அடைவீராக. திரேதாயுகத்தில் தசரத மகாராஜனிடம் அவ்வியயனான நாமே நமது அபாரசக்தியுடன் அவதரிப்போம்; அச்சமயம் நீரும் என்னைக்காண்பீர், முந்தி உம்மிடம் நான் அளித்த நமது தேஜஸை அப்பொழுது நாமே மீண்டும் அடைவோம். பின்னர் நீர் பிரம்ம கற்பம் வரை தவம் புரிவீராக” என்று உத்திரவு அளித்து மறைந்து அருளினார்.

அப்படியே நானும் செய்தேன். ஸ்ரீராமசந்திரரே நீர்தான் அந்த விஷ்ணு மூர்த்தி. பிரமதேவனது பிரார்த்தனைக்கு இணங்கி இப்புவியில் அவதரித்து இருக்கிறீர். பிரபுவே! என்னிடத்திலிருந்த உமது தேஜஸ் திரும்பவும் உம்மையே அடைந்து விட்டது. நீரும் பிரசன்னரானீர்; இப்போது எனது பிறப்பும் பயனை அடைந்தது. பிரம்மாதிதேவர்களுக்கும் எட்டாதவர் நீர். பிருகிருதி புருஷர், அமல மூர்த்தி, அக்ஞானத்தால் ஏற்படும் பிறப்புமுதலியனவாகிய அறுவகைப் பகைகளும் உமக்கு இல்லை. நீர் பரிபூர்ணர், நிர்

விகாரர், போக்கு வரவற்றவர், நீயிற் புகையும் நீரில் நுரையும் உண்டாவதுபோல் அநந்தகோடி பிரம்மாண்டங்களும் சதேதமின்றி உம்மிடத்தில் உண்டாகின்றன. உமது மாயையே உம்மை யாதாரமாகக்கொண்டு காரியத்தைச் செய்கிறது. உலகத்திலுள்ளவர்கள் எது வரையில் உமது மாயைக்குள்ளா யிருக்கிறார்களோ அதுவரையில் உம்மைக் காணமாட்டார்கள். விசாரணை எது மில்லாத அவித்தை இது. வித்தைக்கு விரோதியாகும். அவித்தையாலேற்படும் தேகம் உடல் முதலியவைகளில் பிரதிபலிக்கும் சிற்சக்தியேயிந்த ஜீவலோகத்தில் ஜீவனென்று சொல்லப் படுகின்றது.

எதுவரையில் தேகம், மனம், உயிர், புத்தி முதலியவற்றில் அபிமான மிருக்கிறதோ அதுவரையில் கர்த்திருத்துவ போக்திருத்துவங்கள் சுகதுக்கங்கள் முதலியவற்றைக் கொடுக்கும் ஆத்மாவுக்குச் சம்சார பந்தம் கிடையாது புத்திக்கு ஞானம் கிடையாது. இங்ஙனமிருக்கும் விசாரணையிலலாதது பற்றி இரண்டையும் ஒன்று சேர்த்து சம்சாரியெனக் கூறுகிறார்கள். ஜடம சித்துடன் சேர்ந்திருப்பதால் அறியுந்தன்மை யடைந்தது இங்ஙனமே சித்துசத்துடன் சேர்ந்தது காரணமாக அதற்கு நீரும் நெருப்பும் சேர்ந்தது போல் அறியாத்தன்மை யேற்பட்டது. உமது திருவடிமலரில் அன்புசெலுத்தும் அடியாருடன் சேர்வதால் உண்டாம சுகமறியாதவனுக்கு சம்சார நிவர்த்தி ஏற்படாது. சத்சங்க சகவாசமெப்போதுண்டாகிறதோ அப்போதுதான் அன்போடும்மையுபாசிப்பான். உபாசிக்கும் போதே மாயையும் மெதுவாய் விலகும். பின் பரமார்த்தத்தை யடையாதவனு முண்டோ? ஆகவே அவனே ஞானியாகிறான். பின் சற்குருவின் கூட்டுறவும் அவனுக்குண்டாகும். பிறகு உமது பிரசாத மகிமையால் வாக்யஞானத்தை குரு மூலமாக உணர்ந்து பந்தத்தினின்றும் விடுபடுவான் ஆதலால் பக்தியில்லாதவனுக்கு எத்தனை கற்பமானாலும் முக்தி கிட்டாது. ஞானமு முண்டாகாது. அப்படியே அவர்களுக்குச் சுகமும் கிடையாது. ஆகவே அனேக ஜன்மங்களை யடையப்பெறினும் உமது பாதபக்திமாத்திரம் அடியேனுக்கு மாறாதிருக்க வேண்டும். இரகுவீர! உமது அடியார்களின் சகவாசம் எனக்கு எப்போதும் உண்டாக வேண்டும். அந்தச் சங்கத்தாலுண்டாம் வித்தையால் அவித்தை நசமுறும். உம்மிடத்திற் பக்தி யுள்ளவர்கள் உமது *தர்மமாகிய

அமுதத்தை உலகத்தில் மிகுதியும் பெருகும்படி செய்வார்கள். உலகமனைத்தும் புனிதமாம்படி செய்பவரெனில் தங்கள் குலத்தாரைப்பற்றிச் சொல்லவேண்டுமோ? ஏ ஜகந்நாதா! உமக்கு நமஸ்காரம். பக்தர்கள் மனதிலிருக்கும் பகவானே! உமக்கு நமஸ்காரம். கருணாநிதியே! சரணம். இராமசந்திரரே! சரணம். பிரபுவே! உலகத்தை வெல்லக் கருதி நான் மனமகிழ்ச்சியுடன் செய்த புண்ணியமனைத்தும் உமது பாணத்திற்கு இலக்காகட்டும். இராமா! நமஸ்காரம் என்று கூறினார் பரசுராமர். இவ்வணம் மனமுருகித் தோத்திரஞ் செய்யும் பரசுராமருக்குக் கருணாநிதியும் பகவானுமாகிய இராமர் பிரத்தியக்ஷமாகி, பிராமணோத்தமரே! உமது மனவிருப்பம் யாது? உமக்கு இஷ்டம் எதுவோ அவையெல்லாவற்றையும் தருகிறேன். ஸந்தேகமறச் சொல்லும் என்றார்.

இதைக் கேட்டதும் பரசுராமர், "இராமா! உமது அனுக்கிரகம் அடியேனுக்கு இருக்கவேண்டும். உமது பக்தர்களின் கூட்டுறவு எனக்கு இருக்கவேண்டும். உமது பாதபங்கயத்தில் இடைவிடாத பக்தி அடியேனுக்கு எப்போதும் இருக்கவேண்டும். இந்த ஸ்தோத்திரத்தை உம்மிடத்தில் அன்பில்லாதவன் படிப்பினும் அவனுக்கு உம்மிடத்தில் இடைவிடாத பக்தியுண்டாவதுமன்றிக் கடைசியில் உமது நினைவும் உண்டாகும்படி அனுக்கிரகிக்கவேண்டும்" என்று பிரார்த்தித்துக் கொண்டார். பகவானும் அவ்விதமே உண்டாகக் கடவது என்று கூறியருளினார். பிறகு பரசுராமர் பகவானை வலம்வந்து பணிந்து அவரிடம் விடைபெற்றுக் கொண்டு மகேந்திரபர்வதம் சென்றனர். பிறகு மன்னர் மன்னனான தசரதன் இறந்த தன் புத்திரனை உயிர்பெற்றெழக்கண்டவன் போல் மகிழ்வுற்று இராமபிரானை ஆலிங்கனஞ் செய்து கொண்டு மனதில் சந்தோஷமடைந்து ஆனந்தபாஷ்பம் பெருக்கினான். பின் கவலையற்றவனாய்த் தன் பட்டணம் போய்ச்சேர்ந்தான். இங்கே தேவர்களுக்கு ஸமானமான இராமலக்ஷ்மண பரத சத்துருக்னர்கள் தத்தம் மனைவிமார்களுடன் தத்தம் வீடுகளில் சுகமாக ரமித்தார்கள்.

தாய் தந்தைகளுக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கும் இராமர் லக்ஷ்மிதேவியுடன் வைகுண்டத்தில் வஸிக்கும் விஷ்ணுவைப் போல் ரமித்தார்.

இக்காலத்தொருசமயம் கைகேயியின் அண்ணனும் பரதனுக்குமாமனுமாகிய யுதாஜித்து வந்து தனது இராஜ்யத்திற்குப் பரதனையனுப்பும்படி கேட்டான். தசரதன் அவனுடன் தன் குமாரர்களான பரத சத்ருக்னர்களிருவரையும் அனுப்பினான். மகாபுண்ணியவதியாகிய கௌஸல்லியை, புலோமபுத்திரியான இந்திராணியுடன் கூடிய தேவேந்திரனால் தேவமாதா பிரகாசிப்பதுபோல ஸீதையுடன் கூடிய இராமனால் பிரகாசித்தாள்.

இப்படியாக அயோத்தியா நகரிலுள்ள ஜகத்பிரபுவாகிய பகவான் ஸீதாபிராட்டியுடன் ஸகல கல்யாண குண ஸம்பன்னராய் யாவருக்கும் பிரபுவாய், ஸகல முனிவர்களுக்கும் ஆனந்தகனராய் நித்திய மங்களசொரூபராய், நிர்விகாரராய், எல்லையற்ற ஸம்பத்துடையவராய், மாயாரஹிதராயுமிருந்து, மாயா காரியங்களுக்குட்பட்டவனுடன் போல ஸகல லோகத்திற்கும் ஈசனாகிய தேவன் விளங்கி வந்தான்.

ஏழாவது சருக்கம்

முற்றிற்று.

பாலகாண்டம்.

முற்றிற்று.

அயோத்தியா காண்டம்.

1-வது சருக்கம்.

இங்ஙனம் திருவாய் மலர்ந்தருளிய பரசிவமூர்த்தியைப் பார்த்து, பார்வதிதேவி "மகாதேவ! ஜகந்நாத! சங்கர! கருணாகர! பிறகு இராமபிரான் செய்தருளிய விளையாடல்களனைத்தையும் விஸ்தாரமாகச் சொல்லியருளு" மெனக் கேட்டனள்.

பரமசிவன் கூறுகிறார்.

"பார்வதி! ஒரு நாள் நீலமேகசியாமள வர்ணமுடையவராகிய இராமபிரான் தமது அந்தப்புரத்தில் கௌஸ்துபம் முத்துமாலை முதலிய பல ஆபரணங்களணிந்து கொண்டும் தாம்பூலம் தரித்துக் கொண்டும் சிங்காதனத்தில் வீற்றிருந்தார். அச்சமயம் சீதாபிராட்டி இரத்தினபிடியமைந்த சாமரை வீசிக்கொண்டு அருகே யிருந்தனள். அப்பொழுது அங்கே நாரதமுனிவர் ஆகாயத்திலிருந்து இறங்கி இராமரைப் பார்ப்பதற்கு பிரவேசித்தனர்.

படிகம்போன்ற பரிசுத்தமான நிறமுடையவரும், சரத்கால சந்திரனைப்போல் களங்க மற்றவரும் ஊகித்துணர்தற்கரிய சிறந்த ஞானமுடையவருமாகிய நாரதர் தோன்றினர். அந்த நாரதரை இராமபிரான் பார்த்ததும், ஆசனத்திலிருந்து விரைந்தெழுந்து தமது மனைவி சீதாபிராட்டியுடன் தரையில் விழுந்து அன்போடு நமஸ்கரித்தெழுந்து, "முனிவர் பெருமானே! வரவேண்டும், எம்போன்ற கிருகஸ்தர்களுக்கு தங்களைப்போன்ற மகான்களுடைய தரிசனம் கிடைப்பது அரிது. முனிவரே! எங்கள் சித்தவிருத்தி மிகுதியும் விஷயாசக்தியுடையது. எங்களுடைய பூர்வஜன்ம புண்ணிய பலனை இன்றுதான் கண்டோம். முனிவர் பெருமானே! புண்ணிய விசேஷத்தால் ஸம்ஸாரிகளுக்கும் சாது சேவை கிடைக்கின்றது.

தமது தரிசனத்தால் அடியேன் கிருதார்த்தனானேன். தங்களுக்கு அடியேனால் ஆகவேண்டியது ஏதேனுமிருக்குமாயின் ஆக்ஞாபிக்க வேண்டும்" என, முனிவர் இரகுபுங்கவனைப் பார்த்துக் கூறுகிறார்.

இரகுநாத! உலகத்தார் பிரஜைகளைப் போற் சம்பாஷித்து என்னையேன் மயக்கச் செய்கின்றீர்? நீர் உம்மைச் சம்சாரியென்று சொல்லிக்கொண்டது உண்மையே. எப்படியெனில் உலகத்திற்கு ஆதிகாரணமான மாயை உமக்கு மனைவி. உமது சம்பந்தத்தால் அவளிடத்தில் பிரமன் முதலிய பிரஜைகள் உண்டாகின்றனர். மூன்று குணங்களோடு கூடிய மாயை உம்மை அடுத்திருப்பதால் எப்பொழுதும் பிரகாசிக்கிறாள். கறுப்பு, சிவப்பு, வெளுப்பு, என்று சொல்லப்பட்ட மூன்று வர்ணங்களையுமுடைய பிரஜைகளை எப்போதும் ஈன்று வருகிறாள். மூவுலகமென்று கூறப்படும் பெரியவீட்டில் நீரே கிரகஸ்தராகச் சொல்லப்படுகின்றீர். நீரே விஷ்ணு, ஜானகியே இலக்ஷ்மி. நீர்தான் சிவன், ஜானகிதான் பார்வதி. நீர் பிரமதேவன், ஜானகி ஸரஸ்வதி தேவி. நீர் சூரியன், ஜானகி பிரபாதேவி. நீர் சந்திரன், சீதை நல்ல லக்ஷணமுள்ள ரோகிணி. நீர் இந்திரன், சீதை இந்திராணி. நீரே அக்னிபகவான், சீதை சுவாகாதேவி நீர் காலரூபியாகிய யமதருமராஜன், ஜானகி சம்யமினி. நீர் நிருதி, ஜானகி தாமஸி. நீர் வருணன், ஜானகி பார்க்கவியாவாள். நீர் வாயுபகவான், சீதை சதாகதி. குபேரன் நீர், சீதை சர்வசம்பத்து. லோகசங்காரியான உருத்திரமூர்த்தி நீர், சீதை உருத்திராணி. பலபல சொல்வானேன். உலகத்தில் பெண்பாலெதுவோ அவையனைத்தும் ஜானகியாகிறாள். ஆண்பாலனைத்தும் தாமேயாகிறீர். ஆகவே இம்மூன்றுலகங்களும் உங்களிருவரையல்லாது வேறின்று. உமது சங்கற்பத்தாலுண்டான அஞ்ஞானம் மாயையென்று சொல்லப்படுகின்றது. மகத்தென்பதும் அதனாலேயே யுண்டாயிற்று. அதனால் சர்வாத்மகமாகிய சூத்திரம் என்னும் லிங்கமுண்டாயிற்று. அதனால் அகங்காரம், புத்தி, பஞ்ச பிராணன்கள், இந்திரியங்கள் முதலிய தோன்றின. பிறகு பெரியோர்களால் லிங்கசரீரமெனச் சொல்லப்பட்டு பிறப்பிறப்பு சுகதுக்கங்களுடையதாய் ஜீவனென்னும் பேர்கொண்டு உலகத்தில் அதுவே பிரசித்திபடைத்திருக்கின்றது. சொல்லமுடியாததும் அநாதியுமான அவித்தையே காரணோபாதி யெனக் கூறப்ப

பெ. சித்திற்கு ஸ்தூல சூக்ஷும காரணங்களாகிய மூன்று உபாதிக ளுண்டு. இவற்றுடன் கூடியவனே ஜீவன். இரண்டோடு கூடியவனே பரமேசுவரன். ஏ ரகுசிரேஷ்டனே! எது ஜாக்கிர ஸ்வப்பன, ஸுஷுப்தி என்னும் அவஸ்தைகளில் பிரவிர்த்திக்கின்றனவோ, அதற்கு விலக்ஷணராயும் சாக்ஷியாயும சின்மாத்திர மாயுமிருப்பவர் நீர். இந்த உலகமும் தங்களிடமிருந்தே தோன்றிற்று. யாவும உம்மிடத்திலேயே பிரதிஷ்டிக்கப் பட்டிருக்கின்றன; உம்மிடமே யாவும் லயமடைகின்றன. ஆகவே நீரே ஸர்வத்துக்கும் காரணராகிறீர். பழுதையைக்கண்ட விடத்துப் பாம்பென்று கருதுபவன் போல் ஆதபாவமான தன்னை ஜீவனாக எண்ணுகின்றவன் பயத்தை அடைகிறான். தான் உத்தமயான ஆதமா என்று அறிந்தவனுயின் பயதுக்கங்களால் துன்பப்பட மாட்டான். உமது சின்மாத்திர ஜோதியால் எல்லாருடைய சரீரங்களிலுமிருக்கிற எல்லாபுத்திகளும் எக்காரணங் கொண்டு உம்மால் பிரகாசிக்கின்றனவோ, அந்தகாரணத்தால் எல்லா ஜீவன்களுக்குள்ளும அந்தராத்மாவாக விளங்குபவர் நீர் தான். அஞ்ஞானத்தால் கயிற்றில் அரவம் தோன்றுகிறதுபோல் எல்லாம் உம்மிடமே தோன்றி மறைகின்றன. உமது ஞானம் லயம் அடைந்தவிடத்து அவை யனைத்தும் பொய்யாகின்றன. ஆகையால் ஞானமே எக்காலத்தும் அப்பியசிக்கத்தக்கதாம். உமது பாதபக்தியுடையாருக்கே உண்மையில் விஞ்ஞானம முறையே யுண்டாகும். ஆதலால் உமது பக்தரே முக்தராகிறார். பிரபுவே உமது பக்தர்களுடைய பக்தர்களுக்கும் அவர்களுடைய பக்தர்களுக்கும் வேலைக்காரனாகிறேன் நான். ஆகையால் எனக்கு அனுக்கிரகம புரியக்கடவீர். என்னை மயக்கச் செய்யவேண்டாம். தமது உந்திக்கமலத்துதித்தவனாகிய பிரமன் என் பிதா. ஆதலால் அடியேன் தங்களுக்குப் பேரனாகின்றேன் அல்லவா? இராமசந்திர! தமது பக்தனாகிய அடியேனைக் காப்பாற்றவேண்டும் என்று இங்ஙனம் கண்களினின்றும் ஆநந்த பாஷ்பம் கரைகடந்து பெருக நின்று துதித்து பன்முறையும் வணங்கி இராமபிரானைப் பின்னும் நோக்கிக் கூறுகிறார். இராம! பிரமதேவருடைய ஆக்ஞையால் நானிவ்விடம் வந்தேன். இராவண ஸம்ஹாரம் செய்வதன் பொருட்டுத் தாங்கள் அவதரித்திருக்கின்றீர். இந்த இராஜ்யத்தைப் பரிபாலிப்பதன் நிமித்தம் உமது பிதா உமக்கு முடி சூட்ட யத்தனஞ் செய்வார். நீர் தா

சாட்சியை நீர் விரும்புவீராகில் இராவண வதம் நிறைவேறாது. "பூபாரத்தைப் போக்குகிறேனை" என்று பூர்வம் நீர் பிரதிக்ஞை செய்திருக்கின்றீர். அந்த வார்த்தையை உண்மையாக்க வேண்டும். "சத்தியசந்தான்றோ நீர்?" என்றார். இம்மொழிகளைக் கேட்டதும் இராமபிரான் புன்முறுவல் செய்து நாரதரைப் பார்த்துக் கூறலாயினார்

"நாரதமுனிவரே! எனக்குத் தெரிந்ததைக் கூறுகின்றேன். சற்றுச் செவிசாய்த்துக் கேளுங்கள். முன்னம் நான் செய்த பிரதிக்ஞையை நிறைவேற்றுகின்றேன். அதைப்பற்றிச் சிறிதும் சந்தேகம் வேண்டாம். காலத்தையும் அந்தந்த பிராரப்தத்தின் க்ஷயத்தையும் பாராது, சிரமமாக அசுரக் கூட்டங்களாகிய பூபாரத்தை ஒழிக்கின்றேன். இராவணனைச் சங்கரிப்பதன் பொருட்டு நாளைக்கே நான் தண்டகாரண்யம் செல்கின்றேன். அங்கு பதினான்கு வருஷம் வரையில ரிஷிகளுடன் வசித்திருந்து, சீதையைக் காரணமாகக் கொண்டு, துஷ்டனான அந்த இராவணனைக் குலத்துடன் நாசம் செய்கின்றேன்." என்றான்.

இங்ஙனம் ஜகதீசன் இராமச்சந்திரமூர்த்தி கூறியதும் நாரதர் பெருமகிழ்ச்சியடைந்து அவரை மும்முறை வலம் வந்து நமஸ்கரித்து விடை பெற்றுக்கொண்டு ஆகாய மார்க்கமாய்ச் சென்றார்.

இப்படி முனிவர் பெருமானுக்கும் இராமபிரானுக்கும் நடந்த ஸம்வாதத்தை பக்தியோடு படிப்பவனுக்கும் படிக்கும்படி செய்து பிறர் கேட்கும்படி செய்பவனுக்கும் சிந்திப்பவனுக்கும் வைராக்ய ஞானமுண்டாகி வானவருமடைதற்கரிய முக்தியைப் பயக்கும்.

முதற் சருக்கம்.

முற்றிற்று.

2-வது சருக்கம்.

பரமசிவன் கூறுகிருர்.

இப்படியிருக்கையில் ஒரு நாள் தசரத மகாராஜன் தனியே யிருக்குந் தருணத்தில் தன் குலகுருவும் எல்லா மறிந்தவரும் சகல நற்குணங்களுமமையப் பெற்றவரும் முனிவர் பெருமானு மாகிய வசிஷ்டமகா முனிவரை வரவழைத்து, அவரைப் பார்த்து "சுவாமி ஸமஸ்தமானபட்டணத்து ஜனங்களும் பிராசீனவிருத்தர்களும் விசேஷமாக மந்திரிகளும் இராமனை அடிக்கடி புகழ்கிருர்கள். நான் வயது முதிர்ந்த கிழவனுய் விட்டேனன்ரே? ஆகையால் சகல நற்குணங்களோடு விளங்கும் தாமரைக்கண்ணனுகிய இராமச் சந்திரனுக்கு இந்த இராஜ்யாபிஷேகஞ் செய்விக்க அவாவுண்டாகிறது. அவனே எல்லாருக்கும் மூத்தவனுகையால் சிறந்தவனுகிருன். பரதனே சத்ருக்னனேடு மாமன வீடு சென்றிருக்கிருன். முனிபுங்கவரே! உமது சம்மதந் தெரியப்படுத்துவீராயின் நாளைய தினமே அபிஷேக உற்சவத்தை நடத்திவிடலாம் அதற்கு வேண்டிய சாமக்கிரிகளைச் சேகரிப்பதோடு இராமனுக்கும் எச்சரிக்கை செய்யவேண்டும். நான்கு வர்ணங்களுங் கலந்த பதாகைகளால் நகரத்தையும் அலங்கரிக்கச் செய்யவேண்டும், விசித்திர முத்துத் தோரணங்களையும் துரிதத்தில் தயார்செய்தல் வேண்டும் என்று பகர்ந்து அமச்சர்களுட்குத் தலைவனுன சுமந்திரனை வரவழைத்து, "சுமந்திர வசிஷ்டமகாமுனிவர் தெரிவிக்கும் சகல சாமான்களையும் தாமதமின்றிச் சித்தப்படுத்த வேண்டும், நாளையதினம் இராமனுக்குப் பட்டாபிஷேகம் நடக்கப்போகிறது" என்ருன்.

அரசனது அந்த ஆக்ஞையைச் செவியுற்ற அமைச்சனும் காலத்தையறிந்து அங்ஙனமேயென்று மனமகிழ்ச்சியோடு வசிஷ்டரை நோக்கி, அடியேன் செய்யவேண்டியதைத் தெரிவிக்கவேண்டுமென்று வினவ, முனிவர் "சுமந்திரனே! அரண்மனை நடுவாயிற்படியில்

சொர்ணுபரண அலங்காரங்களையுடைய பதினாறு கன்னிகைகள் ளை பொழுது புலருவதன் முன்னரே சாந்துக் கொண்டிருத்தல் வேண்டும். ஐராவதத்தின் குலத்தில் பிறந்த நான்கு தந்தங்களுடைய யானைகள் மீது அநேக புண்ணிய நதிகளின் தீர்த்தம் ஆயிரங்குடங்களில் சித்தப்படுத்தி வைக்கவேண்டும். நூதனமான மூன்று புலித்தோலும், முத்து, மாணிக்கம், முதலியவற்றால் அலங்கரிக்கப்பட்ட பிடிகளுடன் பிரகாசிக்கும் திவ்ய வெண்பட்டுக் குடையும், ரத்தின தண்டமும், சிவேதமான மாலைகளும், வஸ்திரங்களும், திவ்வியமான ஆபரணங்களும், தயார்செய்தல் வேண்டும். முனிவர்கள் தருப்பையைக் கையிற்பிடித்துக்கொண்டு முன்பே வந்திருக்கவேண்டும். பரதநாட்டியத்தில் வல்லவரான கன்னிகையரும், பாடகர்களும் புல்லாங்குழல் முதலிய எல்லாவாத்திய வித்வான்களும் வாசலில் வந்து கானஞ்செய்ய வேண்டும். இரத்தின துவஜபதாகைகளையாவும் ஆயுதங்களுடன் ஆரமனைவாயிலிலிருந்து காவல் புரிதல் வேண்டும். நகரத்திலுள்ள ஆலயங்களிலெல்லாம் பலிதான முதலிய ஆராதனைகள் குறைவின்றி நடைபெறவேண்டும். மன்னரெல்லாரும் காணிக்கையுடன் சீக்கிரம் வந்துசேரும்படி செய்யவேண்டும்”—என்று இவ்வாறு வசிஷ்டமகாமுனிவர் சுமந்திரனுக்குக் கட்டளையிட்டு விட்டு உடனே ரதத்தில் ஏறிக்கொண்டு ஜகத் பிரபுவாகிய இராமபிரான் எழுந்தருளியிருக்கின்ற மாளிகைக்கேகினர். குருவானவர் மூன்று வாயில்களையும் தடையின்றிக் கடந்து ரதத்திலிருந்து பூமியில் இறங்கி உள்ளே சென்றார். அவருடைய வருகையை யறிந்த இரகுபுங்கவர் எதிர்கொண்டு வந்து வரவேற்றுக் கைகுவித்துப் பாதங்களிற் பணிந்தெழுந்து அழைத்துச் சென்று சிங்காதனத்தின் மீது வீற்றிருக்கும்படி செய்து சீதாபிராட்டியார் கொண்டுவந்த தீர்த்தத்தினால் அவரது பாதத்தை விளக்கி அந்தப் பாததீர்த்தத்தைத் தாமும் தமது மனைவியும் புரோக்ஷித்துக் கொண்டு அஞ்சலியஸ்தராய் நின்று “தங்களுடைய பாததீர்த்தத்தை தரித்ததினால் நான் தன்னியனுப் விட்டேன்” என்று கூறினர். இராமர் இவ்விதம் சொல்லக் கேட்ட வசிஷ்டமகாமுனிவர், பிரபுவை நோக்கி நகைத்து, “உமது பாததீர்த்தத்தைத் தரித்துக் கொண்டு ருத்திர மூர்த்தி தன்னியராயினர். எனது தந்தையாகிய பிதாமகரும் உமது பாததீர்த்த மகிமையால் சகல சுகங்களையும் எளிதிலடைந்தனர்.

இவ்வண்ணமிருக்க, நீர் இப்படிச் சொல்வது உலக உபதேசமேயாம்.
நீர் பரமாத்மா, இலக்ஷ்மியுடனவதரித்திருக்கும் ஈசுவரனென்பதை
நானறிவேன். தேவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றுவதன்
பொருட்டும் பக்தர்களுடைய பக்தி சித்திப்பதன் பொருட்டு
மன்றோ பகவானுடைய தாம் அவதரித்திருப்பது இராம! இராவண
னைச் சங்கரிப்பதன்பொருட்டு இந்தப் புவியில் நீர் அவதரித்திருக்கி
றீரென்பதை நானறிவேன். ஆயினும் இது தேவரகசியமாதலால்
தங்களுக்குத் தெரியச் சொல்லுகிறேன்

ஏ ராம! உமது மாயையால் எப்படி நீர் எல்லாவற்றையும்
உண்டாக்குகிறீரோ, அப்படியே நீர் எனக்குச் சீடனாகவும் நானும
க்கு ஆசிரியனாகவும் இருக்கும்படி பணிசெய்கின்றேன். நீர் ஆசிரிய
ர்களுக்கெல்லாம் ஆசிரியர். பிதாக்களுக்கெல்லாம் பிதாமகர். நீர் அந்தர்
யாமி. அகிலமென்கிற இந்த ஜகமாகிய யந்திரத்தை ஆட்டுகிறவர்.
மனோவாக்குக் காயங்களுக்கெட்டாதவர். இச்சாமாத்திரமெடுத்துக்
கொண்ட சுத்தசத்துவமயமான சரீரத்துடன் இந்த உலகத்தின்
கண் உமது யோகமாயையினால் மானிடன்போல் விளங்குகின்றீர்.
பரமாத்மாவே இந்த இக்ஷ்வாகு வம்சத்தில் இராமனாகவவதரிக்கப்
போகிறாரென்பதை ஆதிகாலத்திலேயே கமலாசனக்கடவுள் முக
மாக அறிவேன். ஆதலால் உலகத்திற் பழிக்கத்தக்க தொழில் இந்
தப் புரோகிதத் தொழிலென்பதை யறிந்தவனாயிருந்தும் உமக்கு
ஆசாரியனாகவிருந்து உமது சம்பந்தத்தை யடைந்துய்யலாமெனக்
கருதி அத்தொழிலை யநுசரித்துக் கொண்டிருக்கின்றேன். இப்
போது என்மனோரதம் ஈடேறிற்று; உம்மைச் சார்ந்த மாயையா
னது உலக முழுவதையும் மோகிக்கும்படி செய்கின்றது. பிரபுவே!
அந்த மாயை என்னையும் மயக்கா வண்ணம் திருவருள் புரியவேண்
டும். ஆசிரியனுடைய கடனைத் தீர்க்க வேண்டுமென்கிற சிந்தனை
யுமக்கிருக்குமாயின் எனது இந்த வேண்டுகோளைத் தீர்க்கவேண்
டியதவசியம். இந்த வார்த்தைகள் சந்தர்ப்பங் கருதியே வெளிவந்
தனவன்றி இல்லாவிட்டால் மற்றெந்த இடங்களிலும் வெளியி
டத் தக்கவையன்று. இராம! நாளை சூரியோதயவேளையில் உன் பிதா
உனக்குப் பட்டாபிஷேகம் செய்விக்கத் தீர்மானித்திருக்கின்றனர்.
அந்தச் செய்தி உனக்குத் தெரிவிப்பதன் பொருட்டே என்னை

இங்கே யனுப்பினர். ஆகவே இப்போது நீ சீதையுடன் உபவாச மிருத்தல் வேண்டும். பரிசுத்தமான பூப்பிரதேசத்தில் சயனித்துக் கொண்டு ஜிதேந்திரியனாயிருத்தல் வேண்டும். நான் அரசனிடம் போகின்றேன். நீயும் விடியற்கால வேளையில் அங்கே வந்துசேர் என்று தெரிவித்து இரதத்திலே மீதேறிக் கொண்டு அரசனிடம் சென்றனர்.

பின்னர், சர்வக்ஞரும் மாயாஜிதரும் ஈசுவரரூபாகிய இராமபிரான் அருகே இருக்கும் இலக்ஷ்மணனை நோக்கி, நகைத்து, "இலக்ஷ்மணா நாளையதினம் எனக்கு யுவராஜ்யாபிஷேகம் நடக்கப் போகின்றதாம். நான் நிமித்த மாத்திரந்தான். இராஜ்யத்தை நடத்துகிறவனும் அதை அனுபவிப்பவனும் நீ தான். நீ எனது வெளிப்பிராணன். இதைப்பற்றி நீ சிறிதும் விசாரிக்க வேண்டியதில்லை" என்று சொல்லி வசிஷ்ட மகரிஷியின் சொற்படி நியமதரா யிருந்தார்.

தசரதனிடம் வந்த வசிஷ்டர் அவனிடம் தாம் இராமருக்குச் சொல்லிவிட்டதாகக் கூறினர். இங்ஙனம் வசிஷ்டருக்கும் தசரதனுக்கும் நடந்த இராமபட்டாபிஷேக விசேஷத்தை அங்கிருந்து கேட்டுக் கொண்டிருந்த இராஜ மனிதன் ஒருவன் இராமருடைய அன்னையாகிய கௌஸல்யைக்கும் சுமித்திரைக்கும் தெரிவித்தான். அதைக் கேட்டதும் அவர்களிருவரும் அளவற்ற ஆனந்தமடைந்து அவனுக்கு விலைமதிக்க வொண்ணாத ஆரம் ஒன்றைப் பரிசளித்தார்கள்.

பிறகு புத்திரனிடத்தில் வாத்ஸல்யமுள்ள கௌஸல்யை ராமருக்கு அர்த்தஸித்தியுண்டாவதன் பொருட்டு லக்ஷ்மிதேவியைப் பூஜித்தாள். உண்மைபேசும் தசரதர் நாமெவ்விதம் கேள்விப்பட்டோமோ அவ்விதமே செய்வார். கைகேயினிடத்தில் பேரன்புள்ளவரானமையால் அவள் பேச்சைக் கேட்டு என்ன செய்யப் போகிறாரோ என்று கவலையடைந்த மனதையுடைய அந்தக் கௌஸல்யை மறுபடி துர்க்காதேவியைப் பூஜித்தாள்.

இங்கிப்படியிருக்க, தேவர்கள் வாணியென்னும் தேவதையை யழைத்து "நீ பூலோகத்தில் அயோத்தியாபுரி சென்று அங்கு இராம

பிரானுக்கு நடத்த உத்தேசித்திருக்கும் மகுடாபிஷேகம் தடைபெறா வண்ணம் பிரம்மாவின் வாக்கியப்படி இடையூறான காரியங்களை யத்தனிக்க முதலில் மந்தரையென்னும் கூனியினிடமும் பிறகு கைகேயியினிடமும் பிரவேசித்துக் காரியசித்தி செய்து வரக்கடவாய்” என்று கட்டளையிட்டனுப்பினர். வாணிதேவியும் அதற்குச் சம்மதித்து விரைவாக வந்து மந்தரையினிடம் பிரவேசித்தாள். இச்சமயம் முதுகில் மூன்று கோணலையுடைய மந்தரை யென்பவள் உன்னதமான உப்பரிகையின் மீதிருந்து பட்டண முழுவதையும் பார்த்து நகரமுழுதும் அலங்கரிக்கப் பட்டு எங்கும் மகோற்சவங் கொண்டாடப்படுவதைக் கண்டு பரமாச்சரியமடைந்து தன் மாற்றாந் தாயைப் பார்த்து “அம்மா! பட்டணமெங்கும் அலங்கரிக்கப் பட்டிருக்கிறது. எங்கு பார்த்தாலும் உற்சவம் கொண்டாடப்படுகின்றது. இவைகளன்றி கௌஸல்யாதேவியும் குதூகலத்துடன் அந்தணர்களுக்கு வஸ்திரதானமும் பூரிதானமும் வழங்குகின்றனள். இதற்குக் காரணமென்ன?” என்று கேட்டாள். அது கேட்டதும் அவள் தாய் “அடி மந்தரே! இராமனுக்கு நாளையதினம் மகுடாபிஷேகமாம். அதற்காகவே பட்டண முழுதும் இப்பொழுது அலங்கரிக்கப்பட்டிருக்கிறது” என்றாள். அதைக் கேட்டதும் மந்தரையானவள் சீக்கிரமாக கைகேயினிடம் வந்து பின்வருமாறு கூறுகிறாள்.

அப்போது கைகேயி ஒரு கட்டிலில் தனியே படுத்துக்கொண்டிருந்தாள். அவளைப் பார்த்து, “பாக்கிய மில்லாதவளே! அறிவில்லாதவளே! பெரும் பயமுண்டாயிருக்கிறதே! நீ யறியாயோ அதை? பிடியானையை யொத்த நடையுடைய ஏ ரூபவதியே! நீ யேன் படுத்துக்கொண்டிருக்கின்றாய்?” மகாராஜா இராமனிடம் கொண்ட அன்பினால் அவனுக்கு நாளையதினம் முடிசூட்டப் போகின்றனராம்” என்றாள். இந்தச் சொற்களைச் செவியுற்றதும் கைகேயி மஞ்சத்தினின்றும் விரைந்தெழுந்து, அமிர்தத்திற்குச் சமானமான வார்த்தையைச் சொன்ன அந்த மந்தரைக்கு அழகான ஒரு இரத்தின மாலையை வெகுமதியாகவளித்து, “அடிமந்தரே! அளவிறந்த மகிழ்ச்சியை யளிப்பதான இந்தச் சமாசாரத்தில் மிக்க பயத்தைத் தரக்கூடியதென்ன விருக்கின்றது? பரதனிலும் இராமனே எனக்குப்

பதினட்டங்கதிகமான பிரியத்தைச் செய்பவன். கௌஸல்யையும் என்னையும் சமமாகப் பாவித்துப் பணிவிடைபுரிபவன் இராமன். அடி அறிவில்லாதவளே! இந்த இராமனால் எனக்கேன்டி பயமுண்டாகும்" என, அதைக்கேட்ட மந்தரை, உடனே, துக்கித்து கைகேயியைப் பார்த்து, "தேவி! உனக்கு இவ்விதமாகப் பயமுண்டாகும் என்பதைத் தெரிவிக்கின்றேன் கேள். மகாராஜா உன்னிடம் இத வசனங்களைப் பேசி உன்னை மயக்கி விடுகிறார். உன்னிடத்தில் மிகுதியும் காதல் கொண்டவரென்றும், சத்தியவாதி யென்றும், சொல்லி, வார்த்தைகளினாலேயே உன்னைச்சந்தோஷப்படுத்திவிடுகிறார் ஆனால் அவர் கௌஸல்யையிடம் அந்தரங்கத்தில பக்ஷமாகவிருந்து சகலகாரியங்களையும் செய்துவருகின்றார். இந்தப்பட்டாபிஷேக காரியத்தை மனதிலெண்ணிக்கொண்டே பரதனை அவன்மாமன்வீட்டுக்குச் சத்ருக்னனுடன் அனுப்பி இருக்கின்றார். இலக்ஷ்மணன் எப்போதும் இராமனை யனுசரித்திருந்து வருவதால அவனை எவ்விதத்திலும் இராஜ்ய சுகத்தைத் தடையின்றி யனுபவிப்பான். அதனால் சுமித்திரை நலம் பெறுவாள். அதிற் சிறிதும் ஐயமில்லை பரதன் இராமனுக்குப் பணிவிடை செய்பவனாகவேண்டும் அப்படியில்லையாயின் இந்நகரத்தினின்றே துரத்தப்படவேண்டும். அதுவுமில்லையாயின் சீக்கிரத்தில் கொலைசெய்யப்படுவான் நீ கௌசலைக்கு அடிமையாகி நாடோறும் அவளிட்ட ஏவற்றொழில் புரியவேண்டும். ஒருத்தி தன் சக்களத்தியினிடமிருந்து துன்பப்படுவதினும் இறத்தலே மேலன்றோ?" ஆகையால், பரதனுக்குப் பட்டாபிஷேகம் நடைபெறவும் இராமன் பதினாலு வருடம் காடேகவும் சீக்கிரமாக முயற்சி செய். அப்படிச் செய்தாலன்றி உன் மகன் சிங்காசனம் பெறவும் நீயும் இராஜாதிகாரத்தைப் பெறவும் இடமுண்டாம. அதன் பொருட்டு முன்னமே ஒரு உபாயத்தை நிச்சயித்திருக்கிறேன். அதாவது-

முன்னொரு சமயம் தேவாசுரர்களுள் யுத்தம் ஏற்பட்டது அப்போது மஹாராஜனை நமதரசனைத் தேவேந்திரன் தனக்குதவி செய்ய அழைத்ததும், அரசன சைன்னியங்களோடு உன்னையும் அழைத்துக்கொண்டு அவிடம் சென்று, அசுரர்களை யெதிர்த்து அமர் புரியுஞ் சமயம் இரதத்தின அச்சு ஆணி விழுந்து விட்டதும் அரசன்

அதைத் தெரிந்துகொள்ளாத அந்த ஸமயத்தில் நீமிகவும் தைரியமாக அச்சின் துவாரத்தில் கையை நுழைத்து அரசனைக் காப்பாற்றினதும் அரசன் பின் அசுரர்களைவென்று உன்னைப்பார்த்து ஆச்சரியமடைந்து உன்னை ஆலிங்கனம் செய்துகொண்டு "கைகேயி! இச்சமயம் உனக்கு இரண்டு வரங்கள் தருகிறேன். வேண்டுவனவற்றைக் கேட்டுக்கொள்" என்று சொல்ல, நீ அந்த இரண்டு வரங்களையும் பிறகு கேட்டுக்கொள்கின்றேன், அவையிரண்டும் தங்களிடமேயிருக்கட்டும் என்று சொன்னதும், அரசனதற்குச் சம்மதித்து இங்கே வந்ததும் நீ எனக்குச் சொல்லி யிருக்கின்றாய், உனக்கு இது ஞாபகமில்லையா? அதை இப்போதுனக்கு நினைப்பூட்டினேன். ஆகையால் நீ அரசனிடம் சினங்கொண்டவள் போல் பாசாங்கு செய்து உன் ஆபரணங்களையெல்லாம் கழற்றி யெறிந்து விட்டுக் கோபகிரகத்துட் சென்று தரையிலேயே சயனித்துக் கொண்டிரு. அரசன் உன்னுடைய மனோரதத்தை நிறைவேற்றுகிறேனென்று உண்மையாய்ப் பிரதிஞ்ஞைசெய்யும் வரை அந்த இடத்தை விட்டசையாதே என்று கூறினள். இங்ஙனங் கூறியதும் கைகேயி துர் எண்ணங் கொண்டவளாகிய மந்தரையை முகமலர்ச்சியுடன் பார்த்து, "அடியே மந்தரே! நீ இது வரையில் சொன்னவைகளெல்லாம் உண்மை யென்று தெரிந்து கொண்டேன். இந்தப் புத்தி உனக்கு எப்படியம்மா யுண்டாயது? இவ்வளவு அறிவாளியாயிருப்பாயென்று நான இதுவரையில் நினைக்கவில்லை. என் அன்பான பரதனுக்கு இராஜ்யம் உரிமையாகப் படும்போது உனக்கு நூறு கிராமங்களை வெகுமதியாகக் கொடுக்கும்படி செய்கின்றேன்;என்று இப்படி வாக்குறுதி கொடுத்து விட்டுக் கைகேயி கோபகிருகம் சென்று, தன் ஆபரணங்களையெல்லாம் கழற்றி ஒரு பக்கம் எறிந்து விட்டு, அழுக்கு வஸ்திரம் எடுத்து உடுத்துக்கொண்டு தரை மீது மிகக்கோபங் கொண்டவள்போல் படுத்துக் கொண்டு கூனியைப் பார்த்து "அடியே; இராமன் வனத்திற்குச் செல்லும் வரையில் இவ்வாறே சயனித்துக் கொண்டிருப்பேன். இல்லா விட்டால் என் உயிரை யிழந்து விடுவேன். அடி கல்யாணி! இது நிச்சயமென்றெண்ணிக்கொள். உனக்கு மங்கள முண்டாகக்கடவது" என்று சொன்னாள். இதைக்கேட்டதும் மந்தரை மிகவும் மகிழ்ச்சியடைந்து தன் வீடுசென்றாள். கைகேயி தன் வாக்குத்தத்தத்தைக் காத்தவர

தாள். தைரியம், தயை, நற்குண நன்னடக்கையுடையவர்கள், நீதி நெறி யுணர்ந்து விதி வாதங்களில் தேர்ந்த தேசிகர்கள், விற்பன்னர்கள், இவர்களில் எவர்களாயினும் கொடிய பாபசிந்தையுடையவர்களின் சகவாசத்திற் குட்படுவார்களாயின் அவர்களுடைய புத்தியில் மயங்கி அவர்களைப்போலவே கொடியவர்களாய் விடுவார்கள். ஆகையால் கெட்ட நடத்தையுடையவர்களுடைய செய்கையை எப்போதும் விட்டுவிட வேண்டும். இல்லாவிட்டால் துஷ்ட சகவாசத்தால் தன் பெருமையை போக்கிக்கொண்ட இராஜ பத்தினியின் கதிக்கொப்பாக முடியும்.

இரண்டாவது சருக்கம்.

முற்றிற்று.

3-வது சருக்கம்

பரமசிவன் கூறுகிறார்.

இங்கிப்படியிருக்கத் தசரதமகாராஜன் தன் குமாரனுடைய பட்டாபிஷேகத்திற்குச் செய்ய வேண்டுவன யாவும் செவ்வனே நடை பெறும் வண்ணம் மந்திரிக்குக் கட்டளையிட்டனுப்பிவிட்டுத் தன் அரண்மனைக்குச் சந்தோஷமாகத் திரும்பி வந்தான். அங்கே தன் காதலி கைகேயி இல்லாதிருக்கக்கண்டு ஆச்சரிய மடைந்து, "இதென்ன? இதற்கு முன்பென்றும் நாம் வந்த கணத்திலேயே நமக்கு முன் சிரித்த முகத்துடன் வந்து நம்மை நமது அன்புடைய மனைவி எதிர்கொண்டழைப்பாளே; இன்றைக்கு அவ்வாறு வராமைக்குக் காரணம் யாதோ தெரியவில்லையே" எனறு தனக்குள்ளே யோசித்துக்கொண்டே மனக்குறையுடன், அங்கிருந்த தாவிவர்க்கத்தைப் பார்த்து, "உன்னுடைய எஜமானியாகிய என்

காதலி எங்கிருக்கின்றாள்? எனக்கு அன்பை யளிக்கும் என்
காதலி ஏன் எப்போதும்போல் என் முன் வரவில்லை?" என, அவர்
கள் "ஐயா எஜமானி கோபகிருகத்திற்குச் செல்வதைப் பார்த்
தோம்; ஆனால் அதன் காரணத்தை நாங்கள் அறியோம்; தாங்
களே போய்த்தெரிந்து கொள்ளலா" மென்றார்கள். இதைக்
கேட்டதும் அரசன் பயங்கொண்ட மனதுடன் கைகேயி இருக்
கும் அறை சென்று அவளருகே யுட்கார்ந்து அவள் உடல்
முழுதும் தன் கரத்தால் மெதுவாகத்தடவிக் கொண்டு "பயந்த
சுபாவமுடையவளே; நீபடுக்கையிற் படுப்பதைத் தவிர்த்து
ஏன் இத்தரையில் இப்படிச் சயனித்துக் கொண்டிருக்க வேண்டும்?
நீ மௌனமாயிருப்பது எனக்கு மிகுதியும் மனக்கலக்கத்தை யுண்
டாக்குகின்றது. ஆபரணங்களெல்லாவற்றையும் கழற்றி யெறிந்து
விட்டு இப்படியேன் படுத்திருக்க வேண்டும்? உன் இஷ்டத்தைத்
தடையின்றி முடிப்பேன்; உனக்கு யார் தீங்கிழைத்தார்கள்? மாதர்
களோ? ஆடவர்களோ? அவர்களை இந்தக்ஷணத்திலேயே தவறாது
தண்டிக்கின்றேன். யாவரும் எனதாக்ஞைக் குட்பட்டவர்களென்ப
தற்கும் ஐயமுண்டோ? தேவி! நான் பிரியமடையும்படி அதைத்
தெரிவிப்பாய்; அது எப்படிப்பட்ட கஷ்டமான செய்கையெனினும்
க்ஷணப்பொழுதில் முடிக்கின்றேன்; பிரியே! எனது பலபராக்ரமங்
களை நீ யறியாயோ? ஏனிங்ஙனம் அவசமாயிருக்கின்றாய்? நீ இப்
படியிருப்பது எனக்கு மிகவும் துன்பத்தைத் தருகின்றது. இது
உனக்கு வீணான கஷ்டமல்லவா? நீ விரும்புவாயாயின் ஒரு க்ஷணத்
தில் தனவானைத் தரித்திரனாக்கி விடுவேன். தரித்திரனையுந் தன
வானாகச் செய்துவிடுவேன். கொலைசெய்யக் கூடாதவனைக் கொலை
செய்ய வேண்டுமெனக் கூறினும் கொல்வேன். கொலைக்குப் பாத்
திரமானவனை விட்டுவிடென்று சொல்லினும் விடுவிப்பேன். பலபல
சொல்வானேன். என் பிராணனையே நீ கேட்பினுந் தருவேன்.
உன் இஷ்டப்படியே செய்கின்றேன். என் உயிரினும் பெரியவனும்
சத்தியசந்தனுமாகிய இராமன் மேலாணையிட்டுச் சொல்கின்றேன்"
என்றான்.

இதைச் செவியுற்றதும் கைகேயி, கண்களை மெதுவாகத்
துடைத்துக்கொண்டு அரசனை நோக்கி, "தாங்கள் ஆணையிட்டது

உண்மையாயின் அடியேன் கேட்டதைத் தடையின்றி யளிக்க வேண்டும்; முன்னொரு சமயம் நடந்த தேவாசுர யுத்தத்தில் தாங்கள் என்னால் காப்பாற்றப்பட்டீர்களல்லவா? அப்போது என்மீது தாங்கள் கொண்ட அன்பினால் எனக்களித்த வரமிரண்டுண்டன்றோ? அவ்வரங்களை நான் எனக்கு வேண்டும் சமயம் பெற்றுக்கொள்கின்றேனென்று சொல்லியிருந்தனனல்லவா? அவற்றில் ஒரு வரத்தால் என் அன்பான புதல்வன் பரதன், இப்போது யத்தனித்திருக்கும பட்டாபிஷேகத்தை யடையும்படி செய்யவேண்டும்? மற்றொரு வரத்தால் இராமன் சடைமுடியும் மரவுரியுந் தரித்துத் தவவேடத்துடன் தண்டகாரண்யம் செல்லவும் அங்கு அவன் பதினான்கு வருடகாலம் கந்தமூலங்களைத் தின்று காலங் கழிக்கவும் செய்யவேண்டும். அந்தப் பதினான்கு வருடங் கழிந்தபின் இராமன் இங்கு வரினும் வருக; இன்றேல் அங்கேயே வசிக்கும்படி கட்டளையிட்டாலும் சம்மதம். இராஜீவலோசனனாகிய இராமன் காலையிலெழுந்ததும் தவறாது காடேகவேண்டும். அப்படி இல்லாமல் தாமதமாகுமாயின் என் பிராணனை உமக்கு முன்பே யிழப்பேன், சத்தியந் தவறாதவராகிய நீர் செய்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றக் கடவீர்; இதுவே எனது விருப்பம்" என்றனள்.

இங்ஙனம் கைகேயி கூறிய இந்த விபரீதமான கொடிய வசனங்களைக் கேட்டதும், அரசன் மயிர்க்கூச்சலடைந்து, வஜ்ராயுதத்தினால் அடிபட்ட மலைபோல் புவிமீது விழுந்தான். பிறகு தெளிந்து மெதுவாக வெழுந்து, கண்களைத் துடைத்துக்கொண்டு, மிகுந்த வருத்தத்துடன், இதென்ன இது: நான் துர்சொப்னங்கண்டேனோ? அல்லது மதிதான்மயங்கி நிற்கிறதோ? என்று யோஜித்துத் தன்னெதிரே புலிபோல்நிற்கும் தன் மனைவியை நோக்கி, பத்ரே! நீயேன் இப்படிப் பேசுகின்றாய்? நீ சொல்லிய வசனங்கள் என்னுயிரை வதைப்பனவா யிருக்கின்றனவே! உனக்கு தாமரைக்கண்ணனாகிய இராமன் செய்த அபராதமென்ன? எப்போதும் நீ இராமனது நற்குணங்களைப் பற்றி என்முன் பேசுவது வழக்கமாயிற்றே! என்னையும் கௌஸல்யையும் ஒரே தன்மையில் வைத்து எப்போதும் பணிவிடை செய்வானென்று நீயே முன்னெல்லாம் சொல்லிக்கொண்டிருந்து, இப்பொழுது ஏனோ அதற்கு விரோதமாகப் பேசுகின்றாய்? உன் மகனுக்கு இந்த இராஜ்யத்தைவைத்துக்

கொள். இராமன் மாத்திரம் வீட்டிலேயேயிருக்கட்டும். இவ்வளவு அனுக்கிரகம் எனக்குச் செய். இந்த இராமனால் உனக்கு யாதொரு பயமும் உண்டாகாது" என்று கூறி கண்களினின்று நீர் பெருக அவள் பாதத்தில் விழுந்தான்.

கைகேயி உடனே கண்கள் சிவக்கக் கோபமடைந்து அரசனை நோக்கி மன்னவனே உனக்கு அறிவு மயங்கி நிற்கிறதோ; சொன்ன சொல்லை ஏன் மாற்றிச் சொல்கிறீர். மன்னவர் மன்னனே! நீங்கள் சொல்லியபடி செய்யாதொழியின் நரகத்திற்குப் பாத்திரனாவீர். நாளை பொழுது விடிந்ததும்! இராமன் மரவுரி யுடுத்துக் காட்டுக்கு செல்லானேல் கொடிய விஷத்தைப் பானம்செய்தோ அல்லது கயிற்றினால் என் கழுத்தில் சுருக்கிட்டுக் கொண்டோ இந்தச் சரீரத்தைத் தங்களுக்கு முன்னே ஒழித்து விடுவேன். நான்தான் இவ்வுலகத்தில் சத்தியவாதியென்று அநேக சபைகளில் டம்பமாக நீங்களே கூறி இருக்கின்றீர். அப்படியிருக்க நீர் இராமன்மேல் வைத்த ஆணையைப் பொய்யாக்குவீராயின் இப்பொழுதே அசத்தியவாதியென்ற பெயரெடுத்து நரகத்தை அடைவீர் என்றாள். இங்ஙனம் சொல்லிய மனைவியின் வார்த்தைகளைக் கேட்டதும் அரசன் துயரக் கடலில் ஆழ்ந்து மூர்ச்சித்து பூமிமீது விழுந்து உயிர் துறந்தவனைப் போலானான். இவ்விதம் நடந்த அந்த இரவானது துக்கத்திலாழ்ந்த அரசனுக்கு ஒரு வருஷம் போலிருந்தது. அரசனைத் தூக்கத்திலிருந்து நீக்கும்பொருட்டு வந்திமாகதர்களும் பாடகர்களும் அருணோதயத்தில் அங்குவந்து சேர்ந்தனர். அவர்களைக் கண்ட கைகேயி பெருஞ்சினங்கொண்டு எல்லாரையும் அவ்விடம் விட்டுப்போகச் செய்தனள். பின்பு பொழுது புலரும் தருணத்தில் பிரம்ம க்ஷத்திரிய வைசியராகிய மூவருணத்தவரும், முனி ஜனங்களும், கன்னிகைப் பெண்களும், திவ்யமான சத்திர சாமரங்களுடன் இரத கஜ துரக பதாதிகளும், தாசி ஸ்திரீகளும், பட்டணத்து ஜனங்களும், இன்னும் அநேகரும், வசிஷ்டர் வாக்கியப்படி அவ்விடம் வந்து இருந்தார்கள். ஸ்திரீகள், சிறுவர்கள், கிழவர்கள் முதலியவர்களுக்குங் கூட அந்த இரவில் தூக்கம் வரவில்லை. சர்வாபரணாலங்காரத்துடனே பீதாம்பரதாரியாய் ஒளிவீசும் கிரீடகடகங்களுடன் கௌஸ்துபமணியும் துலங்க, சியாமளவர்ணராய், நூறு மன்மதனுடைய சௌந்தரியமும் வாய்க்கப் பெற்றவராய், சர்வ லக்ஷணங்களுடன் கூடிய இலக்ஷ-

மணர் வெள்ளைக்குடைபிடிக்க, இடதுபக்கத்தில் ஜானகிதேவி சகிதமாய், மகுடாபிஷேகத்துக்கு மநதகாசமான முகத்துடன் பட்டத்து யானையின்மீது வீற்றிருப்பவராய், சத்திய சங்கல்பரான சர்வேசுவர சுவரூபர், சர்வ சன்னுகங்களுடன், பரிபூர்ண குணங்களுடையவராய் வேதியர்கள், பிரம்மததை அறிநதவர்கள, சித்தர்கள், வேத வேதாந்தங்களை நன்குணர்ந்தவர்கள், புராணம் படிக்கிறவர்கள், சாஸ்திர சித்திபெற்றவர்கள், களங்கமற்ற தபோநிஷ்டர்கள், இரதகஜ துரக பதாதிகள் இவர்கள் எல்லோருமே சேவிக்க எப்போதெழுநதருளுவர், எப்போது நாம்கண்டு சேவிப்போம. எப்போது பொழுதுவிடியும் என்று நகரத்துஜனங்களெல்லாம் சந்தோஷததுடன்பேசிக்கொண்டிருந்தார்கள். அசசமயம் அமைச்சர் தலைவனுன சுமந்திரன அவவிடம் வந்து மன்னன் ஏன இன்னும் எழுநதிருக்கவில்லை; காரணம யாது என்று சிந்திதது அநதப்புரம் சென்று ஜெயா விஜயீபவ என்று போற்றித் தரையில் விழுநது ஸாஷ்டாங்கமாகத தண்டனிட்டாள்.

பிறகு எழுந்து உட்கார்ந்து மிருந்த வருததமான பார்வையோடு விசனததுடனிருக்கும மனனர் மன்னனைக் கண்டு அருகேயிருந்த கைகேயியைப் பார்த்து அரசன் இங்ஙனம் விசனத்துடனிருககக் காரணமென்னவென்று கேட்டான். கைகேயி மநதிரியை நோக்கி இரவெல்லாம் அரசனுக்கு நித்திரையே கிடையாது. எப்போதும இராமா இராமா இராமா என்று இராமனையே சிந்திததுக் கொண்டிருந்தனர். அங்ஙனம் இராத்திரி முழுவதும விழித்துக் கொண்டிருந்தமையால் அரசனை இந்தக் கோலததோடு பார்க்கலாயிற்று. அவர் இப்போதே இராமனைப பார்க்கப் பிரியப்படுகின்றமையால் இராமனை அதி சீககிரமாக இவ்விடத்திற் கழைத்து வரவேண்டும் என்றாள்.

ஸுமந்திரன் கூறுகிறான்.

அதைக்கேட்டதும் அமைச்சன் "அம்மணி மகாராஜனது உத்தரவு இன்றி அடியேன் இராமனை அவ்வாறு அழைத்து வருவது கூடுமோ வென "அரசன் மந்திரியின் முகத்தைப் பார்த்து "நான் இராமனை இப்பொழுது பார்க்கவேண்டும். சீக்கிரம் அழைத்து வருவாயாக என்றான். சுமந்திரன் உடனே விரைவாக அங்கிருந்து

புறப்பட்டு இராமனது அரமனைக்குச் சென்றான். அங்கே பரந்த நேத்திரமும் பூர்ண சந்திரன்போன்ற முகமும்; குண்டலங்களின் காந்தியால் பிரகாசிக்கப்பட்ட கபோலங்களும், விலைமதிக்க வொண்ணாத திவ்ய ரத்தினங்கள் பதிக்கப்பட்டு விளங்கும் திவ்யாபரணங்கள் திவ்விய பீதாம்பரம் மகரகேயூர கங்கணங்கள் ஆரம் இவைகளை அணிந்துகொண்டு, அலங்காரமான கட்டிலின்மேல் தனியே எழுந்திருளியிராநின்ற காகுஸ்த்தனைக் கண்டு தரிசித்துத் தண்டனிட்டு பயபக்தியுடன் கைகூப்பிநின்று "பங்கஜநேத்திர இராமா! உமக்கு மங்களமுண்டாகுக, பிரபுவே உமது தந்தை உம்மை இப்போது பார்க்க விரும்புகிறார்; ஆகையால் விரைந்து என்னோடு வரவேண்டும்" என்று சொல்லி இலக்ஷ்மணருடன் இராமனை ரதத்திலேற்றி யழைத்துக்கொண்டு அதி சீக்கிரத்தில் தசரத மஹாராஜனிடத்திற்கு வந்தான்.

இராமபிரான் தந்தையிடம் வந்ததும் அவரை வணங்க, இராஜனும் உடனே எழுந்து மகனை அன்போடு கட்டித் தழுவி பிறகு, கைகளை நீட்டிக்கொண்டு ஏ ராமா! என்று கதறிக் கீழே விழுந்தான். இராமபிரான் அதைக்கண்டு திடுக்கிட்டு உடனே தன் இருகரங்களாலும் தந்தையை எடுத்து அணைத்துத் தொடைமீது உட்கார வைத்துக்கொள்ள, அப்பொழுது இராஜ ஸ்திரீகளெல்லாம் ஐயோ அரசன் மூர்ச்சை அடைந்தனனே என அழத்தொடங்கினார்கள். அந்த அழுகைச் சத்தம் கேட்ட வசிஷ்ட முனிவர் அதற்குக்காரணம் அறிவதன் பொருட்டு அங்கு வந்து சேர்ந்தனர். அப்பொழுது இராமபிரான் கைகேயியை நோக்கித் தந்தை இவ்வாறு வருந்துவதற்குக் காரணம் என்னவென்று கேட்க, கைகேயி கூறுகிறாள்.

இராமா அரசனது துக்கசாந்திக்கு நீதான் காரணம். இந்தத் துன்பம் தீருவதற்கு இன்றே நீ செய்யவேண்டிய காரியமொன்றிருக்கின்றது. இராஜனுடைய சத்தியத்தைப் பரிபாலனம் செய்யவேண்டியது உன் கடமை; அவர் எனதுமீதுகொண்டிருந்த அன்பால் எனக்கு இரண்டு வரம் தந்திருந்தனர். அந்த இரண்டு வரங்களும் உன் வசமே யிருக்கின்றன. மகாராஜா அவற்றை வெளியிடுவதற்கு வெட்கப் படுகின்றனர். சத்தியமென்கிற கயிற்றால் கட்டுண்ட காவலனாகிய உனது தந்தையைக் காப்பாற்றுவது உன்கடமை

யல்லவா? ஒரு புதல்வன் தன் பிதாவை புத்திரன் என்கிற சப்தத்தினால் (புத் என்கிற) நரகத்திற் செல்ல வொட்டாது காக்கவேண்டுமன்றோ? என்றாள்.

இவ்வார்த்தைகள் சூலாயுதம் பதிந்ததுபோல் இராமபிரானை வருத்தவே, அவர் தன் அன்னையை நோக்கி, "என்னைப் பற்றி இப்படியேன் பேசவேண்டும். என் தந்தையின் பொருட்டு என் உயிரையுமன்றோ தரக்கடவேன். கடுமையான விடமெனினும் உண்பேன். வேண்டுமேயாகில் சீதையையும் விட்டுவிடுவேன். கௌஸல்யையும் வெறுத்தொதுக்குவேன். இந்த இராஜ்யத்தையுங்கூட இக்கணமே விடுவேன். இன்னும் யான சொல்லக் கிடப்பதென்னவிருக்கிறது? தன் தந்தையின் விருப்பத்தைச் சொல்லாமுன் செய்பவனே உத்தமனாகிறான். சொல்லியபின் செய்பவன் மத்திமனாகிறான் சொல்லியும் செய்யாத மகனே அதமனாகிறான். ஆகையால் என் தந்தை செய்யக் கட்டளையிடுவது எதுவாயினும் செய்வேன். என் தாயே! இது உண்மை! இராமன் இரண்டு பேச்சுப் பேசுவதில்லை" என்றார்.

இங்ஙனம் வாக்குத்தந்த இராமபிரானைப் பார்த்துப் பின்னும், கூறுகின்றாள் கைகேயி. இராமா இப்போது உனது பட்டாபிஷேகத்தின் காரணமாகச் சேகரிக்கப்பட்டிருக்கும் சாமான்கள் யாவும் என் அன்பான புதல்வன் பரதனுக்காக வேண்டும். மற்றொருவரத்தால் நீ இப்போதே மரவுரி யுடுத்துக் கானகம்சென்று அங்கு முனிவர்கள் புசிக்கும் கந்தமூலங்களைப் புசித்துப் பதினான்கு வருடகாலத்தைக் கழிக்கவேண்டும். இவை இரண்டுந்தான் உன் தந்தையின் பொருட்டு நீ செய்யவேண்டியன. இவற்றை உன்னிடந் தெரிவிக்க அரசன் வெட்கப்படுகின்றார்" என்றாள்.

ஸ்ரீ ராமர் கூறுகிறார்.

இதைக்கேட்ட ராமசந்திரபிரபு கைகேயியைப்பார்த்து, அம்மா! பரதனுக்கே இராஜ்யமிருக்கட்டும்; நான் அரண்யம் செல்கின்றேன். ஆனாலும் என் தந்தை இங்ஙனங்கட்டளையிடாததற்குக் காரணந்தெரியவில்லையே என்று கூற, அரசன் தனக்கு முன் நின்றுகொண்டிருந்த இராமரைப் பார்த்து, மிகுந்த துக்கத்துடன் துக்கத்தை யதிகரிக்கும் படியான வசனங்களைக் கூறுகிறான்.

ஏ ராமா! என்னை ஸ்திரீ ஜெயித்துவிட்டாள். என் மனம் மயக்கங்கொண்டிருக்கிறது. வழிதப்பி வழி சென்ற என்னை இவ்வணம் கட்டுப்படுத்தி இந்த ராஜ்யத்தைப்பெற்றுக்கொண்டாள். இராஜ்யமும் பாவமும் உனக்கில்லாதிருக்கக் கடவது. இப்படிப்பட்ட அசத்தியமென்னைக் கிட்டாதிருக்கட்டுமென்று கூறி துக்கம் பொறுக்க மாட்டாது ஓவென்று புலம்பிக் கீழேவிழுந்து, ஆ! ராமா! ஹா ஜகந்நாதா! என் பிராணவல்லப! இராஜேந்திரா! இரவிகுல திலகா! பூர்ணசந்திர முகமுடையவனே! மனோகரா! ஏ திவ்ய கபோல! ஞானதீபதே! என்னருமைப் புதல்வனே! ஏ மஹாபாஹோ! ஏ நரஸ்ரேஷ்டனே! என்னைவிட்டுப் பிரிந்து மிகவும் பயங்கரமான கானகத்திற்கு எப்படிப் போக விரும்புகிறாய் என்று கூறி இராமனைக் கட்டியணைத்துத் துக்கித்துப் பெருங்குரலிட்டு அழுதான். இராமபிரான் தமது கரங்களால் ஜலத்தைத்தொட்டு தந்தையின் கண்ணீரைத் துடைத்து இராஜனுக்குச் சமாதானந் தரக்கூடிய நீதி நெறிகளடங்கிய இதவசனங்களைக் கூறினார்.

பிதாவே! இதிலென்ன துன்பமிருக்கிறது? என் தம்பியே இராஜ்யபரிபாலனம் செய்யக்கடவன். யானுமது வாக்கை நிறைவேற்றித் திரும்பவும் நகரமே வந்து சேர்வேன். இராஜசிரேஷ்டரே! இராஜ்யத்தைவிட கோடி மடங்கு சௌகரியம் வனத்திலெனக்குண்டு. உமது சத்திய வாக்கிய பரிபாலனத்தினாலேயே தேவகாரியமும் நடக்கப்போகிறது. எனதன்னையின் மனதிலிருக்கும் அச்சத்தை ஒழித்து இப்போதே வனம்போக எண்ணங் கொண்டிருக்கிறேன். அபிஷேகத்திற்காகச் சேகரித்த சாமான்களைத் திருப்பிவிடுங்கள். அன்னையையும் சீதாதேவியையும் சமாதானப்படுத்திவிட்டு வந்து உமது பாதங்களை வணங்கி வனத்திற்கேக விடைபெறுவேன் என்று சொல்லிப் பிதாவை பிரதக்ஷிணம் வந்து வணங்கி அன்னையைப் பார்க்க வந்தனர்.

இப்பொழுது இங்கே கௌஸல்யாதேவி இராமபிரான் பொருட்டு தேவாராதனை செய்து ஹோமத்தை நடத்திவைத்த அந்தணர்களுக்குத் தக்ஷிணை அளித்து மௌன விரதங்கொண்டு மஹாவிஷ்ணுவை மனதில் எழுந்தருளச் செய்து தியானித்துக் கொண்டிருந்தாள்.

இப்படி இருக்கும் கௌஸல்யையின் இருதயத்திலுள்ளவனே அத்துவிதியன், அபாரஞான பிரகாசமுடையவன், மாயாதிசய சுவரூபமில்லாதவன், சதானந்தமயன். இப்படிப்பட்ட ஸ்ரீராமனை இதயத்தில் அமைத்து தியானஞ்செய்து வந்தமையால் இராமபிரான் அவ்விடத்திற்கு வந்ததைக் கௌஸல்யா தேவி பார்க்கவில்லை.

மூன்றாவது சருக்கம்,

முற்றிற்று.

நான்காவது சருக்கம்

பரமசிவன் கூறுகிறார்.

அச்சமயம் அவ்விடத்திலிருந்த சுமத்திரை இராமபிரான் வந்திருப்பதைக் கண்டு பரபரப்புடன் கௌஸல்யாதேவியிடம் தெரிவித்தாள். இராமனது திருநாமத்தைக் கேட்டவுடன் கௌஸல்யை மலர்முகப் பார்வையையடைந்து பரந்த நேத்திரங்களையுடையவரும், கருணையுள்ளவரும், நாசமில்லாதவரும், நீலமணியையொத்த மேனியுடையவரும், பீதாம்பரதாரரும் சிரித்த திருமுகமுடையவரும், கழுத்தில் ஆரமும், பாதங்களில் சதங்கையும், செவிகளில் திவ்விய ரத்தின குண்டலங்களும் விளங்கும் ஆனந்த சுரூபரும, மன்னர்கள் வணங்க விளங்குபவரும், யாவருக்கும் நன்மையே புரிபவரும், சாந்த சீலரும், அழிவில்லாதவரும், மேலான சொரூபமுடையவரும், நிராமயரும், நித்தியரும், அவியக்தரும், அக்ஷரரும், நிஷ்களங்கரும், ஜனனமில்லாதவரும், சித்தரும், நிர்மலரும், நித்தியானந்தருமாகிய இராமபிரானைப் பார்த்து மகிழ்வுற்று உடனே ஆலிங்கனம் செய்துகொண்டு மடியில் உட்காரவைத்து உச்சிமுகர்ந்து நீலோத்பலம் போன்ற நிறத்தையுடைய திருமேனியைத் தடவிக்கொடுத்து குழந்தாய் பசியோடு வந்தாயோ: இந்த பரிசுத்தமான அன்னத்தைப் புசி என்றாள்.

இராமர் அம்மா இப்பொழுது அன்னம் புசிக்க அவகாசமில்லை. நான் அதி சீக்கிரத்தில் தண்டகாரண்ணியம் செல்லவேண்டுமென்கிற உத்தரவா யிருக்கிறது. முன் என் தந்தை கைகேயிக்குக் கொடுத்திருந்த வரத்தின் காரணமாக சத்தியத்தைக் காக்கவேண்டி, பரதனுக்கு இந்த ராஜ்ய பாரத்தையும், எனக்குச் சிறந்த கானக வாஸத்தையும் அனுக்கிரகித்தனர். ஆகையால் நான் பதினான்கு வருடகாலம் முனிவர்களுடன் கானகத்தில் வசித்திருந்து சீக்கிரம் திரும்பி வருகின்றேன். என்னைப்பற்றித் தாங்கள் சிறிதும் கவலைப் படவேண்டியதில்லை என்று கூறினார்.

கேட்டவுடன் கௌஸல்யை சோகமுற்று மூர்ச்சை யடைந்து பின் சிறிது நேரத்திற்கெல்லாம் மூர்ச்சை தெளிந்தெழுந்திருந்து துக்கத்துடன் இராமனை நோக்கி அப்பா ஒருவேளை உண்மையாகவே நீ கானகம் செல்லவேண்டியதா யிருப்பின், என்னையும் அழைத்துப்போ; உன்னைவிட்டுப் பிரிந்த என் பிராணன் அரை நிமிஷங்கூடத் தரித்திராது. கன்றைவிட்டுப் பிரிந்திருக்கச் சிறிதும் சகியாத பசுவைப்போல் நானும் உன்னைவிட்டுப் பிரிந்திருக்கச் சகியாதவளா யிருக்கிறேன். நீ என் உயிரினும் பிரியமான மைந்தனன்றோ? அரசன பரதனிடத்தில் அன்புடையவராயின் அவனுக்கு இந்த ராஜ்யத்தைக் கொடுக்கட்டும். உன்னை ஏன் காட்டுக்குப் போகச் சொல்லவேண்டும். இராஜன் கைகேயினிடத்தில் ஆசை உடையவராயின் அவளுக்கு எல்லாவற்றையும் கொடுக்கட்டும். நீ அரசனுக்காயினும் கைகேயிக்காயினும் செய்த தீமை ஒன்றையுங் காணோமே ? இராமா உனக்கு உன் தந்தை எப்படி குருவோ அவ்விதமே நானும் ஆகிறேனன்றோ ? இன்னும் யோசித்துப் பார்க்கின் அவரை விட நானே அதிகம்; உன் தந்தை காட்டிற்குப் போவென்று கட்டளையிட்டார் ; நான் வேண்டாமென்று உன்னைத் தடுக்கிறேன், என பேச்சுக் கேளாது அரசன் பேச்சுக் கேட்டுக்கொண்டு அரண்யம் செல்வாயாகில் இப்போதே நான் உயிரைவிட்டு யமபுரம் செல்வேன் என்றாள்.

இங்ஙனம் கௌஸல்யை சொன்ன வார்த்தையைக் கேட்ட இலட்சுமணர் மூவுலகங்களையும் எரித்துவிடுபவர்போல் கோபங்கொண்டு ஸத்த்வஸந்தரும், ஜிதேந்திரியரும், சாதுவரையில் நீண்ட

கண்களுடையவரும் நீலமேகச் சாயை யுடையவரும் காமமில்லாதவரும் சங்குபோன்ற கழுத்தும் பெரிய மார்பும் நீண்ட கையும் செம்பங்கி மலரையொத்த சிறந்த பீதாம்பரமும் சிவந்த குண்டலமும், சிவந்த இரத்தினங்களிழைத்த திருவாழியு முடையவரும் எல்லா அங்கங்களிலும் அழகுபொருந்தியவரும் தீரரும் வீரருமாகிய இராமச்சந்திரமூர்த்தியைப் பார்த்து, "அண்ணா! கைகேயியின் வசப்பட்டவனும், உன்மத்தனை யொத்து மயக்கங் கொண்டவனுமாகிய பரதனையும் அவன் உறவினர்களையும் பாமன்பார்களையும் கட்டி நாசஞ்செய்து விடுகிறேன். உலகமனைத்தையும் எரிக்கத்தக்க எனது தீரத்தை இப்போது வானவர்களெல்லாரும் பார்க்கட்டும். அண்ணா! உங்களுடைய பட்டாபிஷேகத்திற்காக பிரயத்தனஞ் செய்யுங்கள். அதற்கு யார் தடை செய்கிறார்களோ அவர்களை வில்லம்புகளை யெடுத்துக்கொண்டு அதம்பண்ணி விண்ணுலகம் சேர்ப்பிக்கின்றேன்" என்றார் லக்ஷ்மணர்.

இங்ஙனம் மிக உக்ரத்துடன் கூறியவரும் அதிதீரரும் அருகே நிற்பவரும் அம்புகளையும், வில்லினையும் கரத்திற்கொண்டவரும் தைரியசாலியும் அழகான திருமேனி யுடையவரும் சுமித்திரையின் புத்திரனுமாகிய இலட்சுமணனை இராமர் பிரீதியுடன் பார்த்துக் கட்டித் தழுவிக் கூறுகிறார்.

தம்பி! நீ மகாசூரன்! இந்த இரகுவம்சத்திற்குப் பெரும் புலி போன்றவன்; என்னிடத்தில் மிகவும் பிரியமுடையவன். உன்னுடைய வல்லமையெல்லாம் எனக்குத் தெரியும். ஆனால் அதற்குச் சமய மிதுவல்ல.

நமது கண்ணுக்கு விஷயமாகக் காணப்படும் இந்த உலகம் இந்த இராஜ்யம் தேகம் முதலியன யாவும் மெய்யாயிருந்தாலல்லவா உனது முயற்சி பயனைப் பெறும். போகங்களோ மேகத்தினிடையே தோன்றி மறையும் மின்னற் கூட்டங்களை யொத்தவை. நமது ஆயுளோ தீயில் காய்ச்சப்பட்ட இரும்பின்மேற்பட்ட நீர்த்துளி போன்றது. பாம்பின் வாயிலகப்பட்ட தவளை ஒரு ஈயை உண்ண விரும்புவதுபோல், காலாக்கினியினிடையே யகப்பட்ட இந்த உலகத்து ஜனங்கள் ஒரு நொடியில் அழியக்கூடிய போகங்களை அநுபவிக்க ஆசைகொள்கின்றனர். நிலையற்றதான தேகபோகங்களின்

பொருட்டுப் புருஷன் இரவும் பகலும் சிரமப்பட்டு அளவிறந்த கருமங்களைச் செய்கின்றான் அவை யாவும் கடைசியில் துக்கத்தையே கொடுக்கின்றன. இதன் உண்மை யுணர்ந்த பெரியோர் இதனை கருமதந்திரமெனக் கூறுவர். தேகமோ புருடனை விட வேறுபட்டதாகவே யிருக்கின்றது. ஆகையால் தேகபோகங்களைப் புருஷன் எவ்வாறு அனுபவிப்பது? சேதனனுக்குப் பெற்றோர் மக்கள் உடன்பிறப்பு மனைவி உறவினர் முதலியவர்களுடைய சேர்க்கையானது தண்ணீர்ப் பாதைகளிற் கூடிய ஜனக் கூட்டங்களையும் ஆறுகளில் மிதக்கும் கட்டைகளின் சேர்க்கையையும் போலச் சஞ்சலத்தையே யுடையதாயிருக்கின்றது. [illegible] நிழலைப் போலச் சஞ்சலமுடையதாகவே காணப்படுகின்றது. [illegible] உண்டாகும் [illegible] போன்றது [illegible] ஆயுள் [illegible]. இப்படி இருந்தும் [illegible] அபிமானம் வைத்திருக்கிறான். ராக துவேஷம் [illegible] கூடிய [illegible] எப்பொழுதும் [illegible] உடையது. அதனிடம் [illegible] விருப்பங்கொள்பவர் பெரிய மூடரேயாவர். சூரியனுடைய [illegible] வயது குறைகிறது. பிறர் இறப்பதையும் பிறப்பதையும் பார்த்தும் உலகோர்க்கு உண்மை புலப்படாதிருக்கின்றது. மூடர்கள் இவ்வாறு இராப்பகலைக் கவனியாது போகங்களை அநுபவித்துக் கொண்டு காலத்தைக் கழிப்பதால் காலங் குறைவுறுவதைக் கருதுவதில்லை. பசுமைமண் குடத்தில் நிறைந்த நீரைப்போலக் கணந்தோறும் ஆயுள் குறைந்து வருகின்றது. வியாதிக் கூட்டங்கள் பகைவர்களைப்போல தேகத்தைத் தாக்குகின்றன. மூப்போ ஒரு புலியைப்போல முன்னின்று பயமுறுத்துகின்றது. பின்னால காலனும் சமயம் பார்த்துக் கொண்டிருக்கின்றான். சேதனனோ சரீரத்தையே தானாகக் கருதித் தன்னையே இந்த உலகத்திற்கு மன்னனெனவும் எண்ணுகிறான். இவ்விதம் எண்ணிக் கொண்டிருக்கும் பிராணியும் கடைசியில் சாம்பராய் விடுகின்றது. இலட்சுமணா! நீ எந்தச் சரீரத்தைக்கொண்டு இந்த உலகத்தை யெரித்துவிடுவேனெனச் சிந்தித்தாயோ, அச்சரீரம், தொக்கு, எலும்பு, இறைச்சி, எச்சில், மூத்திரம், ரேதஸ், ரத்தம் முதலியவற்றுடன் கூடியது. விகாரத்துடனும் பரிணாமத்துடனும் கூடிய தேஹம் ஆத்மாவாக எப்படியாகும்

சொல். அதனை யெப்படி யான்மாவென்பது? சகல தோஷங்களும் தேகாபிமானமுடையவரிடத்தே வந்தடைகின்றன. நானென்று தேகத்தைக் கருதுகின்றதெதுவோ அதுதான் அவித்தையென்று சொல்லப்படுகின்றது. நான் தேகமல்ல; சித்தாகிய ஆத்மாவென்கிற அறிவு எதுவோ அதுவே வித்தையெனப் படுகிறது. சம்ஸாரத்திற்கு ஆஸ்பதமானது அவித்தை, அதை நிவர்த்திக்கக்கூடியது வித்தை. ஆகையால் எப்போதும் முமுக்ஷுக்கள் வித்தியாப்பியாசத்தைச் செய்து வர முயற்சிக்கவேண்டும். சத்துருக்களை நாசஞ்செய்யும், இலக்ஷ்மணா! இந்தத் தேகத்திலுள்ள காமக்குரோதாதிகள் பகைவர்களைப் போலிருக்கின்றன. அவைகளுள் மோக்ஷத்திற்கு குரோதமே இடையூறாகவிருப்பது. புருஷன் குரோதத்தை யுடையவனாயின் பிள்ளை தந்தை தமையன் தன் நண்பன் முதலானவர்களையும் கொன்றுவிடுகிறான். விரோதங்கள் யாவற்றுக்கும் இந்தக் குரோதமே மூலம். அதுதான் சம்சாரபந்தத்திற்குச் சாதகமானது. தருமத்தை நாசம் போக்கடிப்பதும் குரோதந்தான். தம்பி! ஆகையால் குரோதத்தை யொழித்துவிடு. குரோதமே யமனாகின்றான். ஆசையோ நரகத்திலுள்ள வைதரணி நதியாகும். சந்தோஷமென்பதே நந்தனப் பூந்தோட்டம். பொறுமையே இஷ்டத்தைக் கொடுக்கக்கூடிய காமதேனு. ஆகையால் இப்போதே சாந்தியைப் பெறக்கடவை. அப்போது உனக்குப் பகைவர் ஒருவருமிரார். தேகம், இந்திரியம், மனம், பிராணன் முதலியவைகட்கெல்லாம் ஆத்மாதான் வேறானவன். அவன் சுத்தன், சுயஞ்சோதி, நிர்விகாரன், நிராகாரன், தேகம், இந்திரியம், பிராணன் இவைகட்கு வேறானவன். ஆத்மாவென்பதை எதுவரையில் அறியாதிருக்கின்றானோ அவன் அதுவரையில் சம்சார துக்கங்களாற் பிடிக்கப்பட்டுக் காலன் வசப்படுகின்றான். ஆகையால் நீ எப்போதும் வேறாகவிருக்கும் ஆத்மாவை அகத்தில் பாவனை செய்துகொண்டு புறத்தில் புத்தி முதலியவைகளுடனிருந்து விவகாரத்தைக் கொண்டு விசனமடையாதிரு. உலகத்தின் சுகதுக்க ரூபமான பிராரப்தமென்கிற வெள்ளத்தில் மூழ்கி அதனையே அநுபவித்துக்கொண்டிருப்பினும் அதிலொட்டாதிரு. தம்பி! வெளி நோக்கத்திற்கு எல்லாவற்றிற்குங் கர்த்தாவா யிருக்குந் தன்மையை உடையவனைப் போலிருப்பினும் அந்தரங்கத்தில் சுத்த ஸ்வபாவத்தினால் அந்தக் கர்மங்களி லொட்டாதவனா யிருத்தல் வேண்டும். நான் கூறியவை

யாவும் உன் இதயத்திலிருக்கத் தக்கவைகள். அப்பொழுது தான் சம்சார முதலிய துக்கங்களனைத்தும் உன்னைத் துயருறுத் தாமலிருக்கும், என்று இவ்வாறு கூறிக் கௌஸல்யையை நோக்கி, "அம்மா! தாங்களும் நான் இதுவரையில் சொல்லியவைகளை யெல் லாம் மனதில் வைத்துக்கொண்டு எனது வரவை எதிர்பார்த்துக் கொண்டிருத்தல் வேண்டும். அப்போது எனது பிரிவால் ஏற்ப டும் துக்கம் தங்களைப் பீடிக்காமலிருக்கும். ஆற்றுப் பெருக்கில் செல்லும கப்பலைப்போல் கருமநதியின் வழியே செல்லுகின்ற ஜீவன்களுக்கு ஓரிருப்பிடம் கிடையாது அம்மா! பதினாலு வரு டமென்பது அரைக்கணம்போற் சென்றுவிடும். ஆதலால் துயரத் தையொழித்து எனக்கு விடைதந்தனுப்புங்கள். இங்ஙனம் நீங் கள் செய்வீர்களாயின் வனவாசமானது எனக்கு நன்மையையே தரும" என்று கூறித் தமது அன்னையின் பாதாரவிந்தங்களில் சிரந் தோய வணங்கினார். அன்னையாகிய கௌசல்யையும் தன் குமாரனை யெடுத்து மடிமீது வைத்துக்கொண்டு ஆசீர்வதித்து தேவர்கள், கந்தர்வர்கள்,பிரமவிஷ்ணு ருத்திராதியாகிய எல்லோரும் உன்னை நடக்கும்போதும இருக்கும்போதும் உறங்கும்போதும் பாதுகாக் கக் கடவர், என்று கூறி அடிக்கடி இராமனைத் தழுவிப் பின் பய ணப்படுத்தினாள்.

அப்பொழுது இலட்சுமணர் இராமரை வணங்கிக் கண்களி னின்றும் ஆநந்தபாஷ்பம் பெருக நின்று தழுதழுத்த வார்த்தையு டன் கூறுகின்றார். இப்போது என் மனதிலிருந்த சந்தேகம் நிவர்த் தியாயிற்று. ஐயனே! எப்போதும் தங்களுக்குச் சேவை செய்வ தன் பொருட்டு தங்களோடு நானும் வருகின்றேன். அநுக்கிரகம செய்யவேண்டும். இல்லையாயின என் உயிரை இப்போதே விட்டு விடுவேன் என்றார். இராமர் அப்படியே செய்க, என்று கூறிப் புறப்படும்படி கட்டளையிட்டுச் சீதாபிராட்டியாரைச் சமாதானப்ப டுத்தச் சென்றனர். சிரித்த முகமுடையவளும் மகிழ்ச்சி தரும் வசனங்களையே சம்பாஷிப்பவளுமாகிய சீதாபிராட்டி தன்னிருப்பி டத்திற்கு வந்த தன் நாயகனைக் கண்டதும் ஸ்வர்ணபாத்திரத்தில் நீரெடுத்துவந்து பக்தியோடு அவர் பாதத்தை விளக்கித் திவ்யாஸ னத்தில் வீற்றிருக்கச் செய்து "நாதா! பரிவாரங்க ளொதுவுமின்றி

ஏது இங்கே வந்தது? யானை எங்கே? வெண்பட்டுக் குடையெங்கே?
வாத்தியங்களெதுவும் காணவில்லையே; அபிஷேகத்திற்கு அடை
யாளமான கிரீடாதிகளையுமே காணோமே; அரசனோடு கூடவே அவ
சியம் வரவேண்டிய வந்தியர் மாகதர் முதலியவர்களெங்கே வரக்
காணோம்?" என்று இவ்வாறு சிரித்த முகத்தோடு வினவிய சீதா
பிராட்டியைப் பார்த்து, இராமரும் நகைத்து, "மாதே! எனக்கு
மகாராஜா சுபகரமான தண்டகாரண்ய ராஜ்யத்தைத் தந்தருளினார்.
ஆதலால் அதனைப் பரிபாலிக்கும் நிமித்தமே விரைவாய்ச் செல்ல
விரும்புகின்றேன் நீ எனதன்னையிடமிருந்து கொண்டு அவருக்
குத் தக்கபடி பணிவிடை புரிந்துவா; இதைப் பரிகாசமாக நினை
யாதே" என்று சொன்னார். இதைக் கேட்டதும் சீதாபிராட்டி,
பயந்து "நாதா! மகாத்மாவாகிய உமது பிதா உமக்குக் காட்டையா
ளும்படி கட்டளை யளித்ததன் காரண"மென்னவென்று கேட்டாள்.

அதற்கு இராமர், "நங்காய்! மகாராஜா கைகேயினிடம்
கொண்டிருந்த காதல் காரணமாக அவ்வம்மைக்கு இரண்டு வரம்
தந்திருந்தனராம். பாபமற்றவளே! அவ்விரண்டு வரங்களுள் ஒன்
றால் பரதன் இராஜ்யாபிஷேகத்தை யடையவும், மற்றொன்றால் நான்
பதினான்கு வருடம் வனவாஸம் செய்யவுமே வேண்டுமெனக் கேட்
டுக் கொண்டார்கள். மகாராஜாவோ! மகாசத்தியவந்தர். தயாள
குணமுடையவர் ஆகையால், அந்தத் தேவி கேட்ட வரங்களி
ரண்டையும் மறுக்காதளித்தனர். ஆகவே நான் அதிசீக்கிரமாகப்
போகவேண்டுமே; நீ அதைத் தடுக்காதே" என்றார்.

இதைக் கேட்டதும் பிராட்டி அன்புடன் சுவாமி! நானே
முன் செல்வேன்; தாங்களெனக்குப் பிறகு வருவீர்களாக. இரகு
குலோத்தம! என்னைவிட்டுத் தாங்கள் செல்வது உசிதமன்று
என்று கூற, இராமபிரான் பிராட்டியை நோக்கி, "மாதே! அநேகவி
தமான பாம்புகளும் விலங்குகளும் உலாவும் ஆரண்யத்திற்கு
உன்னை நானெப்படி அழைத்துப்போவேன். மனிதனைத் தின்னும்
வெகு பயங்கரமான இராக்ஷஸர்களிருப்பார்களே! சிங்கங்கள் புலி
கள் காட்டுப் பன்றிகள் இவைகளெல்லாம் சிறிதுமச்சமில்லாமல்
இங்குமங்கும் திரிந்துகொண்டிருக்குமே. அங்கே புளிப்புந் துவர்ப்
புமான கனிகளும் கிழங்குகளுமே நமக்கு உணவாக விருக்கும்.
சுந்தரி! பட்சணங்களெதுவும் அங்குக் கிடைக்காது. கனிகளும்

ஒருவேளை கிடைக்கும்; ஒரு சமயம் கிடைக்கமாட்டா. வழிதுறைகள் கண்களுக்குப் புலப்படமாட்டா. எங்கும் பார்த்தாலும் முள்ளும் சேறும் குகைகளும் புதர்களுமே காணப்படும். சுவர்க்கோழிகளின் சத்தமும் நக்கனின் ஊளைச்சத்தமுமே எங்கும் கேட்கும். தண்டகம் என்னும் அரண்யமானது இப்படிப்பட்ட அநேக இடையூறுகளை யுடையது. மழை, காற்று, வெயில் முதலியவற்றை பொறுத்துக் கொண்டு கால்நடையாகவே செல்லவேண்டும். இவையன்றி அரக்கர் முதலிய துஷ்டர்களைக் காணும்போது உயிரை யிழக்கவும் நேரிடும். மாதே! நமது கிருகத்திலேயே யிரு; நானும் அதிசீக்கிரத்தில திரும்பிவரப் பார்ப்பாய்" என்று கூறினர். இதைக் கேட்டதும் சீதாதேவி வருத்தமும் கோபமுமடைந்து பெருமானை நோக்கி "தருமங்களனைத்தையு முணர்ந்தவரும் தயாள குணமுடையவருமாகிய சுவாமி! தங்களுக்கு வேறுபடாதவளும் குற்றமற்றவளும் கற்புநெறி தவறாதவளும், தர்மபத்தினியுமாகிய என்னை இங்கே தனியே விட்டுச் செல்ல எப்படி விரும்பினீர்கள். வனத்தில் தங்களுக்கருகே நானிருப்பேனல்லவோ? அப்போது என்னை யார் அப[illegible]ர்? கனி கிழங்குகளை அமுதமாகக் கருதி யுண்டு நீருந்தி திருப்தியோடு சஞ்சரிப்பேன். நான் தங்களோடு நடக்கும் போது நெருஞ்சில் முதலிய முட்கள் புஷ்பப் படுக்கைக்கு ஒப்பாயிருக்கும். இதற் சந்தேகமில்லை. தங்களுக்கு என்னால் ஒருவித சங்கடமும ஏற்படாது. [illegible] தங்களுடைய காரியத்திற்கு அநுகூலமு

[illegible]க்கு என் வாலிபத்தில் சோதிட சாஸ்திர

நாயகனோடு வனவாசம் செய்ய நேரிடு

மென்று கூறியிருக்கிறான். சோதிடம் சொல்லிய அவ்வாந்தணன்

[illegible]ணையால் நானும் உம்மோடு வருவேன். [illegible]

[illegible]யிருக்கிறது. அதைக் கேட்ட பிறகா

லும் அழைத்துச்செல்லவேண்டும். [illegible]! பிராமணர்களிடத்தில் இராமாயணஞ் சொல்ல நான் கேட்டிருக்கிறேன் அவர்களெல்லாரும் சீதையை விட்டுப் பிரிந்து இராமர் தனியே வனவாஸஞ் செய்த[illegible] தாக சொல்ல நான் கேட்டதில்லையே? ஆதலால் நானும் கூடவே வருவேன்; சதாகாலமும் தங்களுக்குச் சகாயம் செய்பவளாகவே யிருப்பேன். தாங்கள் என்னைவிட்டுச் செல்வீர்களாயின் தங்கள் முன்னிலையிலேயே என்பிராணனை விடுவேன்" என்றாள்.

இவ்விதங் கூறிய பிராட்டியின் உறுதியும் நிச்சயமுமான வார்த்தைகளைக் கேட்டதும் இராமபிரான், "தேவி! அப்படியாயின் சிறிதும் தாமதிக்காமல் என்னுடன் புறப்படு ஆபரணம் ஆரம் முதலியவைகளை அருந்ததிக்கும் இன்னும் மற்றுமுள்ள நமது பொருளை விப்பிரர்களுக்கும் சமர்ப்பித்துவிட்டுச் செல்வோம்" என்று ஸ்ரீராமர் கூறி உடனே இலட்சுமணனைக் கொண்டு இல்லறத் திருந்துவரும் பிராமண ஸ்ரோத்ரியர்களை வரவழைத்து அவர்களுக்கு அநேக பசுக்கூட்டங்களையும் பொருளையும் வஸ்திரங்களையும் திரவியங்களையும் ஆபரணங்களையும் திருப்திகரமாகச் சமர்ப்பித்தனர். பிராட்டியும் தன்னுடைய சிறந்த ஆபரணங்களை அருந்ததி தேவிக்குக் கொடுத்தனள். பிறகு இராமர் தமது அன்னை வீட்டுத் தாதிகளுக்கும் தமது சொந்த பணிவிடைக்காரர்களுக்கும் பிராமணருக்கும் மற்றும் வேறு ஜனங்கட்கும் தக்கவாறாகத் தமது பொருளைத் தத்தமும் தானஞ் செய்தனர். சுமித்திரையின் புத்திரனாகிய இலட்சுமணரும் தமது அன்னையைக் கௌஸல்யா தேவியினிடம் ஒப்புவித்துவிட்டு, வில்லையும் கையிலெடுத்துக்கொண்டு இராமருக்கருகே நின்றார்.

பிறகு இராமர் சீதை இலட்சுமணன் இவர்களுடன் இராஜமார்க்கத்தில் மெதுவாகப் போய்க்கொண்டும் ஸந்தோஷத்துடன் கூடிய பார்வையையுடைய பட்டணத்து ஜனங்களையும் கிராமத்து ஜனங்களையும் ஸந்தோஷத்துடன் பார்த்துக்கொண்டும் ஆயிரம் அநேக கந்தர்ப்ப ஸௌந்தரியம் பொருந்திய சியாமளமான திருமேனியின் காந்தியினால் திக்குகளும் பிரகாசிக்கவும், தமது திருவடியின் பாதத்தினால் உலக முழுதும் புனிதமாகும்படிக்கும் தமது பிதாவின் அரண்மனைக்குச் சென்றார்.

நான்காவது சருக்கம்,

முற்றிற்று.

5-வது சருக்கம்.

பரமசிவன் கூறுகிறார்.

இங்ஙனம் புறப்பட்டு வரும் சீதாராம லக்ஷ்மணர்களை நகரத்து ஜனங்களெல்லோரும் பார்த்து, கைகேயிக்கு இராஜன் வரமளித்தது முதலியவற்றைக் கேட்டு மிக்க வருத்தமுற்று ஒருவர்க்கொருவர் பின்வருமாறு பேசுவாராயினர்.

ஆகா ! இது எவ்வளவு துன்பம் ! தசரதன் சத்தியசந்தனாகையால், தன் மனைவியின் பொருட்டுத் தன் அன்பான மகனைத் துறந்தான் என்று கூறுவார் சிலர். மற்றுஞ் சிலர், அவன் சத்திய சந்தனே யாயினும் அவன் காமியாகையால் அவனிடம் சத்திய மெங்கிருக்கின்றது என்பார். ஐயோ சத்தியசந்தரா யிருந்து பிரியத்தையே செய்யும் இராமபிரானை துஷ்ட புத்தியை உடைய அந்த கைகேயி தான் எப்படிப் போகச் செய்தாள். அவள் செய்கை மிகவும் கொடியது. அவள் அறிவிலி. ஜனங்களே நாம் இவ்விடம் இனி இருக்கத் தகாது. இராமரும் சீதாபிராட்டியும் இலக்ஷ்மணரும் போகும் கானகத்திற்கு நாம் இப்போது செல்வோம். ஆகா சீதாபிராட்டி கால் நடையாய்ப் போவதைப் பாருங்கள். லோக சுந்தரியான ஜானகி என்னும் இந்த உத்தமியை எந்த ஆடவனாவது இதுவரையில் பார்த்ததுண்டா? ஆகா, அந்த உத்தமியும் இந்த மானிடக் கூட்டத்து மத்தியில் யாவரும் காணக் கால் நடையாய்ச் செல்ல காலம் நேர்ந்ததே. எல்லோரும் ராமச்சந்திரப் பிரபுவைப் பாருங்கள். திரிலோக சுந்தரராகிய இவர் கஜம் அசுவம் இரதம் இவைகளொன்றுமின்றிக் கால்நடையாகச் செல்லுகின்றாரே; ஜனங்களே சர்வலோக சுந்தரராகிய இந்தப் பிரபுவைப் பாருங்கள்: கைகேயி என்னும் இராக்ஷஸி எல்லாவற்றையும் நாசஞ்செய்யும் சனியனாகப் பிறந்திருக்கிறாள். ஆகா ஸீதை கால்நடையாகச் செல்வது இராமபிரானுக்கு மிகுந்த துன்பத்தையே தரும். ஐயோ பிரமன் எழுதின எழுத்தே இங்கு பிரபலமா யிருக்கின்றது.

புருஷ ப்ரயத்தினம் துர்பலமானதென்று கூறித் துன்பமுறும சாதுக்களாகிய அந்த ஜனங்களின் கூட்டத்தில் முனிவர் பெருமானை வாமதேவர் கூறுகிறார். ஜனங்களே! இராமச்சந்திரப் பிரபுக்காகவாவது சீதாதேவிக்காகவாவது நீங்கள் மனம் கலங்கவேண்டாம். அவர்களைப்பற்றி நானொரு விசேஷம் சொல்கிறேன் கேளுங்கள்.

வாமதேவர் துதி.

இந்த இராமபிரான் பரனாகிய ஆதிநாராயணர், எனவும் சொல்லப்படுவர். இந்த ஜானகிதேவி லக்ஷ்மியாகிறாள்; யோகமாயை யென்று சொல்லப் படுகிறவளும் இவள்தான் தம்பியாகிய லக்ஷ்மணர் ஆதிசேஷன் என்று சொல்லப்படுகிறார். நாராயணராகிய இந்த இராமபிரானே பரமகுணங்களுடன் கூடி அநந்த ஆகாரங்களையுடையவர்போல் தோற்றுகிறார் இவரே இவ்வுலகத்தைப் படைக்கும் பிரமனாகிறார். சத்துவகுண சம்பந்தத்தை யடைந்து சகல லோகங்களையும் இரக்ஷிக்கும் விஷ்ணுமூர்த்தியாக விளங்குவோரும இவரே. தமோகுண சம்பந்தமுடையவராகி இவ்வுலகத்தை பிரளயத்தில் சேர்ப்பிக்கும் ருத்திரமூர்த்தியும் இவரே. முன் மீனுருவம் தாங்கி தமது தொண்டனான வைவஸ்வதமனுவைப் படகிலேற்றிக் கொண்டு பிரளயத்தில் முழுகாதபடி காத்தவரு மிந்த ராகவரே. முன் சமுத்திரமதனஞ் செய்யும் காலத்தில் சுதல லோகத்தில் அழுந்திய மந்தரகிரிக் காதாரமாக ஆமை யுருவங்கொண்டு தமது முதுகினாற்றாங்கினவரும் இந்த உத்தமரே. முன் பிரளய காலத்தில் பாதாளத்தழுந்திப்போன, இந்தப் புவியைப் பற்களின் நுனியாலசைத்து மேலே தூக்குவதன் பொருட்டு ஆதிவராகவவதாரமெடுத்தவரும இந்த ரகுநந்தனரே. மூன்றுலகங்களையும் தொந்தரைசெய்து வந்த இரண்யகசிபனை முன் நரசிம்மாவதாரமெடுத்துத் தமது கைகளால் இரண்டாகப் பிளந்து கொன்று பிரஹ்லாதனுக்கு அருள்புரிந்தவரும இவர் தான். தன் புத்திரன் அரசுரிமையை யிழந்தானெனக் கூறி யிரந்த அதிதி தேவியின் பொருட்டுத் தாம் வாமன வுருவந்தாங்கி யாசித்து அடைந்த இராஜ்யத்தை மீண்டும அவளிடம் சேர்ப்பித்தவரும இவர்தான். புவிக்குப் பாரமாக விருந்த மன்னர்களை யொழிக்கப் பரசுராமராக வவதரித்தவரு மிவர் தான். அவ்வண்ணம் ஜகத்பிரபுவாகிய அவரே இப்போது இராமபிரானாக அவதரித்திருக்கின்றார்.

இவர் இராவணன் முதலிய இராக்ஷஸர்களின் லீலைகளைச் சங்கரிக்கப் போகின்றார். துராத்மாவான அந்த இராவணனுக்கு மனிதனால் தான் மரணம் ஏற்பட்டிருக்கிறது. தவத்தினால் விஷ்ணுவைப் பூசித்து அவரையே புத்திரனாக அடைய விரும்பிய தசரத மகாராஜனுக்கு அந்த மகாவிஷ்ணுவே புத்திரனாக அவதரித்தது தாசரதியெனவும் பேர்பெற்றார். அந்த நாராயணன்றான் இராமபிரான். இராவணன் முதலிய அரக்கர்களைச் சங்கரிப்பதன் பொருட்டே இப்போது இலட்சுமணனுடன் வனத்திற்கு விடைகொள்கின்றனர்.

அந்த ஹரியின மாயையே சீதாபிராட்டி. படைத்தல், காத்தல், அழித்தலென்னும் முத்தொழில்களைச் செய்பவளும் இவளே. ஆகையால் அரசனோ கைகேயியோ எவரும் இதற்குக் காரணமாகக் கொள்ளத்தக்கவரல்லர். நேற்று நாரத பகவான் இராமரிடம் வந்து இந்த பூபாரத்தைப் பற்றிப் பேசக் காதுஸ்தர் "நாளைய தினம் கானகம் செல்வே"னென்றார்.

ஆதலால் அயோத்தியாபுரி வாசிகளே! நீங்கள் இராமனைக் குறித்துச் சிந்திப்பதை விட்டொழியுங்கள். எவர்கள் இந்த உலகத்தில் இராமா, இராமாவென்று சதாகாலமும் சொல்கிறார்களோ அவர்கட்கு மிருத்தியுபயம் முதலியன ஒருபோது முண்டாகமாட்டாது. இப்படியிருக்கும்போது மகாத்துமாவாகிய இராமபிரானிடம் துக்கமென்பது எவ்வாறுண்டாகும்? எங்கேயிருந்தாற்றானென்ன? இந்தக் கலியுகத்தில் இராம நாமத்தினாலேயே முத்தியின்பம் கிடைக்கும்; வேறு எதனாலும் கிட்டாது. உலக சிருஷ்டிகர்த்தாவாகிய பகவான் மாயாமானிட வடிவத்துடன் உலகத்தில் சுற்றிக் கொண்டிருக்கிறார். அவர் பக்தர்களை இரக்ஷிக்கவும், இராவணனை வதஞ்செய்யவும், அரசனது விருப்பம் சித்திபெறவும், மாயாமானுஷ விக்ரக அவதாரத்தையெடுத்தார், என்று இப்படிக் கூறி மகரிஷியாகிய வாமதேவர் மௌனமடைந்தார்.

இப்போதங்கிருந்த அந்தணர்கள் முதலிய எல்லோரும் கேட்டு இராமபிரானது கீர்த்தியைத் தெரிந்துகொண்டு, சாக்ஷாத் ஸ்ரீவிஷ்ணுவென நிச்சயித்து, இருதயத்திலிருந்த சந்தேகமென்கிற முடிச்சுக்களெல்லாம் அவிழ்ந் தொழியப் பெற்று அவரையே தியானித்துக்

கொண்டிருந்தனர். இந்தச் சீதாராம இரகசியத்தை எவனொருவன் நாடோறும் தியானிப்பானோ அவனுக்கு இராமரிடத்துச் சிறந்த அன்பு ஏற்படும். நீங்களனைவரும் இராமச்சந்திரனுக்கு இஷ்டத்தைச் செய்பவர்கள். இவ்விஷயம் மிகவும் இரகசியமானதாகையால், உங்களுடைய இருதயத்தில் இது கன்னியமாக வைத்துக்கொள்ளத் தக்கது என்று அவ்விடமிருந்த அந்தணர் தெரிவிக்க, யாவரும் ஸ்ரீராமர் பரமாத்மாவென்பதை யறிந்து தத்தமிருப்பிடம் சென்றனர். பிறகு இராமரும் அரசனைத் தம்பனையச் சேர்ந்தனர்.

இங்ஙனம் இலக்ஷ்மணருடனும் பிராட்டியுடனும் எழுந்தருளிய இராமபிரான், கைகேயியைப் பார்த்து "அம்மா! நாங்கள் மூவரும் காட்டிற்குச் செல்ல உடன்பட்டு வந்திருக்கின்றோம்; எங்கள் பிதா எங்களுக்கு விரைந்து விடைதரக் கடவர்" என்றார்.

இதைக் கேட்டதும் கைகேயி விரைந்தெழுந்து மரவுரி கொணர்ந்து மூவருக்கும் தனித்தனியே கொடுத்தாள். இராமபிரான் தாமுடுத்திருந்த உடையை யவிழ்த்துவிட்டு மரவுரியைத் தரித்துக் கொண்டார். இலக்ஷ்மணரும் அங்ஙனமே செய்தனர். சீதாபிராட்டியோ அங்ஙனம் செய்யத் தெரியாதவளாய் தன் கையில் அந்த மரவுரியை வாங்கிக்கொண்டதும் வெட்கமடைந்து இராமபிரானது திருமுகத்தைப் பார்த்தாள். இராமபிரான் உடனே அந்த மரவுரியைத் தாம் வாங்கிப் பிராட்டியின் ஆடையின் மேல் போர்த்தினார். அதை நோக்கிய இராஜனது பத்தினிமாரனைவரும் அழத் தொடங்கினார்கள்.

வசிஷ்ட மகாமுனிவர், அவர்கள் வருத்தப்படுவதைப் பார்த்து தாமும் வருத்தமுற்றுக் கைகேயியை நோக்கி, கோபத்துடன் "கொடிய நடத்தையுடையவளே! இராமபிரான் ஒருவன்றானே கானகம் செல்லல் வேண்டும்? நல்ல குணவதியான ஜானகிக்கேன் மரவுரி யளித்தாய்? கற்பின் நெறியைக் கைக்கொண்டு கணவனுடன் போகப் புறப்பட்டு வந்திருக்கும் ஜானகி அழகிய ஆடையாபரணங்களுடன் செல்வாளாகில் தன் மகிழ்நன்மனதிற்கு மகிழ்ச்சியைக் கொடுத்து வருவதுமன்றி இராமனுக்குக் கானக வாசத்திலுண்டாகும் வருத்தத்தையும் ஒருவாறு ஒழிப்பாளன்றோ?" என்று கூறிப் பயப் படுத்தினர்.

அப்போது தசரதன் தன் அமைச்சன் சுமந்திரனைப் பார்த்து இராமபிரான் எழுந்தருளத்தக்க இரதமொன்று கொண்டு வர ஆக்ஞை செய்தான். பின்னர் தன் எதிரில் நின்ற இராமர், சீதை, இலட்சுமணர் மூவரையும் கண்டு கண்ணீர் விட்டுப் புவி மீது விழுந்து தவித்தான். இராமபிரான் பாதத்துக்கொண்டிருக்கும்போதே சீதாதேவி விரைவாக இரதத்திலேறினாள். இராமரும் தந்தையை வலம் வந்து பணிந்து அந்த இரதத்தின் மீதேறிக் கொண்டனர். இலக்ஷ்மணரும் தமது கரத்தில் இரண்டு வாள், வில்லுமெடுத்துக்கொண்டு அம்புறாத்தூணியுடன் இரதத்தின் மீதேறிக்கொண்டு சாரதியை யோட்டும்படி சமிக்ஞை செய்தார். இரதமோடத் தொடங்கியது கண்ட தசரதர் சுமந்திரனைப் பார்த்து, "நிறுத்து நிறுத்து" என்று சொன்னார். இராமர் செல்லட்டும் செல்லட்டுமென்று கூறி ஓடும்படி கட்டளையிட்டார்.

இங்ஙனம் இராமபிரான் வெகுதூரம் சென்றதும் வேந்தர் பெருமானாகிய தசரதன் மூர்ச்சித்துக் கீழேவிழுந்தான். நகரத்து ஜனங்களில் சிறுவர், வயது சென்றோர், பிராமண சிரேஷ்டர்கள், யாவரும் "இராமா நிறுத்து இராமா நிறுத்து" என்று கதறிக் கொண்டே இரதத்தைத் தொடர்ந்து ஒரு யோஜனை தூரஞ்சென்றனர். மன்னன் தசரதன் பிறகு வெகு நேரமவரையில் புலம்பிக் கொண்டேயிருந்தான். பிறகு தன்னைக் கௌஸல்யா தேவியின் கிருகத்திற்குக் கொண்டுபோகும்படி தெரிவித்து, அவ்வாறே கௌஸல்யா தேவியின் கிருகத்தை யடையும்போது "நானினி ஜீவித்திருக்கமாட்டேன்; என் காலம் இனிச் சொற்பமே" என்று கூறிக்கொண்டே உள்ளே பிரவேசித்து, மூர்ச்சித்துப் போய் வெகுநேரம் மௌனமாயிருந்தான்.

இப்படியிருக்கையில் இராமபிரான் தமஸாநதி தீரத்தை யடைந்து, அங்கு ஜலபானம் மாத்திரமே செய்து, ஒரு விருக்ஷத்தினடியில் வைதேஹி ஸஹிதமாய் சயனம் செய்துகொண்டனர். இலக்ஷ்மணர் வில்லையும், கணைகளையும் கையிற் கொண்டு வண்ணம் தருமங்களை யுணர்ந்த சுமந்திரனோடு காவல் புரிந்து வந்தார். கூடவே தொடர்ந்துச் சென்ற பட்டணத்து ஜனங்களெல்லோரும் தங்களாலியன்ற வரையில் இரகுபுங்கவனைப் பிரார்த்தித்துப் பார்த்து அவரை

நகரத்திற் கழைத்துச் செல்வது, இல்லாவிட்டால் தாங்களும் அவருடன் ஆரண்யத்திற்கே தொடர்ந்து செல்வதென நிச்சயித்துக் கொண்டு சற்றுத் தூரத்திலிருந்தனர்.

அங்ஙனங் காத்திருக்கும் பட்டணத்து ஜனங்களை நோக்கி, இராமபிரான் ஆச்சரியமடைந்து, உடனே சுமந்திரனைப் பார்த்து "நாம நகரத்திற்குத் திரும்பிச் செல்லவில்லை யெனில் இவர்களும் நம்மை விட்டுச் செல்லார்கள். மிக்க வருத்தப்படுவார்கள். ஆகையால் இப் போதே நாம் செல்வோம். இரதத்தைத் தயார் செய்" என்றனர். அமைச்சர் தலைவனாகிய சுமந்திரன் அக்கணமே குதிரைகளை இரதத் திற் பூட்டிக்கொண்டு வந்தார். இராமபிரான், இலட்சுமணன், சீதை இவர்களுடன் இரதத்தின் மீதேறிக்கொண்டு சிறிது தூரம் வரையில் அயோத்தியாபுரியை நோக்கிச் சென்று பின்னர் ஆரண் யத்திற்குச் சென்றனர்.

பின்னர்ப் பொழுது புலர்ந்ததும் நகரத்து ஜனங்களெல்லாம் இராமபிரானைக் காணாது வருந்தமுற்று இரதம் சென்ற வழியே சென்று அயோத்தியை யடைந்து சீதாபிராட்டியையும் இராமபிரா னையும் இடைவிடாது இருதயத்தில் தியானஞ் செய்துகொண்டே யிருந்தனர்.

சுமந்திரனும் இரதத்தை யதிவேகமாய் நடத்திக்கொண்டு போனான்; இராமர் முதலிய மூவரும் ஸமீபத்திலுள்ள கிராம ஸமூகங்களைப் பார்த்துக்கொண்டு கங்கைக் கரைக்குச் சற்றுத் தூரத் தில் போயிறங்கினார்கள். இராமபிரானும் கங்காதேவியைப் பார்த்து வணங்கி அதில் நீராடிப் பரமானந்த பரிதராய் சிம்சுபா மரத்தடி யில் வீற்றிருந்தார்.

இங்ஙனம் வந்திருக்கும் இராமபிரானுடைய வரவையறிந்த குகன் தனது நண்பரும் ஸ்வாமியுமான இராமபிரானைத் தரிசிக்கக் கனி, தேன், மலர் முதலியவைகளுடன் வந்து இரகுநாதனைக் கண்டதும் தான் கொண்டுவந்தவைகளை அவரெதிரில் வைத்துத் தீர்க்க தண்டம் சமர்ப்பித்து எழுந்து நின்றான். இராமபிரானும் அவனைத் தழுவிக்கொண்டு க்ஷேமம் விசாரித்தனர். அப்போது குகன், தன் இரு கரங்களையும் கூப்பிக்கொண்டு "ஸ்வாமி! அடியேன் தன்னியனு

னேன். தமது திருக்கரங்களால் என்னுடலும் தீண்டப்பெற்றே னன்றோ? எனது பிறப்பும் இன்றே பயனை யடைந்தது. யானும் பரமானந்த பரிதனுனேன். இந்த எனது இராஜ்யமும் பிற யாவும் தங்களுடையனவே; பிரபுவே! தங்களுக்கு நான் அடிமையாகிறேன். இவ்விடத்திலேயே யிருந்து தங்களாதீனத்திலுள்ள எங்களைப் பரி பாலிக்க வேண்டுகின்றேன். நகரத்திற்கு வந்து எனது குடிசை யைப் புனிதமாக்க வேண்டும்.இதோ தமக்காகக் கொணர்ந்த இந்தக் கனிகளை சந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டு அடியேனை அநுக்கிர கிக்க வேண்டும்" என்றான்.

இராமபிரான் குகனைப் பார்த்து "அப்பா நண்ப! என் பேச் சைக்கேள். இன்னும் பதினன்கு வருடம் வரையில் கிராமங்களை யும் வீடுகளையும் பார்க்கமாட்டேன். பிறரொருவர் கொடுக்கும் கனி கிழங்குகளையும் புசியேன். உன் இராஜ்யமெல்லாம் எனதே" என்று சொல்லி உடனே ஆலம்பால் கொண்டுவரச் செய்து அவரும் தம்பி இலக்ஷ்மணரும் சீதை மூவரும் அளக பாரத்தில் தடவிக் கொண்டு சடா மகுடந் தாங்கினர்.

பிறகு இராமபிரானும் சீதாபிராட்டியும் ஜலபான மாத்திரமே செய்து, தம்பி இலக்ஷ்மணர் சருகு, இலை, தருப்பை முதலியவற் றைப் பரப்பி ஏற்படுத்திய சயனத்தில் முன் தாங்கள் அயோத்திபா புரியில் தூய்லதூளிகா மஞ்சத்தின் மீது சயனிப்பவர்போல் சயனி த்து நித்திரைபோயினர். பிறகு இலக்ஷ்மணர் தமது பாணங்க ளோடு கூடிய அம்புறாத்தூணி, வில்லு இவைகளை யெடுத்துக் கொண்டு கையில் பாணங்களை யுடையவனுன குகனோடு இராமபி ரானை நாலா பக்கங்களிலும் சுற்றிப் பார்த்துக் காத்துக் கொண்டி ருந்தனர்.

ஐந்தாவது சருக்கம்

முற்றிற்று.

6-வது சருக்கம்.

பரமசிவன் கூறுகிறார்.

இங்ஙனம் பெருமாள் சயனித்திருப்பதைக் குகன் கண்டு, இலக்ஷ்மணரைப் பார்த்து "அண்ணா! சிறந்த உப்பரிகையில் சொர்ணகசிதமான மஞ்சத்தின்மீது மிருதுவான பஞ்சணையில் சீதாபிராட்டியுடன் சயனித்திருப்பவரான எமதையன், தருப்பைப் புல், இலை, சருகுகளாலான படுக்கையின் மீது சயனித்திருப்பதைக் கவனியுங்கள். இராமபிரானது இப்படிப்பட்ட கஷ்டத்திற்குக் காரணம் கைகேயியன்றோ? இது விதியின் பயனேயாம் மந்தரை சொல்லிய பேச்சை மனதிற்கொண்டு இந்த மகாபாதகத்திற்கு ஆளானாள் கைகேயி"யென்றான்.

இலக்ஷ்மணர் குகனுக்குப் போதிக்கின்றார்.

இங்ஙனங் கூறிய குகனை இலக்ஷ்மணர் பார்த்து, "ஐயா! நான் கூறுவதற்குச் சற்றுச் செவிகொடுங்கள். எவருடைய சுக துக்கங்கட்கு எவர் காரணமாவர்? அவரவர் செய்த பூர்வ கர்மங்களன்றோ அவரவருடைய சுக துக்கங்கட்குக் காரணமாகின்றது; துக்க சுகங்களுக்கு ஒருவன் அதிகாரியாக மாட்டான். பிறனொருவனால் சுகதுக்கங்கள் ஏற்பட்டது என்று கூறுவது பேதைமதியேயாகும். நான் செய்கின்றேனெனச் சொல்வதும் வீணபிமானமாகும்; உலகத்து ஜனங்கள் அவரவர் செய்த கருமங்களிற் கட்டுண்டுழலுகிறார்கள்; அவரவர் செய்த கர்மத்தின் காரணமாகவே புவியிலுள்ளோரனைவரும் பகைவர், நண்பர், மத்தியஸ்தர், உதாசீனர், உறவினரென்று சொல்லப்படும் மாறுதலைப் பெறுகின்றனர். ஆகையால் புருஷன் தனக்குத் தன் கரும வசத்தால் நேரிடும் சுகதுக்கங்களை அநுபவித்துக்கொண்டு பொறுமையுடனிருத்தல் வேண்டும். போகங்கள் வேண்டுமென்கிற விருப்பும் அவை வேண்டாமென்கிற

வெறுப்பும் கூடாது. அவை வரினும், வராவிடினும் அவைகட்கு வசமாதல் கூடாது; எவரெவர் எந்தெந்த சுபாசுப கருமங்களை எதனுல் எவ்வாறு செய்தனரோ அப்படிப்பட்ட கருமங்களை அவ்வவ்வாறே அநுபவித்துத் தீரவேண்டியது இன்றியமையாததேயாகுமே யன்றி வேறில்லை.

சுபாசுபகர்மங்களின் பலன்களே சுகதுக்கங்களாகும். இவை பிரமனுல் ஏற்படுத்தப்பட்டவை. இவற்றை வேண்டாமென்று தடுக்கத் தேவர்களுக்கும் முடியுந் தாமன்று. புருஷன் சுகதுக்கங்களுக்காக எப்போதும் அவற்றுல் கட்டுப்படுகின்றுன், புண்ணிய பாவங்கட்குத் தக்கவாறு இந்தத் தேகம் அமைக்கப்பட்டிருக்கின்றது; சுகத்திற்குப் பிறகு துக்கமும், துக்கத்திற்குப் பிறகு சுகமும். புவியிலுள்ளவர்களுக்கு இரவையும், பகலையும் போல இன்றியமையாதிருப்பவை. சுகத்தினிடையில் துக்கமும், துக்கத்தினிடையில் சுகமும இருக்கின்றன துக்க சுகமிரண்டும் சேறும நீரும் போலச் சேர்ந்திருப்பன; ஆகையால் வித்துவான்கள் தைர்யத்தினுல் அவை யாவையும் மாயையெனக் கொண்டு அவற்று லேற்படும சங்கடங்களுக்கும் சந்தோஷங்களுக்கும் வருந்துவதுமில்லை, மகிழ்வதுமில்லை" என்றுர். இவ்வாறு குஹலக்ஷ்மணர்கள் சம்பாஷித்துக் கொண்டிருக்கையில் பொழுது புலர்ந்தது. இராமபிரானும் அப்பொழுது துயிலினின்றெழுந்து காலைக் கடன்களை முடித்துக் கொண்டார். பின்னர் குகனைநோக்கி! நண்பனே "விரைவாக ஓடமொன்றைச் சித்தப் படுத்தவேண்டு"மென்றுர். அந்த குகன் இராமரது ஹிதமான வசனத்தைக் கேட்டதும அவ்விதமே யாகட்டுமென்று சம்மதித்து உடனே ஒரு நல்ல ஓடமொன்று கொண்டுவந்து காண்பித்து "நாதனே! நன்மையை யளிக்கக்கூடிய இந்த ஓடத்தில் தாங்களும், பிராட்டியாரும், தம்பி இலக்ஷ்மணரும் ஏறிக்கொள்ளுங்கள்; நான் எனது பங்காளிகளுடனே ஓட்டுகின்றேன்" என்றுன. இராமபிரான் உடனே ஓமென்று சொல்லிப்புறப்பட்டு சீதாதேவியை யோடத்தி லேற்றிவிட்டுத் தாமும் குகன் கரத்தைப்பிடித்துக்கொண்டு ஏறிக்கொண்டார். உடனே இலக்ஷ்மணரும் ஆயுதம் முதலியவைகளை அதில் ஏற்றிப் பிறகு தாமும் ஏறிக்கொண்டார்.

பிறகு குகன் தன் பங்காளிகளுடன் அந்த ஓடத்தை யோட்டிக்கொண்டு போனான். கங்கையின் நடுவே செல்லும்போது சீதாதேவி "தேவி! உனக்கு நமஸ்காரம். இந்த வனவாசங் கழிந்தவுடன் நான் என் புருஷனோடும் கொழுந்தனோடும் ஸுரை மாம்சம் முதலிய அநேக உபகாரங்களோடு பூசிப்பேன்" என்று கூறிக் கங்காதேவியை வேண்டிக்கொண்டனள், பிறகு கங்கையைக் கடந்து கரைசேர்ந்தனர். இங்கே வந்ததும் குகன் இராமபிரானைப் பார்த்து, "பிரபுவே! தங்களுடன் நானும் வருகின்றேன், விடைதந்தருளல் வேண்டும், இன்றேல் இக்கணமே என்னுயிரை விட்டுவிடுவேன்" என்றான்.

இங்ஙனங் குகன் கூறியதும் கோதண்டபாணியாகிய பிரபு "பதினான்கு வருஷத்தையும் தண்டகாரண்யத்திற் கழித்துத் திரும்பவும் இவ்விடம் வருவோம். இது சத்தியமான பேரர இராம வாக்கியம் ஒருபோதும் பொய்யாகாது" என்று கூறி அவனை ஆலிங்கனம் செய்துகொண்டு பலசமாதான வசனங்களைக் கூறித் தடுத்தார். பின் குகன் விசனத்துடன் வீடுபோய்ச் சேர்ந்தான். பிறகு அங்கே சொல்லத்தக்க மிருகங்களைக் கொன்று பக்குவப்படுத்தி மூவரும் புசித்துவிட்டு ஓர் மரத்தடியில் சயனித்திருந்து அன்றிரவைக் கழித்தனர். பின்னர் மூவரும் பரத்வாஜாசிரமம் சென்றனர். அங்கே வெளியே நின்றுகொண்டிருந்த ஒரு பிரமசாரியைக் கண்டு "தசரத சக்ரவர்த்தியின் புத்திரர்களாகிய இராம லக்ஷ்மணர்கள் வனவாசஞ் செய்யக் கருதி சீதாதேவியுடன் வந்து வாசலில் நிற்கின்றனரென்று முனிவர் பெருமானிடம் தெரிவியும்" என்றார். உடனே அவன் ஓடித் தவமுனிவரைத் தண்டனிட்டு "சுவாமி இராமபிரான், சீதாதேவி, இலக்ஷ்மணர் மூவரும் வெளியே வந்திருக்கிறார்கள். அவர்கள் தங்கள் வருகையை உங்களுக்குத் தெரிவிக்கச் சொன்னார்கள்" என்றான்.

அச்செய்தி கேட்டதும் பரத்துவாஜ முனிவர் அக்கணமே அர்க்கிய பாத்தியங்களுடன் எதிர்கொண்டு வந்து இராமபிரானைச் சகோதரருடன் பூசித்து அவரைப் பார்த்து அரவிந்தலோசனா! இராமா ஆசிரமத்துக்குள்ளே வந்து உமது பாததூளியால் அதைப் பரிசுத்தம் செய்"யென்று கூறி உள்ளே அழைத்துச் சென்றார். அங்கே அவர்களுக்கு உசிதமான அதிதி சத்காரங்களைச் செய்து,

தமது தரிசனத்தால் இப்பொழுதே அடியேன் யெனது தவசித்தி பெற்றவனானேன், எனது தபோமஹிமையால் முக்காலங்களையும் அறிவேன், ஆகையால் தங்களைப் பரமாத்மா வென்றும் மாயாகாரிய மானுட ரூபியென்றும் தெரிந்துகொண்டேன். தாங்கள் பிரமதேவரது பிரார்த்தனைக் கிணங்கி இவ்வவதாரமெடுத்து வனவாசம் செய்ய வந்ததின் காரணத்தையும் இனி என்னசெய்ய உத்தேசமோ அதையும் தமது உபாசனையினால் உண்டான அறிவு என்னும் கண்ணாற் கண்டு அறியக்கூடியவன்; இரகுகுலதிலக! இன்னும் நான் என்ன சொல்லப்போகின்றேன். தங்களை பிரத்யக்ஷமாகக் கண்ட நான் கிருதார்த்தனானேன்" என்றார்.

இங்ஙனம் சொல்லிய முனிவர் பெருமானை இராமர், இலக்ஷ்மணர், வைதேகி மூவரும் பணிந்து "பிராமணோத்தமரே! நாங்கள் தமது அனுக்கிரகத்துக்குப் பாத்திரர்களான இராஜகுல பந்துக்கள் என்று கூறி மகிழ்ந்து இன்னும் பலவாறாகப் பேசிக்கொண்டு அன்றிரவை அந்த முனி புங்கவரின் சந்நிதியிற் கழித்தார்கள்.

பின்னர் மறுநாளுதயத்திலெழுந்து இராமபிரான் முதலிய மூவரும் அந்த முனிவர் நிருமித்த சிறந்த ஓர் ஓடத்திலேறி யமுனா நதியைக் கடந்து முனிவர் காட்டிய மார்க்கத்தோடு சிறிது தூரம் வழிநடந்து சித்திர கூட பருவதத்தை யடைந்து அங்கு முனிவர்கள் சூழ வசித்து வரும் ஸ்ரீ வான்மீகி முனிவரது ஆசிரமத்தை யடைந்தனர்.

பலவகைப் பறவைகளும், விலங்கினங்களும், பலவகையான மலர், கனி இலைகளுடன் கூடிய விருக்ஷவகைகளும் நிறைந்து இரமணீயமாக விளங்கும் அவ்வாச்சிரமத்தின்கண் முனிவர் பெருமானான வான்மீகி முனிவர் இருக்கக்கண்டு அவரை இராமபிரான் தம்பியுடனும் ஜானகியுடனும் நமஸ்கரித்தார். அங்ஙனம் தம்மை வணங்கிய இராமபிரானை சீதாகாந்தனென்றும், இரவிகுல திலகனென்றும், பிறப்பென்னும் பந்தத்தினின்றும் விடுவிப்பவனென்றும், அப்பிரமேயனென்றும், அநாமயனென்றும், நித்தியானந்தனென்றும், ஜனன மற்றவனென்றும், நித்திய சித்தனென்றும், சர்வபூதங்களினுளிருப்பவனென்றும், சாந்த சீலனென்றும், மன்மத ரூபனென்றும், சத்திய சந்தனென்றும், குரோதத்தை ஜெயித்தவனென்றும், அறிந்துகொண்ட வான்மீகி முனிவர் விரைவாக எழுந்து மிகுந்த பக்தியுடன் கண்களி

னின்றும் ஆனந்தபாஷ்பம் பெருக ஆலிங்கனம் செய்துகொண்டார். பிறகு உலக பூஜ்யரும் அவ்யக்தருமான இராமபிரானை விதிப்படி பூசித்து மதுரமான கனிகிழங்குகளை மகிழ்ச்சியுடன் தந்து புசிக்கும்படி உபசரித்தார்.

அப்போது இராமபிரான் இருகரங்களையும் குவித்து வணங்கி இருந்து வான்மீகி முனிவரை நோக்கி "சுவாமி! தந்தையின் ஆக்ஞையைக் கேட்டு நாங்கள் தண்டவனத்திற்கு வந்திருக்கிறோம் அதற்குக் காரணம் தாங்களே யறிவீர்கள். நாங்கள் அதைப்பற்றிச் சொல்லக் கிடப்பது எதுவுமில்லை. ஆதலால் தமியேன் இங்குச் சிலகாலம் சீதாதேவியுடன் வசித்திருப்பதற் கோரிடத்தைக் குறிப்பிடுங்க'ளென்று பிரார்த்தித்தார். அப்பொழுது வான்மீகி முனிவர் புன்முறுவலுடன் கூறுகின்றார்.

உலகங்கட்கெல்லாம் உத்தமமான வாஸஸ்தானமாக விருப்பவர்கள் தாங்களேயாம். ஸமஸ்தமான பூதங்களும் தங்களுக்கு இருப்பிடமாயுள்ளன. இராம! இது தங்களுடைய சாதாரணவாசஸ்தானம். தாங்கள் இப்போது சீதாதேவியோடு வசித்தற் கிடங் குறிப்பிடும்படி தெரிவித்தமையால், அது எதுவெனில் சாந்தம், சமத்துவம், எல்லா ஜீவன்களிடத்தும் த்வேஷ புத்தி பாராட்டாமை, சதாகாலமும் தங்களையே இடைவிடாது தியானிக்கும் சித்தம் இவைகளை யுடையவரது இருதயமே உத்தமமான வாஸஸ்தானமாம். தர்மா தர்மங்களெனப்படும் சகலத்தையும் துறந்து உம்மையே சதாகாலமும் உறுதியோடு வணங்குகிறவருடைய இருதயமே நீர் சீதாதேவியோடு இருப்பதற்குச் சிறந்த வீடாகும். உமது மந்திரத்தை மனனஞ்செய்து உம்மையே சரணாகதியடைந்து ஆசையென்கிற பந்தமற்றிருப்பவருடைய உள்ளமே உமக்கு உத்தமமான வாசஸ்தலமாகும். அகங்காரத்தை யொழித்து சித்த சாந்தி பெற்று விருப்பும் வெறுப்புமின்றி ஓடும் பொன்னும் ஒப்பக்காண்பார் இருதயமே உமக்கு வீடாகும். மனம் புத்தி முதலிய அந்தக்கரணங்களை உமக்கே சமர்ப்பித்து சதா காலமும் சந்துஷ்டராக விருந்து கர்மங்களெல்லாவற்றையும் உமக்கே அர்ப்பணஞ் செய்வோருடைய உள்ளமே உமக்கு சுபகரமான வீடாகும். துக்கம் வந்தபோது துயருறாமலும், சுகம் வந்தவிடத்து மகிழ்ச்சியடையாமலும் எல்லாம் மாயையே யெனத் தீர்மானித்து உம்மை வணங்கு

கிறவர்களுடைய இருதயமே உமது வீடு. அறுவகை விகாரங்களுக்கும் வேறான ஆத்மாவை தேகத்தினிடமாகப் பார்த்து பசி, தாகம், சுகம், அசுகம், துக்கம் முதலியவற்றைப் பிராணன், மனம் இவைகளின் தருமமென்று உணர்ந்து சம்சாரத்தினின்று விடுதலை யடைந்தவர்களுடைய மனமே தங்களுக்கு வீடாக இருக்கிறது. அறிவுருவாயினும், சத்திய ஸொரூபராயும், அனந்தராயும்; ஒன்றினும் பற்றற்றவராயும், எங்கும் உள்ளவராயும், யாவராலும் போற்றுக்கொள்ளத் தக்கவராயும் இருக்கிற உம்மை எல்லாருடைய உள்ளத்திலும் இருப்பவராகக் காண்பவர் எவரோ, அவரது உள்ளக் கமலத்திலும் சீதையுடன் எப்போதும் வீற்றிருக்கலாம். வணக்கத்தினால் எப்பொழுதும் ஆத்ம பாவனையை சார்ந்தவரும் உமது பாதாரவிந்த சேவையில் திடமுடையவரும் உமது நாமத்தைக் கீர்த்தனம் செய்வதால் பாவங்களினின்று விடுபட்டவருமாகிய அறிவாளிகளின் இருதயத்தையும் உமக்கு வீடாகக் கொண்டு சீதா தேவியுடன் வசித்து வரலாம்.

இராமா! உம்முடைய நாம மகிமையை யாராலெப்படி வர்ணிக்கக்கூடும்? அதனுடைய மகிமையாலல்லவா நான் பிரமரிஷியானது. உமது நாமத்தின் மகிமையைக் கூறுகிறேன் கேளுங்கள். அது மிகவும் ஆச்சரியகரமான எனது சரித்திரமேயாகும்.

நான் பூர்வம் கிராதகருக்குள் கிராதகனாக வளர்ந்துவந்தேன் ஜன்மத்தில் மாத்திரம் அந்தணனாயிருந்தேனல்லது சூத்திரர்களுடைய ஆசாரங்களையே பின்பற்றி வந்தேன். மனோநிக்கிரகமில்லாதிருந்த எனக்கு சூத்திர ஸ்திரீகளிடம் அளவில்லாத மக்களுண்டாயினர். இதுவன்றி சோரர்களுடன் சேர்ந்து நானும் சோரனாகவேயிருந்து வந்தேன். சதாகாலமும் கையில் வில்லையும் பாணங்களையும் வைத்துக்கொண்டு பிராணிகளுக்கெல்லாம் யமனைப்போல் திரிந்தேன். அப்பொழுது ஒரு சமயம் ஒரு காட்டில் சப்த மகரிஷிகளையும் கண்டேன். அவர்கள் சாக்ஷாத் சூரியனைப்போலவே என் கண்ணுக்கு காணப்பட்டனர். அவர்கள் வைத்திருந்த மூட்டைகளை அபகரிப்பதற்கு எண்ணங்கொண்டு நில்லுங்கள், நில்லுங்கள் என்று சொல்லிப் பயமுறுத்தினேன். அப்பொழுது அவர்கள் என்னைப் பார்த்து, “அடே பிராமணப் பிரஷ்டா! நீயேன் வருகிறாய், என்று கேட்டார்கள், நான் உங்களிடத்திலுள்ள பொருள்களை அபகரித்

யோக வந்தேன். அல்லாமலும் எனது மனைவி மக்களில அநேகர் பசியாயிருக்கின்றனர். அவர்களைக் காப்பாற்றுவதற்காகவே நான் காடு மலைகளில் சஞ்சரிக்கின்றேன் என்றேன்.

இதைக் கேட்டதும் அவர்கள் சிறிதும் வருத்தமுறாது என்னை நோக்கி "அடே நீ உன் வீடுசென்று உன் வீட்டிலுள்ளவரைப் பார்த்து நான் தினந்தோறும் உங்கள் நிமித்தம் செய்யும் பாபங்களில் நீங்களும் பாகஸ்தர்களா ஆவீர்களோ ஆகமாட்டீர்களோ என்று ஒவ்வொருவரையும் தனித்தனியே விசாரித்தறிந்துவா; அதுவரையில் நாங்கள் இங்கு இருக்கின்றோம்; இது உண்மை" என்றுரைத்தனர். நானும் அதற்கிசை சம்மதித்து என்வீட்டிற்குச் சென்று எனது மனைவி மைந்தர் இவர்களை விசாரித்தேன். அவர்கள் என்னை நோக்கிப் பாபங்களெல்லாம் உன்னைச் சேர்ந்தவைகளே. பிரயோஜனத்தை மட்டும் நாங்கள் அனுபவிப்போம்" என்று விடை கூறினர். அதைக் கேட்டதும் மிக்க மனவருத்தமுற்றுத் திரும்பவும் கருணை நிறைந்த மனதையுடைய அந்தணர்கள் இருக்குமிடத்திற்கு வந்தேன். அவர்களைக்கண்டதும் என் மனம் பரிசுத்தமடைந்தது. உடனே என் கையிலிருந்த வில் முதலியவைகளை வீசி யெறிந்துவிட்டு நரகமென்கிற கடலுக்குப் பாத்திரமான என்னைக் காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள் என்று கூறித் தரையில் மரம்போல் விழுந்து பணிந்தேன்.

அங்ஙனம் விழுந்து கிடக்கும் என்னை ரிஷிசிரேஷ்டர்கள் நோக்கி எழுந்திரு எழுந்திரு உனக்கு நன்மையுண்டாகும்; சாதுக்களின் சகவாசம் நல்ல பலனைத் தந்தது என்று கூறி, "இவனுடைய துன்ப நிவர்த்தியை உத்தேசித்து இவனுக்கு ஏதேனும் ஒரு மந்திரத்தை உபதேசிக்கலாமெனில் பிராமணனாயிருப்பினும் இவன் பிரஷ்டன்; தீயநடக்கையையுடையவனென்று இவனைத் தள்ளிவிடலாமெனில் இவன் நம்மைச் சரணமடைந்திருக்கிறான்; ஆகையால் இவன் பிரபத்தினத்தின் பேரில் முத்தியடைவதற்குரிய உபதேசத்திற்குப் பாத்திரவானாகிறான்" என்று ஒருவர்க்கொருவர் ஆலோசித்து என்னைப் பார்த்து மரா என்று இடைவிடாது நாங்கள் இங்கு திரும்பிவருமளவும் ஜபித்துக்கொண்டிருவென்று சொல்லிப் போயினர். அவர்கள் கூறியபடியே நான் மன ஆயாசத்தோடு தனியேயிருந்து இருதயத்தில் ஜபஞ்செய்துகொண்டிருந்தேன். அதனுக்

பிரபஞ்சத்தை மறந்து ஸர்வ ஸங்க பரித்தியாகஞ் செய்து வெகுகாலம் வரையில் நிச்சலமாயிருந்தேன். அப்படியிருந்த என்னைப் புற்று மூடிக்கொண்டது; பிறகு ஆயிரம் யுகங்கள் கழிந்ததும் அந்த ரிஷிகள் திரும்பவும் என்னிடம் வந்து என்னை வெளியே வாவென்று அழைத்தனர். நான் சூழ்ந்த பனியினின்று வெளிப்படும் ஸூரியனைப் போல் புற்றினின்றும் வெளியே வந்தேன். அந்த ரிஷிகள் என்னைப் பார்த்து, "உனக்கு வால்மீகி யென்னும் நாமம் உண்டாவதாக; ஏனெனில் நீ வால்மீகத்தினிடம் பிறந்தமையால் வால்மீகி என்கிற மறு பிறப்பை அடைந்தவனானாய் என்று சொல்லிவிட்டுப் போய்விட்டனர். ஏ இராமா! உமது நாம ப்ரபாவத்தால் இத்தகைய செல்வத்தை யடைந்தேன். இப்பொழுது தங்களை ஸீதா தேவியுடனும் லக்ஷ்மணனுடனும் ப்ரத்தியக்ஷத்தில் பார்க்கின்றேன். ஆதி முடிவில்லாதவராய், அகோசரராய், நிர்மலராய், நித்தியராய், நிஷ்கர்மராய், சாந்தசீலராய், சுயம்பிரகாசராய்ச், சதாசிவராய், நிராகாரராய், அநாமயராய், அவ்வியக்தராய், அச்யுதராய், அகங்காரமில்லாதவராய், கிரியையற்றவராய், ஞானேச்சம் உடையவராய், லக்ஷ்மீகாந்தராய், ஒப்புயர்வற்ற கமலக் கண்ணனாயும் விளங்கும் ஏ இராமா! தங்களைத் தரிசித்தபொழுதே முக்தனானேன்; இதில சந்தேகமில்லை; இராமா தங்களுக்கு வசித்தற்குரிய இடத்தைக் காட்டுகின்றேன்" வாருங்களென்று சொல்லி, ஸீதா லக்ஷ்மணருடன் ஸ்ரீராமபிரானை அழைத்துக்கொண்டு, தமது மாணவர்களுடன் வாஸயோக்கியமான இரண்டு பர்வதங்களுக்கு நடுவே சென்று அங்கே கிழக்கு மேற்கு தெற்கு வடக்கு சதுரங்களுடன் கூடிய இரண்டு வீடுகளையும் விசாலமான ஒரு பர்ணசாலையையும் உண்டாக்கினர். இராமபிரான் மேன்மையான அந்த வீட்டில் ஸீதா லக்ஷ்மணர்களுடன் தேவரைப்போல் வசித்து வந்தனர்.

இங்ஙனம் வான்மீகி முதலிய மகரிஷிகளால் பூசிக்கப்பட்ட இரகுபுங்கவர் தேவலோகத்தில் தேவர் முனிவர்கள் சூழ இந்திராணியுடன் விளங்கும் இந்திரனைப்போல், இலக்ஷ்மணரோடும் ஸீதாபிராட்டியோடும் எழுந்தருளியிருந்தனர்.

ஆறுவது சருக்கம்

முற்றிற்று.

7-வது சருக்கம்.

பரமசிவன் கூறுகிறார்.

அப்பால், மந்திரி சுமந்திரன் ஸாயங்காலத்தில் அயோத்யாபுரி வந்து சேர்ந்து இரதத்தை நகரத்திற்கு அப்புறமே நிறுத்தி விட்டு முகத்தை வஸ்திரத்தினால் மூடிக்கொண்டு கண்ணீருடன் நகரத்தில் பிரவேசித்து அரசனிடம் வந்து தெண்டனிட்டு நின்றான். அங்ஙனம் வணங்கி நிற்கும் சுமந்திரனைப் பார்த்ததும் மன்னர் மன்னனாகிய தசரதமகாராஜன் அச்சமுடையவனாய் "சுமந்திரனே! இராமன் லக்ஷ்மணன் சீதை மூன்று பெயரும எங்கிருக்கின்றார்கள்; இராமனை நீ யெவ்விடம் விட்டு வந்தாய்?:மகா பாபியான என்னைப் பற்றி அவன் என்ன சொன்னான்? சீதையும் லக்ஷ்மணனும் தயவில்லாதவனான என்னைப் பற்றி என்ன கூறினர்?" என்று கேட்டு, உடனே "ஏ இராமா" ஏ இராஜ ஸிரேஷ்டா! புத்திர உத்தமனே! தீரனே! ஸ்ரீமானே! அறிஞனே! வில்வல்லவனே! ஏ இலக்ஷ்மணா! ஏ சீதா! வியாகுலம் என்கிற கடலில் மூழ்கி மரணத்தை யெதிர்பார்த்துக் கொண்டிருக்கும் என்னைப் பார்க்கமாட்டீர்களா? என்று கூறி வெகு நேரம் பிரலாபித்து, துக்கக் கடலில் ஆழ்ந்தான்.

இங்ஙனம் சோகமுற்ற அரசனை அமைச்சன் நோக்கி, கைகூப்பிய வண்ணம் நின்று, "பிரபுவே! இராமபிரான் சீதாதேவி இலக்ஷ்மணன் மூவரையும் உமது இரதத்தில் ஏற்றிக்கொண்டு போய்க் கங்கைக் கரையின், அருகாமையி லிருக்கும் சிருங்கிபேர புரத்தை யடைந்து அங்கே தங்கி யிருந்தேன். அப்பொழுது குகன் கனி கிழங்குகளைக் கொணர்ந்து, காகுஸ்தரிடம் அன்புடன் கொடுத்தான். காகுஸ்தர் அவைகளை அன்புடன் ஸ்பரிசித்து விட்டு ஏற்றுக்கொள்ளா திருந்தனர். பிறகு குகனை ஆலம்பால் கொணர்ந்து தரும்படி சொல்லிச் சடைமுடி தரித்துக்கொண்டார். அப்பால என்னைப் புன்முறுவலோடு நோக்கி, "மந்திரி! என் பொருட்டு

வருத்தம் வேண்டாம்" என்று அரசனுக்குத் தெரிவிக்கவேண்டும். அயோத்தியா புரியிலிருந்து அரசு புரிவதினும் இந்த ஆரண்ய வாசத்தில் அநேக நன்மைகளுண்டென்றும், சொல்லவேண்டும்; எனதன்னைக்கு எனது வந்தனத்தைத் தெரிவித்து, எனக்காக விசனப்படாதிருக்கும் படிக்கும் என் பிதாவின் சோகம் நீங்கும்படி சமாதானஞ் செய்யும்படிக்கும் சொல்வீர்" என்றார். சீதாதேவி கலங்கிய கண்ணீருடன் இரகு புங்கவனைக் கீழ்க்கண்ணால் பார்த்துக் கொண்டு தழுதழுத்த குரலுடன் "என் மாமனார் பாத பங்கயத்தற்கு வந்தனம் பல சொல்ல வேண்டு"மென்று சொல்லிச் சோகத்தால் வேறு பேச்சுப் பேச முடியாமல் தலை குனிந்தவண்ணம பெருகிய கண்ணீருடன் நின்றாள். இந்தச் சந்தர்ப்பத்தில் யாவரும் ஓடமேறினார். அவர்கள் கங்கையைக் கடந்து அப்பாற் செல்லும் வரையில் நான் அங்கேயே யிருந்தேன். பிறகு பொறுக்க முடியாத துயரத்துடன் திரும்பி வந்து விட்டேன் என்றான்.

இதைக் கேட்ட அரசன் சகித்தற் கரிய துயரமுற்றனன். அது கண்ட கௌசல்யா தேவி மன்னனை நோக்கி "மனமொத்த மனைவி கைகேயியின் வார்த்தையைக் கேட்டு அவள் விரும்பிய வரத்தைக் கொடுத்தது சரி; ராஜ்யத்தையும் அவளுக்கே சொந்தமாக்கும்; என் மகனை ஏன் காட்டுக்கு அனுப்பினீர்? தாங்களே இவை அனைத்தையும செய்துவிட்டு இப்பொழுது ஏன விசனப்படவேண்டும்" என்று கேட்டனள். இங்ஙனம் கௌஸல்யை கேட்டது ஆயுதத்தால் உண்டான புண்ணில் அக்கினி பட்டதற் கொப்ப அரசனை வருத்தியதால் கலங்கிய கண்ணீருடன் கௌசலையைப் பார்த்து "துயரத்தால் வருந்தும் என்னை ஏன் மீளாத் துயரத்திற் குள்ளாக்குகிறாய்? இப்போதே என் பிராணன் என்னுடலை விட்டு நிச்சயமாய் நீங்கப்போகிறது. மங்கள முடையவளே! முன் நடந்த விஷயமொன்று இப்போது என் ஞாபகத்திற்கு வருகிறது; என் மூடத்தனத்தால் எனக்கு ஒரு முனிவனது சாபம் ஏற்பட்டது; அதென்ன வெனில கேள். சொல்கிறேன்" என்றார்.

நான் முன்னொரு சமயம் எனது வாலிபப் பருவத்தில் வில் லம்பு முதலியவைகளுடன் வனங்களிற் சென்று வேட்டையாடத் தொடங்கி, நடுராத்திரியில் சுதிதீரங்களில் திரிந்துகொண்டிருந

தேன், அப்பொழுது தன் பெற்றோரின் தாகத்தைத் தணிக்க ஒரு முனி புத்திரன் நதியில் குடத்தை யமுக்கி ஜலம் மொண்டு கொண்டிருந்தான். அதனால் உண்டான சப்தத்தைக் கேட்ட நான், நீரருந்தும் ஒரு பெரிய யானையினால் உண்டாகும் ஓசையென வெண்ணி அப்பக்கம் ஒரு அம்பை வில்லிற் றொடுத்து எய்தேன். உடனே "ஆ உயிர் துறக்கிறேன்; ஒருவருக்கும் ஒரு தீங்கும் செய்தறியாத என்னை அடித்தோர் யார்? ஆ! என் விதியே! என் பெற்றோர் தண்ணீருக்காக என்னை எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்களே" என்னும் மனிதனுடைய வார்த்தை என் செவியிற் பட்டது. உடனே வருத்தமும் பயமுமடைந்து அந்த மனிதனருகே சென்று "ஐயனே! அடியேன் தசரதன் அறியாமையால் செய்துவிட்டேன். ஆதலால் முனிவர பெருமானே என்னை மன்னிப்போடு ஆதரிக்கவேண்டும்" என்று திருவடியில் விழுந்தேன். அவர் என்னைப் பார்த்து, "ராஜனே நீ வருந்தவேண்டாம்; பிரமஹத்தி யுன்னை யடையாது. நானொரு வைசியத் தவசி. என்னைப் பெற்றோர் தாகத்தால் வருந்துகின்றனர். அவர்கள் என்னை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். ஆதலால் எதைப் பற்றியும் சிந்தியாது இக்கணமே இந்த ஜலத்தை அவர்களிடம் கொண்டு போய்க் கொடும்; அல்லாவிடில் என் தந்தைக்குக் கோபமுண்டாயின், உம்மை இப்போதே யெரித்துச் சாம்பராக்கிவிடுவார். அவர்களிடம் தண்ணீரைக் கொண்டுபோய்க் கொடுத்து நீங்கள் செய்த தீங்கை யென் பெற்றோருக்குத் தெரியும்படி சொல்லும்; என் உடலில் தைத்துள்ள பாணத்தை மெதுவாக எடுத்துவிடும்; அது என்னைத் துன்புறுத்துகின்றது; என் பிராணனை விடுகிறேன்" என்று கூறினர். நான் உடனே அவர் கூறியபடி அவர்மீது தைத்திருந்த அம்பைப் பிடுங்கி யெறிந்துவிட்டு நீர்க்குடத்தை யெடுத்துக் கொண்டு அவரது பெற்றோரிருக்குமிடம் சென்றேன். அவர்கள் அதி வயது சென்ற கிழவர்கள், கண் தெரியாதவர்கள்; தாகம் பொறுக்கொணாது "ஐயோ! நமது பிள்ளை இன்னும் ஜலங்கொண்டு வாராமைக்குக் காரணமென்ன? கிழவர்தானே என்று தாகத்தினால் வருந்தும் நம்மை உபேக்ஷித்தனனோ? நம்மிடத்தில் அவன் மிகுந்த அன்புள்ளவனாயிற்றே? அப்படிச் செய்யமாட்டானே" என்று விசனப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது நான் அவர்களை யணு

-னையால் என் காலடிச் சத்தம் கேட்டதும், அவர்கள், "அப்பா மகனே! ஏன் இவ்வளவு நேரம்! குளிர்ந்த ஜலம் கொடு; நாங்கள் குடிக்கின்றோம்" என்று கேட்டனர். அது கேட்ட நான் மிகவும் பயமடைந்து, அவர்களிடம் மெதுவாய்ச் சென்று, அவர்களை வணங்கி, " பெரியவரே! நானுங்கள் பிள்ளையல்ல; அயோத்தியாதிபதி; என் பெயர் தசரதன்; மிருகவேட்டையாடுவது கருதி இந்த இரவில் நதி தீரத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்தேன்; அப்போது தண்ணீரில் சத்தமுண்டாவது என் செவியிற் பட்டது. அது நீருண்ண வந்த ஒரு மிருகத்தின் முழக்கமாக இருக்குமெனக் கருதி அத்திசையைக் குறித்து மகா பாவியாகிய நான் ஓர் அம்பெய்தேன்; உடனே "உயிர் துறந்தேன" என்ற சத்தமுண்டாயிற்று. அது செவியிற் பட்டதும் மிகுந்த பயமடைந்து ஓடிச்சென்று பார்த்தேன். அங்கே அவிழ்ந்த சடைகளுடன் தரையிற் கிடக்கும் ஒரு முனிவர் குமாரனைக் கண்டு பயந்து: "என்னை யாதரிக்க வேண்டும்; என ஐயனே! என்னை யாதரிக்க வேண்டும்" என்று பிரார்த்தித்தேன். அந்த முனிவர் குமாரன், என்னை நோக்கி, "பயப்படாதே; பிரமஹத்தி உனக்கில்லை என்று சொல்லி, இந்த நீரை என தாய் தந்தையருக்கு கொடுத்துப் பிரார்த்தித்துக் கொள்ளுமென்று கட்டளையிட்டனர். முனியைத் தொந்தரவுக்குள்ளாக்கி நான் அவ்வாறே இங்குத் தங்களிடத்தில் வந்திருக்கின்றேன்; தயைசெய்து என்னைக் காக்கவேண்டும். உங்களைச் சரணமடைந்தேன்" என்றேன்.

இவ்வுரை செவியிற் பட்டதும் அவர்கள் பெருந் துயரமடைந்து தங்களை அப்புதல்வன் மூர்ச்சித்து விழுந்த இடத்திற்கு அப்போதே அழைத்தேகும்படி கட்டளையிட்டனர். நான் அவர்கள் கட்டளைப்படி அந்தக் குமாரன் விழுந்து கிடக்கும் இடத்திற்கு அவ்விருவரையும் அக்கணமே யழைத்துச் சென்றேன். அவர்களிருவரும் தங்கள் பிள்ளையைக் கரங்களால் தடவி அழத் தொடங்கி என்னைப் பார்த்து, "மன்னு! விறகுகளைச் சேகரித்து வா, விரைந்து சிதை மூட்டவேண்டும்" என, நானும் அவ்வாறே விறகு சேகரித்து வந்து அவர்களாக்ஞைப்படி சிதை மூட்டினேன். அவ்விருவரும் புதல்வனோடு அச்சிதையில் பிரவேசித்து விட்டனர். அக்கினி மூண்டெரிந்ததும் அம்மூவரும் வெந்து பரலோகம் சென்ற

ஞர். அச்சமயம் வயோதிகனான பிதா "நீயும் புத்திர சோகத்தால் மரணமடையக் கடவது" என்று என்னைச் சபித்தனர். ஆனால் அந்தக் காலம் இப்போது நேர்ந்திருக்கிறது "ஊழ்வந்து சாடாதிரா னிது. இதனைத் தீர்க்க முடியாது.' என்று புத்திர சோகத்தால் மிகவுந் தளர்வுற்று "ஏ ராமா! அன்பான மகனே! ஏ சீதே! ஏ இலக்ஷ்மணா! அறிவாளியே! உங்களது பிரிவாற்றாமல் மரணமடைகின்றேனே, இது கைகேயியினால் நேர்ந்தது" என்று அழுத வண்ணமே மன்னர் மன்னனான தசரதன் பிராணனை விட்டுச் சொர்க்கலோகம் சென்றான்.

அது கண்ட கௌஸல்யை சுமித்திரை மற்றுமுள்ள ராஜபத்தினிகள் எல்லோரும் மார்பில் அடித்துக்கொண்டு பெருங்குரலிட்டு அழுதார்கள். இதனை அறிந்த வஸிஷ்ட மகா முனிவர் அமைச்சர்களுடன் அவ்விடம் வந்து மன்னனுடைய சரீரத்தை தைலக் கொப்பரையில் பத்திரப்படுத்தி விட்டுப் பரதனையும் சத்துருக்னனையும் யுதாஜித்தின் நகரத்திலிருந்து குதிரையின்மேல் ஏறிச் சென்று விரைவில் அயோத்திக்கு அழைத்து வரும்படி தூதர்களை அனுப்பினார். அவர்களிடம் அரசனையும் அன்னை கைகேயியையும் பார்க்க வரவேண்டுமென்று சொல்லும்படிக்கும் தூதர்களுக்குக் கட்டளையிட்டனர்; தூதர்கள் அவ்வாறே விரைவாக ஓடி பரதனுடைய மாமனைக் கண்டு வந்தனம் செய்து பரத சத்துருக்னர்களை சீக்கிரமாக அயோத்திக்கு அனுப்ப வேண்டுமென்று, வஸிஷ்ட பகவான் ஆக்ஞை செய்திருப்பதாகத் தெரிவித்தார்கள். உடனே பரத சத்ருக்னர்கள் இருவரும் தமது ஆசிரியரது ஆக்ஞையைச் சிரமேற்கொண்டு இராஜனுக்கோ அல்லது இராமபிரானுக்கோ ஏதாவது துன்பம் நேரிட்டிருக்க வேண்டுமென்று கருதி அச்சத்துடன் தூதர்களைப் பின் தொடர்ந்து அயோத்தியாபுரி வந்து சேர்ந்தார்கள். அயோத்தியாபுரி அச்சமயம் இலக்ஷ்மீ விலாஸமற்று ஜனக் கூட்டங்களும் உற்சவக் கொண்டாட்டங்களும் சிறிதுமின்றி இருப்பதை நோக்கி மிகக் கவலையுற்று முகவாட்டத்துடன் அரசனது இருப்பிடத்திற்குச் சென்றார்கள். அங்கே அரசர்க்குரிய இலக்ஷணங்கள் ஏதுமின்றி கைகேயி ஒருத்திமட்டுமே ஏகாந்தமாய் வீற்றிருக்கக் கண்டு அன்போடு அன்னையின் பாதத்தில் வீழ்ந்து ஸாஷ்டாங்கமாக நமஸ்கரித்தார்கள். கைகேயி அன்போடு அவர்களைத் தழுவி மடியிலைச்

கொண்டு உச்சிமோந்து புன்சிரிப்புடன் அழகான குழந்தைகளே! என் பெற்றோர்கள் சுகமாயிருக்கின்றனரா? என் தமயன் சுகமா? தெய்வகதியால் உங்களை இன்று சுகமாக விருக்கக் கண்டேன் என்றாள். இப்படிக் கேட்ட அன்னையின் முகத்தைப் பார்த்து! அம்மா தந்தை எங்கிருக்கின்றார். நீ ஒருத்தியாக இங்கிருப்பானேன் என் பிதா உன்னை விட்டுத் தனியே யிருந்ததில்லையே. அதற்கு மாறாக இப்பொழுது காணா நேர்ந்த காரண மென்ன? என் பிதா இருக்குமிடத்தைச சொல்லும். எனக்கு அவரைக் காணாதிருப்பதினால் அழுகையும் அச்சமும் உண்டாகின்றன என்றான். கைகேயி "பிதாவினிடத்தில் அன்புள்ள அப்பா பரதா! ஏன் துக்கப்படுகின்றாய்? அறநெறிவழுவாதவர்களும் அசுவமேதாதியாகங்களைச் செய்தவர்களும் அடையும் பதவி எதுவோ அந்தப பதவியையே உன் தந்தையும் அடைந்தனர் என்று சொல்ல, அவ்வார்த்தையைக் கேட்டதும் பரதன் சோகமடைந்து தரைமேல் விழுந்தான். பின் சற்று நேரத்திற்கெல்லாம் தெளிந்தெழுந்து" ஆ என்னைப் பெற்ற ஐயனே! எங்களைத் துக்கக் கடலில் தள்ளிவிட்டு எங்கே போனீர்? என்னை என் அண்ணாவின் வசம் ஒப்புவியாமல் எவ்விடஞ் சென்றீர்," என்று இப்படிப் பயத்துடன் கூறி அழுது தலைமயிரலைய தரையில் விழுந்தான். கைகேயி அப்படி விழுந்த பரதனை யெடுத்துக் கண்களைத் துடைத்து "அப்பா மகனே! உனக்கு மங்களமுண்டாகக் கடவது; உனக்கு வேண்டியவைகளை யெல்லாம் சம்பாதித்து வைத்திருக்கிறேன்" என்று சொல்லப் பரதன் அன்னையைப் பார்த்து "பிதா இறக்கும்போது கூறியவை எவை? என்று கேட்டான். கைகேயி சிறிதும் பயமின்றி பரதனை நோக்கி, "ஆ இராமா! சீதா! இலக்ஷ்மணா!" என்று அடிக்கடி சொல்லிக்கொண்டே உயிர்விட்டனர் என்றாள்.

அதைக் கேட்டதும் பரதன் "ஏ! அம்மா! அந்த ஸமயத்தில் இராமர் ஸமீபத்திலில்லையா என்ன? அவர்கள் எங்கேபோய் விட்டார்கள்" என்று கேட்டான்.

கைகேயி கூறுகிறாள்.

உன் தந்தை இராமனுக்கு யௌவராஜ்யாபிஷேகம் செய்வதற்காக யத்னஞ்செய்தார். உனக்கு ராஜ்யத்தை வாங்கிக் கொடுப்பதற்காக அதற்கு நான் இடையூறு செய்து, ஏற்கனவே அரசனாகிய உன் தந்தை எனக்குக் கொடுத்த இரண்டு வரத்தையும் கேட்டேன்.

அந்த இரண்டில் ஒன்றினால் ஸமஸ்தமான ராஜ்யத்தையும் உனக்கு
அளிக்கும்படிக்கும் மற்றொன்றினால் இராமன் ரிஷி வேஷத்துடன்
கானகம் செல்லவேண்டுமென்றும் கேட்டேன். க்ஷத்திரியர் தவறாத
உனது தந்தை நான் கேட்டபடியே ராஜ்யத்தை உனக்குக் கொடு
த்து இராமனையும் காட்டுக்கே அனுப்பிவிட்டார். ஸீதையும் பதிவ்
ரதா தர்மத்தை யனுஸரித்து இராமனைப் பின்தொடர்ந்து சென்றாள்.
இலக்ஷ்மணனும் அண்ணா விடத்திலுள்ள அன்பைக் காட்டும்பொ
ருட்டு இராமனைப் பின்தொடர்ந்து சென்றான். இவர்கள் எல்லோரும்
காடுசென்றதும் அரசன் அவர்களையே நினைத்துக்கொண்டு இராமா
இராமா வென்று புலம்பிக் கொண்டு உயிர் துறந்தார் என்று கூறி
னாள்.

இவ்வுரை செவியிற் புகுந்ததும் பரதன் வச்சிராயுதத்தாலடி
யுண்ட பருவதத்தை யொத்துப் பூமிமீது விழுந்தான். அங்ஙனம்
விழுந்த பரதனைப் பார்த்த கைகேயி மிகுந்த பரிதாபமும் துக்கமு
மடைந்து "அப்பா மகனே! நீயேன் அழவேண்டும்? கிடைத்தற்
கரிய இராஜ்யமல்லவா உனக்குக் கிடைத்திருக்கிறது" என்றாள்.
பரதன் உடனே தன் அன்னையை அப்படியே எரித்துவிடுபவன்
போற் பார்த்து, 'மகாபாவி! நீ என்னோடு பேசவேண்டாம்; கொழு
னனைக் கொன்ற கொடும்பாவியாகிய உன் வயிற்றிற் பிறந்த நானும்
மகா பாவியானேன்; நான் தீயிற் குதிப்பேன்; விடத்தைப் பருகு
வேன்; அல்லது நானே வாளாலறுத்துக்கொண்டு யமனுலகத்திற்கே
னும் செல்வேன்? நீ கணவனைக் கொன்ற பாதகி; கெட்ட புத்தியு
டையவள். நீ கும்பீ பாகமென்னும் நரகத்திற்கே செல்வ
தற்குப் பாத்திரமானவள்" என்று கூறிக் கோபத்துடன் அங்கிருந்து
கௌஸல்யாதேவியின் கிரகம் சென்றான். கௌஸல்யை பரதனைக்
கண்டதும் கோவென்றலறி அழுதாள். பரதனும் அவ்வாறே கௌஸ
லையின் பாதத்தில் விழுந்து பரிதபித்தான். அந்த மகா பதிவிரதை
யான கௌஸல்யாதேவி பரதனை வாரி யெடுத்து முக வாட்டத்து
டன் அவனை நோக்கி அழுத வண்ணமே "அப்பா மகனே நீ சமீபத்
திலில்லாத இச்சமயம் இவ்வாறாய் விட்டது. உன் தாயார் செய்த
வற்றை யெல்லாம் அவள் கூற நீ கேட்டிருப்பாய். இராமன் என்
னைத் துன்பக் கடலில் தள்ளிவிட்டு சடைமுடி தரித்து மரவுரியுடு
த்துத் தன் மனைவியுடனும் தன் தம்பி இலக்ஷ்மணனுடனும் கானகஞ்

சென்றான் எனத் தெரிவித்து, ஆ! ராமா! இரகுகுலத்திலகா! பராத்
பரனாகிய உன்னைப் புதல்வனாக வடைந்தும் பாழூர துக்கம் தனை
விட்ட பாடில்லையே? விதி வலிமை கொண்டிருக்கிறது போலும்
என்று கூறி வருந்தினாள். அது கண்ட பரதன் கௌஸல்யையின்
பாதங்களைப் பிடித்துக்கொண்டு "அம்மா! நான் தெரிவிப்பதற்
குச் சிறிது செவி கொடுங்கள்; எனது தமையன் இராஜ்யாபிஷேக
நிமித்தமும், இன்னும் வேறு விஷயங்களிலும் கைகேயியால்
எது செய்யப்பட்டனவோ அவற்றை நான் அறிந்திருப்பினும்
அல்லது அவை எனது சம்பந்தத்தினால் செய்யப் பட்டிருப்பினும்,
"அப்பா! எனக்கு நூறு பிரமஹத்தி செய்த பாபம் உண்டாகக்
கடவது? வசிஷ்ட மகரிஷியை வாளினால் கொன்று அவர் மனைவி
அருந்ததியைப் புணர்ந்த பாபத்தை நான் அனுபவிக்கின்றேன்.
நான் அறிந்திருந்தால் அந்த ஸமஸ்தமான பாபங்களும் எனக்
குண்டாகும்" என்று சபதஞ் செய்து வருத்தத்துடன் கதறி
னான் பரதன்.

அப்போது கௌஸல்யை பரதனை ஆலிங்கனம் செய்து
கொண்டு "அப்பா மகனே! அவை யெல்லாவற்றையும் நானறி
வேன்; அதன்பொருட்டு நீ துக்கிக்க வேண்டாம்" என்று தேறுதல்
கூறிக்கொண்டிருந்தாள். பரதன் வந்த செய்தி கேட்ட வசிஷ்டர்
அச்சமயம் அமைச்சர்களுடன் அரசனுடைய அரமனைக்கு வந்து
புலம்பிக் கொண்டிருக்கும் பரதனைப் பார்த்து ஆதரவுடன் போதிக்
கின்றார்.

பரதா! தசரத மகாராஜா வயோதிகர், ஞானவான், ஸத்திய
ஸந்தன், பராக்ரமசாலி, இகலோகத்து இன்பங்களனைத்தையு மனுப
வித்து அசுவமேதம் முதலிய அரிய யாகங்களைச் செய்து முடித்து
ஏராளமாகத் தக்ஷிணை கொடுத்து ஆதிநாராயணமூர்த்தியையே
தமக்குத் திருக் குமாரனாகப் பெற்றார். இப்போது இந்திரனுடன்
வீற்றிருக்கச் சொர்க்கலோகம் சென்றிருக்கின்றனர். அவருக்காக
நீ வீணே வருந்துகின்றாய்; முக்திக்கு அருகரென்போர் துக்கிக்கத்
தக்கவரல்லர். ஆத்மா, நித்தியன், அவ்யயன், சுத்தன், பிறப்
பில்லாதவன்; நிர்விகாரன், நிராகாரன், நிஷ்பிரகாசன், நிரஞ்சனன்.
தேகம், ஜடம்; பரிசுத்தமில்லாதது; நிலையில்லாதது. மார்பெடுத்

துக்கொண்டு துக்கிப்பவர் மூடர்களே யாவர். சம்சாரம் ஸாரமற்ற தல்லவா? அறிஞர்கள் எப்போது அதன் சம்பந்தத்தினின்றும் விடு படுகின்றனரோ அப்போதே வைராக்கியத்திற்குப் பிரதானமாய்ச் சாந்தியாதி சுகத்தைப் பெறுவார்கள். இந்த உலகத்தில் பிறந்தோரைக் காலன் தொடர்ந்தே யிருப்பான்; ஆதலால் பிறந்தவரை மரணம் விடாது. சகல பிராணிகளும் அவரவர் புரிந்த கன்ம வசப் பட்டவர்களாகி பிறப்பிறப்பினை யடைகின்றனர். விக்ஞானத்தைப் பெற்ற வித்வான்கள் உறவினரைக் குறித்து வருந்துவார்களோ? அநந்த கோடி ஜீவராசிகளும் பிரம்மாண்ட கோடிகளும் அழிந்து போய்விட்டன கடல்களெல்லாம் வற்றியும் போயின. கணநேரம் பிழைத்திருக்கும் உடலிற்கு அழியா நிலைமை எவ்வாறேற்படும்? அசைந்து கொண்டிருக்கும் துளிரின் நுனியிலேயிருக்கும் நீர்த்திவலையைப் போல் கணத்தில் அழிவதாயிருக்கும் ஆயுளானது அகாலத்தில் பிரிந்துபோகக்கூடியது. அந்த ஸமயத்திற்கு உனக்கு என்ன அநுமானம் ஏற்பட்டிருக்கிறது. தேஹி தன்னுடைய பூர்வ ஜன்ம கர்மத்தால் மீண்டும் பிறப்பை யடைகிறான். அந்தத் தேகத்தாலேற்படும் கருமம் ஆத்மாவுக்குப் பின்னுமோர் தேகத்தைக் கொடுக்கிறது. பழைய வஸ்திரத்தை அவிழ்த்துவிட்டுப் புதிய வஸ்திரத்தை எப்படிக் கொள்ளுகிறோமோ அப்படியே தேஹியும் வலுவற்ற தேகத்தை விட்டுச் சிறந்த புதிய தேகமொன்றைக் கொள்கின்றான். இங்ஙனமிருக்கும்போது சோகமுறுவானேன்? ஆத்மா ஒருபோதும் அழிவதன்று. அல்லது அது விருத்தியடைவதுமில்லை. விகாரங்களேதுமற்றது, முடிவில்லாதது, உண்மையானது, பிரக்ஞான வடிவமானது. புத்தி முதலிய சகல உபாதிகளுமற்று எப்போதும் ஆநந்தமயமா யிருப்பது. பரமாத்மாவொருவனே எப்போதும் இரண்டற்று விளங்குபவன்; அவனை நன்கறிந்து சோகத்தை யொழித்துச் சகல கிரியைகளையும் நடத்தல் வேண்டும். ஆகவே தைலக் கொப்பரையிலிருக்கும் தந்தையின் மெய்யினை யெடுத்து எங்களுடனும் உறவினருடனுமிருந்து தகனாதி கிரியைகளை நடத்துவாய்" என்றார்.

இங்ஙனம் வஸிஷ்டர் போதிக்கவே பரதன் அக்ஞானத்தால் தான் கொண்ட சோகத்தை யொழித்துத் தந்தையின் அபரக்கிரியைமுறைப்படி நடத்தச் சித்தங்கொண்டு, வஸிஷ்டர் திருவாய் மலர்

ந்தபடியே ஆஹிதாக்கினியினால் அரசன் தேகத்தை ஸம்ஸ்காரஞ் செய்து மந்திரிகளுடன் தானும் தன் தம்பி சத்ருக்னனுமாக விருத்த கருமங்களை முடித்தான். பின் பதினோராவது நாள் வேதவிப்பிரர்களுக்கு அரசனை யுத்தேசித்து அன்னமளித்தது அளவற்ற பொன்களையும் அநேக ஆயிரம் பசுக்களையும் கிராமங்களையும் இரத்தினம் வஸ்திரம் முதலியவற்றையும் தானஞ்செய்தான். பிறகு எனதருமைத் தமையனும் சீதாபிராட்டியும் இலக்ஷ்மணனும் தன்பத்தைக் கொடுப்பதான வனத்திற்குச் சென்றுவிட்டார்களே, எனதன்னையான இராக்ஷஸியைக் காணுந்தோறும் என் நெஞ்சம் இருபிளவாய்ப் பிளந்து போகின்றதே. திடசித்தத்துடன் அரசுரிமை முதலியவற்றை நிராகரித்துவிட்டு சீதாபிராட்டி சகிதம் காட்டிற்கெழுந்தருளிய எனதருமை அண்ணா ஸ்ரீராமபிரானை சதா காலமும் நான் சேவிக்கிறேன் என்றிங்ஙனம் பரதன் கூறி எப்போதும் இராமபிரானையே தியானித்துக்கொண்டு தமது கிருகத்தில வசித்திருந்தான்.

ஏழாவது சருக்கம்

முற்றிற்று.

8-வது சருக்கம்.

பரமசிவன் கூறுகிறார்.

இவ்வாறு பரதனிருக்கையில் வசிஷ்டர் அநேக முனிவர்களுடன் இந்திர சபைக்குச் சமமான இராஜ சபைக்கு வந்தனர். மந்திரிமார்களும் அங்கெழுந்தருளினர். இரண்டாவது பிரமதேவனுக்குச் சமானமான வசிஷ்டர் அங்கோருயர்ந்த ஆசனத்திலமர்ந்து பரதனைச் சத்ருக்னனோடு அவ்விடத்திற்கு வரவழைத்து ஒரு புறம் நிற்கச் செய்து அவனைப் பார்த்து, காலதேசத்திற் கேற்றவாறு சில வார்த்தைகள் தெரிவிக்கிறார்.

அப்பா! பரதா! தந்தையின் நியமனப்படி நீ இப்போது இராஜ்யாபிஷேகம் செய்து கொள்ளக்கடவாய்; புருஷசிரேஷ்டனே! உன் பொருட்டுத்தானே கைகேயி இந்த அரசுரிமையை யாசித்தனள். சத்தியசந்தனாகிய உன் தந்தை சத்தியத்தைக் காக்கவேண்டி அவ்வாறே தந்தனனல்லவா? ஆகையால் இப்போதே முனிவர்களுடன் மந்திரவிதிப்படி இராஜ்யாபிஷேகம் செய்துகொள் என்றனர். அதைக்கேட்ட பரதன் வசிஷ்டரை நோக்கி, இராஜ்யத்திற்கும் எனக்கும் என்ன பாத்தியம். இராஜாதிராஜனாகிய ஸ்ரீராமபிரானே உரியவர். நாங்களெல்லோரும் அவருடைய ஊழியர்கள். காலை விடியும் நேரத்திலேயே நாமெல்லோரும் சென்று அவரை இங்கு அழைத்து வருவோம். இராக்ஷஸியான கைகேயியைத் தவிர மற்ற தாய்மார்களுடன் நாமெல்லோரும் செல்லுவோம். கணவனுயிரை யுண்ட கைகேயியை இப்போதே கொன்று விடுவேன். இவன் பெண்கொலை செய்தானென்று இராமபிரான் என்னைப் பிரியத்துடன் ஏற்றுக்கொள்ளாரெனவே கவலைப் படுகிறேன். ஆகையால் நான் நாளையதினமே தண்டகாரண்யத்திற்குக் கால்நடையாய்ப் போகவேண்டும். நீங்களதப்ருச் சம்மதித்து என்னுடன் வந்தாலும் வராவிட்டாலும் நானும் சத்ருக்னனும் செல்வோம். இராமபிரான் வனஞ்சென்றவாறே அவருக்கு இளையவனாகிய நானும் மரவுரி யுடுத்து வனம் சென்று காய்கனிகளையே தின்று அவர் திரும்பி வருகிறவரையில் கானகத்திலேயே யிருந்து சத்ருக்னனுடன் சடைமுடி தரித்துத் தரையிற் படுத்துத் துயில்வேன் என்று தீர்மானமாகக் கூறி மௌனமாயிருந்தான். அப்போது அங்கிருந்தாரனைவரும் ஸந்தோஷமடைந்து நீர் சொல்லியது மிகவும் ஸரியானது என்று பரதனைப் புகழ்ந்தார்கள். பிறகு மறுநாள் விடியற்காலம் பரதன் புறப்பட்டான். மந்திரி சுமந்திரனது உத்தரவுப்படி சேனைகளும் யானை குதிரைகளுடன் புறப்பட்டன. கௌசலை முதலிய இராஜபத்தினிகளும் வசிஷ்டர் முதலிய பிராமணோத்தமர்களும் கூடவே புறப்பட்டுச் சென்றனர். அப்பொழுது புவியில் முன்னேயும் பின்னேயும் இருபக்கங்களிலும் சேனைகள் சூழ்ந்து நின்றன.

இங்ஙனஞ்சென்ற இவர்கள் சத்ருக்னனுடைய ஆக்ஞையினால் சிருங்கிபேரபுரத்தை யடைந்ததும் அங்குத் தங்கினர். பரதாழ்வான் வந்திருக்குஞ் செய்தியை குகன் அறிந்ததும் இவ்வளவுந்து

சேனைகளோடு பரதன் இப்போது இங்கே பயணப்பட்டு வரக்காரண மென்ன வென்று யோசித்து உண்மை புணராதவனாய், இராமச்சந்திரனுக்கு ஏதேனுந் தீங்கிழைக்கக் கருதி வந்திருக்கின்றனர் போலு மெனக் கருதித் தன்னைச் சேர்ந்த சில வீரர்களை ஆயுதபாணிகளாய் நாலுதிக்குகளிலும் பார்த்துக்கொண்டிருக்கப் பணித்தான். பின்பு பரதனிடம் போய்ப் பார்ப்போம்; அவன் பரிசுத்த மனமுடையவனாயிருக்கின் படகிலேற்றிக் கொண்டுபோய்க் கங்கையின் அக்கரை சேர்ப்போம், எனச் சிந்தித்து காணிக்கைகளை யெடுத்துக் கொண்டு தன்னைச் சில ஆயுதபாணிகள் சூழ்ந்து வர பரதனை நோக்கிச் சென்றான்

அருகே சென்றதும் பரதன் இடையில் மரவுரியுடுத்தும் முடியில் சடாமகுடங் கொண்டும் சதா இராமா இராமா என்று கூறி அவரையே நினைத்துக் கொண்டு தம்பியுடன் மந்திரிகள் புடைசூழ விளங்குவதைக் கண்ட குகன் தான் கொண்டு போன காணிக்கைகளெல்லாவற்றையும் சமர்ப்பித்து அடியேன் குகனெனச் சொல்லி நமஸ்கரித்தான் உடனே பரதன் குகனை அன்போடு வரவேற்று ஆலிங்கனஞ் செய்துகொண்டு க்ஷேமம் விசாரித்து "தம்பி! குகனே! நீ இராமபிரானுடன் இங்கிருந்தா யல்லவா? பரிசுத்த ஆத்மாவாகிய அவர் உன்னை அன்போடு பார்த்து ஆலிங்கனஞ் செய்யப் பெற்றாயன்றோ? அவருடன் சம்பாஷிக்கும் பாக்கியமுடைய நீ தன்னியனானாய்; தாமரைக் கண்ணனாகிய இரகுபுங்கவரை சீதா இலக்ஷ்மணருடன் நீ தரிசித்த இடமெதுவோ அவ்விடத்திற்கு என்னையும் அழைத்துக் கொண்டுபோ. அவர் சீதா தேவியுடன் சயனித்து நித்திரை செய்த இடமெதுவோ, அதை எனக்குக் காட்டவேண்டும் நீ இராமபிரானுக்குப் பரமபக்தனானமையால் நீயே பாக்கியசாலி ஆகின்றாய்" என்று கூறி, இராமபிரானை நினைத்துக் கண்களினின்றும் நீர் பெருக்கி விசனமுற்றான். பின் குகனுடன் இராமர் எழுந்தருளியிருந்த விடத்திற்குச் சென்று அங்கே தருப்பைப்புல் சருகு முதலியன பரப்பப் பட்டிருப்பதையும் சீதாதேவியின் கையிலுள்ள பொன் நூல்கள் பதிந்திருப்பதையும் பார்த்து "ஓகோ சீதா தேவி அதியுவதி யாயிற்றே! சிறந்த உப்பரிகையின் மேல் விலையுயர்ந்த மஞ்சத்தின் மீது அழகான புஷ்பப் படுக்கையில் இரகுகுலதிலகனோடு சயனம் செய்யும் தேவி இப்பொழுது தருப்பைப் புல்லிற் படுக்க நேர்ந்ததே! ஐயோ! இது எனது

தோஷத்தினால் விளைந்த துக்கம். பாபமே ஒருருக்கொண்டதற் கொப்பான கைகேயின் வயிற்றில் நான் பிறந்தது நிந்தைக்கேது வாயிற்று. பரமாத்மாவான இராமச்சந்திரனுக்கு என் நிமித்தமாக வன்றோ இப்படிப் பட்ட துன்பமேற்பட்டது. ஆ! மகாத்மாவாகிய இலக்ஷ்மணனுடைய ஜன்மம் பலனைப்பெற்றது. கானகத்திலிருந்தா லேயாயினும் காகுஸ்தருடனிருப்பதால் கவலையற்றிருக்கின்றான் எனதருமை அண்ணாவின் அடியேனுக்கு அடியேனாவேனேல் என் ஜன்மமும் ஸபலமடையும் இதிற் சந்தேகமில்லை" என்றிவ்வாறு துயர முற்றான், பின் மறுபடியும் குகனை நோக்கி, தம்பி! எனதண்ணா முதலானவர்களைப்பற்றி உனக்குத் தெரிந்த விஷயம் ஏதேனுமிருப் பின் அதை எனக்குத் தெரிவிக்க வேண்டும். அந்த இடத்திற்குச் சென்று அவர்களையழைத்து வரப் போகின்றேன் என்றான். அது கேட்ட குகன், பரதன் நல்ல எண்ணங்கொண்டவனென்று தீர்ந்து, மிக ஸ்நேகத்துடன் அவனைப் பார்த்து, "சுவாமி! தமக்கு இத்தகைய பக்தி எப்போதேற்பட்டதோ அப்போதே நீர் தன்னிய ரானீர். தாமரைமலர் போன்ற நேத்திரமுடையவராகிய இராமச் சந்திரமூர்த்தி சீதா இலக்ஷ்மணருடன், சித்திரகூட பருவதத்திற் கருகே மந்தாகினி நதிக்குக் கொஞ்சதூரத்தில் தவசிகள் வசித்து வரும் ஆச்சிரமத்தில் எழுந்தருளி யிருக்கின்றார். சீதாதேவி யுடன் ஜகத்பிரபு சுகமாயிருக்கின்றார் என்றான். பரதன் ஆனால் அங்கே நாமும் போவோம், விரைவில் கங்கையைக் கடக்கச்செய்யு மென்றான். உடனே குகன் ஐந்நூறு ஓடங்களைக் கொண்டு வரும் படி செய்து அவற்றில் ராஜபரிவாரங்களை யேற்றி அக்கரை கொண்டு போய்ச் சேர்த்தான். பிறகு அரசர்கள் ஏறுவதற்குத் தகுதியான படகு ஒன்றைக் கொண்டுவரச் செய்து அதில் பரதன் சத்துருக் னன் வஸிஷ்டர் தாய்மார்களான கௌசலை, கைகேயி, சுமித்திரை ஏனையபெண்கள் இவர்களை ஏற்றிக் கொண்டு போய் தானே அக்க ரைசேர்த்தான். பின் அவர்கள் எல்லோரும் பரதவாஜாச் சிரமத்திற் குப் போய்ச் சேர்ந்தனர்..

ஆச்சிரமத்திற்குச் சிறிது தூரத்திலேயே பரதன் தனசேனைகளை நிறுத்தி விட்டுத் தானும் தம்பியுமாகச் சென்று முனிவரைக் கண்டு பயபக்தியுடன் அவரைப்பணிந்து நிற்க, பரதவாஜர் பரதனை இன்னா ரென்று தெரிந்துகொண்டு அன்புடன் உபசரித்து க்ஷேமம் விசாரி

த்துப் பின் அவர்களிருவரும் மரவுரி தரித்திருப்பதைப் பார்த்து, இராஜ்யபரிபாலஞ் செய்யப்பட்டவுனக்கு இந்தக் கோலமென்னத்திற்கு? முனிவர்கள் வசிக்கத்தக்க இந்தவனத்திற்கு வந்ததன் காரணமென்ன? என்று கேட்டார். பரதன் அந்த முனிவரைப் பார்த்து கண்ணீர் சொரிந்து, "சுவாமி! நீர் சர்வபூதங்களிலுமிருந்து சகலத்தையும் அறிபவல்லவரன்றோ? அப்படியிருந்தும், எதையுமறியாதவர் போல் என்னைக் கேட்டதும் அநுக்கிரகந்தான். இராமரது பட்டாபிஷேகத்திற்குக் கைகேயியாற் செய்யப்பட்ட இடையூறுகளையும் அவரைக் காட்டிற்போகும்படி செய்ததையும் நானறியேன். முனிவர் பெருமானே! தமது பாதமலரே அதற்குப் பிரமாணம் என்று கூறிப் பரதன் அவரது திருவடியை அன்போடு தொட்டு, ஐயனே அடியேன் சுத்தன் அசுத்தன் என்பதை நீரே யறிவீர்; அரசுரிமையைப் பற்றி யடியேனுக்கு யாதுளது? இராமச்சந்திர மூர்த்தியல்லவா இராஜ்ய சம்பத்துக் குரியவர்; அந்த இரகுநாயகனுக்கு நான் எப்பொழுதும் அடிமையல்லவா? ஆகையால் அவரிடம் சென்று அவர் வேண்டாமென்று சொல்லி வந்த இராஜ்ய சம்பத்தை அவரிடமே சமர்ப்பித்து அந்த இடத்திலேயே வசிஷ்டர் முதலியவர்கட்கு முன்னிலையில் பட்டாபிஷேகஞ் செய்வித்து அயோத்திக்கு அவரை யழைத்து வருவேன் என்று பிரதிக்ஞை செய்தான்.

இவ்வார்த்தைகளைக் கேட்டதும் முனிவர் என்றுமடையாத சந்தோஷமடைந்து பரதனை ஆலிங்கனஞ் செய்து கொண்டு அவனைப் பார்த்து, குழந்தாய்! ஞானக்கண்ணால் இவை யனைத்தையும் நாம் முன்னமேயே யறிவோம். நீ துக்கப்பட வேண்டாம் இலட்சுமணனைவிட நீயே இராமபிரானுக்குப் பரம பக்தன். அப்பனே உனக்கும் உன் சேனைகளுக்கும் நான், இன்று விருந்து செய்விக்க விரும்புகிறேன். இன்று சேனைகளுடன் இங்கே தங்கியிருந்து போஜனமுண்டு நாளைய தினம் இராமபிரானிடம் போகலாம் என்றார். பரதன் தங்கள் உத்தரவு எப்படியோ அப்படியே செய்கிறேன் என்று கூறிச் சம்மதித்துத் தன் சேனைகளுடன் அங்கிருப்பதாகத் தீர்மானித்தான்.

பிறகு பரத்வாஜ முனிவர் ஹோமசாலைக்குச் சென்று, மௌன விரதத்தோடு ஜலத்தைத் தொட்டு தம் வசமிருக்கும் காமதேனுவை நினைத்தார். உடனே அந்தக் காமதேனு பரதனுக்கும் அவன்

சேனசமுத்திரத்திற்கும் அவரவர் விரும்பியவாறுணவளிக்க வெண்ணி முதலில் அருந்ததி நாயகனாகிய வசிஷ்டருக்கு அர்க்கிய பாத்திய ஆசமன மளித்துபசரித்து, பிறகு பரதனையும் அவன் சைன்னியத்தையும் திருப்தி செய்வித்தது. பிறகு எல்லோரும் சொர்க்கலோகம்போல் விளங்கின அவ்வாச்சிரமத்தில் ஒரு நாள் தங்கி யிருந்தனர்.

மறுநாள் பொழுது புலர்ந்ததும் பரதன தம்பி சத்ருக்னனுடன் பரத்வாஜரிடம் விடை பெற்றுக் கொண்டு இராமரிருக்கும் சித்திரகூட பர்வதஞ் செல்லப் புறப்பட்டான். சித்திரகூடத்திற்குச் சமீபஞ் சென்றதும் தன் சேனைகளைத் தூரத்திலேயே நிறுத்தி விட்டுப் பரதனும் சத்ருக்னனும சுமந்திரன் குகன் இவர்களுடன் சென்று தவசிகள் வசிக்குமிடங்களெங்கும் தேடிப் பார்த்தார்கள். இராமனை எங்குங் காணப் பெறாமல் அங்கிருந்த முனிவரைப் பார்த்து இராமர், இலட்சுமணர் சீதை இவர்களுடன் எங்கிருக்கின்றார் என்று கேட்டான் பரதன். அந்த முனிவர் கங்கைக் கரைக்கு வட கரையிலுள்ள பருவதத்தி லிருக்கிறார் என்று காட்டினார். காய் கனிகளுடன் கூடிய மா, வாழை, வகுளம், செண்பகம், புன்னாகம் முதலிய பல மரங்களடர்ந்த இரமணீயமான அந்த வனத்தில் சீதா பிராட்டி, பிரியத்தையே செய்யும் இராமபிரான் தன் தம்பியுடனிருந்து வரும் பர்ணசாலையைக் கண்டு தூரத்திலிருந்தே தரிசித்தார்கள். அங்கே சுற்றிலுமிருந்த மரங்களில் மரவுரிகள் உலரப்போட்டிருக்கவும் கண்டார்கள்.

எட்டாவது சருக்கம்

முற்றிற்று.

9-வது சருக்கம்

பரமசிவன் கூறுகிறார்.

பின் பரதாழ்வானும் சத்ருக்னனும் விரைவாகச் சென்று அவ்வாச்ரமத்தைக் கிட்டியதும் அங்கே பரிசுத்தமும் பிரகாசமுமான இராமபிரானது பாதத்தின் அடையாளமிருப்பதையும் அதில் அங்குசம், வச்சிரம், துவஜம், அரவிந்தம் முதலியனவும் தெரியக் கண்டு "இது இராமபிரான் வசிக்குமிடம், எவ்வளவு மங்களகரமாக விருக்கிறது" என்று சொல்லிக்கொண்டே இருவரும் அந்த இடத்தில் விழுந்து புரண்டார்கள்.

பிறகு இருவரும் "ஆகா! நாமெவ்வளவு தன்னியரானோம். இரகுபுங்கவனது பாதாரவிந்தத்தாலலங்கரிக்கப்பட்ட பூப்பிரதேசத்தைக் கண்டோம். அந்த பரம்பொருளினது திருவடித்தூளி பிரமன் முதலிய தேவர்களாலும் வேதங்களாலும் எப்போதும் தேடத்தகுந்ததல்லவா!" என்றிவ்வாறு மனதிலெண்ணிக் கொண்டு இராமபிரானைத் தியானித்தவாறே கண்களில் ஆனந்தபாஷ்பம் ததும்ப அவரது சந்நிதானம் அடைந்தனர். அறுகன் துளிர் போன்ற ச்யாமள நிறமும் பரந்த நேத்திரமும் சடைமுடியும் மரவுரியும் உடையவராய் இளஞ்சூரியனைப் போன்ற காந்தி வீசு சீதாபிராட்டியுடன் இலட்சுமணனருகிலிருந்து சேவிக்க வெகு விநோதமாக விருந்தவருமான இராமச்சந்திர பிரபுவைக் கண்டதும் கண்களிலிருந்து ஆனந்தபாஷ்பம் பெருக ஓடி அவரது திருவடி மலர்த்துணையைப் பிடித்துக்கொண்டான் பரதன். இராமபிரான், பரதனென்றறிந்ததும், தன் இருகரங்களாலும் எடுத்து மார்போடணைத்து மடிமீதுட்காரவைத்து கண்களிலிருந்து பெருகும் நீரால் அவன் தேகத்தைக் குளிப்பாட்டி அடிக்கடி தழுவிக்கொண்டார். பிறகு தாகத்துட னிருக்கும் கோக்கள் நீரைக் கண்டவிடத்து ஓடுவதுபோல் தாய்மார்கள் எல்லோரும் இரகு நந்தனரைப் பார்க்க ஓடிவந்தனர். இராமர்

தம் அன்னை கௌஸல்லையைக் கண்டதும் எழுந்து அந்த அம்மனது திருவடிகளில் விழுந்து பணிந்தார். கௌஸல்லை யும் தன் மகனை இருகரங்களாலும் வாரியெடுத்துக் கண்ணீர் பெருகத் தழுவிக் கொண்டாள். சக்ரவர்த்தியின் மனைவியாகிய மற்ற வரையும் இராமபிரான் அவ்வாறே அன்போடு பணிந்தார். அவர் களோடு வந்த வசிஷ்டமுனிவரைக் கண்டதும் இராமபிரான அவர் திருவடி மலரிற் சிரந்தோய வணங்கி தன்னியனானே னென்றார். இவ்வாறே அங்கு வந்தவ ரெல்லாரையும் உபசரித்து ஆசனத்தில் வீற்றிருக்கச் செய்து, "என் தந்தை எப்படி யிருக்கின்றார்? சுகமா யிருக்கின்றனரா? பெருந் துக்கத்தில் மூழ்கி யிருந்த அவர் என் பொருட்டு உங்களிடம் என்ன சொல்லிவிட்டனர்" என்று கேட் டார். அப்பொழுது வசிஷ்டர் "இராமா உன் தந்தை உனது பிரி வாற்றாமல் வருந்தி எப்போதும் இராமா! இராமா! சீதா! இலக்ஷு மணா! என்று சொல்லிக்கொண்டிருந்து பிராணனை யிழந்தார் என் றார். அங்ஙனம் கூறிய குருவின் வார்த்தை இராமபிரானது செவி களில் சூலாயுதத்தாற் குத்தியது போல் துன்ப முண்டாக்கியது. உடனே "ஆ! அழிந்தேன்" என்று புவியில் விழுந்தார். சகோத ரரும் சோகமுற்றனர். அது கண்ட எல்லோரும் அழத் தொடங் கினர். இராமபிரான் ஆ! என ஐயனே! என்னை இங்கு விட்டு எங் குச் சென்றீர்? என்னிடம் மிகுந்த அன்புடையவரே; அதி புஜபல முடையவரே! இனி நான் அநாதையாய் விட்டேனே! இனி யென்னை யார் லாலனம் செய்வார்?" என்று புலம்பினர். சீதாதேவியும் இல ட்சுமணரும் இவ்வாறே கூறிப் புலம்பினர். இப்படிப் புலம்பும் அவர்களை அருந்ததியின் அருந்துணைவரான வசிஷ்டர் சாந்த மான வசனங்களால் சமாதானப்படுத்தி எல்லோரையும் அழைத் துக் கொண்டு மந்தாகினி நதி சென்றார். அங்கே யாவரும் ஸ்நா னம் செய்தார்கள். "இராமரும் இலட்சுமணரும் தந்தைக்குச் செய்ய வேண்டிய கிரியைகளைக் கிரமப்படி நடத்தி முடித்தார்கள். இங்குதிபலத்தின மாவில் தேனைவிட்டுப் பிசைந்து பிண்டம் வைத் தனர். பின் எல்லோரும் மறுபடியும் அந்நதியில் ஸ்நானஞ்செய்து ஆச்சிரமம் திரும்பினார்கள். அன்று முழுதும் இராமபிரான முதல் நால்வரும் உபவாசமிருந்து மறுநாள் மந்தாகினியில் ஸ்நானஞ்செ ய்து ஆச்சிரமம் வந்திருந்தார்கள்.

இப்போது இராமபிரான் தனித்திருக்கும் சமயம் பார்த்திருந்து பரதன் அவரிடம் போய், அண்ணலே! ஆனந்தரூபியே! மகாபாக்கியசீலரே!! தாங்களே பட்டாபிஷேகம் செய்து கொள்ள வேண்டும் அண்ணா! நமது தந்தையின் இராஜ்யத்தைத் தாங்கள் பரிபாலித்தல் வேண்டும். எனக்கு மூத்தவராகிய தாங்கள் தந்தையைப் போலல்லவா ஆகிறீர். பிரஜைகளைப் பரிபாலித்தலே க்ஷத்திரியர் முறையாகும், பற்பல விதமான யாக யக்ஞங்களைச் செய்து புதல்வனை யடைந்து அவன் வசம் அரசுரிமையை யொப்புவித்த பின்பல்லவா வனத்திற்கு வரவேண்டும். ஆகையால் இது தக்க காலமாகுமா வனவாசத்திற்கு? அடியேனுக்குத் திருவுளமிரங்க வேண்டும். "என் தாய் செய்யத் தகாததைச் செய்து விட்டாள், அதைச் சிந்தையிற் கொள்ளாது எங்களை இரக்ஷிக்கவேண்டும்" என்றிவ்வாறு கூறிச் சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து காகுஸ்தர் முன்னிலையில் வெட்டுண்ட மரம்போல் கிடந்தான்.

இராமபிரான் அப்படித் திருவடியில் விழுந்த பரதனை இரண்டு கரங்கொண்டெடுத்து மடிமீதிருத்தி அன்புடையவராய் அவனைப் பார்த்து, "அப்பா! நான் கூறுவதைக்கேள்; நீசொல்லிய வெல்லாம சரி; ஆயினும் தந்தையுரைத்த வண்ணம் பதினான்கு வருடத்தையும் இந்த வனத்திற் கழித்துப் பின்பே நகரத்திற்கு வரக்கூடும்; அது வரையில் அரசுரிமை யெல்லாம் உன்னுடையதே" என்றார். அன்றியும் பிதாவே எல்லோருமறிய உனக்கு இராஜ்யத்தைக் கொடுத்திருக்கின்றார். தண்டகாரண்ய வாசத்தை யெனக்குத் தந்தார். ஆகையால் அவர் வாக்கை பிரயத்தினஞ் செய்தேனும் நாம் நிறைவேற்றாது அவர் சொன்ன வாக்கைக் கடந்து நடக்கப் போமோ? அப்படிப் பட்டவர் உயிருடனிருந்தாலும் இறந்தவரே யாவர்; அல்லாமலும முடிவில் நரகத்தையே யடைவர். ஆகையால் நீயே இராஜ்யபரிபாலனஞ் செய்தல் வேண்டும், நான் இந்தத் தண்டகாரண்ய பரிபாலனஞ் செய்தலே கடன்" என்றார் இராமர்.

இப்படிப் பேசிய இராமச்சந்திரரைப் பார்த்து, "அண்ணா! பிதா! கைகேயின் வசத்திற் சிக்கிக் காமுகராயிருந்து மயங்கிய புத்தியோடு கூறியவை ஏற்கத் தக்கனவாமோ? புத்திமான்கள் அவற்றைப் பிதற்றலென்றல்லவா சொன்னார்கள். அது பிரமாணமாவதெப்படி?" என்றான் பரதன்.

ஸ்ரீ ராமர் கூறுகிறார்.

இதைக்கேட்டதும் இராமர், "அப்பா! பரதா! தந்தை காமியன்று; கைகேயின் வசத்திலகப்பட்டவரு மல்லர்; அறிவீனமான புத்தியுடைய வருமல்லர்; முன்னொரு சமயம் தாம் கொடுத்திருந்த வரங்களாதலால் அவற்றைத் தவறி நடப்பது அசத்தியமாகு மென்றஞ்சியே இப்படிச் செய்தனர். அசத்தியமே அறிவுடையோர்க்கு நரகத்தினும் அச்சமுண்டாக்கும்; ஆகையால் சத்திய தவறுமே யென்றஞ்சிச் செய்ததாகும். அதறிந்திருந்த நானும் சத்தியங் கெடாதிருக்கட்டு மென்று சொல்லி வந்தேனை இப்போது னைக் கிசைந்து எப்படி அவ்வார்த்தையை அசத்திய மாக்குவேன்? நான் இரகுவம்சத்திற் பிறந்தவனல்லவா?" என்றார்.

விரதசீலனாகிய பரதன், "அண்ணா! அப்படியானால் நானே யாவரிதரித்துப் பதினான்கு வருடகாலம் வனத்தில் வசிப்பேன்; தாங்கள் இராஜ்யத்தைச் சிறந்த போகியாய் ஒப்புக்கொள்ளுங்கள்" என்றான்.

இராமர் கூறுகிறார்.

பரதா! அப்படியல்ல; பிதா உனக்கு இராஜ்யத்தைக் கொடுத்தார். எனக்கு வனவாஸத்தைத் தந்தார். அதற்கு மாறாக நடப்பது அசத்தியமாகும் என்றார்.

பரதன் கூறுகிறான்.

ஆனால் சரி, நானும் இலட்சுமணனைப் போல் உம்முடனிருந்து உமது பணிவிடை புரிந்து வருகிறேன். இல்லாவிட்டால் இக்கணமே பிராயோபவேசத்தால் பிராணனை விடுவேன் என்று கூறி இடுசித்தனுய்த் தரையில் தருப்பையைப் பரப்பி கிழக்கு நோக்கித் திரும்பினர். இப்படி பரதன் நிர்ப்பந்திப்பதைக் கண்ட இராமசந்திர மூர்த்தி அதிக ஆச்சரிய மடைந்து அப்பொழுது அருகே யிருந்த வசிஷ்டருக்குக் கண்ணால் சமிக்ஞை செய்தார்.

அந்த சமிக்ஞையை யறிந்த ஞானிகளுக்குள் சிறந்த வசிஷ்ட முனிவர், பரதனைத் தனியே யழைத்துப்போய் இரகசியமாய் "அப்பா! குழந்தாய்! ஒரு இரகசியங் கேள்; இராமபிரான் ஸாக்ஷாத் நாராயணன். ஆதியில் பிரமதேவனது பிரார்த்தனைக் கிணங்கி இராவணன் முதலிய அசுரர்களைக் கொல்வதற்காக, தசரதசக்கரவர்த்திக்குப்

பிள்ளையாகப் பிறந்திருக்கிறார். அவருடைய யோகமாயையே ஜனக மஹா ராஜனுக்குப் புத்திரியாகப் பிறந்த சீதை. ஆதிசேஷனே இலக்ஷ்மணனாக அவதரித்தான். ஆகையால் அவன் எப்போதும் இராமபிரானுடனே யிருப்பான். இப்போது அவர்கள் புறப்பட்டு வந்தது இராவண சம்ஹாரத்தின் பொருட்டேயாம். இதில் சிறிதும் சந்தேக மில்லை. கைகேயி வரமென்கிற காரணமாகக் கூறிய கடுமையான வார்த்தைகளெல்லாம் தெய்வகதியாலேற்பட்டவை. அப்படியில்லையாயின் அவள் அவ்வாறு பேசியிருப்பாளா? ஆகையால் பரதா! உன் அண்ணாவை அழைத்துப் போகக் கொண்டிருக்கும் விருப்பத்தை விட்டுவிடு. தாய்மார்களையும் சேனைகளையும் அயோத்திக்குச் செல்ல உத்தரவுசெய். நீயும் தம்பியுடன் அயோத்திக்குத் திரும்பு. இராமபிரான் இராவணனை அவன் குலத்தோடழித்துப் பிறகு சீக்கிரத்தில் அயோத்திக்கு வந்து சேருவார் எனக் கூறினார்.

இப்படி வஸிஷ்டர் ஹிதவசனங் கூறக்கேட்ட பரதன் மிகுந்த ஆச்சரியமடைந்து, உடனே இரகு நாயகனிடம் சென்று முகமலர்ச்சியுடன் அவரைப் பார்த்து, "இராஜேந்திரா! உமது பாதுகைகளை யேனும் கொடுத்தருளும்; அரசுரிமையை அவற்றினிடம் ஒப்புவித்து நீர் திரும்பி வருமளவும் அவற்றையே ஆராதித்துக் கொண்டிருக்கிறேன்" என்றான். இராமர் அதற்கிசைந்து திவ்யபாதுகைகளில் தமது உபய சரணங்களின் அடையாள மிட்டு அவற்றை மிகுந்த அன்போடு பரதனுக்குக் கொடுத்தனர். இரத்தினங்க ளிழைக்கப் பெற்ற அந்த திவ்யபாதுகைகளைப் பெற்றுக் கொண்டு இராமனை வலம் வந்து பன்முறையும் வணங்கி அவரைப் பார்த்து, "அண்ணா! கூறிய, பதினன்கு வருடமும் கடந்த மறுதினமே நான் தங்களைப் பாராவிட்டால், உடனே, அக்கினிப் பிரவேசஞ் செய்து உயிர்துறப்பேன்" என்றான் இராமபிரான் "அப்பா! பரதா! நான் வராவிட்டால், அப்படியே செய்," என்று கூறி பரதனுக்கு விடைகொடுத்தார். பரதன் சைன்னியம், தாய்மார், அமைச்சர்கள், ஆசாரியர்கள் இவர்கள் சூழ்ந்து வர அங்கிருந்து பிரயாண மானான்.

அச்சமயம் கைகேயி இராமச்சந்திரனிருக்கு மிடத்திற்குத் தனியே வந்து கைகுவித்துக் கண்களினின்று கண்ணீர் பெருக நின்று ஏ இராமா! உனது மாயையால் மோகிக்கப் பட்டேன். அதனால் உன் யுவராஜ்யாபிஷேகத்திற்குத் தடையைத் தேடி

னேன்; எனது அறியாமையைப் பொறுத்துக் கொள்ள வேண்டும், சாதுக்களுக்குப் பொறுமையல்லவோ பிரதானம்? நீ ஸாக்ஷாத் நாராயணமூர்த்தி, அவ்யக்தன், ஸநாதனனான பரமாத்ம ஸ்வரூபி; மாயாமானிட ரூபத்தினால் இந்த மண்ணுலகத்தை மயக்கச் செய்கின்றாய். உலகத்தி லுள்ளோர் உனது பிரேரணையினால் நன்மை தீமைகளைச் செய்கின்றனர். இந்த உலகமுழுதும் உனக்குள்ளடங்கியது. ஸ்வதந்தரமில்லாத இவற்றால் என்ன செய்தல் கூடும்? ஆட்டுவோனுக்கு வசப்பட்டு ஆடுகின்ற பதுமையைப் போல் உன் ஆதீனமான மகாமாயை பல உருவங்களை யடைந்து ஆடுகின்றாள். உனது பிரேரணையினால் இந்த தேவகாரியம் என்னால் செய்யப் பட்டது. சத்ருசங்காரனே! விபோ! நான் பாபி. பாப சிந்தையால் இந்தப் பாபகாரியத்தைச் செய்தேன். நீ இப்போது எனக்குப் பிரஸன்னனாக வேண்டும். நீ தேவர்களுக்கும் எட்டாதவன். அகிலாண்டேசுவரனே! அநந்தனே! ஜகந்நாதனே! அடியேனை இரக்ஷித்தருள வேண்டும். உனக்கு நமஸ்காரம். உன்னையே சரணமடைந்தேன். புத்திரன் மீதும் பொருளின் மீதும் அடியேனுக்கிருக்கும் பாசத்தை, ஞானமென்கிற பரிசுத்தமான உன்னுடைய வாளினால் அறுத்து என்னைக் காக்கவேண்டும் என்றாள். இப்படிப் பட்ட கைகேயியின் வார்த்தைகளைக் கேட்டு காகுஸ்தன் புன்முறுவல் செய்து கூறுகிறார்.

அம்மா! உண்மையே! நீர் கூறுவது பொய்யன்று. எனது பிரேரணையின் பேரில் வாணியே உமது வாக்கிலிருந்து அவ்வாறு கூறினாள். அதுவும் தேவகாரிய சித்தியின் பொருட்டேயாம். ஆதலால், உனக்கு ஒரு குறையுமில்லை. தாயே! என்னையே மனதில் தியானித்து இரவும் பகலும் பக்தி செய்துவரின் பாச பந்தமொழிந்து விரைவில் முக்தி கிடைக்கும். நானென்றும் ஒரே பார்வையுடையவன். எனக்குப் பகைவனுமில்லை, சிநேகனுமில்லை, என்னை எவர்கள் அடைகிறார்களோ அவர்களுக்கு அநுக்கிரகம் செய்வதில் கற்பகவிருக்ஷம் போலிருந்து வருகின்றேன். தாயே! எனது மாயையினால் மோகிக்கப் பட்டவர்கள் என்னை மானிடனென்றும் இன்பதுன்பங்களுடையவ னென்றும் எண்ணுகிறார்கள். அது சரியல்ல; என்னை யறிந்து கொள்ளத்தக்க ஞானம் தெய்வயோகத்தா லுண்டாகவேண்டும்; அந்த யோகமே சம்ஸார

பந்தத்தைப் போக்கத்தக்கது, ஆதலால் சதாகாலமும் என்னைத் தியானித்துக் கொண்டே இருங்கள். அப்பொழுது எந்த வித கருமங்களும் உங்களை யடையா என்றருளிச் செய்தார்.

இவ்வாறு இராமபிரான் சொல்லக் கேட்ட கைகேயி ஆனந்தமும் ஆச்சரியமு மடைந்து அவரை வலமாகவந்து பணிந்தெழுந்து மனமகிழ்ச்சியோடு புறப்பட்டாள். பரதன் பரிவாரத்தோடும் தாய்மார்களோடும் ஆசாரியருடனும் அயோத்திக்குச் சீக்கிரமாக வந்து சேர்ந்தான். வழிநெடுக இராமபிரானையே தியானித்துக் கொண்டு வந்தான். தன் சேனைகளை யெல்லாம் ஒழுங்குப்படி அயோத்தியி லிருக்கும்படி செய்தான். தான் நந்திக்கிராமத்திற்கு வந்து அங்கே இராமரது பாதுகைகளைச் சிங்காஸனத்தில் வைத்து, இராமபிரானைப் பூஜிப்பது போல் புஷ்பம் சந்தனம் அக்ஷதை முதலியவற்றால் பூஜித்து வ்ரத நியமத்துடனிருந்து வந்தான்; கனி கிழங்குகளையே உணவாகக் கொண்டு பூமியில் உள்ள ஸமஸ்தமான இராஜ காரியங்களையுங் கவனித்து அவைகளைப் பாதுகைகளினிடத்தில் ஒப்புவித்து வந்தான். சடைமுடியும் மரவுரியுந் தரித்து இந்திரிய நிக்கிரக முடையவனாக சத்துருக்னனுடனிருந்து தரையிற் சயனித்து வந்தான். ப்ரமசரிய விரதமுடையவனாகிய பரதன் சதாகாலமும் இராமபிரான் எப்போது திரும்பி வருவாரென்ற பேராவலுடன் அவரிடத்திலேயே மனதைச் செலுத்திய வனாய்ப் பிரமரிஷியைப் போலிருந்து வந்தான்.

இராமபிரானோவெனில் சீதா இலக்ஷ்மணருடன் சிலகாலம் சித்திரகூட பருவதத்தில் வசித்துக் கொண்டிருந்தார். அப்போது அயோத்தியாபுரி வாஸிகள் இராமர், சீதா இலக்ஷ்மணருடன் அங்கிருக்கிறாரெனத் தெரிந்து அடிக்கடி அங்கே வந்து அவரைப் பார்த்துப் போகத்தலைப் பட்டனர். அதனால் இராமபிரான் அந்த பருவதத்தில் வஸிப்பதை விட்டு தண்டகாரண்யத்திற்குச் செல்ல வெண்ணி அங்கிருந்து புறப்பட்டு அத்திரி முனிவரது ஆச்ரமத்திற்குச் சென்றார். அங்கே எந்த ஜனக் கூட்டமு மில்லாமல் மிகவும் சௌக்கியமாயிருந்தது கண்டு சந்தோஷித்து மகாதேஜஸ்வியாக விளங்கும் அத்திரி முனிவரிடம் சென்று, தம்மை இன்னாரென்று தெரிவித்துக் கொண்டு அவரை நமஸ்கரித்தார். தந்தையின் ஆக்ஞைப்படி தண்டகாரண்யம் வந்தேன்; காட்டிற்கு வந்ததனால் தங்

களைத் தரிசிக்கும் பாக்கியம் பெற்றேன்; தன்னியனானேன் என்றார். அப்படிக் கூறிய இராமரது வார்த்தையைக் கேட்ட முனிவர் அவரை மகாவிஷ்ணு வென்றுணர்ந்து அர்க்கியபாத்திய மளித்து உபசரித்து, அச்சமயம் தம்மிட மிருந்த காட்டுக் கனிவர்க்கங்களை மூவர்க்கும் அன்போடளித்து உட்காரும்படி செய்து சந்தோஷமான வார்த்தைகளைக் கூறி சந்தோஷப்படுத்தினார். பிறகு இராமபிரானைப் பார்த்து என் மனைவி வயது சென்றவள். அவள் பெயர் அநஸூயை, அவள் தவத்தையே விரும்பிச் செய்பவள், அறத்தின் வழி யறிந்து நடப்பவள், அவள் உள்ளே யிருக்கிறாள். சீதை உள்ளே சென்று அவளைப் பார்க்கட்டும் என்று சொன்னார். இராமர் உடனே சீதையை நோக்கி, "நீ உள்ளே சென்று அநஸூயா தேவியைப் பார்த்து நமஸ்கரித்து விட்டுச் சீக்கிரம் வா" என்றாக்ஞாபித்தார். சீதை அவ்விதமே உள்ளே சென்று அநஸூயையைப் பார்த்து நமஸ்கரித்தாள். அநஸூயை சந்தோஷமடைந்து, இருகரங்களாலும் தழுவிக் கொண்டாள். ஆதரவுடன் விசுவகர்மாவினாற் செய்யப்பட்ட இரண்டு குண்டலங்களையும் பட்டு வஸ்திரங்களையும் கொடுத்து, தாமரை மலரை யொத்த அழகிய முகமுடையவளே! இந்த அலங்காரங்களைக் களைத்துக் கொள்ளவேண்டாம்; ஜானகி! பதிவிரதா தருமத்தை அநுசரித்து ஜகத்பிரபுவாகிய இராமச் சந்திரனுடன் கூடவே எப்போது மிரு; உன்னுடன் இராமபிரான் சீக்கிரமாக வீட்டுக்குப் போய்ச் சேருவார் என்று ஆசீர்வதித்தாள். பிறகு இராமர் இலட்சுமணர் சீதை மூவருக்கும் திவ்விய போஜனம் செய்வித்து இருவரும் அவர்முன் கைகுவித்து நின்று, "இராமா! உலகங்களைப் படைத்து அவற்றைப் பரிபாலிக்கும் பொருட்டு நீரே தேவ,மனுஷிய, திரியக் சரீரங்களை யடைகிறீர்; அந்தத் தேகத்திற்குரிய குணங்களை யடையாதவராயு மிருக்கின்றீர். ஸமஸ்தமான உலகத்தையும மோகிக்கச் செய்யும் மாயை உம்மிடம் அச்சங்கொள்ளும்" என்று கூறினார்கள்.

ஒன்பதாவது சருக்கம்.

முற்றிற்று.

அயோத்தியா காண்டம்.

முற்றிற்று.

ஆரண்யகாண்டம்.

1-வது சருக்கம்.

பரமசிவன் கூறுகிறார்.

இராமபிரான் அன்றையதினம் அங்கிருந்து மறுநாள், காலையில் ஸ்நானஞ்செய்து முனிவரிடம் உத்தரவு பெற்றுக் கொண்டு புறப்படவெண்ணி, முனிவர்பெருமானே! முனிவரெல்லாரும் வசிக்கும் தண்டகாரண்யத்திற்கு நாங்கள் போய்வருகிறோம்; உத்தரவு தரவேண்டும். வழிகாட்டும்படி உமது மாணுக்கருக்குக் கட்டளை யிடவேண்டும் என்றார். அத்திரிமகரிஷி அவ்வார்த்தையைச் செவியுற்றதும் புன்னகைசெய்து, கூறுகிறார்.

இராம! ஸமஸ்தமான ஆன்மாக்களுக்கு வழி காட்டுவோர் நீரே யாகிறீர்; அப்படியிருக்க உமக்கு வழிகாட்ட வல்லவருமுளரோ? ஆயினும் உலகத்தை யநுசரித்தவரைப்போல் நடந்து கொள்கிறீரெனத் தெரிகிறது என்றுகூறி தமது மாணுக்கர்களை இராமபிரானுடன் செல்லக் கட்டளையிட்டுத் தாமும் சிறிது தூரம் அவர்களுடன் கூடவே வழிவிடச்சென்றார். சிறிதுதூரம் சென்றதும் இராமபிரான் "நில்லுங்கள்" என்று கூறப் பின் திரும்பி தமதாச்சிரமம் வந்து சேர்ந்தார். பிறகு பங்கய நேத்திரராகிய காகுஸ்தர் அங்கிருந்து ஒரு யோஜனை தூரம் போய் ஒரு நதியைக் கண்டு, கூடவரும் முனிவரது மாணுக்கர்களைப் பார்த்து இந்நதியைக் கடப்பதற்கேற்ற உபாயம் உண்டோவென்று கேட்டார், மாணுக்கர்கள்; அண்ணலே! சிறந்ததான ஓடமொன்று சித்தமாயிருக்கிறது; உங்களை நாங்கள் ஒரு கணத்தில் அக்கரைசேருமபடி செய்வோமென்று கூறி ஓடத்தைக் கொண்டு வந்தார்கள். அதில் இராம இலக்ஷ்மணர் சீதை மூவரும் ஏறிக்கொண்டார்கள். உடனே மாணுக்கர்கள் ஓடத்தை விரைவாகச் செலுத்தி அவர்களை அக்-

களை சேர்த்து இராமபிரானை வணங்கி அவரிடம் விடைபெற்றுக் கொண்டு தமது ஆசிரியரது ஆசிரமம் வந்து சேர்ந்தார்கள்.

பிறகு இராமபிரான், சிங்கம் புலி முதலிய அநேக மிருகங்களும் பயத்தைக் கொடுக்கும் கோரரூபிகளான அரக்கர்களும் காட்டு வண்டுகளின் கோஷமுமுடைய கோரமான அந்தக் காட்டிற் செல்லுகையில், தம்பியைப் பார்த்து, இனிமேல் நாம் இங்கு வெகு ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். வில்லைநாண் பூட்டி இழுத்து வைத்துக்கொள். நான் முன்னே செல்கிறேன். நீ பாணமும் கையுமாகப் பின்னே வா? நம்மிருவருக்கும் நடுவே ஜீவாத்மா பரமாத்மாக்களுக்கிடையில் மாயை யிருப்பது போல் சீதை யிருக்கட்டும்; இங்கே அரக்கர்களின் பயம் அதிகமாயிருக்கிறது, அடே இலட்சுமணா! ஜாக்கிரதை. நாலாபக்கமும் பார்வையைச் செலுத்து; தண்டகாரண்யமென முன்னே நாம் கேள்விப் பட்டோமே, அந்த இடந்தானிது போலிருக்கிறது என்று சொல்லிக் கொண்டே சென்றார்.

இப்படிப் பேசிக்கொண்டே 'அரையோசனை தூரம் சென்றதும் அங்கோர் தடாகமிருந்தது. அதில் தாமரை நீலோத்பலம் முதலியன முளைத்திருந்தன. அதைச்சுற்றிலும் உள்ளமரங்களில் பறவைகள் கூட்டங் கூட்டமாக உட்கார்ந்திருந்தன. இப்படிப்பட்ட அழகான குளத்தினருகே சென்று அதிலிருந்த குளிர்ந்தநீரைப் பருகிக் கரைமீதிருந்த மரத்தின் நிழலிற் சற்று நேரமிளைப்பாறினார்கள்.

அப்போது பயங்கரமான பற்களையுடைய 'ஓரரக்கன் இடதுகரத்தில் சூலாயுதமும் அந்தச் சூலாயுதத்தின் முனையில் ஒரு மானிட தேகத்தை ஏந்திக்கொண்டும் கோரமாகக் கத்திக்கொண்டும் யானை, புலி, எருமை இவைகளைப் புசித்துக்கொண்டும் வரக்கண்டு உடனே பாணத்தை வில்லிற் பூட்டிக்கொண்டார் இராமர். பிறகு தம்பி இலக்ஷுமணனைப் பார்த்து, "பருத்தசரீரத்துடன் வரும் இந்த அரக்கனைப்பார், சுபாவத்திலேயே பயங்கொள்ளும் ஸ்திரீகள் பயமடையும்படி நம்மெதிரே வருகின்றான். வில்லில் அம்பைத் தொடுத்துக்கொண்டு தயாராயிரு" என்று கூறி ஜானகியைப் பார்த்து நீ பயப்படாமலிரு என்று தெரிவித்துச் சிறிதும் சலனமுறாமல் பர்வதம் போலிருந்தார். அரக்கன் இராமனையும் தம்பி இலக்ஷுமணனையும் சீதாபிராட்டியையும் பார்த்துப் பயமுறுத்தி அட்டகாசம்

செய்தான். "சடைமுடிதரித்து மரவுரியுடுத்து முனிவர் வேடம் பூண்டு வில் லம்புகளைக் கையிலேந்தி ஸ்திரீ ஒருத்தியுடன் இங்கிருக்கும் நீங்கள் யார்?" என்று கேட்டான். என்வாய்க்கு ஒரு கவளத்திற்கு நீங்களிடாவீர்களா? மலைப்பாம்பு முதலியன வசிக்கும் இந்த பயங்கரமான வனத்திற்கு நீங்களேன் வந்தீர்கள்? தெரிவியுங்கள் என்றான்.

இதைக் கேட்ட, இராமபிரான், அகங்காரமே உருக்கொண்டது போல் நிற்கும் அவனை நோக்கி, அடே, நான் இராமன், இவன் என் அன்புடையதம்பி இலக்ஷ்மணன்; இவள் எனது மனைவி; எமது பிதுர்வாக்கிய பரிபாலனத்திற்கும் உன்னைப் போன்றவரைச் சங்கரிப்பதற்குமே நாங்கள் இங்கே வந்திருக்கிறோம் என்றார்.

உடனே அரக்கன அதிகக் கோபங் கொண்டு அட்டகாசஞ் செய்து சூலத்தைக் கையிலேந்தியவாறே ஆவென்று வாயைத் திறந்து கொண்டு "அடே இராமா! உலகமெங்கும் பிரசித்திபெற்ற விராதனென்று நீ யறியாயா? இங்கிருந்த முனிவர் எல்லோரும் எனக்குப் பயந்து இவ்விடம் விட்டு ஓடிப்போய் விட்டார்கள். உங்கள் பிராணனைக் காத்துக்கொள்ள வேண்டுமாயின், சீதையை விட்டு ஆயுதங்களெதுவுமிலாமலோடிப்போங்கள், இல்லையாகில் உங்களை இந்தக்ஷணமே பக்ஷித்து விடுவேன்" என்று சொல்லிக் கொண்டு இராக்கதன் சீதையைப் பிடிக்க ஓடினான். அப்பொழுது சீதாகாந்தன் நகைத்து அவ்வரக்கனது கரத்தைத் துண்டித்து விட்டார். விராதனென்னும் அவ்வரக்கன் மிகுந்த கோபமடைந்து அகண்ட தன வாயைத்திறந்துகொண்டு இராமபிரானை நோக்கி ஓடினான். அங்ஙனம் ஓடிவரும விராதனை எதிர்த்து அவன காலை ஆச்சரியப் படும்படி கண்டித்தார். பிறகு அவ்வரக்கன பெரிய குகை போன்ற தனவாயைத திறந்து கொண்டு இராமபிரானைக் கொல்ல எண்ணி நகர்ந்து கொணடே வந்தான். அப்பொழுது இராகவன் ஓர் அர்த்த சந்திர பாணம் விடுத்து அவன் தலையைச் சேதித்தார். இரத்தம் பெருகத் தரையில் விழுந்தான் அரக்கன். அதுகணட சீதா பிராட்டி இராமபிரானைப் புகழ்ந்து ஆலிங்கனம் செய்து கொண்டாள். அப்பொழுது வானத்தில் துந்துபி வாத்தியம் முழங்கிற்று. தேவகணங்கள் ஸ்தோத்திரம் செய்தன. அப்ஸரஸ்திரீகள் ஆடினார்கள். கந்தர்வகின்னரர்கள் பாடினார்கள்.

அப்படி இரத்தம் பெருகத் தரையில் விழுந்த விராதனது சரீரத்தினின்று சுந்தரரூபமுடைய ஒருவன் பரிசுத்தமான ஆடை பசும்பொன் ஆபரணங்கள் தரித்தவனாய்த் தோன்றி ஆகாயத்தில் நின்று, கைகுவித்துப் பணிவோரது துன்பத்தைப் போக்குகிறவரும் ஸம்ஸாரமாகிய பிரவாகத்தினின்று கரையேற்றுபவரும் கருணாமூர்த்தியும் தம்மை அடைந்தவருடைய துன்பத்தைப் போக்குகிறவரும் பிரஸன்ன மனமுடையவருமான இராமபிரானின் எதிரே அடிக்கடி நமஸ்கரித்துத் தோத்திரம் செய்யலானான்.

விராதன் துதிக்கிறான்.

"இராமச்சந்திர! இராஜீவலோசன! நான் பிரசித்திபெற்ற வித்தியாதரனாயிருந்தேன். அகாரணமாக துர்வாஸ முனிவரின் சாபத்தை யடைந்தேன். இப்போது தங்களால் அச்சாபத்தினின்று விடுபட்டேன். ஸம்ஸாரநிவர்த்தியின் பொருட்டு உமது சரணாரவிந்த நினைவு எனக்கு எப்போது மிருக்கவேண்டும். எனது நாவுனது நாம சங்கீர்த்தனத்தைச் சதாகாலமும் செய்யவேண்டும். எனதிரண்டு செவிகளும் உமது சரித்திரத்தையே எப்போதும் கேட்கவிரும்பவேண்டும். எனதிருகரங்களும் உமது சரணகமல அர்ச்சனையே எப்போதும் செய்தல் வேண்டும். எனது சிரம் உமது திருவடியையே வணங்க வேண்டும். பரிபூர்ணானந்த சொரூபனே! ஸ்ரீராமா! சீதாராம! சிருஷ்டிகர்த்தாவாகிய உமக்கு நமஸ்காரம். என்னை இரக்ஷிக்கவேண்டும். உமது கட்டளையால் தேவலோகம் செல்கிறேன். உமது மாயை என்னை நெருங்காவண்ணம் அநுக்கிரகிக்கவேண்டும்" என வேண்டினான்.

இங்ஙனம் ஸ்தோத்திரஞ் செய்த விராதனுக்கு இராமபிரான் பிரத்தியட்சமாகி "வித்தியாதர சிரேஷ்டனே! உன் விருப்பப்படி நீ போகலாம். மாயையினா லுண்டாகும் குற்றங்களெவையும் ஜயிக்கப்பட்டுப் போயின. எமது தரிசன மாத்திரத்தில் நீ முக்தனாய் விட்டாய். நீ ஞானிகளுக்குட் சிறந்தவனு மானாய். நமது பக்தி வாய்க்கப் பெறுவது உலகத்தில் அருமை. அது எவனிடமிருக்கிறதோ அவன் முத்திபெறுவான். ஆகையால் பக்திச் செல்வம் வாய்க்கப்பெற்ற நீ நமது கட்டளையால் பரமுத்தியை யடைவா" யென அநுக்கிரஹித்தார்.

இவ்வாறு விராதன் இராமபிரானால் வதையுண்டு சாபவிமோசனமடைந்து வித்தியாதரத் தன்மையையும் வரதானத்தையும் பெற்றான். ஆகையால் இராமபிரானுடைய கருணையால் ஜீவர்கள் தங்கள் அபீஷ்டங்களை யெல்லாம் பெறுவார்களென் றறிக.

முதற் சருக்கம்

முற்றிற்று

2-வது சருக்கம்.

பரமசிவன் கூறுகிறார்

விராதன் இவ்வாறு விண்ணுலகஞ் சென்றபின் இராமபிரான் சீதா இலட்சுமணர்களுடன் சரபங்கமுனிவராதாசிரமஞ் சென்றார். அங்கே எல்லாச் சௌகரியங்களும் வாய்த்திருந்தன. இவர்களின் வரவை யறிந்த சரபங்கமுனிவர் எழுந்து எதிர்கொண்டு அழைத்து வந்தனை வழிபாடு செய்து ஆசனங்க ளளித்து வீற்றிருக்கும்படி செய்தார். பிறகு கந்தமூலபலங்களைக் கொடுத்து அதிதி பூஜை செய்து, பக்த பராதீனராகிய இராமபிரானைப்பார்த்து, "இராமா! பரமேசுவரராகிய தமது தரிசனஞ் செய்வதற்காகவே இவ்வனத்தில் வெகு காலமாகத் தவஞ்செய்து கொண்டிருக்கிறேன். இதனால் என்ன பலன்களுண்டோ அவையெல்லாமுமக்கே கொடுத்தேன். அடியேன் முத்தியடைகிறேன்" என்று சொல்லித் தமது புண்ணிய பலன்களை யெல்லாம் இராமசந்திர பிரபுவுக்கே அர்ப்பணஞ் செய்தார். அங்கு ஏற்கனவே அடுக்கி வைத்திருந்த சிதையிற் பிரவேசித்து நின்று அப்பிரமேயரான இராமபிரானையும் சீதாபிராட்டியையும் வணங்கி, சகலஜீவன் களுடைய இருதயகமலத் திலிருக்கும் இராமச் சந்திரமூர்த்தியை சியாமள ரூபராகவும் கமலக்கண்களுடையவராகவும் இலட்சுமணைப் பக்கத்தி லுடையவராகவும் மரவுரியுடுத்தவராகவும் சடாமகுடம் புனைந்தவராகவும் சீதா சகாயமுடையவ

ராகவும் எப்போதும் தியானிக்கின்றேன். இந்த உலகத்தில் இராமச சந்திரனைவிடத் தயாள குணமுடையவருண்டா? இஷ்டார்த்த சித்திகளைத் தரும் காமதேனுவும் அவர்க்கும் நிகருண்டா? சதா காலமும் நான் அவரை அனன்யபாவத்தோடு (வேறு தெய்வமில்லை என்ற நம்பிக்கையுடன்) ஸ்மரிக்கின்றேன். எனது தியானத்திற் கிரங்கி இங்கெழுந்தருளினர். தசரத குமாரனுகவும் பிரபுவாகவு முள்ள இவரது தன்மை இதுவேயாம். எனது சரீரத்தை இப்போதே யெரித்துவிட்டு குற்றமற்ற பிர்மலோகஞ் செல்கின்றேன் பாருங்கள். இடது புறத்தில் சீதா பிராட்டியிருக்க எனது இருதய கமலத்தில் அயோத்தியாதிபதியாகிய இரகுநாதனர் சதாகாலமும் வீற்றிருக்கக்கடவர்" என்றிவ்வாறு தமக்கு முன்னிருக்கும் இராமபிரானை இடையறாது தியானித்துக் கொண்டே சிதையில் தீமூட்டி யில் பஞ்சபூதங்களாலாய தமது பிராக்ருத சரீரத்தை யொழித்து திவ்யதேகம் பெற்றுப் பரமபதியின் திருவடியை யடைந்தார்.

பின் அந்தத் தண்டகாரண்யத்திலுள்ள முனிவர்களெல்லோரும் இராமச்சந்திரனைத் தரிசிக்கச் சரபங்கர் ஆசிரமத்தில் எழுந்தருளினர். பிரபு மாயா மானுட வடிவங்கொண்ட வராதலால் அதற்கேற்ப, அந்த முனிவர்களுடைய பாதபத்மங்களைச் சீதா பிராட்டி இலக்ஷ்மணருடன் பணிந்து எழுந்தார். எல்லோருடைய இருதயகமலத்திலும் வசிப்பவராகிய இரகுநாயகனை முனிவர்களனைவரும் மனமகிழ்ச்சியுடன் ஆசீர்வதித்துத் தங்களுக்கு முன் கைகுவித்தவண்ணம் வில்லம்புகளோடு நின்று கொண்டிருக்கும் அவரை நோக்கி, "இராமா! உம்மைச் சாக்ஷாத் ஹரி யென்றும் ஜானகியை இலட்சுமிதேவி என்றும் ஆதிசேஷனை இலட்சுமணரென்றும் சங்கு சக்கரங்களை பரதசத்ருக்னர்களென்றும் நாங்களறிவோம். பூபாரத்தை யொழிப்பதன் பொருட்டு பிர்மதேவர் பிரார்த்தித்ததற்காக வல்லவா நீங்களவதரித் திருப்பது, ஆதலால் நீங்கள் முதன் முதலாக முனிவர்களுடைய துன்பங்களை நிவர்த்தி செய்ய வேண்டும்; வாருங்கள்; இரகுகுலத்திற் பிறந்த உத்தமரே! முனிவர்கள் வசிக்கும் வனங்களைப் பார்க்கலாம்; இலட்சுமணருடனும் சீதாதேவியுடனும் புறப்பட்டு வாருங்கள்; உமது விருப்பப்படி எல்லாவற்றையும் பார்க்கலாம்" என்று சொன்னார்கள்.

முனிவர்களிவ்விதஞ் சொல்லக்கேட்ட இராமபிரான் கைகுவித்து வணங்கி அந்த வனங்களைப் பார்க்கத்திருவுளங்கொண்டு அந்த முனிவர்களுடன் சென்றார். அவ்விடங்களில் அநேகவிதமான எலும்புகளும் கபாலங்களும் குவியல் குவியலாகக் கிடக்கக் கண்ட இராகவன் முனிவர்களைப் பார்த்து "முனிவர்களே! இவ்வெலும்புகளனைத்தும யாருடைய எலும்புகள்? ஏனிங்கே குவியல் குவியலாகக்கிடக்கின்றன?" என்று கேட்டார். அவர்கள் "ஐயனே! இவைகளனைத்தும் முனிவர்களுடைய மண்டை எலும்புகள்" என விடைபகர்ந்தனர். "தங்களை மறந்து சமாதியிலிருந்த முனிவர்களை அரக்கர்களடித்துக் கொன்று தின்று போயினர். அவர்களைத் தடுக்கத் தவசிகளாலாகவில்லை. அவ்வரக்கர்கள் இங்கு எங்கும் உலாவித் திரிகிறார்கள்" என்று கூறினார்கள். இங்ஙனம் முனிவர்கள் கூறியதும் இராமபிரான் இராக்கதர்க ளெல்லோரையும் அதஞ்செய்து விடுகிறதாக வாக்குக் கொடுத்தார். அப்போது அவர்கள் தமக்குச் செய்த பூஜையையேற்றுக் கொண்டு அங்கேயே சில வருடகாலம் வசித்தார். அப்பொழுது அடிக்கடி முனிவர்களுடைய ஆசிரமங்களைப் போய்ப் பார்த்துக் கொண்டுவந்தார். அப்படியிருக்கையிலொரு சமயம் சகல சம்பிரமங்களும் நிறைந்து முனிஜனங்கள் சூழவிளங்கும் சுதீக்ஷ்ண முனிவரது ஆச்சிரமத்திற்கு எழுந்தருளினார் இராமபிரான். அகத்திய முனிவரின் பரம சிஷ்யரும் ஸ்ரீ இராமபிரானுக்குத் தாரகமந்திர உபாசனை செய்விப்பதில் ஆஸக்தியுள்ள வருமாகிய அந்தச் சுதீக்ஷ்ண முனிவர், தசரதநந்தனரின் வரவைக்கேட்டு எதிர்கொண்டு சென்று அழைத்து, அன்பு மேலிட்டவராய் அவரடிபணிந்து விதிப்படி பூசித்துபசரித்துத் தோத்தரிக்கலானார்

ஸுதீக்ஷ்ணர் கூறுகிறார்.

பரமபதியே! உமது மந்திரத்தை மனனஞ்செய்து வருபவன் இவ்வேழை. அனந்தகல்யாண குணமுடைய சீதாபதே! பரமசிவனும் பிரம்மனும் ஆச்ரயிக்கும் திருவடியுடையவரே! சம்சாரமென்கிற சமுத்திரத்தைக் கடந்துய்வதற்கு உமது பாதங்களே ஒப்பில்லாத ஓடமாகின்றன. சநாதநத்தை எப்போதும் அளிப்பவரே! இவ்வேழை உமதடிமைக்கு மடிமை! உமது மாயையினுலுண்டாயிருக்கிற மக்கள், மனைவி, கிருகம் என்னும் இருளடைந்த

னைற்றிலிருந்து ஆழ்ந்துள்ளேன். இந்த மலசரீரத்தின் மீது கொண்ட மயக்கமென்னும் கயிற்றாற் கட்டுண்ட இருதயமுடையவன். இப்படிப்பட்ட என்முன் எல்லாவுலகங்களும் அறிதற்கரிய நீர் எழுந்தருளியதை என்னென்றுரைப்பேன்! பிரபுவே! சகல பூதங்களின் இருதயங்களையும் நீர் ஆலயமாகக்கொண்டு விளங்குபவரேயாயினும் உமது மந்திரத்தை மனனஞ்செய்ய அறியாதார் மாயைக்குள்ளாகிறார்கள். உமது மந்திரத்தைச் சாதனஞ் செய்தவரிடத்திலோ அந்த மாயை யணுகுவதில்லை. அவரவர் விரும்பியவற்றை அவரவர்க்குத் தக்கபடி கொடுக்கின்றீர். உலகத்தின் சிருஷ்டி, ஸ்திதி, லயங்களுக்கு நீரே காரணராகின்றீர். உமது மாயையாலுண்டாகும் முக்குணங்களாலும் நீரே பிரம்ம, விஷ்ணு, ருத்திரரென்னும் திரிமூர்த்தி சொரூபமாக விளங்குகிறீர். பல பாத்திரங்களி லுள்ளநீரில் ஒரு சூரியனே பல உருக்களாகக் காணப்படுவது போல், மயக்கங்கொண்ட மனதுடையவர்களுக்கு நீரும் அநேக உருவங்களையுடைய வராகக் காணப்படுகிறீர். இராமா! இப்போது உமது பாதபங்கயங்களைப் பிரத்தியக்ஷத்தில் கண்டேன். தமசுக்கு அப்பாற்பட்டவர். சித்சொரூபர். சாதுமார்க்கத்தில் பிடிப்பில்லாதவரால் அறியப்படாதவர் நீர். உமது மந்திரபலத்தால் சித்த சுத்தியடைந்தவர்க்கே பிரஸந்நராகிறீர். இராமா! உமது உருவம் அருவம்; ஆயினும் மாயையாலுண்டான உமது சிறந்த மானுடவிக்கிரஹத்தையே தரிசிக்கின்றேன். கோடி மன்மதருடைய சுந்தரமமையைப் பெற்றதோலும், அழகிய வில்லம்புகளும், கருணை கனிந்த உள்ளமும், மந்தஹாசவதனமும், மரவுரியுடுத்த யிடையும் இலக்ஷ்மணரால் சதாகாலமும் சேவிக்கப்படும் பாதமலரும் நீலோத்பலம் போன்ற தேககாந்தியு முடைய அனந்தகல்யாணகுணரான சீதாகாந்தனை எப்போதும் நமஸ்கரிக்கின்றேன்.

"இராமா! உமதுருவம் ஸமஸ்தமான தேசகாலமுதலியனவற்ற அனித்யப்ரகாச மென்பதை நானறிவேனாயினும் இப்போது பிரத்தியக்ஷமாகத் தோன்றும் இவ்வுருவமே எனக்கு என் இருதயத்தில் பிரகாசிக்கத்தக்கது. வேறொன்றும் நான் வேண்டேன்" என்று ஸ்தோத்திரஞ் செய்தார்.

இவ்வாறு துதித்த ஸுதீக்ஷ்ண முனிவரை இராமபிரான் பார்த்து, புன்முறுவலுடன் "முனிபுங்கவரே! உமது சித்தம் நமது

உபாசனையால் நிர்மலமாயிற்றென்றறிந்தோம்; ஆதலின் உமக்கு அநுக்கிரஹிப்பதன் பொருட்டே நானாக வந்தேன். நம்மையடைவதற்கு வேறுபாயமில்லை. நமது நாமோச்சாரணஞ் செய்பவர்களை நம்மைச் சரணமடைந்தவராகிறார்கள். அவர்கள் இச்சையற்றவர்கள். அவர்களுக்கு நாம் சதாகாலமும் பிரத்தியக்ஷமாயிருப்போம். உமமால் செய்யப்பட்ட இந்தத் தோத்திரத்தை எவனொருவன் படிக்கின்றானோ அவனுக்கு எப்போதும் நம்மிடம் பக்தியுண்டாகும். நல்ல ஞானமுண்டாகும். நமது உபாசனையால் உமக்கு முத்தி கிடைத்திருக்கிறது. இந்தத் தேகாந்தத்தில் உமக்கு சாயுஜ்யம் கிடைக்கும். இதிற்சந்தேகமே கிடையாது. நமது ஆசிரியர் அகஸ்தியமுனிவர் எங்கிருக்கின்றார்? அவரை நாம் பார்க்க விரும்புகிறோம். சிலகாலம் அவரிடமிருக்கவும் விருப்பமிருக்கிறது" என்றார். முனிவரும், "அவ்வாறே செய்வோம். அந்த மகாமுனிவரை நான் தரிசித்து வெகுகாலமாகிறது. நாமிருவரும் நாளைக்கே செல்வோம்" என்று சொன்னார்.

மறுநாள் இராமபிரான் சீதாதேவி இலட்சுமணர் இவர்களுடன் சுதீக்ஷண முனிவரையும் அழைத்துக்கொண்டு அகஸ்திய முனிவருடன சம்பாஷிக்கும் விருப்பத்துடன் சென்றார். வழியே அவர் தம்பியின் ஆசிரமமிருக்கககண்டு அங்கே போனார்.

இரண்டாவது சருக்கம்

முற்றிற்று

3-வது சருக்கம்

பரமசிவன் கூறுகிறார்.

இவ்வாறு இராமபிரான் சீதா இலட்சுமணர் சகிதம் சுதீக்ஷணமுனிவரோடு அகஸ்திய முனிவருடைய தம்பியின் ஆசிரமத்தை அடைந்த பொழுது நடுப்பகல் வேளையாயிற்று. அகஸ்திய முனிவரின சகோதரர் அவர்களை அன்போடு பூஜித்துக் காய் கனிகளைப் புசிக்கக்கொடுத்துபசரித்தார். இராமபிரான் முதலிய நால்

வரும் அவர்கொடுத்த காய்கனிகளைப் புசித்துவிட்டு அன்று அங்குத் தங்கியிருந்தார்கள். மறுநாள் அதிகாலையில் அகஸ்திய முனிவரது ஆசிரமஞ் சென்றார்கள். அந்தவனத்தில் பலவிதமான காய் கனிகளும் புஷ்பங்களும் பற்பல விலங்கினங்களு மிருந்தன. பற்பல பறவைகளின் தொனியுடன் இந்திரனது வனம் போன்றிருந்தது அவ்வாச்சிரமம். பிரமரிஷிகள் தேவரிஷிகள் இன்னும் பல முனிபுங்கவர்களுடைய வீடுகளும் அங்கே சூழ்ந்திருந்தன. சர்வாலங்காரங்களும் வாய்ந்திருந்தன. சாக்ஷாத் சத்தியலோகம் போலவே யிருந்தது.

இராமர் இவ்வா சிரமத்தின் வெளிப்பக்க மிருக்கையில் ஸுதீக்ஷ்ணமுனிவரை நோக்கி முனிவரே! நீர் சீக்கிரமாகச் சென்று நாம் வந்திருக்கும் செய்தியை மகா தவசியான அகஸ்திய முனிவருக்குத் தெரிவித்து வாருமென்று சொன்னார். ஸுதீக்ஷ்ணரும் அப்படியே செய்கிறேன் என்று கூறித் தமது ஆசிரியருடைய ஆசிரமத்திற்குள் பிரவேசித்து, அங்கே இராமபிரானிடத்திற் பக்தியுடைய முனிவர்கள் சூழ, தமது மாணவர்களுக்கு இராமமந்திரத்தை வியாக்கியானஞ் செய்து கொண்டிருக்கும் அகஸ்தியரைக் கண்டு சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, அதிவினயத்துடன் அவரைப் பார்த்து, "அந்தணோத்தமரே! தசரதசக்ரவர்த்தியின் புத்திரர்களான இராம லட்சுமணர்கள், சீதாதேவிசகிதம் தம்மைச் சேவிப்பதன்பொருட்டு வெளியே நிற்கின்றார்கள்" என்றார்.

அகஸ்தியர்கூறுகிறார்.

அதுகேட்டதும் அகஸ்தியர் பரபரப்புடன் சுதீக்ஷ்ணரை நோக்கி, "உனக்கு மங்களமுண்டாகுக, நான் இருதயத்திலே தியானித்து வரும் இராமச்சந்திர பிரபுவை இக்கணமே அழைத்துவா. அவரைச் சேவிப்பதற்காக அவரைத்தியானித்துக் கொண்டிருக்கிறேன்" என்று கூறி, முனிவர் கூட்டங்களுடன் தாமே யெழுந்து சென்று ஜானகிநாதன் சமீபமடைந்து யிருந்த அப்போது "இராமா! வரவேண்டும். தெய்வகதியால் உமது சம்சர்க்கம் இன்று கிடைத்தது. மனதிற்கு விருப்பமான அதிதிபூஜையை இன்று நான் பெற்றேன். இத்தினம் சுதினமாயிற்று" என்றார். இராமர் முகமலர்ச்சியுடன் முனிவரைப் பார்த்து, சீதாலட்சுமணருடன் தீர்க்கதண்டம் சமர்ப்பித்தார். முனிவர் அவர்களை யெழுப்பி இரா

மை ஆலிங்கனஞ் செய்து கொண்டார். அவரது திருமேனி யின் ஸ்பரிசத்தினா லடைந்த ஆநந்த மளவிறந்ததாயிற்று. உடனே கண்களினின்று ஆநந்தபாஷ்ப முண்டாயிற்று. பிறகு ஒருகையி னால் இரகுபுங்கவரின் கரத்தைப்பிடித் தழைத்துக் கொண்டு தம தாசிரமத்திற்குச் சென்று ஆசனமளித்து வீற்றிருக்கச் செய்து பூஜித்தார். அவ்வனத்திற் கிடைத்த பதார்த்தங்களைக் கொடுத் துண்ணும்படி செய்தார். பின், சந்திரபிம்பத்தை யொத்ததிருமே னியையுடைய சீதாகாந்தனை ஏகாந்தமான ஓரிடத்திற் கழைத் துச் சென்று அங்கே திவ்யாசனத் திலுட்காரவைத்து முனிவர் பெருமானான அகஸ்தியர் அஞ்சலியஸ்தராக விருந்து கொண்டு பின்வருமாறு தோத்தரிக்கலானார்.

அகஸ்தியர் துதி

இராமபிரானே! உமது வரவை எதிர்பார்த்தவண்ணமே இவ் விடமிருக்கிறேன். பூபார நிவிர்த்தியின் பொருட்டும், இராவண னைச் சங்கரிப்பதன் பொருட்டும் முன் பிரமதேவர் தம்மைப் பாற்கடலிற் பிரார்த்தித்த நாள் முதல் உமது தரிசனத்தை நாடித் தவம் புரிந்து கொண்டு இம்முனிவர்களுடன் இங்கிருக்கின்றேன். படைப்புக்கு முன்பு யாதொரு உபாதியும் விகற்பமுமில்லாதிருந்த வர் நீரொருவர்தான். உமது ஆச்ரயத்தின் காரணமாக உமது விஷயமான மாயையை உமதுசக்தியாகக் கூறுகின்றார்கள். பிரகிருதி குணாதிதர் நீர் தான். நீர் உமது சக்தியுடன் கூடியகாலத்து உம்மை அப்பிராகிருதரென வேதாந்திகள் விளம்புகின்றனர். உமதுசக்தியை, மூலப்பிரகிருதி, மாயை, அவித்தை, சம்சாரம், பந்தமெனப் பலவிதமாகக் கூறுவார்கள். உமது சந்நிதியிற் அது சலனமடைந்தது. அதினின்று மகத் உண்டாயிற்று. அந்த மகத்து வத்தினின்றும் அகங்காரமுண்டாயிற்று. அகங்காரமானது மகத்து வத்தினாற் சூழப்பட்டு மூன்று பிரிவினைகளைப் பெற்றது. சாத்து விகம், ராஜஸம், தாமதமெனப் படுவன அவைகளேயாம். தாம தத்தினின்று ஸூக்ஷ்மதன்மாத்திரைகளும் அவற்றினின்று ஸ்தூலபூதங்களும் முறையே யுண்டாயின. தாமதம், ராஜஸ சாத் விகங்களால உள்ளிந்திரியங்களும் வெளியிந்திரியங்களு முண்டா யின. அவற்றிலிருந்து லிங்கமென்று சொல்லப் படுவதும எங்கு.

மிருப்பது மாகிய மகத்தான ஸூக்ஷ்ம சரீரமுண்டாயிற்று. அப்பால் ஸ்தூல பூதக்கூட்டங்களினால் விராட்புருஷனுண்டாயினன். அவனிடமிருந்து தேவர், மனிதர், திரியக்குகள், சாலம், கல்மம் முதலான ஸ்தாவர ஜங்கமங்களான ஸகலஜந்துக்களும் க்ரமமாயுண்டாயின. ரஜோகுணத்தோடு சேர்ந்து நீர் மாயாகுண பேதத்தால் ஜகத்காரணனான பிரமதேவனாகின்றீர். நீரே சத்வகுணத்துடனிருந்து இரக்ஷிப்பதால் விஷ்ணுவாகின்றீர். தமோகுணத்துடனிருந்து சங்கரிப்பதால் நீரே ருத்திரராயுமாகின்றீரென்று பெரியோர்கள் கூறுகின்றனர். புத்தியினால் உண்டாகிய ஞானங்களாகிய ஜாக்ரம், சொப்பனம், சுஷுப்தியென்பட்ட [illegible] விருத்திகளுண்டாயின. நீர் இவற்றிற் கெல்லாம் விலக்ஷணராயும், சாக்ஷியாயும், சின்மயராயும் அவ்யயராயு மிருப்பவராயினும் நீர் [illegible] டைந்த வராகிய லீலையைச் செய்ய விரும்புகின்றீர். அப்பொழுது மாயையை யங்கீகாரம் செய்கின்றீர். [illegible] போல் காணப்படுகின்றீர். இத்தகைய மாயையானது வித்தையென்றும் அவித்தையென்றும் இரண்டு விதமாய் விளங்குகின்றது. பிரவிர்த்தி மார்க்கத்தில் இருக்கப்பட்டவர் அவித்தையின் வசப்பட்டவராவர். நிவர்த்தி மார்க்கத்திலோர், வேதாந்த விசாரமுடையவராய் உமது பக்தியுடன் கூடிய வித்தையையுடையவரென்று சொல்லப்படுவர். அவித்தையின் வசப்பட்டவர்கள் நித்திய சம்ஸாரிகளென்று சொல்லப் படுவார்கள். அவ்வாறின்றி வித்யாப்பியாசத்தில் விடாமுயற்சி செய்பவர் நித்திய முக்தராவர். உமது மந்திர உபாசகர்களே உமது பக்தியிலும் நியமமுள்ளவர்களாயிருப்பர். அவர்களுக்கே வித்தையின் மேன்மையுமுண்டாகும்.

மற்றவர்களுக்கு எப்போதுங் கிடையாத ஆசையினால உமது பக்தரே முக்தர். இதிலையமின்று. உமது பக்தியாகிற அமிருதங் கிட்டாதவர்களுக்குக் கனவிலும் முத்தி கிடையாது இராமா! பல பேசுவானேன். ஸாராம்சமான சிலவற்றைக் கூறுகிறேன். ஸாயுஜ்யத்திற்கு.சாதுசங்கமே சாதனமாகக் கூறப்படுகிறது. சாதுக்கள் சமத்துவமான சித்தமுடையவர்கள். விருப்பமில்லாதவர்கள். த்வந்த்வத்திரயங்கள் அவர்களிடம் காணப்படா. அகக்கரணங்களையும் புறக்கரணங்களையும் அடக்கித் தங்கள் வசப்படுத்திக் கொண்டவர்

கள். தங்களிடத்தன்புபூண்டவர்கள். சகலவிருப்பங்களையும் கடந்த
வர்கள் விருப்பு வெறுப்புகளிற் சமபுத்தி கொண்டவர்கள். சங்க
மற்றவர்கள். எல்லாவற்றையும் விட்டவர்கள். எப்போதும் பிர்ம்ம
தத்பராயிருப்பவர்கள். இயமநியமாதி குணமுடையவர்கள். என்ன
நேரினும் சந்துஷ்டராயிருப்பவர்கள் இப்படிப்பட்ட சத்துக்களு
டைய சிநேகங் கிடைத்தால் தமது சரித்திரங்களை சிரவணஞ்செய்வ
தில் விருப்பமுண்டாகும் அதனால் தங்களிடத்தில் பக்தியுண்டாம்.

ஜானகீநாதரே! ஸநாதனரான உமது பக்திவாய்க்கப் பெற்ற
வர்கள். தெளிவான ஞானமடைந்து அதனால் விக்ஞானத்தைப் பெற்
றுச் சான்றோர் போற்றும் முக்தியைப் பெறுவார்கள். ஆகையால்
இரகுநந்தனரே! பிரேமையுடன் கூடிய உமது பக்தி எனக்கெப்
போது மிருக்கக்கடவது. உமது அடியார்களுடைய சேர்க்கை மகா
உத்தமமாகும். உமது சேவையை யடைந்த எனது பிறப்பு இப்
போது தான் பயனைப்பெற்றது. பிரபுவே! அடியேன் செய்த யாகங்
கள் யாவும் இப்பொழுதுதான் பலனை யடைந்தன. நிச்சயபுத்தி
யோடு அநேகநாள் தவம்புரிந்தேன். அதன்பலனை உமது பாதாரவிந்
தத்திற்கே அர்ப்பணஞ்செய்தேன். இராமசந்திர பிரபுவே! எனதிரு
தயத்தில் நீர் சதாகாலமும் சீதையோடு வசித்திருக்க வேண்டும்.
அடியேன் நடக்கும்போதும் இருக்கும்போதும் எனது நினைவு உம்
மிடத்திலேயே யிருக்கவேண்டுமென்றிவ்வாறு துதித்தனர் அகஸ்
தியமுனிவர்.

பிறகு தாம் வெகுகாலமாக வைத்திருந்த மகேந்திரமென்னும்
மகத்தான வில்லையும் குறைவுபடாத அம்பறாத் தூணியையும் இரத்
தினங்களிழைத்த வாளொன்றையும் தந்து அவரைப் பார்த்து, "இர
குபுங்கவரே! இராக்கதக் கூட்டங்களாகிய பூபாரத்தைப் போக்க
வேண்டும். அதன் பொருட்டல்லவா தாமிப்படி மாயா மநுஷவடி
வங்கொண்டிருக்கிறீர். இங்கிருந்து ஒருகாதவழி தூரத்திற் கப்பால்
பஞ்சவடியென்று ஒரு புண்ணிய வனமிருக்கிறது. அது கோதா
வரி தீரத்திலுள்ளது. இரகு குலோத்தமரே! அங்கிருந்து பாக்கி
யான காலமெல்லாம் கழிக்கக்கடவீர். தேவர்கள் விஷயமாக பல
காரியங்களை நீர் அவ்விடமிருந்து செய்தல் வேண்டும்" என்றார்.

இவ்வாறு அகத்தியமுனிவர் திருவாய்மலர்ந் தருளியதும் சுபாகரமும் தத்துவார்த்தங்களுடன் கூடியதுமான தோத்திரத்தைக் கேட்டு அம்முனிவரோடு சந்தோஷமாகச் சம்பாஷித்துக் கொண்டிருந்து பின் அவர் தெரிவித்தபடி சென்றார்.

மூன்றாவது சருக்கம்

முற்றிற்று

4-வது சருக்கம்

பரமசிவன் கூறுகிறார்.

அகத்தியாது ஆச்சிரமமிருந்து புறப்பட்டுவரும் இரகு நாயகன் மார்க்கத்தில் தமக்கு முன்னே பர்வத சிகரம்போல் தென்பட்ட ஜடாயு வென்னும் பக்ஷிராஜனைக் கண்டு இதென்னவென வியப்புற்று, இலக்ஷ்மணனைப் பார்த்து, "இலக்ஷ்மணா! வில்லைக்கொண்டு வா! யாரோ ஒரு அரக்கன் முன்னே யிருக்கின்றான். முனிவர்களுக்குச் சத்துருவாகிய இவனை இக்கணமே சங்கரிப்பே"னென்றார். இந்தவார்த்தைகள் செவியிற் பட்டதும் பக்ஷிராஜனாகிய ஜடாயு அச்சமுற்று "இராமா! நான்வதைக்குப் பாத்திரனல்லேன்; உமது தந்தையின் ஆத்ம நண்பன். என் பேர் ஜடாயு உமக்கு மங்களமுண்டாகக் கடவது ஐயனே! நாளெருபடுந்து. உமக்குப் பிரியத்தையே எப்போதும் செய்பவன், உமது சேவை பெற விரும்பி இந்தப் பஞ்சவடியில் வாஸஞ்செய்து கொண்டிருப்பவன். விலங்கினங்களை வேட்டையாடும் பொருட்டு நீரும் இலட்சுமணரும் எப்போதாவது செல்வீராயினும் நான் அச்சமயம் பிரயத்ன பூர்வமாக ஜானகியை இரக்ஷித்துக் கொண்டிருப்பேன் என்றார்.

இவ்வாறு கூறியபக்ஷிராஜனது வார்த்தையைக் கேட்ட இராமபிரான் அவரை அன்போடு பார்த்து, பக்ஷிராஜனே! அங்ஙனமே நமக்குப் பிரியத்தைச் செய்யக்கடவீர் வெகுதூரத்திலிருக்க வேண்டாம்; இவிடம் அருகே ஒருவனத்தில் வசித்துக் கொண்டிரும்

[illegible] மித்திரனாய் திருக்கரத்தால் அவனைத் தடவிக் கொடுத்து ப்ரபுவாகிய இராமபிரான் இலக்ஷ்மணருடனும் ஸீதாதேவியுடனும் பஞ்சவடிக்கெழுந்தருளினார்.

அங்கே கௌதமி நதிதீரத்தின் வடபாகத்தில் ஐந்து ஆல விருக்ஷங்களிருந்தன. அவ்விடத்தில் விசாலமான இடத்தில் புத்திமானான இலக்ஷ்மணர் ஒரு பர்ணசாலையை ஏற்படுத்தினார். அதில் மூவரும் வசித்திருந்தார்கள். வாழை, மா, பலா முதலிய கனிவர்க்கங்கள் நிறைந்ததும் ஜனசஞ்சாரமற்றதும் பரிசுத்தமானதுமான அந்த வனத்தில் ஆனந்தித்து, பிராட்டிக்கு மனமகிழ்ச்சியையுண்டாக்கிக் கொண்டு சகோதரனான இலக்ஷ்மணருடன் அந்த இடத்தை இரண்டாவது விண்ணுலகமாகக் கொண்டு மிகவும் சௌக்கியமாய் வாசஞ்செய்துகொண்டிருந்தார் இராமர். இலக்ஷ்மணரும், இராமரது சேவை செய்வதிலேயே சிந்தையுடையவராய் நாடோறும் பெருமானுக்கும் பிராட்டிக்கும் வேண்டிய கனிவர்க்கங்களைக் கொணர்ந்து சமர்ப்பித்துவந்தார். இரவில் வில்லம்புகளைக் கையில் வைத்துக்கொண்டு காவல்புரிந்து வருவார். நாடோறும் கோதாவரிநதியில் ஸ்நானஞ்செய்யச் செல்லும்போதும் வரும்போதும் பிராட்டி நடுவில் வர முன்னொருவரும் பின்னொருவருமாகப் போவார்கள். இலக்ஷ்மணர் தினம் விருப்பத்துடன் தீர்த்தங்கொண்டு வந்து வைப்பார்.

இவ்வாறு இலக்ஷ்மணர் பணிவிடைகளைப் புரிந்துவர மூவரும் சௌக்கியமாயிருந்தார்கள். இப்படியிருக்கையில் ஒரு நாள் பரமேசுவராகிய இராமச்சந்திர பிரபு ஏகாந்தமாக விருப்பதை இலக்ஷ்மணர் பார்த்து, விநயத்துடன் அவரை நமஸ்கரித்துக் கேட்டார். பகவானே ஞானவிஞ்ஞானங்களோடுகூடியதும் பக்தி வைராக்கியங்களை விளக்கியருளக் கூடியதும் ஒரே முடிவையுடைய முக்தி மார்க்கத்தை நான் உம்மிடம் உணரப் பிரியப்படுகிறேன். சுருக்கமாகத் திருவாய் மலர்ந்தருள வேணும், அவற்றைச் சொல்லத்தக்கவர் தம்மைவிட வேறு எவரும் இவ்வுலகத்திலில்லையென்று கூறிப் பிரார்த்தித்தனர். இலக்ஷ்மணர் இவ்வாறு பிரார்த்தித்ததைக் கேட்ட இராமபத்திரர் அன்போடு சௌமித்திரியைப் பார்த்துக் கூறுகிறார்.

இலக்ஷ்மணனுக்கு ஸ்ரீராமபிரான் செய்யும் ஞானோபதேசம்.

சொல்லுகிறேன் கேள்; இது இரகசியங்களுக்கெல்லாம் இரகசியமாகும். இதையறிந்தவுடன், புருஷன் விகற்பமென்கிற பிரமையை ஜயித்துவிடுவான். மாயையின் சொரூபத்தை உனக்கு முதலிற் கூறுகிறேன். பின், ஞானத்திற்குச் சாதனத்தைக் கூறுகிறேன், அதற்குப்பின், விஞ்ஞான சொரூபத்துடன் கூடிய பரமாத்ம சொரூபத்தைச் சொல்லுகிறேன். அதனை நீ பரிசோதிப்பதில் பயத்தினின்றும் விடுதலையடைவாய். அநாத்மாவாகிய சரீரம் முதலியவைகளிலுள்ள ஆத்ம புத்தி என்கிற அஞ்ஞானமே மாயையாம். அதனைத்தான சம்ஸாரமென்று சொல்லுகின்றார்கள் இலக்ஷ்மணா! மாயைக்கு இரண்டு ரூபங்களுண்டென்று முன்பே நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அவை விக்ஷேபம் ஆவரணம் என்று சொல்லப்படும். விக்ஷேபமானது ஜகத்தைக் கற்பித்துத் தோன்றச்செய்யும். அது லிங்க முதல் பிரமதேவன் வரையிலுள்ள அகில ஸ்தூல சூக்ஷ்மாதி பேதங்களையுடையதாகும். இரண்டாவதான ஆவரணமோவெனில், அது அறிவினுருவமான ஞானத்தையும் ஆவரித்து மறைந்திருக்கும். கேவலம் பரமாத்மாவினிடமுள்ள மாயையினால் கயிற்றில் அரவம் காண்பதுபோல பிராந்தியாகக் கற்பிதமான விசுவம், விசாரணை செய்யுமிடத்து சற்றேனு மிருப்பதன்று. மனிதர் கேட்பது, பார்ப்பது, ஸ்மரிப்பது முதலியன வெல்லாம் சொப்பன மனோரதம் போல் அஸத்தேயாம், சம்ஸார விருக்ஷத்திற்குச் சக்தியுடைய வேர், சரீரமென்றே கருதவேண்டும். அன்னியரான மனைவி மக்களிடம் ஏற்படும் பந்தபேதத்திற்கு அதுவே மூலமாகும். தேகமெனச் சொல்லப்படுமிவ்வுடல், ஸ்தூல பூதங்களைந்து, தன்மாத்திரைகளைந்து, இந்திரியங்கள் பத்து, அகங்காரம், பிராணாபானம், மனம், புத்தி, மூலப்பிரகிருதி இவற்றுடன் கூடி க்ஷேத்திரமாக உணரப்படுகிறது. இதற்கு விலக்ஷணமான ஜீவன் பரமாத்மா, நிராமயன், அந்த ஜீவனை எனக்கு விஞ்ஞான காலத்தில் உண்டாகும் சாதனங்களையும் சொல்லுகிறேன் கேள். ஜீவனென்பதும் ஆத்மாவென்பதும் பரியாய நாமங்கள். ஆகையால் இங்கே அதை பேதமாக எண்ணக்கூடாது. விருப்பம், டம்பமின்றி யிருத்தல், பிறருக்கு இம்சையான தெதுவுஞ் செய்யாமை,

பராபேக்ஷணையில் பொறுமை, எப்போதும் வஞ்சகமின்றி யிருத்தல், மனோவாக்குக் காயங்களால் அன்போடு சற்குருவைச் சேவித்தல், உள்ளும் புறம் புஞ் சித்தசுத்தி யுடைத்தாயிருத்தல், சத்கருமங்களில் ஸ்திரபுத்தியுடைமை, மனம், வாக்கு, செயலிவற்றைச் சுவாதீனத்தில் வைத்திருப்பது, விஷயவிருப்ப மற்றிருத்தல், அகங்கார மற்றிருத்தல், ஜனனமரணங்களைச் சிந்தித்திருத்தல், மக்கள் மனைவிகளிடம் சிநேகமற்றிருத்தல், சதாசுகதுக்கங்களில் சமசித்தம் வைத்தல், சர்வாத்மனாய் ரமித்துக் கொண்டிருக்கும் என்னையே சதாகாலமும் அநன்னிய விஷயமாக விரும்புதல், ஜனசமூகமற்ற சுத்தபிரதேசத்தில் வசித்தல், பிராகிருத ஜனங்களிடமிருக்க விருப்ப மற்றிருத்தல், வேதாந்த விசாரணையினால், வரும் ஆத்மஞானத்தில் எப்போதும் ஈடுபட்டிருத்தல் ஆகிய இவற்றையே யநுஷ்டித்து வரவேண்டும். இவற்றால் ஞானமுண்டாகும். இவற்றிற்கு மாறுபட்டு நடந்தால் விபரீத முண்டாம்.

பிராணன், புத்தி, மனம், அகங்காரம் முதலியவற்றிற்கு விலக்ஷணமான சிதாதமா நான் என்னுமுண்மை எவ்வறிவால் நித்திய சுத்தபுத்தனாக வறிகின்றாயோ அதுவே உண்மையான மது ஞானமாகும். அதுவே அநுபவத்திற்கு வரும்போது விக்ஞானமாகும். பரமாத்மா, எங்கும் நிறைந்திருப்பவர், ஞானானந்தசொரூபர், அவ்யயர், புத்திமுதலிய உபாதிகளற்றவர், வேறுபாடில்லாதவர். தமது தேஜஸால் தேகாதிகளை பிரகாசப்படுத்திக் கொண்டு அவற்றால் தாம் மறைபடாமலிருப்பவர். அத்வைதரான அவரொருவரே அவ்யயராயும் பிரபுவாயும், எவற்றையும் பார்ப்பவராயும் இருப்பவர். அந்தப் பரமாத்மா விக்ஞானத்தினா லடையப்படுபவர். குருவினது சாஸ்திரோபதேசத்தால், ஆத்மா, பரமாத்மாவினுடைய ஐக்யஞானம் ஜீவனுக்கு எப்போதுண்டாகுமோ அப்போதே ஜீவனைக்காட்டிலும் வேறான ஆத்மாவுக்கு மூலமான அவித்தையானது காரியகாரணங்களோடும் கூட பரமாத்மாவினிடத்திலேயே லயமடைகிறது. அந்த அவஸ்தையே இந்த ஆத்மாவிற்கு முத்தியென்றுபசரிக்கப் படுகிறது. இலக்ஷ்மணா! இதுதான் முத்தியின்சொரூபம். இது ஞானம், விக்ஞானம், வைராக்கியங் களுடன் சேர்ந்ததாய் எம்மால் சொல்லப்பட்ட தெனினும், எமதுடைய பக்தி யில்லாதவர்களுக்கு இது கிடைப்பதரிது என்றெண்ணுகின்றோம். ஏனெனில் கண்க

யிருந்தாலும் இராக்காலங்களில் பதார்த்தங்கள் எப்படி நன்றாய்க் காணப்படுகிறதில்லையோ, அப்போது தீபமொன்றிருந்தால் அவை எப்படிக் காணப்படுகின்றனவோ அவ்வாறே எமது பக்தியுடைய வருக்கு ஆத்மா திருத்தமாகத் தோன்றும். அதே இலக்ஷ்மணனே! அப்படிப்பட்ட எமது பக்திக்குக் காரணமாயுள்ள சிலவற்றைக் கூறுகின்றேன்.

எமது பக்தருடன் எப்போதும் சேர்ந்திருத்தல், எம்முடைய சேவையைச் சதாகாலமும் செய்தல், ஏகாதசி முதலிய பர்வகாலங்களில் எம்மைக் குறித்துச் சிறந்த உபவாசாதி களிருப்பது, எமது கதாசிரவணம் செய்தல், படித்தல், மற்றவர்களுக்கெடுத்துச் சொல்லுவதில் விருப்புடையவனா யிருத்தல், எனது ஆராதனத்தில் அத்தியந்த நிஷ்டையுடையனாயிருத்தல், எமது நாமகீர்த்தனம் செய்தல் ஆகிய இவையே என்னிடத்தில் திடபக்தியுண்டாக்கும். அந்த பக்தியுண்டானால் குறையென்ன விருக்கிறது. எம்மிடத்தில் பக்தியுடையவன், விரைவில் ஞான விஞ்ஞானங்களையும் வைராக்கியத்தையுமடைந்து முக்தியை யடைவான். எமது பக்தனல்லாத வேறொருவனுக்கும் இவ்விஷயம் உபதேசிக்கத் தக்கதன்று. எவனொருவன் சிரத்தையுடனும் பக்தியுடனும் இதைப் பாராயணம் செய்கிறானோ அவன் அஞ்ஞானத் திரையாலுண்டாகு மிருளை ஒழித்து விட்டு முத்தியை யடைவான். எவனொருவன் எமது அடியாருடனும் யோகி ஜனங்களுடனும் சுத்தமனதோடு மேன்மையான சாந்தியையுடையவருடனும் எமது சேவையிலேயே எப்போதும் சித்தஞ் செலுத்துவோருடனும் விமலஞானத்தை விசேஷமாயடைபெற்றவருடனும் எப்போதும் கூடியிருந்து, மனதின் பரிபாகமடைந்து எம்மைச் சேவிக்கின்றானோ அவனுக்கே முத்தி உள்ளங்கையிலிருப்பது போலாகும். நாமும் அவனுக்கு எப்போதும் பிரத்தியட்சமாயிருப்போம். இதற்கு மாறுபடாது என்றருளிச் செய்தனர்.

நான்காவது சருக்கம்.

முற்றிற்று.

5-வது சருக்கம்.

பரமசிவன் கூறுகிறார்.

அந்த ஆரண்யத்தில் அச்சமயத்தில் ஒரு இராக்ஷஸி ஜனஸ்தான மென்னுமிடத்தில் வசித்து வந்தாள். அவள் காமரூபிணி மிக்க வலியுடையாள். அவள் ஒருநாள் கோதாவரி நதிதீரத்திற்கு வந்தாள். அப்பொழுது பஞ்சவடியைச் சேர்ந்ததும் அங்கே பத்ம, வஜ்ர, அங்குச, முதலிய ரேகை அமைந்த ஸ்ரீராம பிரானுடைய பாதச் சுவடு படிந்திருக்கும் பன்னசாலையைக் கண்டு, மனம் அபஹரிக்கப் பட்ட மனமுடையவளாய், அவ்விடம் பக்ஷிகளைப் பிடித்துக் கொண்டு இராமபிரான் வசித்த பர்ணசாலைக்கு வந்தாள். அங்கே கோடி மன்மத சௌந்தரிய முடையவராய், அழகான பூர்ணசந்திரனை யொத்த திருமுக மண்டலமும், பங்கயமெனத் திகழும் திருக்கண்களும், ஒப்பற்ற உத்தமமான கழுத்தையு முடையவராய் ஸ்ரீவத்ஸத்துடன் விளங்கும் திருமார்புடையவராய், சமுத்திரத்திற்குச் சமமான கம்பீர முடையவராய், பொன்னிறமான சடை தரித்தவராய் திருமேனியெங்கும் திருநீறு பூசினவராய் சாக்ஷாத் சாம்ப மூர்த்திபோலிருக்கும் இராமசந்திர மூர்த்தியை சீதாசமேதராய்ப் பார்த்தாள். உடனே இராக்ஷஸி காமவிகாரமடைந்து இராமனைப் பார்த்து, "நீரார்? நீர்யாருக்குச் சொந்தம்? உமது ஆசிரமம் எது? சடைமுடிதரித்து மரவுரியுடனி ருக்கின்றீரே? எதற்காக இங்கே யிருக்கின்றீர்? எனக்குச் சொல்லுங்கள். நான் சூர்ப்பணகை என்னும் பெயர் கொண்ட அரக்கி. காமரூபிணி. மகாதமாவும் இராக்ஷஸ ராஜனுமாகிய இராவணேச்வரனுடைய சகோதரி. எனதண்ணனான கரனோடு இவ்விடத்தில் எனது ஆரண்யத்தில் வசிக்கின்றேன். இந்தவனம் யாவும் அந்த அரசனால் எனக்குக் கொடுக்கப் பட்டது. ரிஷிகளைப் புசித்துக் கொண்டு இவ்விடமிருக்கின்றேன். உமது வரலாறறிய விரும்புகின்றேன். வாக்குச் சாதுரியமுடையவரே! கூறுங்கள்" என்றாள். இராமபிரான், அரக்

கியை நோக்கி, "என் பெயர் இராமன், நான் அயோத்தியாபதியான தசரதசக்ரவர்த்தியின் புத்திரன். இங்கிருக்கும் சுந்தரி என் மனைவி. இவள் பெயர் சீதை. ஜனகமகாராஜாவின் புத்திரி. அதோ அங்கிருப்பவன் என்சகோதரன். அவன் பெயர் இலக்ஷ்மணன். லோகசுந்தரி! என்னால் உனக்காக வேண்டியதென்ன? தெரிவிப்பாய்" என்றார். அவ்வார்த்தையைக் கேட்ட அரக்கியும் அவரை நோக்கி, "இராமா! நீர் வாரும்; பர்வதங்களிலும் இந்த வனப்பிரதேசங்களிலும் என்னோடு சுகமனுபவியும். நான் காமத்தினால் தொந்தரவடைகிறேன். தற்போது உன்மைப்பிரிய மனமில்லாதவளாக இருக்கிறேன்" என்றாள். இராமபிரான் உடனே சீதாதேவியைத் தமது கடைக்கண்ணால் பார்த்து, பின் அரக்கியை மந்தகாஸத்துடன் பார்த்து, "சுந்தரி! என்னை விட்டுப் பிரியாத என் மனைவி இதோ இருக்கிறாள். நீயும் இங்கு எப்படியிருப்பாய்? சக்களத்திப் போராட்டத்தால் சங்கடமுண்டாகுமே! ஆகையால் அதோ என் தம்பி இலக்ஷ்மணன் வெளியே இருக்கிறான்; அவன் அதிக ரூபவான்; அவனே உனக்குத் தகுந்த ஆடவன்; அவனுடனிருப்பது உனக்குச் சுகமாகும்" என்றார். அரக்கி, உடனே அங்கிருந்து இலக்ஷ்மணனிடம் சென்று, "சுந்தரனே! எனக்கு நீர் ஏற்றபுருஷன்; உன் தமையன் உத்தரவுப்படி நீர் என்னுடன் வாரும்; எனது வனத்திற்குப் போவோம்" என்றாள். காமமோகிதையாகிய அவ்வரக்கி இவ்வாறு கூறியதும் இலக்ஷ்மணர் "பதிவிரதே! அந்த மகானுபாவனாகிய இராமநாதனுக்கு நான் அடிமை, என்னை நீ கணவனாக அடைவாயாயின், நீயுமவருக்கு ஊழியஞ்செய்யும் அடிமையாகவல்லவா நேரிடும். இதைவிட உனக்கு வேறு துக்கமென்ன விருக்கிறது. உனக்கு மங்களமுண்டாகும். அவரிடமே செல். அவர் மகாராஜா! அகிலநாயகன்" என்றார். அந்தத் துஷ்டை அவ்வார்த்தையைக் கேட்டுக் கொண்டு மீண்டும் இரகுநாதனிடம் வந்து கோபத்துடன் "இராமா! என்மனம் சஞ்சலமடையும்படி என்னையேன் இப்படி பிரமிக்கச் செய்கிறீர்? இக்கணமே அந்தச் சீதையை நீர் பார்த்திருக்கப் புசித்துவிடுகிறேன் பாரும்" என்று சொல்லி ஆரவாரத்துடன் வைதேகியை நோக்கி ஓடினாள். அப்போது இராமபிரான் ஆக்ஞையைக் கேட்ட இலக்ஷ்மணர் அந்த அரக்கியைப் பிடித்துத் தமது கைக்கத்தியால் அவள் காதையும் மூக்கையும் துண்டித்து

விட்டார். அதனால் அவ்வரக்கி அதிகோரமாகச் சத்தமிட்டுக் கொண்டும், வாயில் வந்தபடி வைது கொண்டும், தேகமெல்லாம் உதிரம் பெருகியோடத் தமையனான கரனிடம் ஓடி விழுந்தாள். கரன் தன் தங்கையின் கோலத்தைக் கண்டதும் கடுமையான தொனியுடன் "இது என்ன இது! எவனிப்படிச் செய்யத் துணிந்தவன்? அவன் எமன் வாயில் செல்லத் துணிந்தவனாக வல்லவா இருக்கவேண்டும்.; யாரவன்? அவன் எமனுக்குச் சமமானவனே யெனினும் இக்கணமே அவனைக் கொன்று விடுகிறேன்" என்று கூறினான்.

உடனே அரக்கி, "அண்ணா! இராமனென்ற ஒரு மானிடன் சீதை இலட்சுமணனுடன் தண்டகாரண்யத்தை நிர்ப்பயமாகச் செய்து கொண்டு கோதாவரி தீரத்திலிருக்கின்றான். அவனுக்கிணைப் படி அவனுக்கிளையோனான இலட்சுமணனென்பவன் என்னை இம்மாதிரி செய்துவிட்டான். நீ உத்தம குலத்திற் பிறந்த சுத்த வீரனேயானால் அந்தச் சத்ருக்களை ஜயித்து வரவேண்டும். துர்மதர்களான அவர்களுடைய இரத்தத்தைப் பருகி அவர்களுடைய சரீரத்தைப் புசித்தாலல்லது என் பிராணன் நில்லாது. இல்லாவிட்டால் நான் யமபுரஞ்செல்வேன்" என்றாள். இதைக் கேட்டதும் கரன் கோபங்கொண்டு மூர்ச்சையடைந்தான். பிறகு பயங்கர ரூபிகளான இராக்கதர் பதினாலாயிரம் பேர்களையும் அழைத்து இராமபிரானைக் கொன்று வரும்படி உத்தரவிட்டுத் தானும் தூஷணன் திரிசிரஸ் முதலிய இராக்கதருடனும் அநேக ஆயுதங்களுடனும் புறப்பட்டுச் சென்றான். கரன் அநேக சேனைகளுடன் வரும் ஆரவாரத்தை யறிந்த இராமபிரான் இலக்ஷ்மணனை நோக்கி, "தம்பி! பெருத்த ஆரவாரங் கேட்கிறது. இராக்கதர் வருகின்றனர். இது நிச்சயம். இப்போது ஒரு பிரபலமான சண்டை நடக்கும்போலிருக்கிறது. இது திண்ணம். ஆகையால் நீ சீதையைக் குகைக்கு அழைத்துச் சென்று அவ்விடத்திலேயே யிரு; கோரரூபிகளான அரக்கர்களை யெல்லாம் இப்போதே கொன்று விட விரும்புகிறேன். இதற்குச் சிறிதும் தடை சொல்லாதே, இது என் ஆணை" என்றாக்ஞாபித்தார். இலட்சுமணனும் அப்படியே யென்று கூறிச் சீதா தேவியைக் குகைக்கு அழைத்துச் சென்றார்.

பின் விபுலாகிய இராமபிரான் கச்சையை வரிந்துகட்டிக் கொண்டு வில்லைக் கரத்திற் பிடித்து அக்ஷயமான அம்புறுத்தூணியைத் தரித்து அரக்கருக்கெதிரே நின்றார். அப்போது அங்கே வந்த அரக்கர்களனைவரும் விசித்திரமான ஆயுதங்களையும் கற்களையும் மரங்களையும் எடுத்து இராமபிரான் மீது எறிந்தார்கள். இராமபிரான் அவற்றைச் சிறிதும் பொருட்படுத்தாது இமைப்பொழுதில் அந்த ஆயிரக்கணக்கான அரக்கர்களையும் கரதூஷண திரிசிரர்களையும் கொன்று அதம்பாக்கினார். பிறகு இலக்ஷ்மணர் பிராட்டியைக் குகையிலிருந்து அழைத்து வந்து இராமபிரானிடம் சேர்த்தார். பிராட்டி அங்கே கிடந்த அரக்கர்களுடைய பிரேதங்களைக் கண்டு ஆச்சரியமுற்று அண்ணலை ஆலிங்கனம் செய்து கொண்டாள். பிரஸன்ன முகாரவிந்தமுடைய சீதாதேவி அவர் திருமேனியில் அஸ்திரங்களா லுண்டாக்கப் பட்டிருந்த காயங்களைத் துடைத்தாள்.

இவ்வாறு இராக்ஷத சிரேஷ்டர்கள் எல்லாரும் அழியவே சூர்ப்பணகை ஓடி இலங்கையில் இராவணனுடைய சபையையடைந்து அவன் பாதத்தில் அழுதுகொண்டு விழுந்தாள். அப்படிப் பயத்துடன் தரையில் விழுந்து கிடக்கும் தன் சகோதரியைப் பார்த்த இராவணன் "எழுந்தாய்! எழுந்திரு, எழுந்திரு, உன்னுடைய செவியையும் மூக்கையும் துண்டித்தவன் யார்; இந்திரனோ? யமனோ? வருணனோ? குபேரனோ? இன்னானென்று சொல்லு. இந்த நிமிஷமே அவனைச் சாம்பலாக்கி விடுகிறேன்" என்றான். அரக்கி அவனைப் பார்த்து, "நீ மதிமயக்கங் கொண்டவன், மந்தபுத்தியுடையவன், மதுபானத்திலேயே மயக்கங் கொண்டவன், மாதர்களுடைய மாலையில் மூழ்கியவன், மூர்க்கன், எதிலும் அசட்டையாயிருக்கின்றாய், வேவுகாரனென்கிற விழிகளில்லாதவனாயிருக்கிறாய், இப்படிப்பட்ட நீயோ அரசன்? அதிசூரர்களாகிய கரதூஷண திரிசிராதிகளும் வீரர்களாகிய பதினாலாயிரம் இராக்கதர்களும் அசுரர்களும் பகைவனாகிய இராமனென்பவனால் ஒரு க்ஷணத்தில் கொல்லப்பட்டார்கள். ஜனஸ்தானத்திலுள்ள முனிவர்களெல்லாம் சிறிதும் பயமில்லா திருக்கிறார்கள். நீ மூடனாகையால் அதைத் தெரிந்து கொள்ளவில்லை. ஆதலால் நானுனக்குச் சொன்னேன்" என்றாள்.

சூர்ப்பனகை இவ்வாறு கூறியதும் இராவணன் சினங்கொண்டு சிறிது ஆலோசனை செய்து அவளைப் பார்த்துக் கேட்கிறான்.

ராவணன் கூறுகிறான்.

"சூர்ப்பனகே! இராமனென்பவன் யார்? இராக்ஷதரை அவன் ஏன் கொன்றான்? எப்படிக் கொன்றான்? விவரமாகச்சொல்; நான் அவனை வேருடன் தொலைத்து விடுகிறேன்" என்றான்.

சூர்ப்பனகை கூறுகிறாள்.

நான் ஒருசமயம் ஜனஸ்தானத் திலிருந்து, கோதாவரிக் கரைக்குச் சென்றேன். அந்த இடம் பஞ்சவடி யென்னும் பெயருடையது. பூர்வம் முனிஜனங்களுடைய ஆசிரமமாயிருந்தது. அவ்விடத்திலுள்ள ஒரு ஆசிரமத்தில் கமலக் கண்ணனாகிய ராமனைக் கண்டேன். அவன் கையில் வில்லையும் அம்பையும் வைத்துக்கொண்டிருக்கிறான். ஸ்ரீமானான அவன் சடையையும் மரவுரியையும் தரித்துக் கொண்டிருக்கிறான். அவனுக்கு இளையவனாகிய லக்ஷ்மணனும் அவ்விதமே யிருக்கிறான். அவன் மனைவி பங்கஜநேத்திரமுடையவள். அவளை உருவத்தில் இரண்டாவது இலக்ஷ்மி யென்றே சொல்லவேண்டும், தேவ கந்தர்வ ஸ்திரீகளிலும் மானிட மாதர்களிலும் இப்படிப் பட்ட வடிவங்கொண்ட மங்கையை நானிதுவரையில் பார்த்ததே கிடையாது. அந்தச் சுபகரமான வனத்தில் அவளிருக்கிறாள். அவளை எ படியாவது உனக்கு மனைவியாக்க வேண்டு மென்று முயற்சித்தேன் அப்போது இராமனுடைய ஏவுதலினால் அவன் தம்பி இலக்ஷ்மணன் என்னுடைய மூக்கையும் செவியையும் துண்டித்து விட்டான். பின் நான் அதிகவருத்தத்துடன் கரனிடஞ்சென்று முறையிட்டேன். அவன் உடனே அநேகம் இராக்ஷத வீரர்களுடன் சென்று போர்புரிந்தான். மகா பலசாலியாகிய இராமனால் அவர்களனைவரும் ஒரு க்ஷணநேரத்தில் இறந்தொழிந்தனர். அண்ணா! இராமன் ஒரு சமயம் என்னைக் கொள்வானேயாகில் அவனை இந்த மூன்று லோகத்தையும் அரை க்ஷணத்தில் சாமபலாக்கி விடுவானென் றெண்ணுகின்றேன். அந்தச் சீதையுனக்கு மனைவியாவாளேயாகில் உன்பிறப்பு சபல மாகும் ஆகையால் அவள் உனக்கு எவ்விதத்தில் பாரியை

யாவளோ அவ்விதமே நீ செய். தாமரைமலர் போன்ற நேத்திர முடைய அந்தச் சீதாதேவியே உலகத்தில் ஒப்புயர்வற்ற ரூப வதி. அந்த இராமனெதிரில் நிற்பதற்கு நீ சமர்த்தனல்ல. ஆகை யால் நீ அவனை மாயையினால் வஞ்சித்து மயக்கச் செய்தாலன்றி அந்தச் சீதையை அடைய முடியாது என்றாள்.

இவ்வாறுரைத்த தன் தங்கைக்கு இராவணன் தக்க விடை யளித்துச் சமாதானஞ் சொல்லி விட்டுத் தன் அரண்மனையிற் பிர வேசித்து அன்றிரவெல்லாம் நித்திரை பிடியாதவனாய் பின்வரு மாறு சிந்திக்கலானான்.

“ஆகா! இதென்ன ஆச்சரியமாயிருக்கிறது. கேவலம் ஒரு மனிதனாகிய இராமனென்பவனால் கரதூஷணன் முதலான என் சேனைபலமெல்லாம் அழிந்து போயினவே! இதென்னவிது! என் தம்பி மகாபலசாலியாயிற்றே! அப்படிப் பட்டவன் எவ்வாறு இரா மனால் கொல்லப்பட்டான். ஒருகால் அந்த இராமன் பரமேசுவ ரனோ! என்னுடைய சேனைகளையும் மற்றும் யாவற்றையுங் கொல்ல எண்ணங் கொண்டவனோ? முன் ஆதிகாலத்தில் பிரம தேவனுடைய பிரார்த்தனைக்கிணங்கி இரகு குலத்திற் பிறந்திருக் கின்றானோ? ஒருவேளை அந்த இராமன் என்னைக் கொல்வானே யாயின் நான் வைகுண்டத்தைப் பரிபாலிப்பேன். இன்றேல் இரா க்ஷஸ இராஜ்யத்தையே அநுபவித்துக் கொண்டிருப்பேன். ஆகை யால் நான் இராமனிடம் போகின்றேன்” என்றிவ்வாறு சிந்தித் துக் கொண்டிருந்து பின் ராக்ஷஸ ராஜனாகிய அந்த இராவணன் இராமபிரானைச் சாக்ஷாத் ஹரி என்றே அறிந்து கொண்டு நான் விரோதபுத்தியால் அந்த விஷ்ணுவை யடைவேன். ஏனெனில் பக வானான அவன் தன்னைப் பக்தி செய்பவர்கட்குச் சீக்கிரத்தில் பிர ஸன்னனாவதில்லை என நிச்சயித்தான்.

ஐந்தாவது சருக்கம்

முற்றிற்று.

6-வது சருக்கம்

பரமசிவன் கூறுகிறார்.

இவ்வாறு இரவெல்லாம் நினைத்துக் கொண்டிருந்து புத்திமானான இராவணன் மனதிலொன்றைத் தீர்மானித்துக் கொண்டு மறுநாள் பொழுது புலர்ந்ததும் இரதமேறி மாரீசனுடைய வீட்டுக்குச் சென்றான். அங்கே மாரீசனென்பவன், முனிவனைப் போல் மரவுரியுஞ் சடைமுடியுந் தரித்து குணரஹிதனும் கல்யாணகுண பூர்ணனுமாகிய பரமாத்மாவைத் தன் இருதயத்தில் தியானித்துக் கொண்டு சமாதியிலிருந்தான். அவன் அரக்கர்களுக் கரசனாகிய இராவணனைக் கண்டதும் எழுந்து அவனை ஆலிங்கனஞ் செய்து கொண்டு விதிப்படி யுபசரித்து ஆசனத்தில் வீற்றிருக்கச் செய்து அவனைப்பார்த்து "இராவணா, தனியே இம்மாதிரி இங்கே வருவதற்குக் காரணமென்ன? சித்தத்திலேதோ எண்ணிக்கொண்டு கவலையுடனிருப்பதாகத் தெரிகிறதே, அது எதுவும் இரகசியமின்றேல் எனக்குச் சொல்லலாம். அது நியாயமான காரியமாயின் அதை நீ கருதியபடியே அன்புடன் செய்து முடிப்பேன். இராஜசிரேஷ்டனே! துக்கம் நம்மைச் சேராதிருத்தல் வேண்டும்" என்றான்.

ராவணன் கூறுகிறான்.

ஏ மாரீச! அயோத்தியாபுரியில் தசரதனென்னு மொரு அரசனிருந்தனனன்றோ? அவன் தன்னுடைய மூத்தகுமாரனும சத்தியசீலனுமாகிய இராமனென்பவனை முனிவர்களின் பொருட்டு வனத்திற்கு அனுப்பினான். அவன் இப்போது தன் மனைவியோடும் தம்பி இலக்ஷ்மணனோடும் இந்த கோரமான கானகத்திற்கு வந்து சுபகரமான பஞ்சவடிதீரத்தில் வசித்து வருகிறான். அவனுடைய மனைவி சீதை உலகத்தையே மோகிக்கச் செய்யும் அழகுவாய்ந்தவளாயிருக்கின்றாளாம் எந்தக் குற்றமும் செய்யாத பரக்-

ரமசாலிகளான கரன் முதலிய ராக்ஷஸவர்க்கங்களைக் கொன்றுவிட்டுச் சிறிதும் அச்சமின்றித் திரிகின்றனும் இராமன். ஒருபாபமுஞ் செய்யாத என் சகோதரி சூர்ப்பணகையின் செவிகளையும் நாசியையும அறுத்துத் தொந்தரை செய்திருக்கின்றனன். ஆகையால் உன்னுடைய உதவியினுல் நான் அவ்விடஞ் சொல்லவேண்டும். அந்த இராமனுடைய பிராணநாயகியாகிய சீதாதேவியை அவன் இல்லாத வேளையில் அபகரித்து வரவேண்டும். இதற்குச் சாதகமாக நீ ஒரு மாயாமிருகமாகச் சென்று அந்த ராம லக்ஷ்மணர்களை வெகுதூரத்திற் கழைத்துக் கொண்டு போகவேண்டும். அச்சமயம் பார்த்து நான் சீதையை யபகரித்துக் கொண்டு வந்து விடுகிறேன். நீ இவ்வளவு உதவி செய்து விட்டு எப்போதும் போலிங்கு வந்திருந்து விடு என்றான். இவவாறு சொலலிய இராவணனை மாரீசன் ஆச்சரியத்துடன் நோக்கி, மூல நாசத்திற் கேதுவான இந்தவாக்கியத்தை உனக்கு யார் உபதேசித்தவன்? அவன்றான் உனக்குப் பகைவனுவான. உன்னுடைய நாசத்தைபல்லவா அவன் எதிர் பார்க்கிறான். அவனைச் சத்துருமாய்க் கொலலவேண்டும், இராவணு! ஸ்ரீராமனுடைய பௌருஷத்தை இச்சமயம் நினைக்கும என் னெஞ்சில் அச்சமுண்டாகிறது. முன் இந்த இராமன் விசுவாமித்திரருடைய யாகத்தைக் காக்கும் பொருட்டு என்னையோரே பாணத்தினுல் கடலிற்போய் விழும்படி செய்து விட்டான். அப்போது இராமன் வாலிபனுயிருந்தான். அந்தக்கடல் நூறு யோசனை தூரத்திற் கப்பாலிருந்தது. அதுமுதல் நான் பயமடைந்து ஒன்றும் செய்வதில்லை. அந்த நினைப்பு என்மனதில் அடிக்கடி உண்டாவதினுல் இராமனை எங்கும பார்க்கிறவனுகவே யிருக்கின்றேன். இராமலக்ஷ்மணர்கள் தண்டகாரண்யத்திலிருந்த சமயம் நான் அவர்களிடங்கொண்ட பழம் பகைகாரணமாக ஒரு மிருகவுருவங் கொண்டு என்போன்ற இன்னுஞ் சில மிருகங்கள் என்னைத் தொடர்ந்துவர அவர்கள் முன்பு சென்றேன். நான் வந்ததை அவர்கள் அறிந்துகொண்டு என்னைக் கொல்ல வெண்ணி, ஒரு பாணம் விடுத்தனர். அதனுல என் மார்பில் மிகவும் நோவுண்டாய்ச் சுழன்று கொண்டே முன்போற் கடலிற போய் விழுந்தேன். அது முதல் இவ்விடத்தையே யெனக்குச் சொந்தமான வீடாகக்கொண்டு வசித்துவருகிறேன். அவ்வாறிருந்தும்

என்மனதிற் கொண்ட பயத்தினால் இராமன் என் முன் தோன்றியவாறே யிருக்கிறான். இராஜரீகம், இரதநிருபாணம், இரதம் முதலியவைகளின் ஓசை என செவியிற படுந்தோறும் நான் பயத்தையே யடைகின்றேன். எங்கே இராமன் வந்து விடுவானோ வென்கிற அச்சத்தினால் வெளியிற் போய் எந்தவேலையுஞ் செய்யாதிருக்கின்றேன். தூக்கத்திலும் என மனம் இராமனையே நினைத்துக் கொண்டிருக்கிறது, கனவில் இராமனைக் கண்டால் உடனே விழித்துக் கொள்கின்றேன். பிறகு தூக்கமே வருவதில்லை. அரசனே விஷயம இவ்வாறிருக்கின்றபடியால் நீ இராமன மீது கொண்டிருக்கும் கோபத்தை மறந்து விட்டு வீட்டுக்குச் சென்று இராக்கத குலத்தை யெப்போதும் காப்பாற்றிக் கொண்டிரு. நீ யிரப்பாயாயின் எல்லோரும் மடிய நேரிடும். உனக்கு நான் நன்மையைச் சொல்லுகிறேன். என பேச்சைக்கேள். பரமாத்மாவான இராமனிடம் கொண்டுள்ள பகைமையை மறந்துவிட்டு அவனைப பக்தியோடு பஜனைசெய்; அவன் பரம கருணையுடையவன.

இவையாவும் நான் நாரதமுனிவர் கூறக்கேட்டேன் இந்த யுகாரம்பத்தில் பிரமன பரமேசுவரரான ஹரியை ஆராதித்துத் தன் விருப்பம நிறைவேறுமாறு அநுக்கிரகம் பெற்றான். அவரை மத்தியலோகத்தில் மானுட சரீரத்துடன் தசரதனுக்கு மகனாகப் பிறந்து உன்னைச் சம்ஹரித்தல் வேண்டுமெனக் கேட்டுக் கொண்டான். அவ்வாறு ஹரியவதரித்திருக்கின்றார். ஆகையால் இராமன் மானுடனல்ல. அவ்யயனான ஸாக்ஷாத் நாராயணனே அச்சமின்றி அரண்யம் வந்திருக்கிறான். அவன் பூபாரத்தை நிவிர்த்தி செய்ய அவதரித்தவன். ஆகையால் நீ சுகமே உன் வீடு செல் என்று சொன்னான்.

இவ்வாறு மாரீசன் கூறியது கேட்ட இராவணன், "மாரீச! நீ சொல்லியபடி பிரமதேவரின் பிரார்த்தனைக் கிணங்கி அந்தப் பரமாத்மாவே என்னைச் சங்கரிக்கத்திருவுளங் கொண்டு மானுடனாகப் பிறந்திருந்தால் அந்தமுயற்சி நிறைவேறுமல்லவா? சத்திய சங்கற்பனான அந்தப் பரமேசுவரன் தன் சங்கற்பத்தை சீக்கிரம் நிறைவேற்றுவான் ஆகையால் நானும் பிரயத்தன பூர்வமாக அந்த இராமபிரானிடஞ் சென்று பிராட்டியைக் கொண்டுவருவேன்.

"ஏ மாரீச! வீரனுகிய இராமனுல் நான் யுத்தத்திற் கொல்லப் படுவேனுகில் விஷ்ணு லோகத்தைப் பெறுவேன். இன்றேல் இராமனை யுத்தத்திற் கொன்று அச்சமின்றிச் சீதையை யடைவேன். ஆகையால் நீ எழுந்திருந்து விசித்திரமான ஒரு மிருக ரூபத்துடன் இராம லக்ஷ்மணர்களிடஞ் சென்று அவர்களை அவர்களுடைய ஆச்ரமத்தினின்று வெகுதூரத்திற் கப்பாற் கொண்டு போய்ச் சேர்த்து விட்டுப் பின் நீ யெப்போதும் போல் உன்னிருப்பிடத்துக்கு வந்து சேர். இதற்கு மறுத்துப் பேசுவாயாயின் எனக்குக் கோபம் வரும். பின் என்வாளால் உன்னைக் கொல்வேன்" என்றான். மாரீசன் இராமன் ஒருசமயம் என்னைக் கொல்வானேயாகில் நான் சம்ஸார சாகரத்தினின்றும் முக்தனுய் விடுவேன். இதுஷ்டனென்னைக் கொன்றால் நான் நரகமடைவது நிச்சயம். எனத் தனக்குள் யோசித்துக் கொண்டு இராமனுல் மரணமடைவதே உசிதமெனத் தீர்மானித்து, உடனே யெழுந்து இராவணனை நோக்கி, 'இராவண! உன் ஆக்ஞைப்படி நடக்கின்றேன்' என்று சம்மதித்து இரதமேறி இராமரது ஆச்ரமம் போய் அதற்கு முன்னிலையில், பரிசுத்தமான பொன்போன்ற மேனியையும், சோபிதமான வெள்ளைப் புள்ளிகளையும் இரத்னம் போன்ற கொம்புகளையும் குளம்புகளையும் நீலமணியை நிகர்த்த கண்களையும் மின்னலைப் போன்ற சுந்தரமான முகத்தையும் வகித்த ஒரு அழகான மாயமானுருக்கொண்டு சீதாதேவி பார்க்கும் படி சஞ்சரித்தான். அப்போது ஒரு கணம் ஓடுவதும், ஒரு கணம் நிற்பதும் ஒரு கணத்தில் சீதையின் அருகே செல்வதும் பின் பயந்தவன் போலோடுவதுமாக விருந்தான். இவ்வாறு தன்மார்க்கனுன மாரீசன் மாயமானுகிச் சீதாபிராட்டியை வஞ்சித்துக்கொண்டிருந்தான்.

ஆருவது சருக்கம்.

முற்றிற்று.

7-வது சருக்கம்

பரமசிவன் கூறுகிறார்.

இராவணன் செய்ய நிச்சயித்தவைகளை இராமர் அறிந்துகொண்டு சீதாபிராட்டியாரைத் தனித்த இடத்திற் கழைத்துச் சென்று "இராவணன் உன்னிடம் பிச்சைக்காரனைப்போல் வருவான். ஆகையால் உன்னுடைய மாயையைப் பர்ணசாலையிலிருக்கச் செய்துவிட்டு நீ ஒருவருடைய பார்வையில் ஒருவர் கண்ணுக்கும் புலப்படாமல் அக்னியில் பிரவேசித்திருந்து இராவணனிறந்தபின் என்னை மீண்டும் அடையவேண்டுமென்று' ஆக்ஞாபித்தார்.

சீதாபிராட்டி அவ்வாறே தன் மாயாசீதையை வெளியிலிருக்கச் செய்து தான அக்னியிற் பிரவேசித்து அந்தர்த்தானமானாள். பிறகு அந்த மாயாசீதை அந்த மாயமானை நோக்கிப் புன்னகை செய்துகொண்டு இராமரிடம் வந்து விநயத்துடன், "ஸ்வாமி வனத்தில் விசித்திரமான மிருகமொன்று வந்திருக்கின்றது. அது இரத்தினத்தினாலிழைக்கப்பட்டிருப்பது போல காணுகிறது பாருங்கள். விசித்திரமான புள்ளிகள் தேகமெங்கும் காணப்படுகின்றன. அது எங்கும் அச்சமின்றிச் சஞ்சரிக்கின்றது. அது வெகு அழகாயிருக்கிறது. நான் விளையாடுவதற்கு அதைப்பிடித்துத்தாரு"மென வேண்டிக்கொண்டாள். இராமபிரான் நல்லது அப்படியே செய்கிறேன் என்று வில்லைக் கரத்திற்கொண்டு புறப்பட்டார்,

அப்பொழுது அருகேயிருந்த தம்பி இலக்ஷ்மணனைப் பார்த்து "தம்பி இலக்ஷ்மணா! என் பிராணநாயகியான சீதையை இரக்ஷித்துக் கொண்டிரு, இந்த வனத்தில் மாயாரூபங்கொண்டு அநேக இராக்கதர்கள் சஞ்சரிக்கின்றார்கள்; ஆகையால நீ இங்கேயேயிருந்து கற்பிற்றவறாத சீதையைத் திடசித்தத்துடன் பாதுகாத்துவா" என்றார். இதைக்கேட்ட இலக்ஷ்மணன், "அண்ணா! மாரீசன் என்னும் அரக்கன் மிருகரூபங்கொண்டு சஞ்சரிக்கிறான.

ம் சந்தேகமே வேண்டாம். இப்படிப்பட்ட அற்புதமான மிருகம் எங்கேனு மிருக்குமா?" என்றாள்.

இராமர் கூறுகிறார்.

"தம்பி! அது மாரீசனே யாயின் அதைச் சிறிதும் சந்தேகப் படாமல் கொன்று விடுவேன். அப்படியல்லாமல் மிருகமாயிருப்பின் சீதை விளையாடப் பிடித்துக்கொண்டு [illegible] என்று வருமளவும் நீ இவ்விடத்[illegible] காப்பதிற் கருத்துடையவனாயிரு [illegible] நோக்கிச் சென்றார்.

அவிகாரராயும் ஞானதாதாவாயும், ஆ[illegible], பரிபூர்ணராயுமிருந்தும், உலகா[illegible] தான மாயையை ஆசரித்தவராக, இராமபிரான் அம்மாயாமிருகத்தைத் தொடர்ந்து சென்றார்.

தமது பக்தரிடம் தாம் கருணையுடையவரென்பதைக் காட்டப் பிக்கும் பொருட்டுத் தாமிட்ட [illegible] தாமெல்லாமறிந்திருந்தும் மிருகத்தைக் [illegible] படியில்லையாயின், துணையாந் தாமுணர்ந்[illegible] பரமாத்மாவுமாகிய இராமபிரானுக்கு அந்த [illegible] சீதையின்றேலபாகேயுட ஆகவேண்டிய காரண[illegible]?

இராமர் இவ்வாறு மிருகத்தைப் பின்[illegible] செல்லவே அம்மிருகம் ஒரு க்ஷணநேரம் இராமபிரானருகே வருவதும் ஒரு க்ஷணத்தில் தூர ஓடிப்போவதும் ஒரு க்ஷணம் [illegible]போவது மாக வோடி இராமனை வெகுதூரம் கொண்டுபோய் விட்டது. அது கண்டு இராமர் அதை இராக்ஷத[illegible] அம்பை வில்லிற் றொடுத்து அம்மிருகத்தின் மீது விட்டார். அம்பு பட்ட மாத்திரத்தில் மாரீசன் பூர்வரூபம் பெற்று வாயினின்று இரத்தத்தைக் கக்கிக் கொண்டு "ஆ! இறந்தேன். ஆ [illegible]! ஆ இலக்ஷ்மணா! என்னைச் சீக்கிரம் இரக்ஷிப்பாய்" என்று இராமபிரானைப் போலக் கூச்சலிட்டுக்கொண்டு விழுந்தான். ஒருவன் அக்ஞானியாயிருந்தாலும் கடைசிக்காலத்தில் ஹரிநாமத்தை நினைப்பானாகில் அவன் அவ்வரியின் சாம்பத்தைப் பெறுவானென்றால், அப்படிப்

பட்ட சாக்ஷாத் ஹரியையே தனக்கு முன் கண்ணால் பார்த்துக் கொண்டிருந்ததுமன்றி அவராலேயே கொல்லப்பட்ட அவ்வரக்கன் மாரீசனைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? அவனுடைய தேகத்தினின்று வெளிப்பட்ட தேஜஸானது சகல உலகத்தவரும் காண இராமபிரானையே யடைந்தது. தேவர்களனைவரும் மிகவும் ஆச்சரியத்தை யடைந்தார்கள். முனிவர்களைச் சதாகாலமும் ஹிம்சித்து வந்த இவன் செய்த கருமமென்ன, இப்போது அடைந்தகதியாது? இராமபிரானுடைய மகிமையாலல்லது முடியுமா? இவரது பிரபாவத்தாற்றானிருக்கவேண்டும். இதிலையமில்லை. இவன் ஆதிகாலத்தில் இராம பாணத்தாலடிப்பட்டு அவனையே நாடோறும் சிந்தித்துக் கொண்டிருந்தான். அச்சத்தால வீடு, பொருள் முதலியவற்றை விட்டொழித்து எப்போதும் தன் மனதில் இராமபிரானையே மனனஞ்செய்து வந்ததனால ஸகல பாபங்களினின்றும் விடுபட்டதுமல்லாமல் கடைசிக்காலத்தில் அந்த இராமபிரானாலேயே கொல்லப்பட்டு அவரையே சேவித்துக் கொண்டு அவரையே யடைந்தான். பிராமணன், அரக்கன், பாவி, அதர்மிஷ்டன் இவர்கள் எவராயினும் இராமபிரானைச் சிந்தித்துக் கொண்டு பிராணனைவிடுவார்களேயாயின் மேலானபதவியை யடைவார்கள் என்பது திண்ணம் என்றிவ்வாறு தேவர்கள் ஒருவர்க்கொருவர் சம்பாஷித்துக் கொண்டு சுவர்க்கலோகஞ் சென்றார்கள்.

பிறகு இராமர் இது என்ன விந்தை? இந்தத் துராத்மாவாகிய அசுரன் மரணமடையும் போது நான் கூப்பிடுவதுபோல் "ஆ இலக்ஷ்மணா! என்று கூப்பிட்டுக் கொண்டு கீழேவிழுந்தான்; இதன் காரணமென்ன? இந்தக் கூவலைச் சீதை கேட்டிருப்பின் என்ன எண்ணுவாள்" என்று கருதியவராய் வெகுதூரத்திலிருந்து

இப்படியிருக்கையில துராத்மாவாகிய மாரீசன், கூறியதைக் கேட்ட சீதை பயந்து துக்கத்துடன இலக்ஷ்மணரைப் பார்த்து, "உமதண்ணா இராக்கதனால தாந்தரவடைகிறதுபோலிருக்கிறது. நீர் சீக்கிரமாக அங்கே செல்லும். இப்போது ஆ! இலட்சுமணா! என்று உமது தமையன் கூவியது உமது செவியிற் படவில்லையா?" என்றாள். இதுகேட்ட இலக்ஷ்மணர் 'அம்மா! அது இராமர்

கூவியதன்று; எவனோ அரக்கனொருவன் மாயாவல்லமையில் கூவியிருக்கிறான். அண்ணா கோபங்கொள்வாராயின் மூன்றுலகத்தையும் இமைப்பொழுதில் அழித்து விடுவார். அமரர்களாலும் ஆராதிக்கப்படுகிறவர் எமதண்ணா. அப்படிப்பட்டவர் இம்மாதிரியான ஈனவார்த்தைபேசக் காரணமேது" என்றார். சீதை இதைக்கேட்டதும் கோபங்கொண்டு இலக்ஷ்மணரைப் பார்த்து, கண்களிலிருந்து கண்ணீர் பெருக நின்று, "துர்ப்புத்தியுடைய இலக்ஷ்மணா! அண்ணாவுக்கு அழிவை விரும்புகின்றாயா? இராகவனைக் கொல்லும் பொருட்டும் என்னை கொண்டுபோகும் பொருட்டும் நீர் பரதரால் அனுப்பப்பட்டீர்போலும்! அண்ணனுக்கு அழிவுண்டாயின் என்னைக் கைக்கொள்ளக் கருதினீர் போலும். நீர் என்னையடையமுடியாது. நான் இக்கணமே என் பிராணனைவிடுவேன். இராமபிரானுக்கு மனைவியாகிய என்னை இவ்வாறு நீர் அபஹரிக்கவெண்ணுகிறீரென்பதை நான் அறிந்தேனில்லேன். அந்த இராமரைத் தவிர பரதரையாவது, அல்லது உம்மையாவது, என்னைக் கொண்டு தீண்டேனென்று சொல்லிக் கரங்களால் அடித்துக் கொண்டு கதறினாள். இதை இலக்ஷ்மணர் கேட்டதும் இருகரங்களாலும் செவியைப் பொத்திக் கொண்டு மிகுந்த துக்கத்துடன் சீதையைப் பார்த்து, "ஏ சண்டி! என்னைப் பார்த்து இவ்வாறவதூறு பேசிய உமக்கு ஏதோ தீங்கு நேரிடப்போவது நிச்சயம்" என்று கூறிவிட்டு அங்குள்ள வனதேவதைகளிடம் சீதையை ஒப்புவித்துவிட்டு சோகமேலிட்டவராய் இராமரிடம் மெதுவாய்ச் சென்றார்.

இச்சமயம் நோக்கி இராவணன் ஒரு சந்நியாசிவேடம் பூண்டு தண்டு கமண்டலங்களுடன் சீதையினருகே வந்தான். சீதை அவனைக் கண்டதும் யாரோ பெரியவர் என்று கருதி தண்டம் சமர்ப்பித்து, பயபக்தியோடு பூஜித்து கனி கிழங்குகளைக் கொடுத்து "ஐயா முனிவரே! இந்தக்கனிவர்க்கங்களைப் புசித்து இங்கேயே சுகமாகவிருங்கள். எனது பர்த்தா இப்போதே வருவார். உமது விருப்பப்படி இதமானதெதையும் செய்வார்" என்றாள்.

இராவணசந்நியாசி கூறுகிறான்.

"ஓ கமலம்போன்ற கண்களையுடைய காரிகையே! களங்கமில்லாதவளே! நீ யார்? உன் நாயகன் யார்? இராக்கதர் வசிக்கும்

இந்த வனத்திற்கு நீங்கள் வர நேர்ந்த காரணமென்ன? இதற்கு மறுமொழி சொல்வாயேயாயின் நானும் என் விருத்தாந்தத்தைச் சொல்வேன்" என்றான்.

சீதை கூறுகிறாள்

"ஐயா! அடியேன் அயோத்தியாதிபதியும் ஸ்ரீமானுமாகிய தசரதசக்ரவர்த்தியின் மூத்த புதல்வரும் சகல இலக்ஷணங்களும் அமையப்பெற்றவருமாகிய ராமசந்திர பிரபுவின் மனைவி. ஜனக மகாராஜனின் புத்திரி. அந்த இராமருக்கிளையவன் இலக்ஷ்மணனென்று சொல்லப்படுவார். அவர் தமது அண்ணனிடம் அத்தியந்த அன்புடையவர். பிதாவின் கட்டளைப்படி நாங்கள் மூவரும் இந்த வனத்தில் வந்திருக்கிறோம். பதினான்கு வருடகாலம் இங்கு வசித்திருப்போம். தாங்கள் யாரோ? அறிய விரும்புகின்றேன்" என்றாள்.

இராவணசந்நியாசி கூறுகிறான்.

"நான் புலஸ்தியப் பிரமரிஷியின் பௌத்திரனும் இராவணனென்னும் பேர்படைத்தவனும் லங்காபுரிக்கு அரசன். உன்மீது கொண்ட காதலால் மிகுந்த மயக்கமடைந்து உன்னைக் கொண்டுபோக வந்தேன். முனிவேஷம் பூண்டுள்ள இராமனிடம் உனக்கென்ன சுகமிருக்கிறது. என்னையடைந்து என்னுடைய சுகமனுபவித்துக் கொண்டிரு. இந்த வனவாசத்தால் நேர்ந்த துக்கத்தை விட்டுவிடு" என்றான்.

இவ்வாறு இராவணன் கூறவே சீதை அச்சங்கொண்டு அவனைக் குறித்துச் சாவதானமாய்க் கூறுகிறாள். "அடே! என்னிடம் இவ்வாறுரைக்கும் நீ அந்த இராமனால் நாசமடைவாய். கணப்போதில் காகுத்தர் தம்பியுடன் வருவார். சிங்கத்தின் முன் சுவானத்தைப்போல் என்முன் வந்து என்னை எதிர்க்க நீயார்? இராமபாணத்தால் அடியுண்டு தரையில் விழுவாய்" என்றாள். இதைக் கேட்டதும் இராவணன் கோபத்தினால் சினமடைந்து பர்வதத்திற்கு நிகரான தனது வடிவத்துடன் பத்துத்தலைகளுடனும் இருபது கரங்களுடனும் காளமேகம் போன்ற கரிய நிறத்துடனும் எதிரே நின்றான். அவ்வடிவத்தைக் கண்ணுற்ற வனதேவதைகளும் பூதக

களும் நடுங்கிப்பயந்தன. அப்போது இராவணன் தன் கரங்களின் நகங்களால் சீதாதேவியைத் தரையுடன் பெயர்த்தெடுத்துத் தூக்கி இரதத்தில் வைத்துக் கொண்டு ஆகாயமார்க்கமாய்ச் சென்றான். அப்போது சீதாதேவி ஆ இராமா! ஆ இலக்ஷ்மணா! என்று கூவி யழுதுகொண்டே பயத்தினால் மனம் பதை பதைத்துத் தைரியமின்றிய நிலைமையோடு பூதலத்தை நோக்கியவாறே இருந்தாள். இப்படிப் பிராட்டி கூவியதைக் கேட்ட கூர்மையான நகங்களையும் மூக்கையு முடைய ஜடாயு உடனே பர்வதத்தின் உச்சியிலிருந்து கிளம்பி இராவணனைப் பார்த்து "அடே! நில்லு நில்லு!" என்முன்னே வந்த பின் எங்கேதப்பிப்போகின்றாய்? யாருமில்லாத சமயத்தில் யாகத்தில் மந்திரபூதமான புரோடாசத்தை யிச்சித்து எடுத்தேகும் சுவானத்தைப்போல லோகநாதனாகிய இராமபிரானுடைய தேவியை அவரில்லாத சமயம்பார்த்து அபகரித்துச் செல்லுகின்றாய் என்று சொல்லித் தம்முடைய மூக்கினால் அவனிரதத்தைப் பொடியாக்கி இறக்கைகளால் அவனுடைய வில்லையும் பொடி செய்துவிட்டார். அப்பொழுது இராவணன் சீதையைவிட்டு விட்டு மிகுந்த கோபங்கொண்டு புத்திசாலியாகிய ஜடாயுவினுடைய இருபக்கத்துச் சிறகையும் தன் கை வாளால் சேதித்தான். உடனே பக்ஷிராஜனாகிய ஜடாயு குற்றுயிராய்க் கீழேவிழுந்தார். பிறகு இராவணன் பிராட்டியை வேறொரு இரதத்திலேற்றிக் கொண்டு சென்றான். அவ்வாறெடுத்தேகும்போது சீதை ஆ! இராமா! இராமா! என்றும் என்னை இச்சமயம் இரக்ஷிப்பார் யாருமில்லையே! என்றும் கூச்சலிட்டாள். ஆ இராமா! ஜகந்நாதா! சோகமுற்ற என்னைப் பார்க்கமாட்டீரோ இராகவா! இராக்ஷதன் எடுத்துக் கொண்டுபோகின்றானே? உமதுமனைவியான என்னை விடுவிக்கமாட்டீரா? பாக்கியசாலியாகிய இலக்ஷ்மணா! அநாதையாய்த் தூக்கிச்செல்லுமென்னைக் கண்கொண்டு பார்க்கமாட்டீரா? என்னுடைய சொல்லாகிய அம்பு உம்மையுங் குத்தியும் புண்படுத்தி விட்டது போலும்! என்று கூறிவிட்டாள். இதனால் இராவணன், இராமபிரான் எங்கே வந்துவிடுவாரோ வென்று பயந்து வாயுவேகமாக ஆகாயமார்க்கத்திற் சென்றான். பிராட்டி கீழே பார்த்துக் கொண்டே சென்றாள். அப்போது வழியில் ஒரு பர்வதத்தின் கண் ஐந்து வானரங்களிருக்கக் கண்டு உடனே தன் ஆடையிற் கொஞ்சம் கிழித்து அதில் தனதாபரணங்களை எல்

லாம் முடிந்து இராமபிரானுக்குத் தெருவிக்கும் பொருட்டு அப்பர்வதத்தின் மேலேறினாள். பிறகு இராவணன் சமுத்திரத்தைக் கடந்து இலங்கையை யடைந்து ஜானகியைத் தன் அசோகவனத்தில் ஏகாந்தமான இடத்தில் வைத்துவிட்டு அநேக இராக்கதஸ்திரீகளை அவளுக்குக் காவலாக ஏற்படுத்தி யாதருபாவனையாகப் பரிபாலித்துவந்தான். சீதையோ தீனத்தன்மையை யடைந்து அலங்காரமற்றவளாய்த் துக்கத்தில் மூழ்கினவளாய் வாயுலர்ந்து ஸதா இராமா இராமா என்று சொல்லிக்கொண்டு அதிகசோகத்துடன் அந்த இராக்கத ஸ்திரீக் கூட்டத்தின் மத்தியிலிருந்து வந்தாள்.

ஏழாவது சருக்கம்
முற்றிற்று

8-வது சருக்கம்

பரமசிவன் கூறுகிறார்.

இராமபிரான் மாயாவியாகிய மாரீசனைக் கொன்றபின் ஆசிரமத்திற்குத் திரும்பிவா யததனிக்கையில், தைனியத்தால் வாடிய முகத்துடன் இலக்ஷ்மணர் சிறிது தூரத்தில் வருவது கண்டு புத்திமானாகிய அவர் தமக்குள்ளே சிந்திக்கிறார். நமது தம்பியோ நாம் வைத்துவிட்டுவந்த மாயாசீதையை யறியான். அறிந்திருந்தாலுமே நான அவன் யமக்குப்படி சாதாரண மனிதனைப் போல் துக்கிக்க வேண்டும். அப்படிச் செய்யாது நாம் விரக்தரைப் போலிருந்து விடுவோமாயின், இராக்கதக்கூட்டங்கள் நாசமடையவழியுண்டாகாது. ஆதலால் நாம் சீதைக்காகச் சோகமுற்றவன்போல் கதறுவோமாகில் சீதையைத்தேடுகிற உபாயத்தால் நாம் இராக்கதர்களிருக்குமிடம் போகலாம். அப்போது நாம் இராவணனை அவன் குலத்தாருடன் கொன்று அக்கினியிலிருக்குப்படி ஆக்ஞாபித்த சீதையை யடைந்து ஆயாசமின்றி அயோத்தியாபுரி செல்லலாம், பிரமதேவனுடைய பிரார்த்தனைக்குட் பட்டன்றோ நாம் மானிடவுருவங் கொண்டது!

ஆகையால் மானுடத்தன்மையை வகித்துச் சிலகாலம் வசித்து வரவேண்டும். அதனால் நம்முடைய மாயாமானுட லீலைகளைப் பக்திமான்கள் சிரவணஞ்செய்து சுலபமாக முத்தியையடைவார்கள் என்று இவ்வாறு சங்கற்பித்துக் கொண்டார். இதற்குள் இலக்ஷ்மணரும் அருகே வர அவரைக் கண்டு, "அடே தம்பி! என் பிரியமுள்ள சீதையை விட்டு இங்கு ஏன் வந்தாய்? இராக்கதர்கள் சீதையைக் கொண்டுபோய் விட்டார்களா? அல்லது அவளைப் புசித்து விட்டார்களா" என்று வினவினார். இலக்ஷ்மணர் கண்களில் நீர் ததும்பக் கைகளைக் கூப்பிக்கொண்டு அன்போடு பணிந்து "அண்ணா! சற்று முன்பு ஆ இலட்சுமணா! என்று கூச்சலிட்ட இராக்கதனுடைய குரலைக் கேட்டு, பிராட்டியார் துர்வார்த்தைகளைப் பேசி துக்கப்பட்டார். அப்படிக் கூவியது தமது குரல் போலவே யிருந்தமையால் என்னை விரைவில் தம்மிடம் செல்லும்படி ஆக்ஞாபித்தருளினார். அதற்கு அடியேன், அது அரக்கனொருவன் கூவியது; அண்ணாவின் குரலல்லவென்று சொல்லியும் கேளாது அவ்வுத்தமி அச்சமயம் என்மீது கோபங்கொண்டு சொன்ன வார்த்தை ஸந்நிதானத்தில் சொல்லத்தக்கதல்ல; ஆகையால் அடியேன் எனது செவிகளைப் பொத்திக் கொண்டு விரைவில் தம்மிடமோடி வந்தேன்" என்றார். இராமர், "இலக்ஷ்மணா! நீ செய்தது அநுசிதம். அவ்வாறுரைத்த ஒரு ஸ்திரீயின் வார்த்தையை சத்தியமென்றெண்ணி விட்டாய்; சீதையை விட்டு வந்தமையால் இந்நேரத்திற்குள் அவள் இராக்கதருக்கிரையாயிருப்பாள்; இதிலையமில்லை" என்று சொல்லிக் கவலையுற்றவராய் ஆசிரமத்திற்கு வந்து அங்கே சீதையைக் காணாமல் சோகங்கொண்டு அழ ஆரம்பித்து, பிரியமுள்ளவளே! எப்பொழுதும் போலுன்னை ஆச்சிரமத்திற் காணேனே! என்னை மோகிக்கும்படி செய்ய வெண்ணி விளையாட்டாக எங்கேனும் ஒளிந்து கொண்டிருக்கிறாயா? என்று கூறி அவ்வனமெங்குந் தேடினார். வனத்தில் எங்கும் சீதை காணப்படாமையால் மிகுந்த துக்கங்கொண்டு வனதேவதைகளே! என் பிராணநாயகியான சீதை எங்கே யிருக்கிறாள். மிருகங்களே! பறவைகளே! விருக்ஷங்களே! என் மனைவியைக் காட்டுங்கள். ஆ சீதா! சந்திரபிம்பத்தையொத்த வதன முடையவளே! ஆ என் பிராண நாயகியே! கரிய கூந்தலை யுடையவளே! கமலம் போன்ற கண்களையுடையவளே!

என்று இவ்வாறு பலவாறாக இராமபிரான் கூறி பிலாபித்துத் தேடினார். எங்கும் சீதை புலப் படவில்லை.

இராமர் எல்லாமுணர்ந்தவர். எங்கும் நிறைந்தவர், ஆனந்தரூபர். அப்படியிருந்தும் துக்கித்தார். அவர் சலனமற்ற வரெனினும் அங்குமிங்குமோடினார். அகங்கார மமகாரங்களற்ற அகண்டாநந்தரூபரெனினும் என் மனைவி யெங்கே என் சீதை யெங்கே என்று கூறிச் சோகத்துடனழுதார். ஒன்றிலும் விருப்பில் லாத அவர் மாயையுடன்கூடி விருப்புடையவர் போல் அறிவில்லாத வர்களுக்குக் காணப்படுகின்றனர். தத்துவமறிந்தவர்களுக்கு அவ் வாறு தோன்றார். இவ்வாறு இராமபிரானும் இலக்ஷ்மணரும் வன மெங்குந் தேடிக்கொண்டு வரும்போது, ஓரிடத்தில் உடைந்த இரத மும் குடையுமிருப்பதைக் கண்டார்கள். அங்கு நின்று சுற்றிப் பார்க்கையில் அங்கே வில்லம்புகளும் விழுந்து கிடந்தன. அவற்றைப் பார்த்ததும் இராமர் "தம்பி இலக்ஷ்மணா! பார்த்தாயா! எவனோ ஒருவன் ஜானகியை யெடுத்துக்கொண்டு போயிருக்கிறான்; அவனை மற்றொருவனெதிர்த்துப் போர் புரிந்து ஜயமடைந்து ஜானகியை அவன் கொண்டுபோயிருக்கிறான் போற்காண்கிறது" என்று சொல் லிக் கொண்டே இன்னும் சிறிது தூரஞ் செல்ல, அங்கே மலைபோ லிருந்த ஜடாயுவின் தேகத்தைப் பார்த்தார் இராமபிரான். உடனே தம்பியைப் பார்த்து, "இலக்ஷ்மணா! இவன் தான் ஜானகியைப்புசித் திருப்பானென்று தெரிகிறது; யாருமில்லாத இங்கே இவன் சந் துஷ்டியாய்ச் சயனித்துக் கொண்டிருக்கிறான் பார். இவ்விராக்கத னைக் கொல்லுகிறேன், வில்லம்புகளைக்கொண்டுவா" என்றார்.

இங்ஙனம் இராமர் கூறக்கேட்ட ஜடாயு பயங்கொண்டு பெரு மானை நோக்கி, "உமக்கு மங்களமுண்டாகுக. என்னைக் கொல்ல வேண்டாம், நானிவ்வாறு இறக்குந் தசையிலிருப்பது உமக்காகவே. நான் ஜடாயு. உமது மனைவியை யபகரித்துப் போனவனை நான் பின்றொடர்ந்து போனேன். அவனுக்கு மெனக்கும் அப்போது யுத்தமுண்டாயிற்று. அவன் கைகளையும இரதத்தையும் வில்லம்பு களையும் நான் முறித்து விட்டேன். அதனால் அவன் என்னை இப் படித் துன்பப்படுத்தி விட்டான்; ஓ ஜகதீசா! நான் விழுந்து விட் டேன், பிராணனை விடுகின்றேன்" என்றார். இதைக்கேட்ட இராமர், நீரையும் கண்டகதப் பிராணனாயுமிருந்த அவரைக் கடாக்ஷித்து

கரங்கொண்டு தடவிக்கொடுத்துக் கண்ணீருடன் கூடியவராய் "ஜடா யுவே! என் மனைவியை யெடுத்தேகினவன் யார் சொல்லும்; என் பொருட்டல்லவா நீர் இவ்வாறு சிறகறுபட்டுக் கிடக்கின்றீர். ஆகையால் நீரெனக்கு அன்புள்ள பந்துவாவீர்" என்று சொல்ல, ஜடாயு, வாயினுதிரம் பெருக மெதுவாகச் சொல்லுகின்றார். "இராமா! பல பராக்ரமசாலியாகிய இராவணனென்னும் இராக்ஷதனொருவன் சீதா தேவியைத் தூக்கிக் கொண்டு தெற்கு நோக்கிப் போனான். இதற்கு மேலெனக் கெதுவும் பேசச் சக்தியில்லை. உமது ஸந்நிதியில் என் பிராணனை விடுகின்றேன். இச்சமயத்தில் நீர் எனக்குக் காட்சிதந்தது தெய்வயோகந்தான். நீர் பரமாத்மா விஷ்ணுமூர்த்தி. மாயாமானுட விக்கிரகராய் விளங்குபவர். கடைசிக் காலத்தில் உம்மை அடியேன் கண்டேன். ஓ ரகுநந்தனா! நான் முக்தனானேன் ஓ ராமா! உமது திருக்கரங்களால் என்னை மீண்டுமொருமுறை தடவிக்கொடும். உமது பதத்திற்கு நான் செல்வேன்" என்ன, இராமரும், அப்படியேயென்று கூறி நகைத்துக் கொண்டு அவனுடைய திருமேனியைத் தமது திருக்கரத்தால் தடவிக் கொடுத்தார். பிறகு ஜடாயுவும் பிராணனை விட்டுத் தரையில் சாய்ந்தார். அது கண்ட இராமர் கண்ணீர் விட்டுத் தமது பந்துவைப் போல் அவனைப் பார்த்துச் சோகமுற்றார். பிறகு இலட்சுமணர் தயாரித்த சிதையில் அவனை யேற்றித் தகனஞ் செய்தார். அப்பால் இருவரும் ஸ்நானஞ்செய்து அவ்வனத்திலிருந்த மிருகங்களை வதைத்து அவற்றின் இறைச்சியைப் பிண்டம் பிடித்து அங்குப் பசும் புற்களுள்ள தரையில் வைக்கும் பொழுது அங்குள்ள பறவைகளெல்லாம் பக்ஷிக்கும்படி செய்து பக்ஷிராஜனுக்குத் திருப்தி யுண்டாக்கினார். பிறகு "பக்ஷிராஜனே! எனது பதத்திற்கு நீரெழுந்தருளுவீர். எல்லோரும் பார்த்திருக்க எனது சாரூப்யத்தை யடைவீர்" என்றார். உடனே ஜடாயு சுந்தரரூபத்துடன் சூரியனைப் போல சோபிக்கும் விமானத்தின் மீது, சங்கு சக்ர கதா பத்மங்களுடனும் பரிசுத்தமான பீதாம்பரத்துடனும் தமது திருமேனி யொளி திக்கெங்கும் பிரகாசிக்கவும் சாரூப்யம் பெற்றுள்ள நான்கு விஷ்ணுபாரிஷதர்கள் பூஜிக்கவும் முனிஜனங்கள் தோத்திரஞ்செய்யவும் விளங்கினார். அப்போது ஜடாயு இருகரங்களையும் குவித்துக் கொண்டு இராமரை நமஸ்கரித்து, அவர் சிந்தை மகிழும்படி துதிக்கலானார்.

ஜடாயுதுதி

கணக்கில்லாத கல்யாணகுணமுடையவரும், சிந்தனைக்கெட்டாதவரும், ஆதிகாரணபூதரும் ஸகல ஜகத் சிருஷ்டி ஸ்திதி சங்காரங்களுக்குக் காரணமானவரும் பிரகிருதிக்கு அப்பாற் பட்டவரும் பரமாத்ம சொரூபருமான ஸ்ரீராமசந்திரனை நான் எப்போதும் நமஸ்கரிக்கின்றேன். அளவற்ற ஸுகமுடையவரும், பிரமன் இந்திரன் முதலானவர்களுடைய துக்கத்தை இலக்ஷ்மி கடாக்ஷத்தினால் போக்கடிப்பவரும் நிகரற்ற வில்லம்புகளைக் கரத்திற்கொண்டவரும் வரங்களையளிப்பவரும், மானுடஸிரேஷ்டருமான இராமபிரானை நான் ஸதாகாலமும் நமஸ்கரிக்கின்றேன். மூவுலகமும் விரும்பத்தக்க உருவமுடையவரும் ஆதியானவரும், நூறுசூரியருடைய தேஜஸ் வாய்ந்தவரும் கேட்டதைக் கொடுப்பவரும் சற்ஜனங்களுக்குச் சரண்யராயுள்ளவரும், எப்போதும் கற்பகதருவினடியிலிருப்பவருமான இராகவனை நான் நமஸ்கரிக்கின்றேன். பெரியஸம்ஸார பாவனைக்கு எட்டாதிருப்பவரும் ஸம்ஸார பாவனையற்ற முனிவர்களுக்குப் பிரயத்தியக்ஷமாய் விளங்குபவரும் ஸம்ஸார சாகரத்தைக் கடப்பதற்கு ஓடம்போன்ற திருவடி யுடையவருமான இராமனை நமஸ்கரிக்கின்றேன்.

ஸம்ஸாரமாகிய வனத்திற்குக் காட்டுத் தீபோன்ற திருநாமத்தையுடையவரும், சாம்பமூர்த்தி முதலாயினோரினும் தயாளகுணமுடையவரும் ஆயிரங்கோடி அரக்கர்களுக்குப் பதிகளாயிருந்தவர்களை நாசஞ்செய்தவரும் யமுனை நதியை நிகர்த்த கருமையான திருவுருவமுடைய வருமாகிய ஸ்ரீஹரியை நான் வணங்குகின்றேன். உமாமகேசுவரருடைய மனதில் வசிப்பவரும் மந்தரகிரியென்னும் மலையைத் தரித்தவரும் லக்ஷ்மிதேவிக்கு ஆனந்தத்தை யளிப்பவரும் தேவதானவ ஸிரேஷ்டர்கள் தொழத்தக்க திருவடிமலரையுடையவரும், தேவர்களுக்கு வரங்களைத் தருபவருமான ஸ்ரீரகுநாயகனை நான் நமஸ்கரிக்கின்றேன். பிறர்பொருளையும் பிறர்மனைவியையும் பரித்தியாகம் செய்தவராலும் பிறரது குணங்களைக்கண்டு சந்துஷ்டசித்தராயிருப்பவராலும் பிறருக்கு நன்மைசெய்யும் உத்தமகுணத்தையே பூஷணமாகக் கொண்டவராலும் சேவிக்கத்தக்க கமலக்கண்ணராகிய இரகுநந்தனனை நான் வணங்குகின்றேன். மந்தகாசத்தால் அழகுபொருந்திய திருமுகமண்டலமுடையவரும், சித்திர

மாத்திரத்தில் சுலபமாய் அடையக்கூடியவரும் இந்திர நீலம் போன்ற காந்தியையுடையவரும் அழகு பொருந்திய பரந்த வெண் தாமரைபோன்ற கண்களுடன் விளங்குபவரும் எல்லா ஈசனுக்கும் ஈசனான இரகு குலதிலகனை வணங்குகின்றேன்.

மூன்று குணங்களுடைய சம்பந்தத்தினால் நீரே விஷ்ணு மூர்த்தியென்றும் பிரமதேவனென்றும் சங்கரனென்றும் சொல்லப்படும் உருவபேதங்களுடன் விளங்குகின்றீர் அது நீர் நிறைந்துள்ள பாத்திரங்களில் காணப்படும் சூரியன்போலாகும். தேவேந்திரனுடைய ஸ்துதிக்குப் பாத்திரரான ஜகதீசனை நான் துதிக்கின்றேன். சதகோடி மன்மதனுடைய சௌந்தரியம் வாய்ந்தவரும், பலவழிசெல்லும் பாவனைக்கு அப்பாற் பட்டவரும், சாம்ப மூர்த்தியி னிருதயத்தில் சதாகாலமும் விளங்குப வருமான இராமசந்திர பிரபுவை நான் வணங்குகின்றேன்.

என்றிவ்வாறு ஸ்தோத்திரஞ்செய்த ஜடாயுவுக்கு இராமபிரான் பிரஸன்னராய் "உமக்கு மங்களமுண்டாகும். உமக்கு நமது பதவி கிடைக்கும். எவனொருவன் இந்தஸ்தோத்திரத்தை யெழுதுகின்றானோ எவன் கேட்கின்றானோ அவன் நம்மிடம் அன்புடையவனாய் நீர் என்பால் அன்புடையவராயடைந்தது போல் சாரூப்யத்தையும் மரணகாலத்தில் எனதுஸ்மரணத்தையும் அடைவான்" என்றார். இதைக்கேட்ட ஜடாயு பரமானந்த மடைந்து சாரூப்யம்பெற்று சதுர்முகனால் பூசிக்கப் படும் பரம பதத்திற்குச் சென்றார்.

எட்டாவது சருக்கம்
முற்றிற்று

9-வது சருக்கம்

பரமசிவன் கூறுகிறார்.

அப்பால் இராமபிரான் இலட்சுமணருடன் வேறொருவனத்திற்குச் சென்று துக்கத்துடன் சீதையைத் தேடிக்கொண்டு சென்றார். அப்போது ஆச்சரியமான உருவத்துடன் கூடியவொரு அரக்கனைக் கண்டார். அவனுக்கு மார்பில் முகமிருந்தது, கண்கள் முத

வியன எதுவுங்காணப்படவில்லை. கைகள் மாத்திரம் காதவழிக்கப்பாலும் சென்றிருந்தன. அவன் கபந்தன் என்னும் பேருடையவனாய் ஸகலஜந்துக்களையும் ஹிம்ஸித்துப் புசித்து வருபவன். அவனுடைய கரங்களுக்கு மத்தியில் இராமலக்ஷ்மணர்கள் சஞ்சரித்தனர். இவர்களிருவரும் தாங்கள் அந்த அரக்கனுடைய கரங்களுக்கிடையே யிருப்பதையும் அவ்வரக்கன் ஆகாரத்தையுங் கண்டார்கள். அப்போது இராமர் இலக்ஷ்மணா! வென்றுகூறி நகைத்து, "இந்த அரக்கனைப் பார்த்தாயா? இவனுக்குத் தலையையும் கால்களையுங் காணோம். மார்பில் முகமிருக்கிறது பார். தன் கைகளுக்கிடையே எந்தப் பிராணியகப்படினும் அதைப் பிடித்து பக்ஷித்துக் கொண்டிருப்பானென்றும் தெரிகின்றது. இப்போது நாமும் இவன் கரங்களுக்கிடையே சிக்கிக்கொண்டிருக்கிறோம். இலக்ஷ்மணா! தப்புவதற்கு வேறுவழியைக் காணோம். இவன் நம்மை பக்ஷித்துவிடுவான். நாமிதற்கு என்ன செய்வது" என்றார். இலக்ஷ்மணர் "இதைப்பற்றி விசாரிப்பானேன். நாமிருவரும் முன்னே சென்று இராக்ஷதனுடைய இரண்டு புஜங்களையும் வெட்டிவிடுவோம்" என்றார். இராமபிரான் அப்படியேயென்று கூறி அவனுடைய இடது தோளை வாளினால் வெட்டினார். அவ்வாறே இலக்ஷ்மணரும் துரிதமாக அவனுடைய வலது தோளைத் துணித்தார்.

அப்போது அரக்கன் ஆச்சரியமடைந்து அவர்களைப் பார்த்து, "அடா! நரசிரேஷ்டர்களான நீங்கள் யார்? சொர்க்கலோகத்திலுள்ள தேவர்களினுங்கூட என் தோள்களைச் சேதிக்க வல்லவரில்லையே" என்றான். அதைக் கேட்ட கமலக்கண்ணரான இரகுபுங்கவர் மந்தஹாஸஞ்செய்து, "அயோத்தியாபுரிக்கு அதிபதியான தசரதமகாராஜாவின் தனயன் நான். இவன் என் தம்பி, புத்திமானான இலக்ஷ்மணன். என் பத்னியும் திரிலோக சுந்தரியுமான சீதையை நாங்கள் வேட்டையாடச் சென்றிருந்த சமயம் யாரோ ஒரு அரக்கன் எடுத்துச் சென்றிருக்கிறான். அவனைத் தேடிக்கொண்டே இந்தப் பெரும் வனத்திற் பிரவேசித்தோம். நாங்கள் உன்னிரு கரங்களுக்கிடையே சிக்கிக்கொண்டமையால் எங்கள் பிராணனைக் காத்துக்கொள்ளும்பொருட்டு உன்னிரு தோள்களையும் துண்டித்தோம். விகாரமான ரூபமுடைய நீ யாவன்?" என்று கேட்டார்.

கபந்தன் கூறுகிறான்.

இதைக்கேட்டதும் கபந்தன், இராமா! நீர் என்னுடைய சமீபத்திற்கு வந்தபடியால் நான் தன்யனானேன். பூர்வம் நானொரு கந்தர்வராஜனாக இருந்தேன். நான் செய்த அருந்தவத்தினால் பிரமதேவனிடம் சாகாவரத்தைப் பெற்று அழகினாலும் யௌவனத்தினாலும் அகங்காரத்தையுடையவனாய் அதிக சுந்தரமான மாதர்களுடனுலகெங்கும் சஞ்சரித்துக் கொண்டிருந்தேன். அப்போது அஷ்டாவக்ர முனிவரைக் கண்டேன். கண்டதும் நகைத்தேன். அதுகண்டு கோபமடைந்த, அவர் "அடேதுர்மதமுடையவனே! நீ துஷ்டனானமையால் இராக்கதனாகக் கடவா" யெனச் சபித்தார்.

அப்போது அந்த முனிவரை வணங்கி "அடிகளே! அடியேனுக்கு அனுக்கிரகம் செய்யவேண்டும்." என்று பிரார்த்தித்தேன். அவர் எனக்கிரங்கி தவமகிமையால் ஏற்பட்ட தமது தேஜஸ் ஜ்வலிக்கச் சாபவிமோசனத்தைத் தெரிவித்தார். அதாவது, திரேதாயுகத்தில் நாராயணனே தசரதராமனாக அவதரிப்பார். ஒரு காலத்தில் அந்தமகான் உன்னிடம் வந்து காதவழி நீண்டிருக்கும் உனது கரத்தைக் கண்டிப்பார். அவரால் உனக்குச் சாபவிமோசனங் கிடைக்கும், பின் எப்போதும் போலாவாய்" என்றார். இவ்வாறு சாபமடைந்தவுடனே இந்த இராக்ஷஸசரீரத்துடன் ஒருசமயம் சினங்கொண்டு தேவேந்திரனிடம் சென்றேன். அவன் தன் வஜ்ஜிராயுதத்தால் என் தலைமேல் அடித்தான். பிரமதேவன் எனக்குக் கொடுத்த வரமகிமையால் வஜ்ராயுததாலடிபட்டும் எனக்குப் பிராணஹானி நேரிடவில்லை. ஆனால் என் தலையும் கால்களும் வயிற்றுக்குள் ஒடுங்கிவிட்டன. "ஐயோ! முகமின்றி யானெவ்வாறு பிழைத்திருப்பேன்" என்று இந்திரனிடம் வினவினேன். அப்போது அங்கிருந்த தேவர்கள் எல்லோரும் முகமற்ற என்னிடம் நகை காட்டினார்கள். பிறகு தேவேந்திரன் "உனக்கு உன் வயிற்றில் முகமுண்டாகக் கடவது. உன்கரங்கள் காதவழி நீண்டிருக்கக் கடவன" என்று கூறி யனுப்பினான். அன்று முதல் நானிங்கிருந்துகொண்டு என் கரங்களுக்கிடையிலகப்படும் மிருகங்களைப் புசித்துக் கொண்டிருந்தேன். இப்போது நீங்கள் என் தோள்களை வெட்டி விட்டீர்கள். இனியோர் பள்ளந் தோண்டி அதில் என்னை போட்டு

நெருப்பை மூட்டித் தகிப்பீர்களேயாயின், நான் எனது பூர்வ ரூபம் பெற்று உமக்குச் சீதையின் வரலாற்றைத் தெரிவிப்பேனென்றான். இலக்ஷ்மணர் உடனே யொரு பள்ளந் தோண்டி அதில் கபந்தனைத் தூக்கிப்போட்டு அக்கினியை வளர்த்தினார். பிறகு அவனுடைய சரீரத்தினின்றும் மன்மதனை யொத்த ரூபத்துடன் சர்வாபரணங்களோடு ஒரு கந்தர்வன் தோன்றினான். அவன் இராமரை அன்போடு வலம வந்து ஸாஷ்டாங்கமாகத் தண்டனிட்டு எழுந்து அஞ்சலியஸ்தனாயிருந்து பக்தியினால தழதழத்த வார்த்தையுடன் ஸ்தோத்தரிக்கலானான்.

கபந்தனாகிய கந்தர்வன் ஸ்தோத்திரஞ் செய்கிறான்.

ஓ இராமா! உம்மை ஸ்தோத்திரஞ் செய்ய என்மனம் இப்போது சந்தோஷங் கொள்கிறது. நீர் ஆதியந்த மற்றவர், அநந்தர், வாக்குக்கும் மனதிற்கும் எட்டாதவர். உமது சூக்ஷ்மரூபமே அவ்யக்தமென்று சொல்லப்படும் உமது இரண்டு திருமேனிகளுக்கும் அதுவே விலக்ஷணமாயும் திருக் ரூபமாயுமிருக்கும், மற்றவை திருசியமாயும் ஜடமாயும் அநந்தமாயுமிருக்கும். பிரபுவே! இருதயத்திற்கு வேறாகவிருக்கும் அதை நான் எவவாறுணர்வேன், புத்தி தத்துவம் சிதாபாஸத்துடன் சேர்வது சீவனெனப்படும். (சமஷ்டி) புத்தி முதலிய வற்றிற்குச் சாக்ஷியானதே பிரமம். நிர் விஷயமாயும் விகாரமற்றதாயும் அகிலாதமாவாயுமுள்ள அதனிடத்தில் எதையும அக்ஞானத்தால் ஆரோபித்துச் சொல்லுகின்றனர். உமது (சமஷ்டி) சூக்ஷ்மத திருமேனி இரண்யகர்ப்ப னெனறும ஸ்தூல தேகம் விராட்டெனறும சொல்லப்படும். உமது சூக்ஷ்மரூபமானது பாவனைக்கு எட்டாதது. இறநதகாலம், நிகழ்காலம், எதிர்காலம என்று சொல்லபபடும மூககாலங்களிலும் இநத உலகமானது எநத உமது ஸ்தூலத திருமேனியினின்றும தோற்றத்தை யடையுமோ அது மங்களகரமாகத தியானிக்கப்படும. உமது ஸ்தூல ரூபமான அண்டகோசம உததரகுணங்களான மகத்து முதலிய ஏழு ஆபரணங்களால சூழப்பட்டிருக்கும். நீரே உலகுக்கு இருப்பிடமாகிய விராட்புருஷர். உமமால் விகற்பிக்கப்பட்ட எல்லாவுலககளும் உமக்கு அவயவங்களாகச் சொல்லபபடும் உமது பாத மூலம் பாதாளமாகும். கணுக்கால் மகாதலம். கண்டக்கால் ரஸாத

லம், முழந்தாள் தலாதலம், தொடைகள் சுதலலோகம், விளாப்புறம் விதலம், அதலம் இடை, மணிக்கட்டு பூலோகம், புவர்லோகம் நாபி, மார்பு நக்ஷத்திரலோகம், கழுத்து மஹர்லோகம், நெற்றி தபோலோகம், சிரஸ் ஸத்தியலோகமாய் இந்திராதி லோகபாலகர்களுக்கு வாஸஸ்தலமாயிருக்கும், திக்குகளே யுமக்குச் செவிகள், அசுவினிதேவதைகள் உமக்கு நாசி, அக்னி தேவன் உமக்குவாய், தினகரன் உமது திருக்கண், உமது மனம் சந்திரனெனச் சொல்லப்படும், உமது புருவம் காலன், உமது அறிவு பிரஹஸ்பதி, உமது அகங்காரம் உருத்திரன், உமது வாக்கு சந்தஸ்கள், உமது பற்களே எமதருமன், இருபத்தேழு நக்ஷத்திரங்களும் உமது காங்கள், உமது மந்தகாஸமே மோசஞ்செய்யும் மாயை, உமது கீழ்க்கண் நோக்கமே சிருஷ்டி, உமது மார்பு தர்மம், முதுகு அதர்மம், உமது கண்ணிமைப்பே இரவும் பகலுமாம், உமது வயிறு சப்தஸாகரங்கள், நாடியே உலகத்திலுள்ள நதிகள், உமது ரோமங்களே விருக்ஷங்களும், ஓஷதிகளுமாகின்றன. உமது ரேதஸ்மழை, உமது மகிமை ஞானசக்தி, உமது ஸ்தூலசரீரம் இவ்வாறிருக்கின்றது. உமது சுபகரமான இந்த ஸ்தூல உருவத்தை இருதயத்தில் வைப்பவர்யாவரோ அவர்களே அனுபாஸமாய் முத்தி பெறுவோராவர். இதிற் சிறிதுமையமில்லை. ஆகையால் ராமா! உமது ஸ்தூல உருவத்தையே அடியேன் தியானித்து வருவேன். ஓ ராமா! எவனொருவன் இந்த ஸ்தூல பாவனையால் உம்மைத் தியானித்து ப்ரேமாஸத்தினால் மயிர்க்கூச்சலடைகிறானோ அவனக்கணமே முத்தியடைந்தவனாகின்றான். வில்லம்பு களேந்திய திருக்கரங்களையும் சியாமளமான திருமேனியையும் மரவுரி ஜடாபாரத்தையும் கொண்டு இலக்ஷ்மணனோடு சீதாதேவியைத் தேடிச் செல்வதான இந்த விக்கிரகமே நான் தியானிப்பதாகிறது. இராகந்தனனே என் இருதயத்தில் இந்த விக்கிரகமே எப்போதுமிருக்க அனுக்கிரகிக்கவேண்டும். சர்வக்ஞனை சாக்ஷாத் உருத்திரமூர்த்தி உமாதேவியோடு உமது திருவுருவத்தை எப்போதும் தியானித்துக்கொண்டு தாரக பிரம்மவாசகமான இராம இராம என்னும் மந்திரத்தை முமுக்ஷுக்களுக்குக் காசி க்ஷேத்திரத்தில் உபதேசஞ்செய்துகொண்டு சந்துஷ்டராயிருக்கின்றார்.

ஆகையால் இராமா நீரே பரமாத்மா! இது நிச்சயம். எல்லோரும் உமது மாயையால் மறைக்கப்பட்டு உம்மை இப்படிப்பட்ட

வரென்று தெரிந்து கொள்ளாதிருக்கின்றார். இராமபத்திரரே! உமக்கு நமஸ்காரம். இலக்ஷ்மணர் சேவிக்கும் பிரபுவே உமக்கு நமஸ்காரம். ஜகத்பிரபுவே என்னைக் காப்பாற்றும், காப்பாற்றும். உமது மாயை என்னைச் சூழ்வெட்டாமற் செய்யும்படி வேண்டிக் கொள்கிறேன் என்றான்.

ஸ்ரீ ராமர் கூறுகிறார்.

இங்ஙனம் பிரார்த்தித்த கபந்தனை இராமபிரான் கடாக்ஷித்து கந்தர்வனே! உத்தம பக்தியுடன் நீயுரைத்த ஸ்தோத்திரத்தைக் கேட்டுச் சந்தோஷமடைந்தேன். யோகிகளுடைய தக்கதாயும் சுலபமாயும் மேலானதாயுமுள்ள எனது ஸ்தானத்தை நீயடையக் கடவாய். யாரொருவன் சாஸ்திரோக்தமாய் நீ கூறிய இந்த ஸ்தோத்திரத்தை அனன்னிய புத்தியால் பக்தியோடு பிரதிதினமும் ஸ்தோத்திரஞ் செய்கிறானோ அவன் அஞ்ஞானத்தாலுண்டான ஸம்ஸாரபந்தத்தை விட்டு நித்தியானுபவ யுக்தனாய் நம்மை அடைவா னென்று திருவாய் மலர்ந்தருளினார்.

ஒன்பதாவது சருக்கம்

முற்றிற்று.

10-வது சருக்கம்.

பரமசிவன் கூறுகிறார்.

இங்ஙனம் கந்தர்வனாகிய கபந்தன் வரம் பெற்றுச் செல்லுகையில் இராமபிரானை நோக்கிக் கூறுகிறான். இராமா! இதோ எதிரே தெரிகின்ற ஆச்ரமத்தில் பக்திமார்க்கத்தில் அவாவுடையவளாய் உமது பாதாரவிந்தத்தில் பக்தி செலுத்திவரும் சபரி என்பவள் இருக்கிறாள். பாக்கிய சீலரே! அவளிடம் செல்வீராயின் உமக்கு அவள் எல்லாவற்றையும் தெரிவிப்பாள் என்று கூறிவிட்டு சூரிய தேஜஸ் போல விளங்கின ஒரு விமானத்தின் மீது ஏறிக்கொண்டு விஷ்ணுலோகத்திற்குச் சென்றான்.

இராமநாமஸ்மரணையினுலெய்தும் பயனிதுவே. அப்பால் இரகு புங்கவர் புலி சிங்கம் முதலிய துஷ்டமிருகங்கள் வசிக்கும் அந்த கோரமான வனத்தைக் கடந்து சபரியின் ஆச்ரமம் போய்ச் சேர்ந் தார். இலக்ஷ்மணருடன் தமது ஆச்ரமம் வந்த இராமபிரானைக் கண்ட சபரி பரமானந்தமடைந்து, எழுந்து அவருடைய திருவடி களிற் பணிந்து கண்ணீர் பெருகச் சுகா வென்று விசாரித்தனள். உடனே ஆஸனங்களில் வீற்றிருக்கும்படி உபசரித்து, இருவருடைய பாதங்களையும் அன்போடு அலம்பி பாதோதகத்தைச் சிரமீது புரோக்ஷித்துக் கொண்டு பூஜாதிரவியங்களைக் கொண்டு பூஜித்து இராமபிரானுக்கென்று அன்போடு சேகரித்து வைத்திருந்த அமிர்தத்திற்குச் சமமான கனிகளைச் சமர்பித்தனள். பிறகு சுகந்த சந் தனம் புஷ்பங்களால் திருவடியை யலங்கரித்து இருவரையும் மீண் டும் ஒருமுறை பணிந்து அஞ்சலி செய்த வாறிருந்து கூறுகிறாள்.

இரகுபுங்கவரே! இவ்வாச்ரமத்தில் எனது ஆசிரியராகிய மக ரிஷிகள் எழுந்தருளியிருந்தனர். அடியாளவர்களுக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்தனள் இப்படியிருக்கையில் அநேகமாயிரம் வருடகாலங்கழிந்தது! பின்னர் அவர் பிரமபதஞ்சென்றனர். அப் போது என்னை நோக்கி, "ஸநாதனனுன ஸாக்ஷாத் பரமாத்மாதசரத தனயனுகவவதரித்திருக்கின்றார். அவர் இராக்கதர்களை வதம் செய் வதின் பொருட்டும், ரிஷிகளை இரக்ஷிப்பதின் பொருட்டும் இங்கே வருவார். இப்போது அவர் சித்திரகூட பர்வதத்தில் வஸிக்கின்றார். இங்கே அவர் வருகிறவரையில் நீ தனிமையே ஏகாக்ர தியான நிஷ்டை யிலிருந்து கொண்டு இந்த உடலை வைத்திருக்கவேண்டும். இராக வரைப் பார்த்த பிறகு உன் உடலைத் தகித்துவிட்டு அவருடைய பதத்தை அடையப் போகிறாய்" என்று கூறி என்னை இங்கிருக்கக் கட்டளையிட்டுச் சென்றனர். இராமா! அவராஜ்ஞைப்படி உம்மைத் தியானஞ் செய்துகொண்டு உமது வரவை யெதிர் பார்த்துக் கொண்டிருக்கின்றேன். எனுடைய ஆசிரியது வாக்குப்பலித்தது.

சபரிஸ்தோத்திரம்.

ஓ ராமா! உமது தரிசனம் என்னுடைய குருவுக்குக் கிடைக் காமற் போயிற்று. பாவனுதிதனே! அடியேன் அபலை, அறிவில் லாதவள், ஈனஜாதியிற் பிறந்தவள், தமது அடியார்களுடைய

அடியார்களின் அடியார்களுக்குங் கூட அடியேன் அடிமையா யிருக்க அருகதையில்லை எனில், ஸாக்ஷாத் தமது அடிமைத் தொழி லுக்கு அடியேன் உரிமையாவது யாங்ஙனம் பொருந்தும்; மனோ வாக்குகளுக்கு எட்டாத தாங்கள் அடியேனுடைய கண்களுக்கு எவ்வாறு பிராப்தமாயினர். தேவர்களுக்குந் தேவரான பிரபுவே! அடியேன் தம்மைத் துதிப்பதற்குத் தெரியாதவளாயிருக்கின்றேன். நானென்னசெய்வேன்! தாங்களே பிரஸன்னமாகும்படி வேண்டு கின்றேன் என்றாள்.

ஸ்ரீ ராமர் கூறுகிறார்.

இவ்வாறு சபரி கூறவே இரகு குலதிலகர் பக்திவைராக்கியங் களோடு கூடிய வாக்கியங்களைப் பின்வருமாறு சொல்லுகிறார்.

சபரி! நம்மை ஸேவித்தறிப்பதற்கு புருஷன், ஸ்த்ரீ என்னும் வித்தியாசமும், நாமம ஜாதி ஆச்ரமம் இவை எவையும்காரணமாகா. பக்தியொன்றே காரணமாகும். யக்ஞம், தானம், தவம் மூலியவற் றைச் செய்வோரும், வேதாத்தியயனம் முதலிய கர்மங்களைச் செய் பவரும நமது பக்தியில்லாவிடத்து எமமை தரிசிக்க அவர்களால் ஒருபோதுமாகாது. ஆகையால் அபபடிப்பட்ட பக்திக்குச் ஸாதன மான சிலவற்றைச் சுருக்கமாகக்கூறுகிறோம். ஸத்ஸங்கமே அதற்கு முக்கியமான ஸாதகமாகும், இரண்டாவது எமது சரித்திரங்களைச்சிர வணஞ் செய்வது, மூன்றாவது எமது குணங்களில் யிருந்த அன் புடையவராயிருத்தல், நான்காவது எமது வாக்கியங்களை யெடுத்து விளக்கிச் சொலவதில் அன்புடையவராயிருத்தல். மங்கள கரமான வளே! என்னிடம்செய்த பக்தியினால் மாயாரஹிதமான புத்தியினால் எப்போதும் பூசிப்பதாம். ஐந்தாவது புண்ணியம், சீலம் இயமம், நியமம், முதலியவைகளை உடையவர்களாயிருததல். எமதுபூசையில் எப்போதும் நிஷ்டையுடையவராயிருத்தல் ஆறாவது ஸாதனமாகச் சொல்லபபடும். எமது மந்திரத்தை அங்க பூர்வமாக உபாசிப் பத்த ஏழாவதான ஸாதனம், எமதுஅடியார்களை எப்போதும் மேன்மையோடு பூசிப்பது எல்லாரிடத்திலும் மேன்மையையே எண்ணுவது, வெளிவிஷயங்களில் வைராக்கியத்துடன் சமாதி யில் நிலைத்திருத்தல் முதலியன எட்டாவதாகக் கூறப்படும் சாதனமாம். சபரி! எமது தத்துவவிசாரணையே ஒன்பதாவது சாதனமாம். பக்திசாதனங்கள் இவ்வாறு ஒன்பது விதமாகும்.

மாதர் களாலென்ன? ஆடவர் களாலென்ன? திரியக்கு களாலென்ன? பக்தியினால் பிரேமலக்ஷணங் களுண்டாகின்றன. அப்படிப்பட்ட இலக்ஷணங்கள் ஏற்பட்டவுடன் எமது தத்துவத்தை யனுபவிக்கலாம். எமது தத்துவாநுபவ முண்டாமாயின், அந்தப் பிறப்பிலேயே முத்தியுண்டாம். ஆகவே முத்திக்கு பக்தியே காரணமென்று நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. எமது பக்தி உன்னிடத்தில் பூர்ணமாயிருப்பதால் நாம இங்குவந்தோம். நமது தரிசனமே உமக்கு முக்தி. இதற் சிறிதும ஐயமில்லை. எமது அன்புக்குரியவளும் கமலலோசனியுமான என்மனைவி சீதை எங்கிருக்கின்றாள். யார் கொண்டு போனார்! உனக்குத தெரியுமா? தெரியுமாயின் எமக்குச் சொல் என்றார்.

சபரி கூறுகிறாள்.

ஸ்வாமி பிரபுவே! விசுவபாவனா! நீர் ஸர்வக்ஞர். ஆதலால் எல்லாமறிவீர். எல்லாம் நீர்தான். ஆயினும் உலகசரிதை அனுஸரித்து என்னைக் கேட்கிறீர். வைதேகியைப் பற்றிக் கூறுகிறேன். கேளுங்கள். இராவணனென்னும் அரக்கன் எடுத்தேகினான். இப்போது இலங்கையில் இருக்கின்றாள். இராமா! இதோ அருகே பம்பை என்று ஒருஸரஸிருக்கின்றது. அதனருகே ருசிய மூகமென்னுமொரு பர்வதமிருக்கின்றது. அதில் அக்கினியை யொத்த பராக்கிரம முடைய நான்கு மந்திரிமார்களுடன்வானரர்களுக்கு இராஜனான ஸுக்ரீவனிருக்கின்றான். அவன் தன் தமயனான வாலியென்பவனுக்குப் பயந்து அங்கே வந்திருக்கின்றான். வாலி ஒருரிஷியினுடைய சாபத்திற்கஞ்சி அங்கு வருவதில்லை. நீரங்கே போய் அந்தஸுக்ரீவனோடு சிநேகஞ்செய்வீராயின் உமது காரியம யாவும நிறைவேறும். இரகுநந்தனரே! உமது ஸந்நிதானத்தில் நான் தீயில் பிரவேசிக்கின்றேன். இராமசந்திர பிரபுவே இந்த உடலை யான்விடும் வரையில அதாவது ஒரு முகூர்த்தகாலம் இங்கிருக்கவேண்டுகின்றேன். "தத்விஷ்ணோ: பரமம்பதம்" என்னும் பதத்திற்கு விடைகொள்ளுகின்றேன். என்று கூறி அக்கினியிற் பிரவேசித்து அவித்தியாபந்தனைத்தையும் அக்கணமே ஒழியப் பெற்று முத்தியை யடைந்தாள். பக்தபராதீனனாகிய இராமர் பிரஸன்னமானதும் அதமஜன்மமெடுத்தவளான அந்த சபரி முத்தி

யடைந்தாளல்லவா? அப்படியிருக்க அறநெறிகடைபிடித்தொழுகும் அந்தணர் முதலானோர் இராமபிரானைத் தியானிப்பார்களாயின் முத்திபெறுவதற்கு பாத்தகைமை? ஆகையால் சத் பக்தியே முத்தியென்றறிக. இதில் ஐயமேயில்லை. பகவானாகிய இராமபிரானது பக்தி முத்தியை கொடுக்கும். ஜனங்களே இரகு புங்கவரது இணையடி மலராகிய காமதேனுவைச் சிந்தியுங்கள் அஞ்ஞான சம்பந்தமான அகில மந்தராந்தரங்களை விரைவாகவே விட்டொழித்து எல்லாருடைய இருதயத்தில் விளங்குவதும் பெரியோர்களால் பூசிக்கப்படுவதுமான இராமபிரானது திவ்யமங்கள சொரூபத்தையே தியானியுங்கள்.

பத்தாவது சருக்கம்.

முற்றிற்று

ஆரண்ய காண்டம்.

முற்றிற்று

கிஷ்கிந்தா காண்டம்.

1-வது சருக்கம்

பரமசிவன் கூறுகிறார்.

அவ்வாறே இராமரும் இலக்ஷ்மணரும் பம்பாஸரஸ்க்கு மெதுவாகச் சென்று அதனுடைய மேன்மையைக் கண்டு வியப்படைந்து மகிழ்ந்தார்கள். அந்தஸரஸ் ஒருயோசனை நீளமும், அதற்குத் தக்க விசாலமும் ஆழமுமுடைத்தாயிருந்தது. அதில் பரிசுத்தமான ஜலமும், குமுதம், நீலோத்பலம் முதலியமலர்களுமிருந்தன. அன்னம், காரண்டகம், சக்ரவாகம், நீர்க்கோழி, கொக்கு, நாரை முதலிய பல பல பறவைகளும் அந்தஸரஸிலிருந்து சப்தித்தன. அங்கே பலவிதமான பூங்கொடிகள் சூழப்பட்ட பலவிருக்ஷங்கள் நிறைந்திருந்தன. ஸரோருஹ மலர்கள் அடர்ந்து சற்புருஷர்

களுடைய திருவுள்ளத்தை நிகர்த்த தெளிந்த நீரையுடையதாயிருந்தது. இந்தத் திவ்ய ஸரஸ்ஸைப்பார்த்த இராமப்பிரான் அதனுள் இறங்கி அதன் நீரைப் பருகி, குளிர்ச்சியாயிருந்த அதன் கரை வழியே இலட்சுமணனுடன் சென்றார். இவர்களிருவரும் இருசிய மூக பர்வதத்தின் பக்கமாய்ப் பற்பல மரங்களையும் அந்தப் பர்வதத்தினழகையும் பார்த்துக்கொண்டு கையில் வில்லையம்புகளுடனும் இடையில் மரவுரியும் முடியில் ஜடாபாரமும் தரித்தவண்ணம் போய்க்கொண்டிருப்பதை அந்தமலையின் உச்சியில் தன் நான்கு மந்திரிமார்களுடனிருந்த ஸுக்ரீவ மஹாராஜன் பார்த்தான். இவர்கள் அதிபராக்ரமசாலிகளென்னக் கண்ட அந்த ஸுக்ரீவன் உடனே ஆஞ்சநேயனை நோக்கி, "வீரசிரேஷ்டர்களாகக் காணப்படும் இவர்கள் யார்? எனக்கு பயங்களுண்டாகுது. நீரோர் பிராமண பிரமசாரி வடிவங்கொண்டு அவர்கள்பால் சென்று அவர்கள் வாலியினால் என்னைக் கொல்லும்படி அனுப்பப்பட்டவர்களோ வேறுபாரென்பதை அவர்களோடு ஸம்பாஷித்துத் தெரிந்து கொண்டு அவர்கள் துஷ்டர்களாகக் காணப்படுவார்களாயின் அங்கிருந்த வண்ணம் கைசமிக்ஞை செய்யும்; அல்லாமல் ஸாதுக்களாக விருந்து நம்முடைய நட்பை விரும்பினவர்களாமென்று தெரிந்து வாரும்" என்றான்.

ஆஞ்சநேயர் அவ்வாறே யாகட்டுமென்று சொல்லி இராமனிடம்வந்து அன்போடு அவரை வணங்கிக் கூறுகின்றான்.

ஆஞ்சநேயர் ஸ்தோத்திரம்.

ஆண்சிங்கங்களை யொத்த வீரர்களைப்போல் விளங்கும் நீங்கள் யார்? சூரியனுடைய காந்தியானது நான்கு திக்குகளிலும் வீசுவதுபோல் உங்களுடைய காந்தியும் திக்குகளெங்கும் பரவி நிற்கிறது. உங்களைப் பார்த்தால் இம்மூன்றுலகங்களுக்கும் நாயகர்களைப் போல் காணப்படுகின்றீர்கள். பிரதானபுருஷர்களும் உலகத்திற்குக் காரணபூதரும் நீங்கள்தான். உலகெங்கும் வியாபித்திருப்பவரும் நீங்களே. மாயையால் மானுடசரீரம் பெற்று விளையாடுகிறீர்கள். பூபாரத்தை யொழிப்பதற்கும் பக்த பரிபாலனார்த்தமாகவும் பரமபுருஷர்களாகிய நீங்கள் க்ஷத்திரியர்களாக அவதரித்து,

ஸஞ்சரிக்கின்றீர்கள். உலகத்தைப் படைத்துக் காத்து சம்ஹரிக்கும் முத்தொழில்களையும் ஒரு விளையாட்டாகக் கருதி முடிக்க வல்லவர்களாகக் காணப்படுகின்றீர்கள். நீங்களே எல்லோருடைய இருதயங்களிலும் நியாமகர்களாக விருந்து பிரேரேபணை செய்கின்றவர்களாகிறீர்கள் நாராயணரைப் போலிவ்வுலகத்தில் ஸஞ்சரிக்கப் புறப்பட்டதாக எனக்குத் தோன்றுகிறது என்றார் ஆஞ்சநேயர். இதைக்கேட்டதும் இராமர் இலக்ஷ்மணரைப் பார்த்து, இலக்ஷ்மணா! பிரமசாரியாக வந்திருக்கும் இவனைப்பார். இலக்கணசாஸ்திரத்தை நன்குணர்ந்தவனாகக் காணப்படுகின்றான். இவன் கூறிய வசனங்களெல்லாம் தெளிவாயிருக்கின்றனவே யென்று சொல்லி, அனுமானைப் பார்த்து, பிள்ளாய்! தசரதமகாராஜாவின் குமாரனாகிய இராமச்சந்திரன் நான். இவன் என் தம்பி இலட்சுமணன். என்மனைவி சீதையென்பவளுடன் நாங்கள் எமது தந்தையின்வாக்கிய பரிபாலனஞ்செய்ய இந்தத்தண்டகாரண்யம் வந்தோம். அப்போது நாங்கள் யாருமில்லாத சமயம்பார்த்து இராக்ஷதனொருவன் என்மனைவியையபகரித்துக்கொண்டு போய்விட்டான். அவளைத் தேடிக்கொண்டு நாங்கள் இங்கே வந்தோம். அப்பா நீயார்; யாரைச் சேர்ந்தவன் என்று கேட்டார்.

பிரமசாரி கூறுகிறார்.

"ஐயனே! வானரர்களுக்கு அரசனாகிய சுக்ரீவன் என்பவர் ஒருவரிருக்கின்றார். அவர் மகாபுத்திசாலி. இந்தமலையினுச்சியில் தமது அமைச்சர்கள் நால்வருடனிருக்கின்றார். இந்த ஸுக்ரீவர் வாலியென்பவனுடைய தம்பி. அதர்மபுத்தியுடைய அந்தவாலியானவன் இவரைத் துரத்திவிட்டதுமல்லாமல் இவர் மனைவியையும் அபகரித்துக் கொண்டிருக்கின்றான். அவனுக்குப் பயந்து இருசியமூகமென்று சொல்லப்படும் இந்தமலையின் கண் வந்திருக்கின்றார். நான் இந்த ஸுக்ரீவருக்கு மந்திரி. வாயுதேவனுடைய மகன். அஞ்சனாதேவியின் கருப்பத்திற் பிறந்தவன். அநுமானென்பது என்பெயர். இராமச்சந்திர பிரபுவே நீர் ஸுக்ரீவனுடன் சிநேகஞ்செய்யலாம். உமது மனைவியை அபகரித்தவனைக் கண்டுபிடித்து அவனைக்கொல்ல உதவிபெறலாம். விருப்பமிருக்குமாயின் இப்போதே செல்வோம் வாருங்கள் என்றார்.

இராமர் கூறுகிறார்

[illegible]

[illegible]

சென்றான். அப்போது அவள் நாங்கள் பர்வதத்தின் உச்சியிலிருப்பது கண்டு தன் ஆபரணங்களைக் கழற்றித் தன்னுடைய உத்தரியத்தில் முடிந்து எங்களைக்குறித்து எறிந்தாள். அந்த ஆபரணங்களை நாங்கள் குகையில் வைத்திருக்கிறோம். அவற்றைப் பார்த்து யாருடையதென்று தெரிந்துசொல்லும்" என்றுகூறி அந்த ஆபரணங்களைத் தருவித்துக் காட்டினான்.

இராமபிரான் அந்தத் துணிமுடிச்சை யவிழ்த்துப் பார்த்தார். அதில் பிராட்டியாரின் ஆபரணங்களிருக்கக் கண்டதும் ஆ சீதா! சீதா! என்று பலமுறைகூறியழுது, அவற்றைக் கட்டுமார்பிலணைத்துக்கொண்டு ஸாமானியரைப்போல் சோகமுற்றார். அப்போது தம்பி இலக்ஷ்மணர் அவரைச் சாந்தப்படுத்த வெண்ணி, "அண்ணா! ஸுக்ரீவருடைய ஸகாயத்தால் இராவணனை யுத்தத்தில் கொன்று சீக்கிரமாகப் பிராட்டியைத் தாங்கள் அடையப்போகிறீர்" என்றான்.

அப்பொழுது ஸுக்ரீவனும் ராமனைப் பார்த்து, "ஹே ராமா! யுத்தத்தில் ராவணனைக் கொன்று ஜானகியைத் தங்களிடம் சேர்ப்பிக்கிறேன். பிரமாணமாய்ச் சொல்லுகின்றேன்" என்றான்.

ஆஞ்சநேயர் அப்பொழுது அவர்களுக்கெதிரில் அக்கினியை வளர்த்து வைத்தார். இராமபிரானும் ஸுக்ரீவனும் மனத்திற்களங்கமில்லாதவர்களாய் அந்த அக்கினிஸாக்ஷியாக ஒருவரையொருவர் கைகளால் ஆலிங்கனஞ்செய்துகொண்டார்கள். பிறகு ஸுக்ரீவன் இராமபிரானுக்கு முன்புட்கார்ந்துகொண்டு தனது விருத்தாந்தங்களைக் கூறுகிறான்.

"முன் வாலிசெய்த செய்கையைக் கூறுகிறேன் கேளும்; மயனுடைய புத்திரனொருவன் மாயாவி என்கிற பெயருடையவன். அவன் அதிக அகங்காரங் கொண்டவன். அவன் ஒரு சமயம் கிஷ்கிந்தாபுரிக்குவந்து பெரிய ஆரவாரத்தோடு சிங்கநாதஞ்செய்து வாலியை அமருக்கழைத்தான். அதனால் வாலி மிகவுங் கோபங்கொண்டு சிவந்தகண்களோடு அவனிடஞ்சென்று அவனைத் தன்கை முஷ்டியால் குத்தினான். அவன் அதனால் மிகுந்த வியாகுலமடைந்து ஒரு பிலத்துள் நுழைந்தொளித்தான். அந்தமாயாவியை வாலி பின்தொடர்ந்து அந்தப் பிலத்தினுட்பிரவேசித்தான். அதுகண்டு நானுந்தொடர்ந்து சென்றேன். வாலி என்னை வெளியே யிருக்கும்படி ஆக்ஞாபித்துத் தான் மாத்திரம் குகைக்குட் சென்றான்.

அப்பால் ஒருமாதம் வரையில் அவன் அந்தக் குகையினின்றும் வெளியே வரவில்லை. பிறகு ஒருநாள் அக்குகையிலிருந்து உதிர வெள்ளம் பெருகி மேலே வந்தது. அதை நோக்கிய நான் வாலி இறந்தானென்று நினைத்து மிகுந்த துக்கங்கொண்டு அக்குகையின் முகத்துவாரத்தில் ஒருகல்லை யெடுத்தடைத்து விட்டு வீட்டுக்கு வந்து வாலி மாயாவியாகிய அரக்கனால் குகைக்குள்ளேயே கொல்லப்பட்டான் என்று கூறி விசனமுற்றேன். அதைக்கேட்டு எல்லோரும் துக்கித்தார்கள். பிறகு வானரசிரேஷ்டர்களெல்லோருங்கூடி எனக்கு இராஜ்யாபிஷேகத்தைச் செய்துவைத்தார்கள். ஆனால் அதை நான் விரும்பவேயில்லை. அதுமுதல் சிலநாள் நான் அரசபுரிந்து வந்தேன்.

பிறகு பிலத்துவாரத்தினின்று வெளியேவந்து என்னைப் பட்டாபத்தைக்கண்டு தூஷித்து [illegible] அடித்துத் தொந்தரை செய்தான். நான் அவனுக்குப் பயந்து [illegible] ரத்தைவிட்டு வெளிப்பட்டு [illegible] இந்த இருசியமூகபர்வதம்வந்து சேர்ந்தேன். வாலிக்கு ஒரு இருஷியின் சாபமுண்டு. அதனால் அவன் இந்தப் பர்வதத்திற்கு [illegible].

அதுமுதல் பகைமையாகிய அவன் என் மனைவியுடன் சுகமாய் [illegible]துகொண்டிருக்கிறான். மனைவியையும் [illegible]யையும் இழந்து இங்கே இருப்பதால் மிகவும் சங்கடப்பட்டுக்கொண்டிருக்கிறேன். உமது திருவடியை ஸ்பரிசித்ததால் [illegible]முடையவனானேன் என்றான். இராமபிரான் தமது நண்பனுடைய துக்கத்தைக் கேட்டு மிகவும் துக்கப்பட்டு அவனைப் பார்த்து உனது மனைவியை யபகரித்த உனது விரோதியை நான் [illegible] என்று பிரதிக்ஞை செய்தார். சுக்ரீவன் "ராஜசிரேஷ்டரே! அந்த வாலி பலவான்களுக்கெல்லாம பலவான். அவனை வெல்ல அமரர்களாலும் முடியாது. அப்படியிருக்க நீர் எப்படி அவனை வதஞ்செய்வீர் இராமா! அவன் பலத்தைக் கூறுகின்றேன்.

ஒருகாலத்தில் துந்துபியென்னும் அரக்கன் பெரிய மகிஷம் போன்ற உருவத்துடன் கிஷ்கிந்தைக்கு வந்து இராக்காலத்தில் பயமுறுத்தி வாலியைப் போருக்கழைத்தான். வாலி அதனால் மிகச் சினமடைந்து அந்த எருமைக்கடாவினருகே சென்று அதன் கொம்புகளைப்பிடித்து வீசியெறிந்து அதன் உடலை ஒருகாலால் மிதித்து

க்கொண்டு கைகளால் அதன் பருத்தசிரசை முறுக்கி முறித்து வீசி யெறிந்தான். அந்தச்சிரஸானது மதங்க முனிவருடைய ஆச்ரமத்தி னருகே போய் விழுந்தது. அது காததூரத்திற்கப்பாலிருந்து வந்து விழுந்ததனால் அந்த மஹரிஷியினுடைய ஆச்ரமத்தில் பெரிய ரத்த மழை பெய்தது. அதைப் பார்த்த மதங்கமஹரிஷி கோபத்தி னால் சினமடைந்து வாலியைப்பார்த்து “அடே! நமது பர்வதத் திற்கு நீ வருவாயாகில் உன் சிரம் வெடித்து நீ உயிர் துறப்பாய்; இதில் சிறிதும் சந்தேகமில்லை” என்று சபித்தார். அது முதலாக இந்த ருச்யமூகபர்வதத்திற்கு அவன் வருவதில்லை. இதையறிந் தவனான நான் அச்சமின்றி இங்கே வசிக்கின்றேன். “இராமா! அந்தத்துந்துபியின் சிரமானது பர்வதாகாரமாக இதோ இங்கிருக் கின்றது பாருங்கள். அதனையப்பாலெறிய உம்மாலாகுமாயின் வாலியை வதைக்க உம்மாலாகுமென்பது நிச்சயம்” என்று சொல்லி பெரிய மலைபோலக் குவிந்து கிடக்கும் அந்த எலும்புக்குவியலைக் காட்டினான். இராமபிரான் அதைக்கண்டு புன்முறுவல் செய்து தமது திருவடியின் பெருவிரலால் அதைத் தெற்றினார். அதுபத்துக் காதவழிதூரத்திற்கப்பால் போய் விழுந்தது. அதைப்பார்த்துச் சுக்ரீவன் ஆச்சரியமடைந்து தன் அமைச்சர்களைப் பார்த்து சாது சாது என்று கூறி இராமனை நோக்கி இதோ பாருங்கள், இங்கிருக் கும் ஏழுபனைமரங்களும் மிகபலமுடையன. இவைகளை ஒரேபாணத் தால் துளைத்து இலைகளுதிரும்படி செய்வீராயின் வாலியை நீர் வதைசெய்ய வல்லவரென்கிற நிச்சயம் எனக்குண்டாகும் என் றான். இராமபிரான் அப்படியாகட்டுமே என்று கூறி பாணத்தை பெரிய வில்லிற் பூட்டி எய்தார். அந்தப்பாணமானது அந்தப் பனைமரங்களேழையும் ஏககாலத்தில் துளைத்ததுமல்லாமல் பர்வ தத்தையும் பூமியையும் கூடப்பிளந்து மீண்டும் வந்து பெருமானி னுடைய அம்புறாத்தூணியில் பிரவேசித்து எப்போதும்போலிருந்தது. அதன்பின் சுக்ரீவன் பரமாச்சரியமடைந்து இராமனை ஸ்தோத் திரிக்கத் தொடங்கினான்.

சுக்ரீவன் ஸ்தோத்திரம்.

தெய்வமே! உலககர்த்தா நீர்தான் நீர் பரமாத்மா இதிலைய மில்லை. பூர்வம் நான் செய்திருந்த புண்யவிசேஷத்தால் உமது சிநேகம் கிடைத்தது. சம்சாரத்தினின்று விடுபடுவதன் பொரு

ட்டு மஹாத்மாக்கள் உம்மையே மனனஞ்செய்கிறார்கள். உம்மை நான் நண்பராக அடைந்தபின் ஸம்ஸாரநிவர்த்தியின் பொருட்டு உம்மைப்பிரார்த்திக்கவும் வேண்டுமோ? மனைவி, மக்கள், பொருள், இராஜ்ஜஸம்பத்து யாவும், உமது மாயையால் உண்டானவை. தேவ தேவனே! உம்மையன்றி யாதொன்றையும் நான் விரும்பவில்லை. நீர் பிரஸன்னராக வேண்டும். நான் இப்போது ஆநந்தானுபவரா கிய உம்மை அடைந்தது எனது பெரும்பாக்கியமேயாகும். மண் ணிற்கும் பொருட்டு பூமியை வெட்டுகையில் புதையல் கிடைத்த வாறாயிற்று. வெகுகாலமாக ஏற்பட்ட அவித்தையாகிற பந்தத்தி னின்றும் நாங்கள் இப்பொழுது விடுபட்டோம். யாகங்கள், தானங்கள், தபஸ்கள், கர்மங்கள், இஷ்டாபூர்த்தங்கள் இவைகளினு லெல்லாம் அது விடுபடுவதில்லை. அவற்றால் இன்னும் கட்டுப்படுவ தாகும். உமது பாததரிசனங் கிடைக்குமாயின் அக்கணமே அது நாசமடையும். இதில் ஐயமில்லை. ஒருவனுடைய சித்தமானது அரை க்ஷணமேனும் உம்மிடத்தில் சஞ்சலமின்றி யிருக்குமாயின், அனர்த்தங்கட்கு ஏதுவான அஞ்ஞானமானது அக்கணமே அவனிட மிருந்து வேருடன் அற்றுப்போகும்.

இராமா! இந்தமனமானது உபாதியிலிருந்தாலுஞ்சரி அல்லது வேறிடத்திலிருந்தாலுஞ்சரி, இருக்கட்டும்; ஒருவனுடைய நாவானது எப்பொழுதும் இராம இராம என்கிற இவ்வுமான ஜெபத்தைச் செய்யுமாயின், அவன் பிரமஹத்தியைச் செய்தவ னாயினும் கள்குடித்தவனாயினும் அந்தக்ஷணமே அப்படிப்பட்ட எல்லாப்பாவங்களினின்றும் விடுபடுவான். இராமா நான் வேறொ ன்றை விரும்பவில்லை. ஸ்திரீகளினால் உண்டாகும் ஸுகம் முதலிய வைகளையும் விரும்பவில்லை. உமது மாயையால் ஏற்பட்ட ஸம்ஸார பந்தத்தைப் போக்கும் உமது பக்தியொன்றையே நான் விரும்பு கின்றேன். உமது திருவடிக்கு அன்புடைய வென்னை இந்த ஸம்ஸார சங்கடத்திலிருந்து காப்பாற்றவேண்டும். முன் உமது மாயையிலகப்பட்ட அறிவுடையவனாய், இவன் மித்திரன் இவன் சத்துரு இவன் உதாஸீனன் என்னுமிவை முதலிய பேதங்க ளிருந்தன. இராமா! உமது திருவடிதரிசனமான பின்பு அவை எல்லாம் எனக்குப் பிரமமாகவே தோன்றுகின்றன. எனக்கு மித்திரன் யார்? பகைவன் யார்? உலகத்தார் உமது மாயையால்

எதுவரையில் கட்டுப்பட்டிருக்கின்றார்களோ, அதுவரையில் குண விசேஷங்களுடன் கூடியவராயிருப்பர். குணவிசேஷங்கள் எதுவரையிலிருக்கின்றனவோ அதுவரையில் பற்பல தோற்றங்களுமிருக்கும். அப்படிப்பட்ட தோற்றங்கள் எதுவரையிலிருக்கின்றனவோ அதுவரையில் அக்ஞானசம்பந்தமான காலகர்மபந்தங்களுமிருக்கும். ஆகையால் அவித்தையை யுபாஸிப்பவன் அந்தத் தமஸில் மூழ்கிவிடுவான். மக்கள், மனைவி முதலிய பந்தங்கட்கெல்லாம் மாயையேமூலம். அப்படிப்பட்ட உமது மாயை ஒழிய கிருபைசெய்யவேண்டும். இராமசந்திரப்ரபுவே! நான் உமக்குத் தாசன். எனது சித்தவிர்த்தியானது உமது பாதாரவிந்தங்களில் அர்ப்பிக்கக்கடவது. எனது நாவானது உமது திருநாமங்களையும் சரித்திரங்களையும் நவிலக்கடவது. என் கைகள் பக்தர்களுக்குக் கைங்கரியம் புரிவதிலேயே நிலைத்திருக்கவேண்டும். எனது தேகம் உமது திருமேனியிலேயே லயிக்கவேண்டும். என் கண்கள் எப்போதும் உமது மூர்த்தியில் பக்தியையுடைய உமது பக்தர்களுடைய திருவுருவங்களையும் குருநாதனுடைய ரூபத்தையுமே பார்க்கவேண்டும். செவிகள் உமது ஜன்மகர்மங்களையே சதாகாலமும் சிரவணஞ்செய்தல் வேண்டும். கால்கள் உமது ஆலயங்களுக்கே எப்போதும் செல்லக்கடவன. கருடத்துவஜரே! என் தேகம் உமது பாததூளிகலந்த தீர்த்தங்களையே எப்போதும் தரிக்கக்கடவது. இராமா! எனது சிரம் பிரமன் ருத்திரன் முதலியவர்களால் தேடப்படுகிற உமது திருவடிகளையே வணங்கவேண்டும் என்று ஸ்தோத்திரித்தான்.

தற்சருக்கம்

முற்றிற்று

2-வது சருக்கம்.

பரமசிவன் கூறுகிறார்.

இராமபிரானுடைய ஸ்பரிசவிசேஷத்தால் பாபங்களிலிருந்து விடுபட்ட சுக்ரீவனைப் பார்த்து இராமபிரான் மோகத்தைக்கொடுக்கும் மாயையைக் காரியசித்தி பெறுவதன் பொருட்டு அவனைத் தொடரும்படி செய்து மந்தகாஸத்துடன் கூறுகிறார். நண்பனே! என்னைக் குறித்து நீ சொன்னவையாவும் உண்மையே. சந்தேகமில்லை. ஆனாலும் உலகத்தில் என்மேல் நீ நறுமொழி பேறாயோ. அதென்னவெனில் அக்னிசாக்ஷியாக சிநேகஞ் செய்துகொண்ட என்னால் உனக்கு என்ன நன்மை பெறப்பட்டதென்கிற உலக அபவாதமுண்டாகும். இதிற் சந்தேகமில்லை ஆகையால் உனக்கு மங்களமுண்டாம்படி வாலியிடஞ்சென்று அவனையுத்தத்திற்கழைத்து அவனுடன் சண்டைசெய். அப்போது ஒரேகணையால் அவனைக்கொன்று உனக்கு இராஜ்யாபிஷேகஞ் செய்து வைக்கின்றேன் என்றார்

இதைக்கேட்ட சுக்ரீவன் மனமகிழ்வுற்றுடனே கிஷ்கிந்தையைச் சேர்ந்த ஒரு உபவனத்துட் பிரவேசித்து, பெரிய ஆரவாரத்தோடு அட்டகாஸஞ்செய்து, வாலியைச் சண்டைக்கழைத்தான். வாலி கர்ஜிப்பின் குரல்கேட்டதும் கண்கள் சிவக்கக்கோபங்கொண்டு அரண்மனையை விட்டு விரைவில் புறப்பட்டுச் சுக்ரீவனிடம் வந்தான். உடனே சுக்ரீவன் வாலியின் மார்பில் ஒரு குத்துக் குத்தினான். வாலியும் சினமடைந்து தன்முஷ்டியால் சுக்ரீவனைக் குத்தினான். மறுபடியும் சுக்ரீவன் வாலியைக் குத்தினான். இவ்வாறு இருவரும் அமர்செய்து வருகையில் அவ்விருவருருவமும் வேற்றுமையின்றி ஒரேமாதிரியாயிருந்தது கண்டு இராமபிரான் வியப்புற்று ஒருவேளை சுக்ரீவன் நமது பாணத்திற் கிரையாய்விடுவானோவென்று ஐயமுற்று, பாணத்தைத்தொடுக்காது நின்றனர். அப்போது சுக்ரீவன் வாயிலிரத்தம் பெருக இராமரிடம் ஓடிவந்தனன், வாலியுந்தன் அரண்மனைக்குப் போய்விட்டான். சுக்ரீவன் இரகுபுங்கவரைப் பார்த்து ''சுவாமி! அண்ணன் வடிவமாகிய என் பகைவனால் என்னை மரணமடையும்படி செய்கின்றீர். அடியே

னைக் கொல்லவேண்டுமாயின் நீரே கொன்றுவிடும். சத்தியசந்தரே! ரகுநந்தனரே! என்னிடம் சபதஞ் செய்துவிட்டு நீர் இப்போது உபேக்ஷிக்கின்றீர். சரணாகதவத்ஸலரல்லவா நீர்?" என்றான்.

இவ்வாறு சுக்ரீவன் கூறவே, இராமபிரான் கண்களில் நீர் ததும்ப அவனை யாலிங்கனஞ் செய்துகொண்டு "நீ பயப்படவேண்டாம்; நீங்களிருவரும் ஒரேவடிவத்துடன் காணப்பட்டமையால், ஒருவேளை மித்திர காதகமுண்டாயின் யாது செய்வதென்கிற சந்தேகத்தால் நான் பாணத்தை விடுக்க அஞ்சிநின்றேன். எனக்கு அவ்வாறு சந்தேகமுண்டாகாதவாறு இப்போது உனக்கு ஒரு அடையாளமிடுகின்றேன். நீ மறுபடியும் சென்று வாலியை யுத்தத்திற்கழை. விரைவில் அவன் மரணமடைவதைக் காணலாம். நான் உன்மீது ஆணையிட்டுச் சொல்லுகின்றேன். உனக்குப் பகைவனான உன் அண்ணனை ஒரு கணப்பொழுதில் சாகப்பண்ணுகின்றேன்" என்று கூறினார்.

இவ்வாறு ராமன் தானங்கூறி இலக்ஷ்மணனை நோக்கி, "இலக்ஷ்மணா! புஷ்பங்களோடுகூடிய ஒரு மாலையைக் கட்டி அதை சுக்ரீவன் கழுத்திலணிந்து வாலியிடம் அனுப்புவோம்" என்று தெரிவித்தார். இலக்ஷ்மணன் அவ்வாறே ஒரு புஷ்பக்கொடிமாலை கட்டி அதைச் சுக்ரீவன் கழுத்திலணிந்து வாலியிடம் அனுப்பினான். சுக்ரீவன் உடனே வாலியிடஞ் சென்று சிம்மநாதஞ் செய்தான். வாலி சுக்ரீவன் அழைப்பைக் கேட்டு ஆச்சரியமடைந்து அதிகக் கோபங்கொண்டு ஆடையை வரிந்து கட்டிக்கொண்டு போக யத்தனித்தான். அப்போது அவன் பத்தினியாகிய தாரையென்பவள் கையைப் பிடித்துத் தடுத்து, "இப்போது நீங்கள் போகவே கூடாது. எனக்குப் பயமுண்டாயிருக்கிறது. சற்றுமுன்னே உம்மால் அடிபட்டவனே இப்போது திரும்பி வந்து சண்டைக்கழைக்கின்றான். அவனுக்குப் பெரிய பலவானுடைய சகாயமிருப்பதாகத் தோன்றுகிறது" என்றாள். வாலி தாரையைப் பார்த்து "பெண்ணே! என் கையை விடு. அப்பாற்செல்; நான் போய் என் பகைவனைக் கொன்று விரைவில் திரும்பி வருவேன்; அவனுக்குச் சகாயஞ்செய்பவர் யாரிருக்கின்றார்? அப்படியே அவனுக்குச் சகாயஞ் செய்பவனிருப்பானாயின் அவனையும் கொன்று ஒரு க்ஷணநேரத்தில் திரும்புவேன்; நீ துயரப்படவேண்டாம். பகைவனொருவன் போர்புரிய அழைக்கக் கேட்டும் சூர

னை நான் அரண்மனையில் எவ்வாறிருப்பேன்? மகாமதி! நான் அவனை வதஞ்செய்து இதோ வருகின்றேன்" என்றான்.

தாரை கூறுகிறாள்

இதைக் கேட்டதும் தாரை வாலியைப் பார்த்து, "இன்னொரு விஷயம் கூறுகிறேன் கேளுங்கள்:—அதைக்கேட்டுப் பின்னர் உமது இச்சைப்படி செய்யும். அங்கதகுமாரன் வேட்டையாடச் சென்றபோது கேட்டு வந்த செய்தியொன்றிருக்கிறது: அவன் சொன்னபடி சொல்லுகிறேன் கேளுங்கள்; அயோத்தியிலிருந்த தசரதமகாராஜாவின் திருக்குமாரன் இராமன் என்பவன் ஒருவனிருக்கிறானல்லவா? அவன் தன் மனைவி சீதை, தம்பி இலட்சுமணன் இவர்களுடன் தண்டகாரண்யத்திற்கு வந்திருந்தானாம். அப்போது அவன் மனைவியாகிய சீதையை இராவணன் அபகரித்துப் போய்விட்டானாம்; இப்போது இராமன் தன் தம்பியுடன் சீதையைத் தேடிக்கொண்டு இருசியமூகபர்வதத்திற்கு வந்து சுக்கிரீவனைக் கண்டு அவனோடு அக்னிசாக்ஷியாக நட்புக்கொண்டிருக்கிறானாம். தவிர அந்த இராமன், உம்மை யுத்தத்திற்கொன்று உமது தம்பியை அரசனாக்குவதாக அவருக்கு வாக்குச் செய்திருப்பதாகக் கேள்வி. இதுதான் உண்மையாயிருக்கும்; என் வார்த்தையைத் தட்டவேண்டாம்; அவ்வாறு இல்லையாயின் இப்போது சற்று முன் அடியுண்டவர் திரும்பவும் உம்மை சண்டைக்கழைக்க எப்படி வருவார்? ஆகையால் சுக்ரீவனோடு நீர் கொண்டிருக்கும் பகையை விட்டுவிடும். அவனையழைத்து வந்து யுவராஜ்யாபிஷேகஞ் செய்வித்துவிட்டு இராமனைச் சரணமடையும். "வானரஸ்ரேஷ்டரே! உமது குலத்தையும் என்னையும் அங்கதனையும் அரசாட்சியையும் காப்பாற்றும்" என்று கூறிக்கண்களில் நீர்வர, வாலியின் பாதங்களிற் பணிந்து, இருகரங்களாலும் அவன் கால்களைப் பிடித்துக்கொண்டு நிலைசமுற்று அழ ஆரம்பித்தாள். வாலி தாரையை வாரியெடுத்துத் தடவிக்கொடுத்து "பெண்மணி! நீ ஸ்திரீசுவபாவத்தால் அஞ்சுகின்றாய். அப்படிப்பட்ட பயம் எனக்குத் தோன்றவில்லை. பிரபுவாகிய இராமர் இலட்சுமணனுடன் வருவாராயின் அவருடன் எனக்கு நட்புத்தான் உண்டாகும். அதில் சந்தேகமே கிடையாது. அகிலலோகத்தவருக்கும் பிரபுவாகிய ஸாக்ஷாத் நாராயணனே பூபாரத்தை ஒழிப்பதன் பொருட்டு அவதரித்திருப்ப

பதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். அந்த மகானுபாவனுக்கு தன்பக்ஷம் பரபக்ஷமென்பதுண்டோ? அவரை நமதரண்மனைக்கு அழைத்துவந்து, அவரது சரணாரவிந்தங்களில் அன்போடு பணிந்து பூஜிப்பேன். அவர் பக்தியாலறியப்பட்டவர். பரமேசுவரர். சுக்ரீவனொருவனே தனியே வருவானாயின் அவனைக் கணப்பொழுதிற் கொன்றுவிடுவேன். அவனுக்கு யுவராஜ்யாபிஷேகஞ்செய்விக்கச் சொன்னீரே. அது எப்படிக்கூடும்? பகைவனாகிய அவன் என்னைச் சண்டைக்கழைக்கின்றான். நான் சூரனென்று ஸகல உலகங்களுக்குந் தெரியும். வாலியென்பவனாகிய நான் எப்படி இந்த பயந்தவார்த்தையைப் பார்த்து சகிப்பேன்; ஆகையால் ஏ சுந்தரி! நீ சோகத்தை ஒழித்துவிட்டு வீட்டிலிரு" என்றான்.

இவ்வாறு வாலி தாரைக்குச் சமாதானங்கூறி உடனே சுக்ரீவனைக் கொல்வதற்காகச் சண்டைக்கு வந்தான். மகாபராக்கிரமசாலியாகிய சுக்ரீவன் வாலி சண்டைக்கு வருவதைக் கண்டவுடனே கழுத்திலணிந்துள்ள புஷ்பமாலையுடன் பக்ஷியைப்போலப் பாய்ந்து தன் முஷ்டியால் வாலியைக் குத்தினான். அவ்வாறே வாலியும் குத்தினான். சுக்ரீவனும் வாலியைக் குத்தினான். மறுபடியும் வாலி சுக்ரீவனைக் குத்தினான். சுக்ரீவன் இராமனைப் பார்த்துக்கொண்டே யுத்தஞ்செய்தான். இவ்வாறு ஒருவரொருவர் குத்திக்கொண்டு தொந்தயுத்தஞ் செய்கையில் பிரதாபசாலியான இராமபிரான் தூணீரத்திலிருந்து ஒரு பாணத்தையெடுத்துக் கோதண்டமென்னும் தமது வில்லிற் பொருத்தி காதளவு இழுத்து ஒருமரத்தின் மறைவிலிருந்து வாலியின் மார்பிற்கு நேராகக் குறிவைத்து எய்தனர். வில்லிலிருந்து விடுபட்ட இராமபாணமானது வஜ்ராயுதம்போல் பூமி நடுங்கும்படியான வேகத்துடனும் பலத்துடனும் போய் யுத்தஞ்செய்துகொண்டிருந்த வாலியின் மார்பைப் பிளந்தது. அக்கணமே அவன் மேலே பெருமூச்சு பெரிய சத்தஞ் செய்துகொண்டு கீழே விழுந்தான். ஒரு முகூர்த்தகாலம் பிரக்ஞையில்லாதிருந்தான். பிறகு பிரக்ஞைவந்தது. உடனே தனக்கெதிரே இடது கரத்தில் வில்லும் வலதுகரத்தில் பாணமும் இடையில் மரவுரியும், முடியில் ஜடாமகுடமும் வனமாலையும் தரித்து அகன்று பருத்த புயத்துடனும் புதிதான அறுகம்புல்லின் காந்திபோன்ற திருமேனியுடையவராயும் இலக்ஷ்மணனும் சுக்ரீவனும் இருபுறமும்

விளங்கக் காலக் கண்ணாரான இராமசந்திரமூர்த்தி [illegible] பார்த்து சில நிந்தைமொழிகளைக் கூறுகிறான்.

ஸ்ரீராமா! உம்மால் நான் நாசமடைந்தேன். நான் உமக்குச் செய்த அபராதமென்ன? [illegible] தருமமுறைக்கு நிந்தை படத்தக்க ஈனமான இச்செயலை நீர் செய்துவிட்டீர். மரத்தின் மறைவில் திருடனைப் போல நின்று என்மீது பாணம் எய்தீர்! ஸ்ரீராமா! நீர் சத்தியசந்தரல்லவா? இப்படிப்பட்ட காரியத்தால் நீர் என்ன கீர்த்தியை அடையப்போகின்றீர்? ரகுவம்சத்திற் பிறந்த க்ஷத்திரியன் புதல்வராகிய நீர் என்முன் நின்று சண்டை செய்திருப்பீரேயானால் அதன் பயனை அடைந்திருப்பீர். சுக்ரீவன் உமக்குச் செய்த உபகாரம் என்ன, நான் செய்த அபராதமென்ன; உமது மனைவியைப் பகைவனாகிய [illegible] இராவணன் எடுத்தேகினான். அதுபற்றி நீர் சுக்ரீவனிடம் சிநேகஞ்செய்து கொண்டதாக நான் கேள்விப்பட்டேன். இப்போ; [illegible] பாரக்கியாதலை நீர் [illegible]; என்னிடம் ஒருவார்த்தை சொல்லியிருப்பீரேயானால் இராவணனை அவன் குலத்தோடும் சேனையோடும் அரைமுகூர்த்தத்தில் அந்த இலங்கையோடே இங்கே கொண்டு வந்திருப்பேன். "ஸ்ரீராமா! நீர் தர்மிஷ்டரென்று உலகத்திற் சொல்லப்படுகின்றீர். கிராதனைப்போலத் திருட்டுத்தனமாக வதைத்ததனால் நீர் அடைந்த தருமமின்னதென்று தெரிவியும், அந்தோ! [illegible] உம்மை உதவாதே? என்னைக் கொன்றது எதற்காகவோ" என்று பலபடியாகக் கூறினான். இப்படிச் சொல்லிய வாலியை ஸ்ரீராமபிரான் பார்த்து, "அடே வாலி! நாம் தர்மசாஸ்திரத்தின் பொருட்டே தனுசோடும் பாணத்தோடும் சஞ்சரிக்கின்றோம். அதர்மம் புரிவோரை அழித்துத் தர்மத்தைப் பரிபாலித்து வருவோம். எவனொருவன் தன் சகோதரி, மகள், சகோதரனின் மனைவி, மருமகள் என்ற இப்படிப்பட்டவர்களிடம் [illegible] ரமிப்பானோ அவன் மூடன். அவனைப் பாதகனென்று சொல்லப்படுவான். அவன் மன்னர்களால் கொல்லத் தகுந்தவன். நீயோ சகோதரனின் மனைவியைப் பலாத்காரமாகப் புணர்ந்து வருகின்றாய். ஆகையால் அதை அதர்மமென்று தெரிந்து உன்னை வதைத்தேன். நீ குரங்காகையால் மகான்களை [illegible]

யில்லை. அவர்கள் சஞ்சரிப்பதால் உலகம் பாவனத்தை யடைகின்றது. ஆகலால் அவர்களைப் பற்றி நீ சிறிதும் பேச வேண்டியதேயில்லை" என்றார். இது கேட்டுவாலி மனதிற் பயங்கொண்டு, இராமனை இரமாபதி யென்றறிந்து தொழுதவுடன் அவரை நமஸ்கரித்து ஸ்தோத்திரஞ் செய்யலானான்.

இராமா! இராமா!! ஓ மகாபாக்கியவானே! உம்மைப்பரமேசுவரனென்றுணராதேன். உம்மை யறியாமல் ஏதோ சில வார்த்தை சொல்லிவிட்டேன். அவைகளைப் பொறுத்தருளவேண்டும். உமது பாணத்தினால் அடிபட்டேன். தவிர உமது ஸந்நிதியில் பிராணனை விடுகிற விசேஷமொன்று. உமது தர்சனம் யோகிகளுக்குங் கிடைப்பதரிது. எவனொருவன் உமது திருநாமத்தை அந்தியகாலத்தில் சொல்லுகிறானோ அவன் பரமபதத்தை யடைவான். சாக்ஷாத் நீரே மோக்ஷத்தை விரும்புமென் முன்பு இச்சமயம் நிற்கின்றீர். தேவனே! தங்களைப் பரம புருஷரென்றும் ஜானகியை லக்ஷ்மிதேவி யென்றும் நானறிவேன். நீங்கள் பிரமதேவனுடைய பிரார்த்தனைக் கிணங்கியவதரித்திருக்கிறீர்கள். இராவண ஸம்ஹாரஞ் செய்யப் போகின்றீர்கள். உமது பமேலான பதவிக்கே எனக்கு விடையளிக்க வேண்டும். என்புதல்வன் அங்கதன் எனக்கு ஸமமான பலம் வாய்ந்தவன். அவனை உமது சேவைக்குப் பாதுகாவலனாக்கிக் கொள்ளும். உமது திருக்கரத்தால் தொட்டு என்மார்பிலுள்ள பாணத்தைப் பிடுங்கிவிடவேண்டுமென்று வேண்டிக் கொண்டான். இராமபிரான் அவ்வாறே தமது கரத்தால் அவன் தேகத்தை ஸ்பரிசித்துப் பாணத்தைப் பிடுங்கினார். அக்கணமே வாலி வானரதேகம் நீங்கப்பெற்று அமராஜனாக ஆய்விட்டான்.

இவ்வாறு வாலி இராமசந்திரனுடைய பாணத்தால் பட்டு மகாமங்களாகாரமான அவரது திருக்கரத்தின் ஸ்பரிசத்தினால் பரிசுத்தனாய், உடனே தன்வானரதேகம் நீங்கப்பெற்று பரமஹம்ஸ குலங்களாலே அடையக் கூடியதும், இதரர்களாலே அடைய முடியாததுமான பரமபதத்தை யடைந்தான்.

இரண்டாவது சருக்கம்

முற்றிற்று

3-வது சருக்கம்

பரமசிவன் கூறுகிறார்.

பரமாத்மாவாகிய இராமபிரானால் இவ்வாறு வாலி மரணம் அடைந்த பின் வானரர்களெல்லோரும் பயந்து மனங்கலங்கிக் கிஷ்கிந்தைக்கு ஓடித் தாரையைப் பார்த்து, "மகாபாக்கியவதி! வாலி யுத்தத்தில் மடிந்தான். அங்கதனை நாடாளும்படி அமைச்சர்களைச் சீக்கிரமாக அனுப்புங்கள். நகரத்து நான்கு வாயில்களை அடைத்து அங்கதனை வானரர்களுக்கு இராஜனாக்குங்கள்" என்றனர்.

வாலி இறந்ததனைக் கேட்டதும் தாரை சோகமுற்று மூர்ச்சையடைந்தாள். பின் தெளிந்து தலையிலும் மார்பிலும் புடைத்துக் கொண்டாள். அங்கதனைப் பார், இந்த அரசாட்சியைப் பார், அல்லது இந்த ஐசுவரியத்தைப் பார், புரந்து எனக்காக வேண்டியதென்னவோ? நானோ இக்கணமே இறந்து என் நாயகனுடன் போகின்றேன் என்று கூறிக் கூந்தலவிழ்ந்தலைய அழுதுகொண்டு தன் நாயகனுடைய பிரேதத்தருகே வந்து உதிரமும் தூசியும் படிந்து படுக்கையில் விழுந்து கிடந்த வாலியைக் கண்டு "அவபாதத்தில் விழுந்த நாதா! ஆ நாதா!" என்று கதறினாள்.

இவ்வாறு கணவன்பேற் கொண்ட அன்பின் மிகுதியால் அழுது கொண்டிருந்த தாரை அருகே இராமபிரானிருப்பதைப் பார்த்து "ஆ இராமா! என் கணவனைக் கொன்ற பாணத்தினால் என்னையும் கொன்றுவிடும். என் நாதன் என்னை விரும்புகின்றார். நானும் பதி சாலோகத்தைப் பெறுவேன். என்னை விட்டதினால் அவருக்கு ஸ்வர்க்கத்திலும் சுகமே பிராது. பத்னியை விட்டிருந்த பதாலான துன்பம் உமக்கு அனுபவமாயிருக்கின்றதே. இராமா! சீக்கிரத்திலென்னை என் நாதனிடம் சேர்த்தால் உமக்குப் பத்தினி தானபலனுண்டாகும். தமது தமையனை இறக்கும்படி செய்த சுக்ரீவனும் இராஜ்யத்தை யடைந்து தன் மனைவியுடன் சக்களத்திப் போராட்டமென்பது இல்லாமல் சுகமே வாழட்டும்" என்று கூறித் துக்கித்தாள்.

இவ்வாறு துக்கிக்கும் தாரையை மகாபுத்திசாலியாகிய இராமபிரான் பார்த்து, தயைகூர்ந்து தத்துவோபதேசவாயிலாக அவளைச் சமாதானப்படுத்தலாயினர். "பெண்மணியே! சோகத்திற்குப் பாத்திரமாகாத உன் நாயகனைக்குறித்து நீ ஏன் சோகப்படுகின்றாய். உன் நாயகனென்று நீ சொல்வது இந்தத் தேகத்தையா? அல்லது ஜீவனையா? இதைத்தானென்று நீ சொல். தேகத்தைத் தானென்பாயே யாயின் அது பஞ்சபூதங்களாலாயது. தொக்கு, மாம்சம், இரத்தம், எலும்பு இவற்றுடன் கூடியது. காலகர்மகுணங்களுடையதாய்ச் செய்யப்பட்டது. இதோ இது உன் முன்னிலையிலேயே யிருக்கின்றது. ஜீவனை உன் கணவனெனக் கருதுவாயேயாயின் ஜீவன் நிராமயன் பிறப்பிறப்பற்றவன். இருப்பவனுமல்லன்; செல்கின்றவனுமல்லன். ஆண், பெண், அலி இவை யெவையுமல்லன். ஞானவியாப்தியுடையவன். ஒன்றோடும் தாக்கற்று நிற்கும் ஆகாயம் போன்றவன் நித்தியன் ஞானமயன், சுத்தன். அப்படிப்பட்டவன் சோகத்திற்கு எவ்வாறுளாவன்?" என்று கூறினர்.

தாரை கூறுகிறாள்

இதைக்கேட்டதும் தாரை "ஏ இராமா! தேகமோ கட்டையைப்போல் ஜடமாயிருப்பதென்றும், ஜீவன் நித்தியன், ஞானமயன் என்றும் கூறினீரல்லவா? அப்படியாயின் சுகதுக்கம் முதலியவற்றின் சம்பந்தம் அதற்கெவ்வாறு ஏற்பட்டது? தெரிவிக்க வேண்டுகின்றேன்" என்றனள்.

இராமபிரான் கூறுகிறார்.

தேக இந்திரியங்களுடன் கூடின அகங்காரத்தின் சம்பந்தம் எதுவரையிலுண்டோ அதுவரையில் ஆத்மாவுக்கு அவிவேகத்தால் சம்சாரம் உண்டாம். அந்தசம்சாரமும் மித்தியாபூதம்; தான் அதற்குச் சுதந்தரங்கிடையாது. விஷயங்களையே சிந்தித்திருப்பவனுடைய சொப்பன விருத்தியில் அந்த விஷயங்களை மித்தியாவடிவமாக விளங்குவதற்கொப்பாகும். அநாதியான அவித்தியா சம்பந்தத்தின் காரியமே அகங்காரமாம். சம்சாரமும் சாரத்தமில்லாததாயினும் இராகத்துவேஷங்களுடன் கூடியிருக்கின்றது.

மங்களமுடையவனே! மனமே சம்சாரம். அது தான் பந்தமுமாகும். சுத்தமான ஸ்படிகத்தின் சமீபத்தில் அரக்கு முதலியன இருக்கின் அதனதன் நிறம் அதிலிருப்பது போலக் காணப்படுமல்லவா? ஆனால் உண்மையாகப் பார்க்கும்போது அவைகளின் சம்பந்தம் படிகத்துக்கு இல்லை. அதுபோலவே ஆத்மாவும் புத்தி இந்திரியங்கள் முதலியவைகளின் சமீபத்திருப்பதால் அது மன மனதின் தன்மையையடைந்து சம்சாரசம்பந்த பலத்தால் அம் மனதின் காரியங்களிலே கட்டுப்பட்டது போலத் தோன்றுகிறது. ஆனால் உண்மையில் அதற்கு அவற்றின் சம்பந்தமில்லை; மனமானது ஆத்மாவின் சின்னங்களைக் கொண்டு தன்னால் ஏற்படும் காமதோஷங்களில் கட்டுண்டு வயமற்று சம்சாரத்தில் உழலுகின்றது. மனமே குணங்களைக் கற்பிக்கின்றது பின் அநேக கருமங்களைப் புரிகின்றது. பின் வெண்மை, செம்மை, கருமை முதலிய நிறங்களால் சத்துவம், ராஜஸம், தாமஸம் என்னும் மார்க்கங்களிற் செல்லுகின்றது. ஜீவர்கள் அந்தக்கரணத்தினால் முடிவு வரையில் பிரமையில் உழலுகின்றனர். ஸர்வ ஸம்ஹாரகாலத்தில் ஜீவன் தன் கர்மங்களின் வாசனையால் அநாதியவித்தையின் அபினிவேசத்திலிருக்கிறது. பின் படைப்புக் காலத்தில் தன் பூர்வவாசனையோடு கூடிய மனதுடன் வந்து ஜனிக்கின்றான். இவ்வாறு மீண்டும் குயவனது சக்கரம்போலத் தனது சுவாதீனமின்றி ஜனனங்களையடைகின்றான். சாந்த மனமுடையவர்களாய் பக்தர்களான ஸத் புருஷர்களுடைய சகவாசம், எப்போது புண்ணிய வசத்தால் ஏற்படுகின்றதோ அப்போது தான் அவன் விசுத்தமான புத்தியையுடையவனாவன். மாறாத சிரவணஞ் செய்வதிற் கிடைத்தற்கரிய சிரத்தையவனுக்குண்டாகும். அதனால் தன் சொரூபத்தில் உணர்ச்சியும் அவனுக்கு உண்டாகும். தேகம், இந்திரியம், மனம், பிராணன், அகங்காரம் முதலியவற்றிற்கு வேறாய், நித்யமாய், ஆநந்தமாய், ஒப்பற்றதான ஆத்மாவின் அநுபவத்தை குரு அநுக்ரஹித்த வாக்கியத்தாலுணர்ந்து உடனே முக்தனாவான். நாம் கூறுவது உண்மையாம். நாம் கூறிய இந்த விஷயத்தை எப்போதும் சிந்திப்பவனுக்கு ஸம்ஸார துக்கம் நேரிடாது. ஆகையால் நாம் கூறிய இவ்விஷயத்தை நீயும் சித்த சுத்தியுடன் சிந்திப்பாயேயாயின் எந்தக் கவலையுமின்றி

கர்மபந்தத்தினின்றும் விடுதலையடைவாய். சிறந்த எமது பக்தி பூர்வ ஜன்மத்தில் உனக்கிருந்திருக்கிறது. ஆதலாற்றான் முக்திக்கு ஏதுவாய சுபகரமான எமது மூர்த்தத்தை உனக்குக் காட்டினேம். எப்போதும் எமது திருவுருவத்தைத் தியானித்துக் கொண்டு நாம் கூறியவைகளைச் சிந்தித்துக் கொண்டிரு. நீ ஸம்ஸாரமாகிற வெள்ளத்தில் மூழ்ந்து காரியங்களைச் செய்தபோதிலும் அது உன்னைக் கட்டுப் படுத்தாது என்றார்.

இவ்வாறு இராமபிரான் கூறக்கேட்ட தாரை பரமாச்சரியமடைந்து, தேகாத்மாபிமானத்தா லுண்டான சோகத்தை விட்டு அவரை வணங்கி, பரமாத்மானுபவத்தால் திருப்தியடைந்து ஜீவன் முக்தியடைந்தாள். பரமாத்மாவாகிய இராமபிரானுடன் கணநேரம் இவ்வாறு சம்பாஷித்தது காரணமாக அநாதியான பந்த நிவிர்த்தியடைந்து அபலையான தாரை கல்மஷரகிதையாய் முக்தியடைந்தாள். இராமபிரான் திருவாய் மலர்ந்தருளிய வார்த்தையைக் கேட்ட ஸுக்ரீவனும் அஞ்ஞானமான வனத்தினின்று விலகிச் சொஸ்த சித்தனாயினான்.

அப்பால் இராமச்சந்திர பிரபு ஸுக்ரீவனை நோக்கி, "வானர சிரேஷ்டனே! உமது தமையனுக்குக் குமாரன் செய்யத்தக்க தகன சம்ஸ்காரங்களைக் கிரமப்படி செய்யும்" என்றார். ஸுக்ரீவன் அவ்வாறே யென்றொப்புக்கொண்டு, உடனே புஷ்பகத்தை வரவழைத்து அதில் வாலியை இராஜோபசார பூஜைகளுடனேற்றி, பேரிதுந்துபி முதலிய வாத்தியங்கள் முழங்க பலவான்களான வானரர்களைக் கொண்டு எடுத்தேகும்படி செய்தான். மந்திரிகள், மறையோர், சேனாபதி, புரஜனங்கள், தாரை, அங்கதன் யாவரும் தொடர்ந்து சென்றனர். ஸுக்ரீவனும் இவ்வாறாய வைபவத்துடன் தகன சம்ஸ்காரங்களைச் செய்து முடித்தபின் தன் அமைச்சர்களுடன் இராமபிரானிடம் வந்து அவரது திருவடியிற் பணிந்து அவரை நோக்கி, "வானரர்கள் நிறைந்த இந்த இராஜ்யத்தைப் பரிபாலனம் பண்ணியருளும். இலக்ஷ்மணரைப் போல அடியேனும் உமக்கு அடிமை. அவரைப்போல் எப்போதும் உமது திருவடியையே சேவித்துக் கொண்டிருப்பேன்" என்றான்.

சுக்ரீவன் இவ்வாறு கூறியதும் இராமபிரான் மந்தகாஸத்துடன் அவனைப் பார்த்து, "நீயே நான்; இதிற் சந்தேகமே கிடையாது எனதாக்ஞையை மேற்கொண்டு நகரத்திற்குச் சென்று பட்டாபிஷேகஞ் செய்து கொள்ளும். பதினான்கு வருடகாலம் நான் நகரத்திற்குள் பிறவேசியேன். என் தம்பி இலட்சுமணன் உன்னோடு பட்டணத்திற்கு வருவான். அங்கதனுக்கு அன்பாய் யுவராஜ்ய பட்டாபிஷேகஞ் செய்துவை. நான் இருசியபர்வதத்தின் கண் என் சகோதரனுடனிருந்து இந்த காலத்தைக் கழிக்கின்றேன். அது வரைக்கும் நீ பட்டணத்தில் நிருந்து பின்பு சீதையைத் தேட பிரயத்தனஞ் செய்யலாம்" என்றார். சுக்ரீவன் உடனே இராமபிரானது பாதங்களில் பணிந்து எழுந்து "பிரபுவே! தமது ஆக்ஞைப்படியே நடக்கின்றேன்" என்று சொல்லி அவரிடம் விடை பெற்றுக் கொண்டு இலட்சுமணருடன் நகரஞ் சென்று, இராமரின் ஆக்ஞைப்படியெல்லாஞ் செய்து முடித்தார். இலட்சுமணரை முறைப்படி பூஜித் தனுப்பினார். அவர் தன் தமையனிடம் வந்து கைதொழுது நின்றார்.

அப்பால் இராமபிரான் இலட்சுமணருடன் பிரவர்ஷண கிரியின் சிகரத்தை யடைந்தார் அது விசாலமான பிரதேசமாயிருந்தது. அங்கே பளிங்குச் சிலையால் ஒரு குகை யிருக்கக் கண்டார்கள். அது அதிக பிரகாசமாயும் விசாலமாயும் காற்று மழைகளுக் கனுகூலமானதாயு மிருந்தது அதற்கருகே வேண்டிய வளவு கனி கிழங்குகள் கிடைக்கக் கூடியதாயிருந்தது இதனால் இராமலட்சுமணர்கள் தங்க யோக்கியமாயிருந்தது அந்தக் குகை. சிறந்த கனி கிழங்குகளும் முத்தை யொத்த ஜலமும் பரிபூர்ணமான பல்லவங்களும் சித்திரவர்ணங் களமைந்த சிறந்த பக்ஷிகளும் மிருகங்களும் நிறைந்து வெகு சோபிதமாக விளங்கும் அந்தப் பர்வதத்தில் இரகுகுலதிலகர் வாசஞ் செய்தார்.

மூன்றாவது சருக்கம்

முற்றிற்று

4-வது சருக்கம்

பரமசிவன் கூறுகிறார்.

இராமபிரான் அந்தப் பளிங்குக் குகையில் லீலார்த்தமாகச் சஞ்சரித்துக்கொண்டு காய் கனிகளைப் புசித்துக்கொண்டு தன் தம்பியுடன் அந்தக் கார் காலமுழுவதையும் ஸுகமாகக் கழித்தார். பொன்மயமாக விளங்கும் அந்தப் பர்வத சிகரங்களின் தோற்றங்கள் யானைக் கூட்டங்களை யொத்திருப்பதையும் அவற்றின் கண் நீருண்ட மேகங்கள் படிந்திருப் பதையும் அம்மேக ஜாலங்களில் விளங்கும் மின்னலையும் இடிமுழக்கத்தையும் காற்றினால் மேகங்கள் சிதறுண்டு செல்லும் காக்ஷியையும் புஷ்பங்கள் மலர்தலாலுண்டாகும் புது மணத்தையும் இராமபிரான் கண்டு ஆச்சரிய மடைந்தார்.

கொழுத்து மனமகிழ்ச்சியுடன் விளையாடிக் கொண்டிருக்கும் பறவைகளும் விலங்கினங்களும் இராமபிரானை யொரே பார்வையாகப் பார்த்துக்கொண்டு யோகநிஷ்டையிலிருக்கும் அருந்தவசிகளைப்போல அசைவற்றிருந்தன. பக்தகணங்களெல்லோரும் பரமாத்மாவே இவ்வுலகில் ஸ்ரீராமபிரானாக வவதரித்து மானுட வேஷத்துடன் மலைகளிலும் வனங்களிலும் சஞ்சரித்து வருகின்றாரென்றறிந்து பறவைகள் மிருகங்கள் இவற்றின் உருவங்கொண்டு அவ்வனத்திலேயே யிருந்து இராமபிரானையே சேவித்துக்கொண்டிருந்தனர்.

இவ்வாறிருந்து வருகையில் ஒருநாள் ஏகாந்தத்திலிருந்து வெளி நோக்கங் கொண்ட இராமபிரானை இலட்சுமணர் பார்த்துப் பயபக்தியுடன் பணிந்து, "தேவனே, தாங்கள் முன்னர்க்கூறிய வார்த்தைகளை மறந்துவிட்டேன். அநாதியான அவித்தை மயக்கமானது இன்னுமிருக்கின்றது. சுவாமி! உலகத்திலே யோகிகள் தங்களை யாராதிக்கும் கிரியா மார்க்க மறிய விரும்புகின்றேன். பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர், ஸ்திரீகள் யாவர் [illegible] மோக்ஷத்தையடைவதற்குச் சுலபமான மார்க்க மிது [illegible] ம் என்று யோகிகளும், நாரத முனிவரும் கூறுகின்றார்கள். [illegible]ன் [illegible]

மஹரிஷியும் அவ்வாறே சொல்லுகின்றார். பிரமதேவன் கூறுவதும் இதுவேயாம். அண்ணா! தங்கள் பரம பக்தனும் தம்பியுமான எனக்கு உலோகோபகாரமாகச் சொல்லவேண்டும்" என்று பிரார்த்தித்தனர்.

இராமபிரான் கூறுகிறார்.

இலட்சுமணா! என்னுடைய ஆராதனை முறைக்கு ஒருநியமமில்லை. ஆயினும் முன்னோர் சொல்லியிருக்கிறார்கள். அந்த முறைப்படி சுருக்கமாய்க் கூறுகிறேன் கேள். சாஸ்திர விதிப்படி ஒருவன் தன் வர்ணாசிரமத்திற்குத் தக்கவாறு உபநயனஞ் செய்து கொண்டு சத்குருவினிடம் மூலமந்திரத்தை யடைந்து பக்தியோடு தன் குருவின் அநுக்கிரகப்படி யறிவுடையவனாகவிருந்து என்னை யாராதித்தல் வேண்டும். தேக சுத்தியின் பொருட்டு உதய காலத்திலெழுந்து வேதங்களிற் சொல்லப்பட்ட மந்திரங்களால் மிருத்திகாலேபனஞ் செய்து கொண்டு ஸ்நானமுஞ் செய்து நித்ய மான ஸந்தியாவந்தனாதி களான ஸத்கருமங்களை எல்லாம் முறைப்படி செய்ய வேண்டும். பின் காமஸித்தியின் பொருட்டு சங்கற் பஞ்செய்து கொள்ள வேண்டும். இவனே முக்தி மானவான். என்னை ஆராதிப்பவன் தன் பூஜை சித்தியாவதன் நிமித்தம் தன் குருவை நானாகவே யெண்ணி, அச்சிலா விக்ரகத்திற்கு நலங்கிட்டு ஸ்நானஞ்செய்து வைத்துச் சந்தனபுஷ்பாக்ஷதைகளாற் பூஜித்தல் வேண்டும். வஞ்சனை யின்றி நியம விரதத்துடன் அலங்காரப் பிரியனான என்னைப் பூஜிக்க வேண்டும். அக்கினி பகவானுக்கு நெய்யும் ஆதித்தியனுக்குப் பாயஸமும் யக்ஞஞ் செய்ய வேண்டும். மனமகிழ்ச்சியுடன் எனக்குக் கொடுப்பது வெறுந் தீர்த்தமே யாயினும் அதுவே எனக்குப் பிரியகரமாகும். ஆயினும் பாயஸம் போளி வடை முதலிய பலகாரங் களுடன் பூஜித்தால் அதைச் சொல்லவும் வேண்டுமோ? சந்தனம் புஷ்பம் அக்ஷதை முதலிய பூஜாதிரவியங்களைச் சேகரித்துக் கொண்டு பின்பு தான் பூஜை செய்ய ஆரம்பிக்க வேண்டும். வஸ்திரம் மான்தோல் தருப்பை முதலிய வற்றுள் ஏதோ ஒரு ஆஸனத்தை யேற் படுத்திக் கொண்டு களங்கமற்ற மனதோடு பகவானுக்கு முன்னிலையில் உட்கார்ந்து, பின் மாத்ருகைகளால் உள்ளும் புறமும் நியாசஞ் செய்து அப்பால் கேசவாதி நாமங்களால் அவ்வவ் விடங்களில்

ந்யாசஞ் செய்ய வேண்டும். பிறகு என் மூர்த்தி பஞ்சர நியாஸமங் கிரங்களை நாடோறும் சாவதானமாகச் செய்தல் வேண்டும். பிரதிமை முதலிய வற்றிலும் எப்பொழுதும் அவ்விதமே செய்ய வேண்டும். கலசத்தைத் தன் முன்னிலையிலும் குஸுமாதிகளை வாம பாகத்திலும் அர்க்கிய பாத்தியாசமனீய மதுபர்க்கங் களுக்காக இடது பக்கத்தில் நான்கு பாத்திரங்களையும் வைத்துக் கொண்டு மனதார தாமரைப்பூவிலிருக்கும் சூரியனுக்கு நேராக ஜீவஸம்க்ஞை யென்னும் எனது கலையை இருதய கமலத்தில் தியா னித்தல் வேண்டும். சரீர மெங்கும் அந்தக்கலையே வியாபித் திருக் கின்றது. என் கலையான அதையே பிரதிமை முதலிய வற்றில் ஆவா கனஞ் செய்தல் வேண்டும். அர்க்கியம், பாத்தியம், ஆசமனீயம், ஸ்நானம், வஸ்திரம், ஆபரணம் முதலிய வற்றாலும் வஞ்சனையின்றி இயன்றவரை யுபசரித்து வழிபடல் வேண்டும். வேண்டுமான செல்வமுடையவனாயின் பச்சைக் கர்ப்பூரம் குங்குமம் சுகந்தப் பொடி சந்தனம் முதலிய வற்றையும் சமர்ப் பித்து மண மிகுந்த பலவிதமான மலர்களைக் கொண்டு மந்திரத் தியானத்துடன் நாடோறும் அர்ச் சித்தல் வேண்டும். ஆகமாதி களிற் சொல்லிய படி தசாவரண பூஜை புரிந்து தூபம், தீபம், நீராஜனம், நல்ல நைவேத்தியங்கள் இவற்றை யெல்லாம் நாடோறும் சிரத்தையோடு சமர்ப்பித்தால் ஈசுவரனை என்னை பக்தியோடு பூஜித்ததாகும்.

அகத்திய முனிவர் அருளிய முறைப்படியாவது அல்லது புருஷ சூக்தத்திற் கூறியுள்ள பிரகாரமாவது அல்லது பெரியோர் சொல்லியபடியாவது கிரமப்படி ஹோமம் செய்தல் வேண்டும். பிரதமத்தில் ஔபாஸநாக்கினி மத்தியில் ஜாம்பூநத மென்று சொல்லப்படும் சொர்ணமயமான திவ்யாபரணாலங்கிருதனான வென்னைத் தியானஞ் செய்து பாயசத்தினாலேனும் அல்லது நெய் யினாலேனும் ஹோமஞ்செய்து பின் பாரிஷதர்களுக்குப் பலிதானம் புரிந்து ஹோமசேஷஸமாப்தியைச் செய்தல் வேண்டும் அப்பால் அக்னியிலிருக்கும் என்னைத் தியானித்து ஜபஞ்செய்ய வேண்டும். பிறகு தாம்பூல முதலி என்னெதிரில் நடன கீதஸ்தோத்திரங் களைச் செய்தல் வேண்டும். இவை முடிவான பின்னர் இருதயத்தி லென்னைத் தியானித்துச் சாஷ்டாங்கமாகத் தண்டஞ் சமர்ப்பிக்க வேண்டும். பின் பாவரூ சொரூபனான நான் அளித்த பிரசாதத்தை

சிரஸால் வகித்து என் பாதங்களை கையில்கொண்டு சிரமீது தாங்கி அன்போடு என்னைக் குறித்து, "கோரமான இந்தச்சம்ஸாரஸாகரத்தினின்றும் இரக்ஷிக்கவேண்டும்" என்று சரணமடையவேண்டும். பின் ப்ரத்யக்ஜோதியை முன்போல் நினைத்து பிரதிமையிலிருந்து அதனையுத்வாஸனஞ் செய்து இருதயத்திலிருத்திக் கொண்டு ஸாஷ்டாங்கமாகத் தண்டம் சமர்ப்பிக்கவேண்டும்.

இவ்வாறு விதிபூர்வமாகப் பூஜை புரிந்து வரின் எனதநுக்கிரகம் கிடைக்கப் பெற்று இகலோக பரலோக சித்திகளையடைவான். என்னிடத்தில் பக்தியோடு நாடோறும் என்னைப் பூசிப்பானேயாகில், சந்தேகமின்றி எனது சாரூப்யம் பெறுவான். இது இரகசியமும் பரமபாவனமுமானது. ஸநாதனமானது. என்னால் சொல்லப்பட்டது. ஒருவன் நாள்தோறும் இதைப்பாராயணம் செய்யினும் பண்ணக்கேட்பினும், நாடோறும் என்னையாராதிப்பதாலுண்டாகும் பலனைச் சந்தேகமின்றி யடைவான் என்றார்.

இவ்வாறு பரமாத்மாவான இராமபிரான் இலட்சுமணர் வேண்டியபடி உத்தமமான கிரியாயோகத்தை ஆதிசேஷருடைய அம்சரும் பக்தருமாகிய அவருக்கு அநுக்கிரகஞ்செய்தார். அப்பால் மீண்டும் பிராகிருதமானுடரைப்போல மாயையை அவலம்பித்து, சீதாதேவியைப் பற்றித் துக்கிக்கத் தொடங்கி, "ஆ சீதா! நீயின்றி யெனக்கெப்போதும் நித்திரை பிடிக்கவில்லையே" என்று கூறிச் சோகமுற்றார்.

இப்படி யிருக்கையில், கிஷ்கிந்தையில் அறிவிற் சிறந்தவராகிய அநுமான், வானராதிபனான சுக்ரீவனைப் பார்த்துத் தனியேயிருந்து, "அரசனே! உமக்குச்சிறந்த நன்மையைக் கூறுகின்றேன். இராமபிரான் உமக்குப் பெரிய உபகாரஞ்செய்திருக்கிறார் உண்மையில நீர் அதனை மறந்து விட்டதாக நான் எண்ணுகின்றேன். இது செய்ந்நன்றி மறந்ததாகும். 'புஜபலமும் புகழும் மகாவீரனான வாலியும் உமது நிமித்தமாகவல்லவோ வதஞ் செய்யப்பட்டார். நீர் இராஜ்யாபிஷேகத்தையடைந்தது மல்லாமல் தாரையையுமல்லவா அடைந்தீர். இராமச்சந்திர பிரபுவோ தமது தம்பி இலட்சுமணருடன் பர்வத சிகரத்திலிருக்கிறார். அவர்கள் உமது வரவை யெதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். நீர் வானரசுவ

பாவத்தாலும் பேதையர் மேற் கொண்டிருக்கும் பிரேமையாலும் அதையறியாமலிருக்கின்றீர். சீதாபிராட்டியைத் தேட பிரயத்தனப்படுகிறே னென்று வாக்களித்தி ரல்லவா? அந்தப பிரதிக்ஞைப்படி நடந்தீரா? நடவாதிருப்பது நன்றி மறந்ததாகு மல்லவா? வாலியைப் போல் நீரும் உண்மையில் வதஞ் செய்யப படுவீர்" என்று கூறினர். இவ்வாறு ஆஞ்சநேயர் கூறியதைக் கேட்டு மிகவும் பயமடைந்து சற்று நேரம் அசைவற் றிருந்தான். பின் அநுமானை நோக்கி நீர் சொல்லியது உண்மையேயாம். ஏழு தீவுகளிலுமிருக்கும் வானரர்களை யழைத்து வரும்படி தூதர்களைப பத்துத் திக்குகளுக்கும் உடனே அனுப்பும். வாரம் இரண்டிற்குள் வானரர்களெல்லாரும் இவிடம் வந்திருக்க வேண்டும். அந்த நாள் தவறிய பக்ஷ்ங் கழித்து வருபவன் கொல்லப் படுவதுண்மை. இதிற் சிறிதுஞ்சந்தேகிக்க வேண்டாம் என்று ஆஞ்சநேயருக்கு ஆக்ஞாபித்து சுக்ரீவன் வீட்டுக்குச் சென்றான்.

மந்திரிகளுட் சிறந்த அநுமார் சுக்ரீவனுடைய ஆக்ஞைப்படி அக்கணமே வானரங்களைப் பத்துத் திக்குகளுக்கும் போகும்படி உத்தரவு செய்தார். அநுமார் அனுப்பிய வானரர்களெல்லோரும் மகாவலிமை பெற்றவர்கள். வனசரர்களில் முதன்மையானவர்கள். மலையையொத்த உருவினர். அதிக வேகமுடையவர்கள். தானத்திலும் மானத்திலும் மகாதிருப்தியுடையவர்கள். இப்படிக் கொத்த வானரதூதர்களை அநுமார் அனுப்பினார்.

நான்காவது சருக்கம்

முற்றிற்று

5-வது சருக்கம்.

பரமசிவன் கூறுகிறார்.

இச்சமயம் இராமபிரான் இருசியமூக பர்வதத்தின் கண் சிகரத்தின் சமபூமியில் எழுந்தருளியிருந்தார். அப்பொழுது ஒரு நாளிரவில் ஜானகியை நினைத்துக் கொண்டு விரகதாபமுற்று அதனால் சோக மடைந்து அது பொறுக் கொணாது இலட்சுமணரைப

பார்த்து, இலக்ஷ்மணா; பார்த்தாயா? என் ஆசைக் கிசைந்த சீதையை இராவணன் பலாத் காரமாகக் கொண்டு போயிருக்கின்றான். இது வரைக்கும் அவள் பிராணனோடு பிழைத் திருக்கின்றாளோ இல்லையோ. இதை நிச்சயிக்கக்கூடவில்லை. அவள் பிழைத் திருக்கும் செய்தியை யறிந்து வந்து சொல்பவனே எனக்கு அத்தியந்த பிரியத்தைச் செய்தவனாவன். அவள் இந்த இடத்தில் இருக்கின்றாள் என்பதை நான் அறிவேனாயின் பாற்கடலி லிருக்கும் அமுதத்தைக் கொண்டுவருபவர்போல் அதி சீக்கிரத்தில் அவளைக் கொண்டு வந்து சேர்ப்பேன். "தம்பி நான் சொல்லும் பிரதிக்ஞையைக்கேள். சீதையை யெடுத்தேகியவனை அவன் மக்கள் சேனாபலம் வாகனம் இவற்றுடன் நீறாக்குவேன்" என்று கூறி, "ஆ சீதா! ஏ சந்திரவதனா! நீ இராக்கதனுடைய ஆசிரயத்திலிருக் கின்றாயல்லவா? துக்கத் தால் வருந்தும் என்னைக் காணாது எவ்வாறுயிர் தரித் திருப்பாய் நீ. சந்திரபிம்பம் போன்ற திருமுகமுடைய நீயன்றி இந்தச் சந்திரனும் சூரியனை யொத்துச் சுடுகின்றான். ஏ மதியே! சீதையைத்தீண்டிய குளிர்ச்சி பொருந்திய கிரணங்களால் என்னையுந் தீண்டக் கடவாய் இவ்வேளை. சுக்கிரீவனும் தயை யில்லாதவனாய் விட்டான். அவன் என்னைக் காண்பது மில்லை. எந்தவிதமான தொந்தரை யில்லா அரசுரிமையை யடைந்தான். இப்போது ஸ்திரீகளுடன் ஏகாந்த ஸ்தலத்தி லிருந்து செய்நன்றி மறந்து கட்குடியிலும் காமத்திலும் களித்திரிப் பதாகத் தெரிகிறது. கார் காலங் கழிந்தது. இன்று வரையில் அவன் சீதையைத் தேடச் சிறிதும் கவனித்தானில்லை. முன்னர் உபகாரஞ் செய்த என்னை அத்துஷ்டன் மறந்து விட்டான். சுக்ரீவனை அவன் உறவினரோடும் நகரவாசிகளோடும் வதை செய்து விடுவேன். வாலி வதை செய்யப் பட்டவாறே சுக்ரீவனும் வதைக் கப்படுவானென்பது நிச்சயம்" என்றார்.

இங்ஙனஞ் சினமடைந்த இராமபிரானை இலட்சுமணர் பார்த்து, "அண்ணா! எனக்குத்தரவு கொடுப்பீரேயாயின் துஷ்டனான அந்தச் சுக்ரீவனை இக்கணமே கொன்று உம்பால் திரும்பி வருவேனென்று சொல்லி வாளும் வில்லும் எடுத்தேகத் துணிந்தான். இராமபிரான் அவனைப் பார்த்து, தம்பி! சுக்ரீவன் எனக்கிசைந்த நண்பன். நீயவனைக் கொல்ல வேண்டாம். நீ அவனிடம்

சென்று "நீயும் வலியைப் போல் வதைக்கப் படுவாய்" என்று பய முறுத்தி அவன் தெரிவிக்கும் மறுமொழியைக் கேட்டு வரக்கடவாய். நீ அங்கே சென்று வந்த பிறகு எந்தக் காரியம் செய்ய வேண்டுமோ அதைச் சந்தேக மின்றிச் செய்வோ மென்றார். அதைக் கேட்டதும் இலட்சுமணர் அவ்வாறே யெனக் கூறி உடனே புறப் பட்டு வானரர்களை யெரித்து விடுபவரைப் போல் கிஷ்கிந்தையை யடைந்தார். இராமச் சந்திர பிரபு எல்லா மறிந்தவராயும் விக்ஞா னாத் மாவாகவும் இருந்தும் கேவலம் பாமரர்களிலும் பாமரர்போல் பிராட்டியை நினைத்துச் சோகமுறலாயினர். புத்தி முதலான தத்துவங்களுக்குச் சாட்சியா யிருப்பவரும் மாயாகாரியங் களுக்கு வேறானவரும் இராகத் துவேஷங்களற்றவரு மாகிய அந்தப் பர மாத்மாவுக்கு அவற்றின் காரியமுண்டாவது எவ்வாறாம்? பிரமதே வனுக்குச் சொன்னதை யுண்மையாக்கவும் தசரதசக்ரவர்த் தியின் தபோபல மகிமையாலுமே மாயா மானுஷ விக்ரஹராய் அவ தரித்தனர். உலகத்திலுள்ளவர்கள் அக்ஞானத்தி லாழ்ந்து மாயை யில் மயங்கிக் கிடக்கின்றார்கள். இவர்களுக்கு முத்தி கிட்டுவது எவ்வித மென்று சாக்ஷாத் விஷ்ணு மூர்த்தி யாகிய தாமே தமக் குள் சிந்தித்து, பாபத்தைப் போக்கக் கூடியதான இராமாயண மென்னும் தமது சரித்திரங்களை பிரசித்தப படுத்துவதன் பொரு ட்டு மனிதவடிவத்துடன் மண்ணுலகில் இராமபிரானாக அவ தரித் தருளினா. ஹேய குணங்களற்றவரும விக்ஞான மூர்த்தி யும் விக்ஞான சக்தியும் ஸர்வஸாக்ஷியும ஆநந்தரூபியுமாக விரு ந்து, காரிய சித்தியின் பொருட்டுக் காமக் குரோதங்களைச் சா யோசித மாகக் கைக் கொண்டு சுதந்தரமற்றவா களான பிரஜை களெல்லோரையும் மோக மடையும் படி செய்கின்றார். ஆகை யால் காமாதி குணங்களற்றவராகு ஆகாயத் தைப் போன்றவா. ஜனகர் முதலிய சில முனிபுங்கவாகள் இதனை யறிவார்கள். குற் மற்ற சித்த முடைய அவனுடைய அடியார் அதைச் செவ்வனே அறிவார்கள். பகவான் ஜனன மில்லாதவரெனினும் தம அடியார களுடைய சித்தத்தை யநுஸரித்து ஜனன முள்ளவர் போலாயி னார். இதற்குள் இலட்சுமணர் கிஷ்கிந்தையை யடைந்து வானா வீரர்கள் எல்லோரும பயப் படும்படி தனுஷ்டங்காரஞ் செய்தனர் அப்படிப் பட்ட தொனியை அந்த வானர வீரர்கள் ஒருபோதும்

கேட்டறிபார்களாதலால், பூமியிலிருந்த அவர்களனைவரும் மலைகளின் மேலேறிக் கொண்டு கிலகில வென்னும் சத்தத்துடன் கற்களையும் செடிகளையும் பேர்த்துக் கொண்டு நின்றனர். இதைக் கண்ட இலட்சுமணர் கண்கள் சிவக்கக் கோபங் கொண்டு அவர்களை நிர்மூலமாக அழிப்பதாய்ச் செய்ய உத்தேசித்துத் தமது கரத்தில் வில்லை யெடுத்தார்.

அவ்வாறு இலட்சுமணர் வந்திருப்பதைப் புத்திமானான அங்கதன் அறிந்து விரைவில் வந்து அந்த வானரர்களை விலக்கி அவரிடம் சென்று ஸாஷ்டாங்கமாக நமஸ்கரித்து நின்றான்.

இலட்சுமணர் அங்கதனைப் பிரியத்துடன் ஆலிங்கனஞ் செய்து கொண்டு "குழந்தாய்! நீ உன் சிறிய தந்தையினிடம் சென்று இராமபிரான் கோபங்கொண்டு எம்மை இங்கு அனுப்பிய செய்தியைத் தெரிவித்து வா" என்றார். அங்கதன் அவ்வாறே சென்று சொல்லிச் சுக்ரீவனிடம் வந்து அவனை நோக்கி, "இலட்சுமணர் கண்கள் சிவக்கச் சினமுடையவராய்ப் பட்டணத்து வாயிற்படியில் வந்திருக்கின்றார்" என்றான்.

இதைக் கேட்டதும் சுக்ரீவன் மிக்க பயமடைந்து அமைச்சர் தலைவரான அநுமாரை யழைத்து, "நீர் அங்கதனோடு இக்கணமே சென்று இலக்ஷ்மணரை விநயத்தோடு பணிந்து கோபமுடையவராகிய அவருக்குச் சாந்த முண்டாக்கி எமது அந்தப்புரத்திற்கு அழைத்து வரக்கடவீர்" என்று ஆக்ஞாபித்துப் பின் தாரையைப் பார்த்து "நீயும் கூடச் சென்று அவருடன் இனிமையாகப் பேசி அவர் கோபத்தைத் தணித்து அவரை நம் அந்தப்புரத்திற்கழைத்து வந்து என்னைப் பார்க்கும்படி செய்வாய்" என்றான். தாரை அவ்வாறே செய்கின்றேனென்று சென்று நடுக்கட்டிலே காத்துக் கொண்டிருந்தாள். ஆஞ்சனேயர் அங்கதனோடு சென்று இலட்சுமணரை அன்போடு பணிந்து க்ஷேமம் விசாரித்து, "வீரரே! பாக்கியசீலரே! எழுந்தருளும். இது உமது கிருஹம். சந்தேகப்பட வேண்டாம். இராஜ கிருஹத்திற் பிரவேசித்து சுக்ரீவமகாராஜருக்கு என்ன ஆக்ஞையை விதிக்கின்றீரோ அவ்வாக்ஞைப் படி செய்யச் சித்தமாயிருக்கின்றோம்" என்று கூறி அவருடைய கரத்தைப் பிடித்துப் பட்டணத்திற்கு நடுவேயிருந்த இராஜ கிருகத்திற் கழைத்துச்

அந்தரத்தே தாராத் தலைவர்களுடைய சிறந்த உப்பரிகை நகரில் விளங்கிய மாளிகைகளைப் பார்த்துக் கொண்டு சென்று, தேவ ஸ்திரீகளும் அரண்மனைக் கோபுரத்திருந்த இராஜ ஸ்திரீகளும் [illegible] பிரவேசித்தார் இலக்ஷ்மணர். பின் ஏழாவதிற் சென்று அங்கே பரியங்கத்தில் மதியைப் போன்ற வதனத்தை யுடைய ஸகல ஆபரணங்களையுடையவளாயிருந்த தாரையைக் கண்டார். அவள் இலக்ஷ்மணரைப் பார்த்தும் நமஸ்கரித்துப் புன்முறுவலுடன் "ஸ்வாமி! ஏன் கோபங்கொண்டவர் போன்றவராக வரும் நீர் சாந்த சொரூபியாகின்றீர். பக்தவத்ஸலர். உமது அன்பரும் ஊழியருமாகிய சுக்ரீவர்மீது ஏன் கோபங்கொள்ளுகின்றீர்? அவர் வெகு காலம் வாலியால் நிராகரிக்கப்பட்டுத் துன்பமனுபவித்தவர் பெரிய துக்கக் கூட்டங்களிலிருந்து இப்போது தான் அவர் உங்களால் ரக்ஷிக்கப்பட்டார். அவர் அரசாக்ஷியை யனுபவித்தது உமது அநுக்ரஹத்தினாலேயே யன்றோ? பிரபுவே! இது வரையில் அவர் காமபோகத்தா லிருந்தனர். அதனாலேயே இரகுபுங்கவரைத் தரிசிக்க வரவில்லை. ஆயினும் பல தேசங்களிலிருந்து அநேக வானரர்கள் வந்து கொண்டிருக்கின்றனர். இதுவன்றிப் பத்துத் திசைகளிலிருந்தும் சைன்னியங்களைத் திரட்டும் பொருட்டு மலைபோன்ற வலிமை வாய்ந்த பதினாயிரம் வானர வீரர்களை அனுப்பியிருக்கின்றனர். ஸகல சைன்னியங்களையுஞ் சேகரித்துக் கொண்டு சுக்ரீவமகாராஜர் தாமே சென்று இராக்ஷஸ சிரேஷ்டனை இராவணனைத் தொந்தரைப்படப் போகின்றார். வானரர்களுக்கு அதிபதியான அவர் இப்போது உம்முடன் வருவார். தயை செய்து அரண்மனையின் அந்தப்புரத்தில் வந்து பாரும். அங்கு பத்னி புத்திர மித்திரர்களுடனிருக்கும் அவரைக் கண்டு அவருக்கு அபயமளித்து அழைத்துச் செல்லப் பிரார்த்திக்கின்றேன்" என்றாள்.

இதைக் கேட்டதும் இலட்சுமணர் சினந் தணிந்து, அந்தப்புரத்திற்குட் சென்றார். அங்கே சுக்ரீவன் ருமையைக் கட்டித் தழுவிக் கொண்டு கட்டிலின் மீது அமர்ந்திருந்தனன். அவ்வாறிருந்த சுக்ரீவன் இலட்சுமணனைக் கண்டு தம் பயந்தவன் போல வெழுந்து நின்றான். இருகண்களும் சிவந்திருக்கச் சினமடைந்து [illegible] அவனை நோக்கிக் கூறு

நோக்கி, "அநுமனே! இராமச்சந்திரனை மறந்துவிட்டாயல்லவா? வாலியைவதைத்த பாணம் உன்னையெதிர் பார்த்துக் கொண்டிருக்கின்றது. என்றால் நீ கொல்லப் படுவாய். வாலி சென்றவழியே நீ செல்வாய்" என்று பராக்கிரமங்களை யெடுத்தோதும்போது வீரரான அநுமார் "சுவாமி! ஏனிவ்வாறு தெரிவிக்கின்றீர். இவ்வானராதிபதியும் உம்மைப் போல இராமரிடத்து அன்புடையவரானவர். அவர் இராமகாரியத்திலேயே எப்போதும் கண்ணுடையவர். இவர் செய்ந்நன்றியை மறந்தவரல்லர். பாரும்! வானரர்கள் கோடி கோடியாய் வருவதைப் பாரும். எத்திக்கிலுஞ் சீதையைத் தேடிக்கொண்டு வரப் புறப்படப் போகிறார்கள். ஸ்ரீராமகாரியத்தை சுக்கிரீவ மகாராஜா பூர்த்தி செய்வியார்" என்றார்.

இவ்வாறு கூறிய ஆஞ்சநேயர் வார்த்தையை இலக்ஷ்மணர் கேட்டு வெட்கமடைந்தார். சுக்கிரீவன் அவருக்கு அர்க்கிய பாத்திய பாத்தியாசாரங்களைச் செய்து தக்கபடி பூஜித்தான். ஆலிங்கனம் செய்து கொண்டான். அவனைப் பார்த்து, "வானரர்காள்! நான் ஸ்ரீராமபிரானுடைய அடிமை. அவரால் இரக்ஷிக்கப்பட்டவன். தமது தேஜஸால் இராமபிரான் திரிலோகங்களையும் க்ஷணத்தில் ஜயிக்கத் தக்கவர். "பிரபுவே! இவ்வானரர்களும் நானும் உங்களுக்குச் சகாய மாத்திரமே யல்லது வேறல்ல" என்றான். இலட்சுமணர், "நட்பினால் நான் கூறிய சில வசனங்களை மனதிற் கொள்ளாது மன்னித்தல் வேண்டும். ஸ்ரீராமர் சீதாதேவியின் பிரிவாற்றாமையால் தனியே துக்கித்துக் கொண்டிருக்கிறார். அவரிருக்கும் வனத்திற்கு இக்கணமே செல்லவேண்டும். வாருங்கள் போவோம்" என்றார். சுக்கிரீவன் அவ்வாறே செய்வேமென்று கூறி இலட்சுமணருடன் இரதமேறி பற்பல பேரிகைகளும் மிருதங்கங்களும் முழங்க, அநேக கொடிகள், வானரங்கள் சூழ்ந்துவர, சாமரங்கள் வீச, சந்திர வட்டக் குடை பிரகாசிக்க, நீலன், அங்கதன், அநுமான் முதலிய அமைச்சர்களுடன் இராமபிரானிருக்குமிடம் சென்றான்.

ஐந்தாவது சருக்கம்

முற்றிற்று.

6-வது சருக்கம்.

பரமசிவன் கூறுகிறார்.

இப்போது இராமபிரான் மரவுரியும் ஜடாமுடியுந் தரித் தவராய் நீலமேகம் போன்ற திருமேனியும் பரந்த கண்களுமுடையவராய்ச் சாந்த விக்ரஹ சொரூபியாய் மந்தஹாஸ விலாசமுடையாந்த முகமுடையவராய் சீதா தேவியின் மீது கொண்ட விரகதாபத்தால் பறவைகளையும் மிருகங்களையும் பார்த்தவண்ணம் குஹாத்வாரத்தில் ஒரு பாறையின் மீதமர்ந்தருளியிருந்தனர். இவ்வாறிருக்கும் பிரபுவைக் கண்ட, சுக்ரீவன் இலட்சுமணர் இருவரும் சிறிது தூரத்திலேயே இரதத்தை விட்டிறங்கி, விரைவாய்ச் சென்று அவரது பாதபத்மங்களிற் பணிந்தெழுந்தனர். தாமத்தை யறிந்த இராமபிரான், சுக்ரீவனை யாலிங்கனஞ் செய்து கொண்டு அருகிலமரச் செய்து விதிப்படியுபசரித்தனர். சுக்ரீவன், "அண்ணலே! சேனைகள் அளவற்றதாகத் திரண்டு வருகின்றன. குலாசல பருவதங்களிற் பிறந்தவர்களும மேரு மந்தரம் முதலிய மலைகளிற் பிறந்தவர்களும் பலவிதமான தீவுகள், நதிதீரங்கள், வனங்கள் இவைகளிற் பிறந்தவர்களும், பருவதங்களுக் கொப்பான பராக்ரமசாலிகளும் கணக்கற்ற காமரூபிகளும வருகின்றனர் பாருங்கள். அவர்களெல்லோரும் தேவாம்சமாகப் பிறந்தவர்கள். அமானுஷீவத்தில் அதிக சமர்த்தர்கள். இக்கூட்டங் களிற் சிலர் யானையின் பலமுடையவர்கள். சிலர் பத்து யானைகளின் பலமுடையவர்கள் சிலர் ஆயிரம் யானைகளுக் கொப்பான பலம் படைத்தவர்கள் சிலர் பகாமுடியாத பலம் படைத்தவர்கள். சிலர் மை மலை போல கறுத்த நிறமுடையவர்கள். சிலர் சுவர்ண நிறமுடையவர்கள் சிலர் சிவந்த முகமுடையவர்கள். சிலர் நீண்ட வாலுடையவர்கள். சிலர் வெள்ளை நிறமுடையவர். சிலர் இராக்கதரைப் போன்றிருப்பர். பாருங்கள் ஆயுதம் பிடிக்க விரும்பியவராய் ஆரவாரித்துக் கொண்டு வருகின்றனர். யுத்தத்திற்கு பாவநூற உட்பட்டவர்கள். கனி டுருகு களையும் பிடுங்கி தாங்கலங்கழிய பாங்கர் காரக் கூட்டங் கூட்டு அதிபுரிஞ்சரிருக்கின்றன. அவன் ஜாம்பவானென்

றும் பெற்ற படைத்தவன். அவன் அதி சூரன். என் அமைச்சர்களில் முக்கியமானவன். கோடி காடிகளுக்கு அதிபன். அநுமான் மகாபல பராக்கிரமசாலி யென்ற பெயர் பெற்றவன். இவர் வாயுவினுடைய மைந்தர் மகா தேஜஸ்வி. புத்தி சாலிகளுந் தன் சிறந்தவர். எனக்கு மந்திரி. நளன், நீலன், கவயன், கவாக்ஷன், கந்தமாதனன், சரபன், மைந்தன், கஜன், பனஸன், வலீமுகன், ததிமுகன், சுஷேணன், தாரன், ஆஞ்சநேயருடைய தந்தை கேசரியென்னும் மகாபலவான் இவர்களெல்லாரும் வருகின்றனர். என்னுடைய சேனாதிபதிகளாவார்கள். இவர்கள் எல்லோரும் பருத்த சரீரமுடையவர்கள். மகாபலசாலிகள். இந்திரனை யொத்த பராக்கிரமமுடையவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கோடி வானரக் கூட்டங்களுக்குத் தலைவரானவர். தேவாம்சத்தினால் பிறந்த இவர்களெல்லோரும் தங்களது ஆக்ஞைப்படி நடக்கக்கூடியவர்கள். அங்கதன் என்னும் பெயர் கொண்டவன் வாலியின் மைந்தன். அவன் தன் தந்தையை யொத்த பராக்கிரமம் படைத்தவன். அதிவீரன். இராக்கத குலத்திற்கு நமன் போன்றவன். இவர்களையன்றி இன்னுமநேகரிருக்கின்றனர். அவர்களெல்லோரும் உங்களின் பொருட்டுத் தங்கள் உயிரையுந் தர வல்லவர்கள். பருவதங்களிலுள்ள சிகரங்களினாலே பகைவர்களை மடியும்படி சண்டை செய்ய வல்லவர்கள். இவர்கள் யாரும் உங்கள் வசத்தி லிருப்பவர் களேயாவர். இராமபிரானே. நீர் ஆக்ஞாபித்தருளும்" என்றார்.

இராமபிரான் சுக்ரீவனைக் கட்டி யணைத்துக் கொண்டு கண்களிலிருந்து ஆநந்த பாஷ்பம் பெருக அவரைப் பார்த்து, காரியங்களின் கௌரவமும் நீவிர் அறிவீர். "உமக்கு விருப்பமிருப்பின் ஜானகி தேவியைத் தேடும்படி தாங்களே இவர்களை நியமிக்கக்கடவீர்" என்றார். இராமபிரான் இவ்வாறு கூறியது கேட்டு சுக்ரீவன் மிகுந்த பிரியத்துடன் பராக்கிரமசாலிகளான வானரங்களைத் திசைகளெட்டுக்கும் போகும்படி யனுப்பினன். மகா பலசாலிகளான யுவராஜன், ஜாம்பவான், அநுமான், நளன், சுஷேணன், சரபன், மைந்தன், துவிவிதன் முதலியவர்களைத் தென்றிசைக்கு யனுப்ப நிச்சயித்து. அவர்களை யழைத்து, "நீவிரனைவரும் மிகுந்த முயற்சியெடுத்துக் கொண்டு சீதா பிராட்டியைத் தேடி [illegible] வரவேண்டும். நீங்கள்

சீதாபிராட்டியாரைக் கண்டாலும் காணாவிட்டாலும் எனது கட்டளைப்படி ஒருமாதத்திற்குள் திரும்பி வரவேண்டும். அந்த ஒரு மாதத்திற்கு மேல் ஒரு தினமதிக மாயினும் உங்கள் உயிரை யிழக்கும்படியான ஆக்ஞை ஏற்படும்” என்றுரைத்து அவர்களை யனுப்பினன். பிறகு சுக்ரீவன், இராமபிரானை நமஸ்கரித்து விட்டு அவருக் கருகே யிருந்தனன். அப்போது இராமபிரான் பிரயாணத்துக்குத் தயாயிருந்த அநுமானைப் பார்த்து, “நமது பெயர் வரைந்திருக்கும் இந்தக் கணையாழியை என்னுயிர்க் காதலியான ஜானகியிடம் இரகசியமாகக் கொடுத்தல் வேண்டும். இக்காரியத்திற்குப் பிரமாணமானவன் நீயேயாவாய். உன்னுடைய வல்லமையை நாமறிவோம். உனக்கு வழியில் க்ஷேமமேற்படக் கடவது” என்று கூறித் தமது மோதிரத்தை அநுமானிடம் கொடுத்தனர்.

இவ்வாறு சுக்ரீவனிடம் விடை பெற்றுக் கொண்டு அங்கதன் முதலானவர்கள் யாவரும் தக்ஷிணத்தில் எல்லா இடங்களுக்குஞ் சென்று பிராட்டியைத் தேடினர்.

அவ்வாறு சென்று தேடிய வானரர்கள் விந்திய மென்னும் வனத்தில், மலைபோல பயங்கரமான ஒரு இராக்ஷதன் பறவைகளையும் மிருகங்களையும் யானைகளையும் புசித்துக் கொண்டிருப்பதைக் கண்டனர்.

வானர வீரர்கள் அவ்வரக்கனை இராவணனென் றெண்ணி, ஆரவாரித்தனர். அவனைக் கைமுஷ்டிகளாற் குத்தினர். பின்னர் அவனை இராவணனல்லவென்று தெரிந்து கொண்டு அங்கிருந்து வேறொரு பெரிய வனஞ் சென்று தேடினர். அங்கே அவ்வானரர்கள் யாவரும் தாகத்தை யடைந்து தாபமுற்று குடிக்க நீர்காணாது உலர்ந்த வாயினரா யலைந்து தேடி ஒரு குகையைக் கண்டார்கள். அக்குகையில் புற்கள் புதர் போல் அடர்ந்திருந்தது. அன்னம் கொக்கு முதலிய அநேக பறவைகள் அங்கே நீரருந்த வந்தன. அதைப் பார்த்த வானரர்கள் இங்கே நீர் நிலையேதா வொன்றிருக்க வேண்டுமென்று நிச்சயித்து முதலில் அநுமார் நுழைந்தனர். பிறகு அவரைப் பின்பற்றி ஒருவர் கரத்தை யொருவர் பிடித்துக் கொண்டு சென்றனர். அவ்வாறு வெகுதூரஞ் சென்ற பின்னர் தெளிந்த நீர் நிறைந்த ஒரு தடாகத்தையும் கற்பகத் தருக்களுக்கு நேரான சிறந்த விருக்ஷங்களையும் கண்டார்கள்.

அவ்விருக்ஷங்களில் பழுத்த கனிகள் மிகுந்திருந்தன. அவற்றில் தேன் கூடுகளும் ஏராளமாக விருந்தன. அந்தத் திவ்ய வனத்திலொரு வீடிருந்தது. அல்லாமலும் ரத்தினங்கள், வஸ்திரங்கள், போஜனத் திரவிய ராசிகளைப் பலவும் அந்த நிறைந்திருந்தன. அவையாவும் சுவர்ணமயமாகப் பிரகாசித்திருந்தன. அதைக் கண்ட வானரவீரர்கள் எல்லோரும் வியப்புற்று, அப்பாற் சென்று பார்த்தனர். அங்கே பொன்மயமான ஒரு வீடிருந்தது. அவ்வீட்டில் பெண்பிள்ளையொருத்தி வீற்றிருக்கக் கண்டனர். அந்தமாது யோகாசனத் தரித்து யோகாப்பியாசஞ் செய்து கொண்டு தியான நிஷ்டையிலிருந்தனள். வானரவீரர்கள் அவளைக் கண்டு நமஸ்கரித்து வணங்கினர். அந்த மாது அவர்களைக் கண்விழித்துப் பார்த்து "நீங்களார்? இவ்விடமேன் வந்தீர்கள்? எங்கேயிருந்து வருகின்றீர்கள்? நீவிர் யாருடைய தூதர்கள்? என்னிருப்பிடத்திற்கு ஏன் காலெடுத்து வைத்தீர்கள்?" என்று கேட்டாள். அநுமான் அம்மாதை நோக்கி, "தேவி! அயோத்தியாபுரி மன்னனாயிருந்த தசரத மகாராஜனது ஜேஷ்ட குமாரர் ஸ்ரீராமரென்று சொல்லப்படுவார். அவர் தமது தந்தை வாக்கியத்தின் படி தம் தம்பியுடனும் மனைவியுடனும் வனவாசஞ்செய்ய வந்திருந்தனர். அப்போது பதிவிரதா சிரோமணியாகிய அவரது பத்தினியைத் துஷ்டனாகிய இராவணன் எடுத்தேகினன். அப்பால் இராமபிரான் இலட்சுமணருடன் சுக்ரீவமகாராஜனை யடைந்து அவரிடம் நட்புக் கொண்டனர். அந்த இராமபிரானுடைய தேவியைத் தேடிக் கண்டு பிடிக்கும்படி நாங்கள் எமதரசனால் ஆக்ஞாபிக்கப்பட்டோம். அவ்வாறே புறப்பட்டுத் தேடிக் கொண்டு வருகையில் தாகத்தால் மிகுதியும் வருந்தலானோம். அப்பால் தற்செயலாய் இந்தக் குகையைக் கண்டு இதிற் பிரவேசித்தோம். மங்கள முடையவளே! நீயார்? இங்கிருப்பதன் நோக்கம் யாது?" என்றனர்.

அந்த யோகினிமாது அவ்வானரவீரர்களைப் பார்த்து, சந்தோஷத்துடன் கூறுகின்றாள்.

"வானரவீரர்களே! உங்களிஷ்டப்படி காய் கனிகளைப் புசித்து அமிர்தத்திற்கு சமமான நீரை பருகுங்கள். பின்னர் என் விருத்தாந்தத்தை விஸ்தாரமாகக் கூறுகின்றேன்" என்று கூற வானரவீரர்கள் அவ்வாறே சென்று அங்குள்ள காய் கனிகளைப்

பசியாறவுண்டு நீர்பருகித் தாகசமனஞ்செய்துகொண்டு தேவியருகில் வந்து, கை குவித்து நின்றனர். புத்திசாலியாகிய அந்தயோகினி, அநுமானை நோக்கி, "ஐயா! வானர சிரேஷ்டரே! முன்னொரு காலத்தில் விசுவகர்மாவுக்கு ஹேமையென்றொரு புத்திரியிருந்தாள். அவள் தனது நடனங்களால் சாம்ப மூர்த்தியை மகிழ்வித்தனள். பரமேசுவரன் அவளுக்கு இந்தத் திவ்யபுரியைக் கொடுத்தார். அவள் இதில் பதினாயிர வருஷமிருந்தாள். அவளுக்கு நான் தோழியாயிருந்தேன். முக்தியையடைய விரும்பி முகுந்தனை யாராதித்து வந்தேன். அப்பொழுது என் பெயர் ஸ்வயம்பிரபையென்று சொல்லப்படும். நான் [illegible] தலைவியாயிருந்தேன். பின்னர் ஹேமை யென்பவள் பிரம்ம லோகஞ் சென்றனள். அப்பொழுது என்னை நோக்கி, "ஜனசஞ்சாரமற்ற இங்கு நீ வசித்திருக்கக்கடவாய்; அப்பரமான நாராயணர் திரேதாயுகத்தில் தசரத சக்ரவர்த்திக்குத் திருமகனாக அவதரிக்கப் போகின்றார். அவர் பூபாரத்தைப் போக்குதற்பொருட்டு வனவாசஞ் செய்ய வருவார். அப்பொழுது வானரர்கள் அவருடைய தேவியைத் தேடிக் கொண்டு இங்குப் பிரவேசிப்பார்கள். அவர்களை நீ பூஜிப்பாய். பின்பு நீ இராமரிடஞ் சென்று அவரைப் பிரயத்தன பூர்வமாக ஸ்தோத்திரஞ் செய்து யோகிகளடையும் ஸநாதனமான விஷ்ணு பதத்தை யடைவாய்" என்றனள். ஆகையால் அந்த இராமசந்திரப் பிரபுவைச் சேவிப்பதன் பொருட்டு நான் விரைவில் செல்ல விரும்புகின்றேன். "நீங்கள் உங்கள் கண்களை மூடிக் கொள்வீர்களாயின் குகைக்கு வெளியே செல்வீர்கள்" என்றாள். அவர்கள் கண்களை அவ்வாறே மூடிக் கொண்டார்கள். உடனே முன்னிருந்த வனத்திற்கு வந்து சேர்ந்தனர். ஸ்வயம்பிரபையும் குகையை விட்டு வெளியே வந்து இராமபிரானுடைய ஸந்நிதிக்குச் சென்று அவரையும் இலட்சுமணரையும் வணங்கிச் சுக்ரீவனையும் நமஸ்கரித்தனள்.

சுவயம்ப்ரபை ஸ்தோத்திரஞ் செய்கின்றாள்

அப்பால் மீண்டும் சுவயம்பிரபை இராமபிரானை வலம் வந்து பணிந்து ஞானத்தை யடைய விருப்பமுள்ள அம்மாது தழதழத்த குரலுடன் மயிர்க்கூச்செறிய நின்று கூறுகின்றாள்.

இராஜேந்திரரே! உமக்கு நான் பணிவிடை புரிபவள். உமது தர்சனத்திற்காக நானிங்கு வந்தேன். உமது சேவை பெற விரும்பியே குகையில் அநேக வருடகாலமிருந்து சங்கோசமற்ற தவம் புரிந்து தாபத்தை யடைந்தேன். அத்தவமிப்பொழுது தான் பலித்தது. மாயைக் கப்பாற்பட்ட வும்மை யிப்பொழுது நமஸ்கரிக்கின்றேன். உம்மை எல்லாப் பிராணிகளின் உள்ளும் புறமும் இருப்பவராகக் கூறுகின்றனர். யோகமாயையால் மறைக்கப்பட்ட பரனிடமாய் [illegible] அக்ஞானநோக்க முடையவர்க்குப் பக்தவத்ஸலராய் [illegible] பரம பாகவதர்களுக்குப் பொருந்திய உபாயமாகத் தோன்றுகின்றீர். அப்படிப்பட்ட உமது தன்மையைத் தெரிந்துகொள்ள முடியாத நான் எவ்வாறுணரப்போகின்றேன். இராம! உலகத்திலுள்ள யாவற்றுக்கும் பந்தத்தைப் புரிபவராயிருக்கின்ற தேவரீர் இப்பொழுது எனக்குக் காணப்படுகின்றீர். என் இருதயத்தில் எப்பொழுதும் பிரகாசிக்கக் கடவது. இராம! உமது திருவடித் தாமரைகளைத் தியானிப்பவர்கள் ஸம்ஸார ஸாகரத்தைத் தாண்டுவார்கள். கர்மகாண்டத்தில் நடப்பவர்களுக்குத் தெரியாத வேதாந்த தத்துவங்களைத் தெரிவிப்பவராகச் சொல்லத்தக்கவர். பகவான். பொருள் முதலானவற்றை அபேக்ஷியாதவர். ஆதலால் உலகத்தவர் தங்களை அவ்வாறு காணவல்லவரல்லர். வைராக்கியமடைந்தவர்களுக்கு உபாயமான உமக்கு நமஸ்காரம். அழியாப்பொருள் ரூபமான உமக்கு நமஸ்காரம். இந்தப் பக்தியுள்ளவர்களுக்கும் உமக்கு நமஸ்காரம். மேலும் குணாதீதரான பூரணரான உமக்கு நமஸ்காரம். நீர் காலரூபி. ஈசுவரர். ஆதிமத்தியாந்தரஹிதர். எங்கும் சமமாகச் சஞ்சரிக்கும் உம்மைப் பரமபுருஷனாகப் பாவிக்கின்றேன். உலக விடம்பனமான உமது லீலாவிசேஷத்தை யெவனுமறியான். உமக்கு மித்திரனுமில்லை. பகைவனுமில்லை. அன்னியனுமில்லை. உமது மாயையால் மறைக்கப்பட்டவர் அவ்வாறும்மைத் தெரிந்துகொள்வதில்லை. பிறப்பற்றவராய், கர்த்தாவாய், எல்லோருக்கும் ஈசுவரனாயிருக்கும் உமது தேவ மனுஷ்ய திரியக் ரூபங்களான ஜன்மங்களெனப்படும் அவை யாவும் மிகவும் விஸ்தாரமானது உமது சரித்திரங்களைக் கேட்டு

உலகம் சித்திபடையும் படி. அசுரரான நீரவதரித் திரென்று சிலர் சொல்லுவார்கள். கோஸலராஜபுத்ரியின் தவத்தின் பயனாக அவதரித்தீரென்றும் கௌஸல்யாதேவியின் பிரார்த்தனைப்படி அவதரித்தீர் என்றும் சிலர் கூறுவர். பிரமதேவனுடைய பிரார்த்தனைக் கிணங்கி துஷ்ட அரக்கர்களால் ஏற்பட்ட பூபாரத்தை யொழிக்க அவதரித்ததாகக் கூறுவர் சிலர். உமது கதையைக் கேட்பவர்களும் ஸ்தோத்திரஞ் செய்கின்றவர்களும் ஸம்ஸாரஸாகரத்தை யொழிக்கத்தக்க உம்முடைய பாதங்களைத் தரிசிப்பார்கள். தேவனே! உமக்கு வேறாயும் உமது குணங்களுக்கு ஆச்ரயமாயு மிருக்கிற உமது மாயாலக்ஷணங்களுக்கு நானுட்பட்டவள். ஸ்தோத்திரத்திற்கு விஷயமாகாதபடி விபுவாயுள்ள உம்மை அடியேன் எவ்வாறறியப் போகின்றேன். இரகுநந்தனரே! தம்பி இலட்சுமணருடனும் சுக்ரீவருடனும் வில்லம்பு தாங்கிய திருக்கரங்களுடன் சேவை தந்தருளு மும்மைச் சரண மடைகின்றேன். என்றிவ்வாறு சுயம்பிரபை ஸ்தோத்திரஞ் செய்ய, கைகுவித்து வணங்கு பவர்களுக்கு இரங்கியருளும் அண்ணலான இராமபிரான், பிரஸன்னமாகிய பக்தியுடன் கூடிய அந்த யோகினியைப் பார்த்து, "உனக்கு என்னவேண்டும்" என்று கேட்டார். யோகினி பக்தியுடன் அவரை நோக்கி, "பிரபுவே! பக்தவத்ஸலரே! யானெங்கிருந்த போதிலும் எனக்குத் தளராத பக்தி எப்போது மிருக்கவேண்டும். உமது பக்தர்களுடைய சங்கம் சதாகால முண்டாக வேண்டும். உலகத்தாருடன் பற்றற்றிருக்கவும் நாவினால் சதாகாலமும் ராமா! ராமாவென்னும் நாமஸ்மரணை செய்யவும் அநுக்கிரஹித்தருள வேண்டும். சியாமளமான திருமேனி யுடையவராய்ச் சீதாலக்ஷ்மண சமேதராய்க் கோதண்டத்தைக் கரத்திற்றரித்தவராய்ப் பீதாம்பரதாரியாய்க் காந்தியுள்ள ஆபரணங்களும் காற்சிலம்புகளும் கவசகுண்டலங்களுமணிந்தவராய் விளங்கும் உமக்கு நமஸ்காரம். இராமா! வேறெந்த வரமும் எனக்கு வேண்டாம்" என்றாள்.

இராமர் கூறுகின்றார்.

"ஏ பாக்கியவதி! அவ்வாறேயாகும்; நீ பதரிகாசிரமம் சென்று அங்கே நம்மைச் சிலகாலம் ஸ்மரித்துக் கொண்டிருந்து விரைவில் ஸம்ஸார ஸாகரத்தைக் கடந்து, பரமாத்மாவான எம்மையடைவாய்" என்று அநுக்கிரஹித்தார். இவ்வாறு அநு

தம் போன்ற வாக்கியங்களைக் கேட்ட யோகினி நல்லது அவ்வாறே செய்கிறேனென்று கூறிப் பர்வதங்களும் விருக்ஷங்களும் அடர்ந்த பதரிகாசிரமஞ் சென்று காகுஸ்தருடைய கழலிணையை மனத்தில் அமைத்துக் கொண்டு சரீரத்தை யொழித்துப் பரம பதத்தை யடைந்தாள்.

ஆறுவது சருக்கம்

முற்றிற்று

7-வது சருக்கம்

பரமசிவன் கூறுகிறார்.

சீதையைத் தேடிச் சென்ற வானரவீரர்களெல்லாரும் அந்தக் காட்டில் மரங்களினடியில் கவலையுடன் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். அவர்களுடைய சிறந்தவனான அங்கதன், மற்றவர்களை நோக்கி, குகையில் இருந்து கொண்டேயிருந்து ஒரு மாதத்தைக் கழித்து விட்டோம். நாம் இன்னும் பிராட்டியாரைக் கண்டபாடில்லை. இராஜாக் கினையை நிறைவேற்றினோமில்லை. நாமிப்போது கிஷ்கிந்தாபுரிக்குத் திரும்பிச் செல்வோமாயின் நம்மனைவரையும் சுக்ரீவன் கொன்று விடுவான். தன் பகைவனுடைய புத்திரனானதால் என்னை அவசியம் கொல்வான். அவனுக்கு என்னிடம் அன்பேது? இராமபிரானல்லவா என்னை இரக்ஷித்தவர். அவர் காரியத்தையாவது நான் முடித்தேனில்லையே. என்னை மோசம் போக்கினானென்கிற எண்ணம் துராத்மாவான அவனுக்குண்டு. அண்ணன் மனைவி அன்னைக்குச் சமானமானவளல்லவா? பாபாத்மாவாகிய அவன் என் அன்னையுடன் சுகமனுபவிக்கின்றான். இப்படிப்பட்ட பாவி முன் இனி நான் போகமாட்டேன். இங்கேயே என் உயிரை விட்டு விடுகின்றேன். மரணம் என்பது எங்கிருப்பினும் முன்பின் இது நிச்சயம் என்றுகூறி வருத்தமுற்றுக் கண்ணீர் சொரிந்தான்.

இவ்வாறு துயரமுற்றுக் கண் கலங்கும் யுவராஜாவான அங்கதனை ஒரு வானரவீரன் நோக்கி, இங்கிருந்து இனிப்படிச் சோகமுறவேண்டீர். உமது உயிரைக் காக்க நாங்களிருக்கின்றோம்.

இந்தக் குகையில் [illegible] வசித்து வருவோம்.
இப்படி [illegible] நிற்கின்றது. சௌக்கியத்திற்குச் [illegible]
கிருக்கின்றது என்றார். இவ்வாறு இவர்கள் இரகசியமாய்ப் பேசிக்
கொண்டிருப்பதை [illegible] அங்கதனைக் கட்டியணைத்
துக்கொண்டு "குழந்தாய்! நீ [illegible] நினைக்க. [illegible] நல்லதல்ல.
[illegible]
[illegible] பிறக்கின்றன?
இராமபிரானுக்கு [illegible] அதிக அன்புள்ள
[illegible] ஆகையால் இராமபிரானுடைய [illegible] இல்லை. அ
[illegible] நான் கருத்துடை
[illegible]. விசனப்பட வேண்டாம். இந்தக் குகையி
லேயே வசிக்கலாமென்று அந்த வானரவீரன் சொன்னது உசித
மல்ல. அந்தக் குகை [illegible]. ஆயினும் இராமபிரா
னுடைய பாணங்களால் [illegible] இவ்வுலகத்தி
லுள்ள [illegible] செய்யும்
அவன் தன்னை [illegible] எவ்வாறு உண்டாக்கி
வசிக்கின்றாய்? [illegible] இன்னும் ஒரு இரகசியம் கேள்:
இராமபிரான் [illegible] மனிதரல்லர். அவர் பகவான். அவ்யயரான
[illegible] செய்யும் [illegible]
[illegible] ஆதார [illegible]
[illegible] இராக்ஷதர்களை வதைசெய்வதற்
[illegible] இவ்வாறு இவ்வா
[illegible] நாட்டிக்
[illegible] தேவர்களோ
[illegible] அவதரித்துள்ளாராம்? அவர்
[illegible] நாமெல்லோரும் வானர
வீரர்களாய் [illegible] நாமெல்லோரும்
ஜகத்பிரானவரை [illegible]. அந்த பகவானுக்கு
[illegible] அவரது அருகிருக்கால
[illegible] ஆகையால் இப்பொழுது அவருடைய சேவையைக்
காலமில்லாமல் செய்யின் பின்னர் வைகுண்டத்தை யடைந்து
எல்லோரும் இன்புறுவோம்" என்று இவ்வாறு ஆஞ்சநேயர்
அங்கதனுக்கு ஆறுதல் சொல்லிச் சாந்தப் படுத்தினார்.

பிறகு எல்லோரும் விந்திய பர்வதம் சென்றார்கள். அங்கிரு ந்து பிராட்டியாரைத் தேடிக்கொண்டே தெற்கு ஸமுத்திரத்தின் கரையிலுள்ள மகேந்திர மென்னும் பர்வதத்தின் அருகில் வந்து அச்சமுத்திரம் ஆழமுடையதும் அபாரமுமான கடலின் ஆழத்தைக் கண்டு பயந்து வருத்தமுற்று மனம் தளர்ந்து ... தாங்கள் போகவேண்டிய ... அங்கேயே உட்

கொண்டார். அங்கதன் முதலியவர் அப்பொழுதவன் கானவருமை ... ராமன் ... "ராமகாரியத்தை நாம் முடிக்கவில்லை; ... சுக்ரீவனிடம் ... போகமுடியாது. இன்னும் நாம் இராமனை ... பாதத்தைக் காணவில்லை. மகாராஜனுடைய கொடிய ஆக் ஞையை நாம் ... பெற்றோம். ... ராஜனது ஆக்ஞையிலே ... பிராயோபவேசம் ... இருந்து ... பிராணனை விடுவோம்" என்று தீர்மானித் துக் கொண்டு அங்கேயே ... பாயில் உட்கார்ந்தனர். ... வியின் ... அப்பொழுது அம்மலையின் ... மலைக்குகை ... ஸம்பாதி ... பேசுவதைக் கேட்டு, "எனக்கு ... ஆகாரம் ... வந்தது" என்று சொல்லிக் கொண்டு அந்த

... இதைக் கேட்டு, ... யைப்

... புறப்பட்டு ... இருக்கிறது ... ஆசாரிய ... ஜடாயுவின் ... சரித்திரத்தை ... போகக்கூடிய முடியாத முக்தியை யடைந்தார் என்று பேசிக் கொண்டார். இதைக் கேட்டதும் ... வானரங்களே! என் செவிகளில், அமிர்தத்தைச் சொரிந்தது போலிருக்கிறது உமது சம்பாஷணை. என் தம்பியான ஜடாயுவின் பெயரைச் சொல்லிப் பரஸ்பரம் பேசும் நீங்கள் யார்? என்னைப் பற்றி நீங்கள் பயப்பட வேண்டாம்" என்று சொல்லுகிறது ஸம்பாதியை அங்கதன் உடனே யெழுந்து, அப்பற

வையைப் பார்த்து. பறவைக் கிறைவனே! தசரத மகாராஜனுடைய புத்திரனும் ஸ்ரீமானுமான இராமபிரான் தம்பி இலட்சுமணருடன் வைதேஹி ஸஹிதம் காட்டில் ஸஞ்சரித்துக் கொண்டிருந்தனர். அக்காலத்தில் இராமலக்ஷ்மணர்கள் வேட்டை யாடச் சென்றனர். அச்சமயம் பார்த்து இராவணனென்னும் துராத்மா சீதாபிராட்டியைப் பலாத்காரமாய் அபகரித்துக் கொண்டு போயினன். அப்போது சீதாபிராட்டி இராமா! இராமா! வென்று கதறிக் கொண்டு சென்றனள். அச்சத்தங் கேட்ட ஜடாயு வென்னும் பக்ஷிராஜன் அவ்வரக்கனுடன் பிரபலமாகப் போர்புரிந்து, இராமபிரானுக்காகப் பிராணனை யிழந்தனர். இராமபிரான் அவனுக்குச் செய்ய வேண்டிய உத்தரக் கிரியைகளைச் செய்தனர். அக்கணமே அவர் இராம சாரூப்யத்தை யடைந்தனர்.

அப்பால் சுக்ரீவன், இராமபிரானுடன் அக்னி சாட்சியாக ஸிநேகஞ்செய்து கொண்டனர் அவருடைய பாபிஷ்டனையும் வெல்வதற்கரிய வாலியைக் கொன்று, சுக்ரீவ மகாராஜனுக்கு அவ்விராஜ்யத்தைக் கொடுத்தார் சுக்ரீவர் சீதாபிராட்டியாரைத் தேடிக் கண்டுபிடிக்கும்படி மகா சௌரியமும் சாமர்த்தியமும் வாய்ந்த எங்களுக்குச் சொல்லி, ஒரு மாதத்திற்குள் திரும்பி விடவேண்டும், இல்லாவிட்டால் உங்கள் தலையை வாங்கிவிடுவேனென்று கண்டிப்பான ஆக்ஞையும் செய்து அனுப்பினார். அந்த ஆக்ஞையை மேற்கொண்டு புறப்பட்டு வந்த நாங்கள், எங்களுக்குக் குறிப்பிட்டபடியிருந்த காலமெல்லாம் குகையிற் சஞ்சரித்துக் கழித்து விட்டோம். இது வரையிலும் பிராட்டியாரையாவது இராவணனையாவது நாங்கள் பார்க்கவேயில்லை. ஆகையால் வருத்தமுற்று இங்கே இச் சமுத்ரக் கரையில் பிராயோபவேசஞ் செய்து பிராணனை யிழக்கத் துணிந்துட்கார்ந்தோம். "பறவைக்கிறைவனே! அந்த வைதேஹியின் வர்த்தமான முனக்குத் தெரிந்திருந்தால் சொல்ல வேண்டுகிறோம்" என்றனன்.

இவ்வாறு அங்கதன் கூறக்கேட்ட சம்பாதி சந்தோஷமடைந்து, பறவை வேந்தனான ஜடாயு என் அன்பிற் குரியவனான தம்பி. அவனைப் பற்றிய சம்பாஷணைகள் கேட்டு அநேக மாயிரம் வருடங்கள் சென்றன "வானரசிரேஷ்டர்களே! நான் உங்களுக்கு வாக்கை

காயஞ் செய்கிறேன். என் ஸகோதரனுக்குச் செய்யவேண்டிய நீர்க்கடனைச் செய்ய என்னை ஜலக்கரைக்குக் கொண்டு போவீர்களாயின் உங்கள் காரியசித்திக் கேற்ற எல்லாவற்றையும் சுபகரமாகக் கூறுவேன்" என்றது. உடனே வானரர்கள் ஸம்மதித்து ஸம்பாதியை ஜலக்கரைக்குக் கொண்டு போயினர். ஸம்பாதி ஸ்நானஞ் செய்து, ஜடாயுவுக்கு ஜலதானமளித்தது. பிறகு வானரர்கள் அப்பறவையாஜனை மீண்டும் அதன் இடத்திற்குக் கொண்டு வந்து சேர்த்தனர்.

ஸம்பாதி தன்னிடத்திலிருந்து கொண்டு, வானரர்களைப் பார்த்து, இலங்கை யென்றொரு பட்டணம் திரிகூட மென்னும் பர்வத சிகரத்திலிருக்கின்றது. அங்கே அசோகவனம் என்று ஒரு வனமிருக்கின்றது. அதன் நடுவில் இராக்கதஸ்திரீகளுடைய காவலுடன் சீதாதேவி சிறைப்படுத்தப் பட்டிருக்கின்றாள். இலங்கை சமுத்திரமத்தியில் நூறு யோசனை தூரத்திலிருக்கின்றது. நான் கழுகு என்னும் பறவை யாதலால் எனக்குத் தூரதிருஷ்டியுண்டு. சீதாபிராட்டி என் கண்களுக்குத் தோன்றுகின்றாள். இதிற் சந்தேகம் வேண்டாம். இந்த நூறுயோசனை அகலமுள்ள சமுத்திரத்தைத் தாண்டக் கூடியவன் உங்களில் எவனோ அவனே சீதையைக் கண்டு திரும்பி வருவானென்பது நிச்சயம். துராத்மாவான அந்த ராவணனை நான் ஒருவனாகவே கொல்ல விருப்ப முடையவனா யிருக்கின்றேன். அவன் என்னுடைய தம்பியைக் கொன்றனன்றோ? நானோ இறக்கைகளில்லாமலிருக் கின்றேன். முதலில் இந்தக்கடலைக் கடக்க முயற்சி செய்யுங்கள். பின்னர் இராக்கத இராஜனாகிய இராவணனை இராமபிரான் வதை செய்வர். நூறுகாத அகலமுள்ள இந்தக் கடலைக்கடந்து இலங்கைக்குச் சென்று ஜானகியுடன் ஸம்பாஷித்து மீண்டும் இக்கரை வந்து சேர்வதற்கேற்ற சாமர்த்தியம் உங்களுள் யாருக்கிருக்கின்றதென்று விசாரியுங்கள் என்று கூறிற்று.

ஏழாவது சருக்கம்

முற்றிற்று.

8வது-சருக்கம்.

பரமசிவன் கூறுகிறார்.

இதைக் கேட்டதும் வானரர்களனைவரும் அதிசயித்துப் பறவைவேந்தனை நோக்கி, "பகவானே! உமது விருத்தாந்தத்தை ஸவிஸ்தாரமாகக் கேட்க விரும்புகின்றோம்" என்று பிரார்த்தித்தனர். சம்பாதி "நான் ஜடாயுவுக்குத் தமையன். முன்னொருசமயம் நாங்களிருவரும் பலத்தினால் செருக்கடைந்து எங்களுள் யார் பலவானென்றறிய வெண்ணி, சூரிய மண்டலம் வரையும் பறக்கத் தொடங்கினோம். இருவரும் அநேகாயிரம் காதம் பறந்து சென்றோம். சூரிய கிரணத்தினால் மிகுதியும் தகிக்கப்பட்டோம். அப்பொழுது ஜடாயுவானவன் தன் சிறகு எரிந்து போகுமே யென்றஞ்சி, விரைவில் வந்தவழியே நோக்கித் திரும்பிக் கீழே இறங்கி விட்டான். நான் அப்படிச் செய்யாமல், பின்னும் அதிகமாகப் பறந்து சென்றேன். என் இறக்கைகள் சூரிய வெப்பத்தினால் தகிக்கப்பட்டு எரிந்து போயின. அதனால் நான் விந்தியபர்வதத்தினுச்சியில் விழுந்தேன். வெகு உயரத்திலிருந்து விழுந்தமையால் நான் மூர்ச்சையடைந்து மூன்று நாள் கழிந்த பிறகு மூர்ச்சை தெளிந்து பிராணனைப் பெற்றேன். அப்பால் நான் என் இறக்கைகளெல்லாம் எரிந்திருப்பதைக் கண்டு மனங்கலங்கினேன். எனக்கு நான் விழுந்த இடம் இது வென்றாவது அது இப்பர்வத மென்றாவது தெரியவில்லை. கண்களை மெதுவாய்த் திறந்து பார்த்தேன். அங்கொரு சுபகரமான ஆசிரமம் காணப்பட்டது. அதனருகே சென்றேன். அதில் சந்திரமாவென்னுமொரு முனிவரிருக்கக் கண்டு வந்தனஞ் செய்தேன். அவரென்னை நோக்கி, "அடே! சம்பாதி! இதென்னவிந்தை? இவ்வாறுன்னை விரூபியாகச் செய்தவர் யார்? நீ முன் பிரபல பலவானாயிருக்கக் கண்டிருக்கின்றேன். உன்னுடைய இறக்கைகள் எப்படி யெரிந்து போயின. நீ விரும்பினால் தெரிவிக்க வேண்டுகின்றேன்" என்றார். அப்போது நான் செய்தவற்றைத் தெரிவித்து, வருத்தமுற்று அவரைப் பார்த்து "ஐயா! முனிவர் பெருமானே! இறக்கைகளில்லாமல் நான்

இவ்வுலகத்தில் எப்படிப் பிழைத்திருப்போன்" என்று கூறி வருந்தினான். அவர் தமது கருணைக் கண்களால் அவனை நோக்கி, "நாம் கூறுவதைக் கேட்பாயின் உனக்கு நேர்ந்தபடியை [illegible]' என்று கூறினார்.

இந்தத் தேகமே [illegible]. தேகமே காரணத்தா லுண்டானது. நான் இந்த [illegible] பாவங்களைப் [illegible] அதற்கு [illegible] விருத்தியடைந்து [illegible] [illegible] [illegible] பிறக்கும். அதில் [illegible] தேகமும் சேதனனைப் போலத் தோன்றும். அஞ்ஞானத்தின் பலத்தால் இவன், தேகமே நானென்னும் அபிமானமடைகின்றான். அதனால் பாபவிஷயங்களில் [illegible] விகாரமுள்ள ஆத்மாவை [illegible] நான் தேகம், நான் காமத்திற்கு [illegible] என்று எண்ணிக் கொண்டு [illegible] அவற்றால் [illegible] வசப்பட்டுக் கீழும் மேலும் திரிந்து கொண்டிருக்கின்றான். புண்ணிய பாவங்களைத் தலையில் சுமந்து [illegible] நானா யாகங்கள் தானங்களைச் செய்கிறேன், இனி சுவர்க்கத்திற்குப் போய்ச் சுகானுபவத்தைப் பெறுவேன் என்று எண்ணிக் கொள்கிறான். அவ்வாறே சொர்க்கஞ் சென்று மகத்தான சுகத்தை வெகுகாலம் அநுபவிக்கின்றான். புண்ணியபலன் தீர்ந்தவுடன் மீண்டும் ஆகாயத் தாரையில் பிரேரிக்கப் பட்டுச் சந்திரமண்டலத்தில் தலைகீழாக விழுகின்றான். அங்கே பனியுடன் கூடிய பூமியிலுள்ள தான்யாதிகளிற் கலந்து பல நாளிங்கிருக்கின்றான். பின்னர் புருஷனால் நான்கு விதமான அன்னங்களுடன் புசிக்கப் படுகின்றான். பிறகு அப்புருஷனுடைய ரேதஸ்ஸிற் கலந்து ருதுகாலங்களில் ஸ்திரீயின் யோனியில் விடப்பட்டு அங்கே உதிரத்துடன் கலக்கின்றான். பிறகு கர்ப்பாசயப் பையை யடைகின்றான்.

இவ்வாறு விடப்பட்ட விந்தானது ஒருநாளில் சேறாகி உறுதிப்படும். நீரிலுண்டாகும் குமிழியைப் போல ஐந்து இராத்திரியில் தடிப்படையும். அந்தத் தடிப்பானது ஏழு ராத்திரியில் மாம்ஸப் பையாக ஆகும். அந்தப் பையில் இரத்தஞ் சேர்வதால், பதினைந்து

நா தனில் ... இருபத்தைந்து ராத்திரிகளில் கண், ..., தலை, ... முதுகெலும்பு, வயிறு முதலிய ஆறு அங்கங்களும் ... ஆதாரமாயுள்ள மற்றவைகளும் முறையே ... உண்டாகின்றன. கை, கால், தொடை, இடுப்பு முதலிய ... பாகங்களில் உண்டாகின்றன. பின்பு ... அங்கங்களின் ... கொண்டு ... உண்டா... மாதத்தில் விரல்களுண்டாகின்றன. ஐந்தாவது மாதத்தில் ... செவி முதலியவைகளும் ... ஐந்தாவது மாதத்தில் ... களுடைய நகங்களும் ... முறை உண்டாகின்றன. பிறகு ஆறு மாதங்களில் செவித் தொளைகளும் ... முறை ... உந்தியும் உண்டாகின்றன. ஏழு மாதங்களில் தலையிலும் உடம்பிலும் ரோமங்கள் உண்டாகின்றன. எட்டாவது மாதங்களில் முறையே எல்லா அவயவங்களும் உண்டாகின்றன. பக்ஷியே! ஸ்திரீயின் கர்ப்பம் இவ்வாறே வளர்ந்து வர ஜீவன் ஐந்தாவது மாதத்திலேயே ... அடைகின்றான். இவ்வாறு கர்ப்பத்திலிருக்கும் ஜீவன் தாயுண்ணும் ஆகாரத்தின் ஸாரத்தை ... துவாரத்தின் வழியே ... வளர்ந்து வருகிறவனாய் அப்போது முன் ஜன்மங்களில் அந்த ஜன்மங்களில் தான் செய்த புண்ணிய பாவங்களை யெல்லாம் ... கர்ப்பத்தில் காமவசத்தால் அழியாமலிருந்து ஜாடராக்கினியால் தாபமடைந்து வருந்த முற்றுத் தனக்குத் தானே பேசிக் கொள்வான்.

"நான் அநேகாயிரம் யோனிகளில் பிறந்து பிறந்து கோடி கோடியான மக்கள், பெண்டிர், பசுக்கள், உறவினர் இவர்களுடைய ஸம்பந்தங்களை அனுபவித்தேன். குடும்பத்தில் அபேக்ஷையுள்ளவனாய் ... அநியாயங்கள் பாராமல் பொருளைத் தேடினேன். தெய்வத்தைச் சொப்பனத்திலும் நினைத்திலேன். அதன் பயனாக இப்போது கோரமான இந்த கர்ப்ப துக்கத்தை யனுபவிக்கின்றேன். நிலையில்லாத இந்தச் சரீரத்தை நிலையுள்ளதென்றெண்ணி ஆசாபாசத்தினால் செய்யத் தகாத காரியங்களைச் செய்தேன். என் ஆத்மாவுக்கு நன்மை பயக்கும் ... செய்தேனில்லை. இவ்வாறு கர்மபலத்தால் பலவகையான துக்கத்தை யனுபவித்த நாகத்திற் கொப்பான இந்தக் கர்ப்பவாசத்திலிருந்து எப்போ

வெளிப்படுமென் இனிமேல் [illegible] விஷ்ணுமாயை [illegible] கொண்டு [illegible]" என்று [illegible] சொல்லத் தொடங்கினான்.

இப்போது [illegible] தன்னைப்போல [illegible] நிகழ்கின்றதாக [illegible] அநுபவிக்க [illegible] [illegible] அநுபவிக்கின்றதே? [illegible] [illegible] அவஸ்தைகளை [illegible] [illegible] அடையாத [illegible] கஷ்டங்களைக் கண்டு கொண்டிருக்கின்றன [illegible] [illegible] [illegible] ஆத்மவஸ்துவைத் [illegible] [illegible] விட்டு அவனே ஞானியாவான்.

ஜராமரண முதலிய அவஸ்தைகளின்றி உண்மையுடைய இடையறாமுடைய சுத்த ஸ்வரூபத்த ஆத்மவஸ்துவை ஸ்மரிக்கத்தக்கது. அந்நேரத்தில் ஏற்படும் மோஹ ஆத்மாவான சரீரத்தைக் கண்டவிடத்தில் போய்விடும். அது போய்விடின் தேகம் விழுந்து போகவேண்டியதுதான். பிராரப்தகர்மபலத்தால் அது விழுந்து போகாமலிருந்தாலிருக்கட்டும். அந்நேரத்தில் உண்டாகும் துக்கங்கள் மோக்ஷத்திற்குக் கிடையாது. ஆகையால் பிராரப்த கர்மம் ஒழியும் வரையில் புத்தியில் நடப்பதைப் பாம்பைப்போல் சுகமாயிருக்கக் கடவாய். "பறவையே! உனக்கு நன்மையுண்டாகும்படி இன்னுமொரு விஷயங் கூறுகிறேன்" என்று சொல்லத் தொடங்கினார்.

"பக்ஷிராஜனே! அவ்யயனான நாராயணனே த்ரேதாயுகத்தில் தசரதமகாராஜாவின் தனயனாயவதரிப்பார். அவர் இராவணவதம் செய்ய வேண்டி தமது மனைவி சீதாதேவியுடனும் தம்பி இலக்ஷ்மணனுடனும் தண்டகாரண்யம் வந்து அங்கொரு ஆச்சிரமமேற்படுத்தி அதில் வாஸஞ்செய்வார். அப்போது இராவணன் திருடனைப்போல சீதாதேவியை அபகரித்து இலங்கையில்

கொண்டிருப்பாய். ஆதலால் சுக்ரீவனுடைய கட்டளை
யால் சில வானரவீரர்கள் ஸீதாதேவியைத் தேடிக்கொண்டு ஸமுத்
திரக்கரைக்கு வந்தார்கள். அவர்களுடைய நட்பு காரணமாக
நான் உனக்கு மறுபடியும் அப்போது நீ ஸீதாதேவியைப் பார்த்தி
உண்மையான விஷயத்தை அவர்களுக்குத் தெரிவிப்பாய் என்று
அந்தமாமுனி. இன்று இறக்கைகளும் புதிதாய் முளைக்கும்" என்று
சந்திரமா முனிவர் கூறினர்.

ஸம்பாதி கூறுகிறது

'வானரர்களே! இதோ எனக்கு இறக்கைகள் புதிதாயுண்டா
யினமையால் நீங்கள் உங்களுக்கு க்ஷேமமுண்டாகக் கடவது. நான்
போய் வருகின்றேன். நீங்கள் ஸீதாதேவியை நிச்சயமாய்ப் பார்ப்பீர்
கள். ஆகையால் கடலைத்தாண்டிச் செல்லப் பிரயத்தனஞ் செய்யக்
கடவீர்கள். இராம நாமத்தை நினைத்தமாத்திரத்தில் ஆசார
ஹீனனுங்கூட ஸம்ஸாரஸாகரத்தைக் கடந்து விஷ்ணுபதத்தையடை
கின்றான். அப்படியிருக்கின்றமையால் ஸாக்ஷாத் இராமபிரானுக்கு
பக்தர்களாயிருக்கும் நீங்கள் இந்த அற்பமான கடலைக் கடப்
பதற்கு அசக்தர்களாவீர்களோ" என்று கூறிற்று.

எட்டாவது சருக்கம்

முற்றிற்று.

9-வது சருக்கம்

பரமசிவன் கூறுகிறார்.

இவ்வாறு பக்ஷிராஜன் சொல்லிவிட்டு ஆகாயமார்க்க
மாகப் பறந்து சென்றது. வானர சிரேஷ்டர்களெல்லோரும் ஸீதா
தேவியைப் பார்க்கப் போகிறோமென்று மகிழ்ச்சியடைந்தார்
கள். திமிங்கிலங்கள் நிறைந்திருக்கும் பெரிய ஸமுத்திரத்தையும்
அதில் அலைகளுடன் கூடிய ஜலத்தையும் தாண்டுவதற்கு அஸாத்திய
மாயிருந்த தோற்றத்தைக் கண்டு "நாம் இதை எவ்வாறு

[illegible]டம்" என்று அந்த வானர்க்கொருவர் பேசிக்கொண் [illegible] அங்கதன். "வானரவீரர்களே! நான் சொல் [illegible] கேளுங்கள் சொல்லுகிறேன் அதின்படி யாவர்கள். நூற [illegible] வீரர்களில் எவனொருவன் இந்த சமுத்திரத் [illegible] காரியத்தை முடிக்கின்றானோ அவனே [illegible] பிராணதானங் கொடுத்தவனாவான் ஆகையால் எவன் [illegible] இந்தச் சமுத்திரத்தை முன்னே வரட்டும். அவனே இ[illegible] நமக்கும் இராமபிரானுக்கும் சுக்கிரீவனுக்கும் [illegible]னவான். சொல்லு சீக்கிரம் வேண்டாம்" என்று கூறினான்.

இவ்வாறு யுவராஜனாகிய அங்கதன் கூறவே, அங்கிருந்த வானரவீரர்கள் [illegible] ஒருவர் முகத்தை யொருவர் பார்த்துக் [illegible] என்ன செய்வதென்று தெரியாமல் பயந்து கொண்டிருந்தார்கள்.

அங்கதன் கூறுகிறான்.

"[illegible] வீரர்களே! உங்கள் பலத்தை நீங்கள் தனித்தனியே [illegible] யின் உங்களில் யாரால் இந்தக் காரியத்தை முடிக்கக் கூடும் [illegible] காரியம் நிறைவேறுமாதலால் யோசித்துக் கூறுங்கள்" என்றான். அங்கதன் வார்த்தையைக் கேட்ட வானர [illegible] நம் தத்தம் பராக்கிரமங்களைத் தனித்தனியே கூறத் [illegible] கள். பத்து யோசனை முதல் தொண்ணூறு யோசனை [illegible] தாண்டக் கூடுமென்பதாகக் கூறினர். அவர்களுள் ஜாம்பவான், தொண்ணூறு யோசனைக்குச் சற்றேறக்குறையத் தாண்டுவேனென்று பகர்ந்தான் அவன் பூர்வம் பகவான் திரிவிக்கிரமாவதார [illegible]த்தும் பூமியை யளந்த காலத்தில் பூமியை இருபத்தொரு முறை வலம் வந்தேன். ஆயினும் இப்போது கிழவனாய் விட்டேன் ஆதலால் இப்போது தாண்டுவதற்கு முடியாதென்கிறான். இதைக் கேட்ட அங்கதன் இச்சமுத்திரத்தைத் தாண்டிச் செல்ல [illegible]னக்குண்டு. ஆனால் மீண்டும் அங்கிருந்து திரும்பி வருவதற்கு என்னுடைய சக்தி ஆகாதோ வென்பது எனக்குத் தெரியாது என்று கூறினான். இதைக் கேட்டதும் வீரனான ஜாம்பவான் நீயோ எங்களுக்கு யஜமானனான அரசன். உனக்கு வல்லமையிருந்தாலும் நாங்கள் உன்னை யனுப்பமாட்டோம். அது எங்களுக்கு உசிதமன்று என்று கூறினான்.

அங்கதன் கூறுகிறான்

அங்ஙனமாயினும், எல்லோரும் முன் போலவே தர்ப்பையில் சயனித்துக் கொள்வோம். இந்தக்காரியம் எவனாலும் முடியாததாகக் காணும். ஆசையால் பிழைப்பதற்கும் வழியில்லையென்றான். இவ்வாறு அங்கதன் தெரிவிக்கவே; ஜாம்பவான், "அப்பா! குழந்தாய்! நமது காரியம் யாரால் சிரமமின்றி நிறைவேறுமோ அவனைக் காட்டுகின்றேன்" என்று கூறிச் சற்று தூரத்தில் மௌனமாயிருந்த மாருதியினிடஞ் சென்று அவனைப் பார்த்து, "ஆஞ்சநேயரே! ஒன்றுமறியாதவர் போல உட்கார்ந்திருப்பதன் காரணமென்ன? காரியத்தை உணராதவரோ? புத்திமானே! காரிய வல்லமையை யெங்களுக்குக் காட்டுவீர். தாங்கள் வாயுபுத்திரனல்லவா? வாயுதேவர் மகாபலசாலியாயிற்றே? அவருக்குச் சமானமான பராக்கிரமுடையவரல்லவா நீர்? மகானுபாவரே? தாங்கள் அவதரித்திருப்பது இராமகாரியார்த்தமாகவல்லவா?

"முன் தாங்கள் பிறந்ததும் சூரியோதயமானது கண்டு அதை ஒரு நல்ல பழுத்த கனியென்று எண்ணி குழந்தை விளையாட்டாக அதைப் பிடிக்க ஆகாயத்திற் பாய்ந்து ஐந்நூறு காததூரம் உயரச்சென்று அங்கிருந்து தரையில் விழுந்தீர்கள். ஆகையால் உமது வல்லமையின் மகிமையை வர்ணிக்க யாரால் முடியும்? எழுந்திருந்து இராமகாரியத்தைச் செய்து எங்களைக் காக்கவேண்டும்" என்று கூறினார். அநுமானும், ஜாம்பவான் கூறியதைக் கேட்டு மிகுதியும் மகிழ்ச்சியடைந்து, அண்ட கடாகமும் பிளக்கும்படியு அபாரமாகச் சிங்கநாதஞ் செய்தார். மேலும் திரிவிக்ரமாவதாரமென்று சொல்லும் படி பர்வதாகாரமான உருவங்கொண்டு ஜாம்பவானை நோக்கி, "ஜாம்பவானே! இந்தக் கடலைக் கடந்து இலங்கையை பஸ்மமாகச் செய்து இராவணனைக் குலத்தோடு அதமாக்கி, ஜானகிதேவியைக் கொண்டு வருவேன் இல்லாவிட்டால் இராவணன் கழுத்தில் கயிற்றைக்கட்டி இந்தவலக் கையிலும் இலங்கையைப் பர்வதங்களுடனிடக்கரத்திலும் எடுத்துக் கொண்டு வந்து இராமபிரான் சந்நிதானத்தில் வைப்பேன். அன்றேல் நல்ல இலக்ஷணங்களமைந்த அந்த ஜானகிதேவியையேனும் கண்டு வருவேன்" என்றனன். இவ்வாறு அநுமான் கூறியதைக் கேட்ட ஜாம்

[illegible]

ஒன்பதாவது சருக்கம்

முற்றிற்று

கிஷ்கிந்தாகாண்டம்

முற்றிற்று

விளம்பரம்

ஸ்ரீமத்ராமாயணம், கோவிந்தராஜீயம், ராமாநு-ஜீயம், மஹேச்வரதீர்த்தீயம், திலகம் என்னும் நான்கு வ்யாக்யானங்களுடன் 6 காண்டம்	16	0	0
உத்தரகாண்டம் ஸவ்யாக்யானம்	2	8	0
ஸுந்தரகாண்டம் நான்கு வ்யாக்யானங்களுடன்	2	8	0
ஸுந்தரகாண்டம் தமிழ் அர்த்தத்துடன்	1	8	0
ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமம் ஸவ்யாக்யானம்	1	8	0
உத்தரசம்பு	0	10	0
ஸுந்தரகாண்டம் மூலம் பெரிய டைப்	0	8	0
அபிநவசம்பு	0	6	0
ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமம் தமிழ் அர்த்தத்துடன்	0	4	0
[illegible]	0	2	0
ருத்ராக்ஷ சிவகவசம்	0	1	0
[illegible]	0	0	6
அத்யாத்ம ராமாயணம் முதல் பாகம்	0	12	0
மீனாக்ஷி சுந்தரன்	0	12	0
அற்புதராமாயணம் ஸம்ஸ்க்ருத மொழிபெயர்ப்பு	0	10	0
ப்ரபோதசந்த்ரோதயம் நாடகம்	0	10	0
விக்ரமோர்வசீயம்	0	8	0
மாயாவதி	0	8	0
மாயூரஸ்தல மான்மியம்	0	8	0
மீனலோசனி	0	6	0
வேதவல்லி	0	4	0
சாரதானந்தர்	0	4	0
தெய்வமஹிமை	0	1	0

மானேஜர்.
"ஸ்ரீ வாணீ பூஷணம்" புஸ்தகசாலை.
திருவல்லிக்கேணி சென்னை.